சிவமயம்

குணவீரநாதர்

அருளிச்செய்த

# பை[illegible]லங்காரம் மூலமும்,

அதற்கு

வித்யாவிநோதினி பத்ராதிபர்களால்

எழுதுவித்த பதவுரையும்.

---

இவை

## திரு-சம்பந்தமுதலியாரால்,

---

சென்னை:

அமெரிக்கன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

---

1892.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

Reserved Copy-right.

உ

சிவமயம்.

# கந்தரலங்காரம்

## காப்பு.

அடலருணைத்திருக்கோபுரத்தேயந்தவாயிலுக்கு
வடவருகிற்சென்றுகண்டுகொண்டேன்வருவார்தலையிற்
றடபடெனப்படுகுட்டுடன்சர்க்கரைமொக்கியகைக்
கடதடகும்பக்களிற்றுக்கிளையகளிற்றினையே.

இ - ள். அடல் - வலியமைந்த, அருணை - திருவருணையிலுள்ள, திருக்கோபுரத்தே - திருக்கோபுரத்தின்கண்ணே, அந்தவாயிலுக்கு - அந்த வாசலுக்கு, வட அருகில்சென்று - வடபாரிசத்திற்போய், வருவார்தலையில் - (அவ்வாசல்வழியாய்) வருவோர் சிரங்களில், தடபட எனப்படும் குட்டுடன் - தடபட வென்றுபடுகின்ற குட்டுகளோடு, சர்க்கரைமொக்கிய - சர்க்கரையைத்திணித்த, கை - துதிக்கையையும், கடம் - மதத்தையும், தடகும்பம் - பெரிய கும்பஸ்தலங்களையுமுடைய, களிற்றுக்கு-யானையாகிய விநாயகமூர்த்திக்கு, இளையகளிற்றினை - இளையயானையாகிய முருகக்கடவுளை, கண்டுகொண்டேன்-சேவித்துக்கொண்டேன். எ - று.

அடல் - ஊழிக்காலத்தும் அழியாவலியுடைமை. திணித்தல் கூறுகொள்ளல். மூத்தபிள்ளையாருக்கு எல்லாவுறுப்புக் களினுஞ்சிறந்த வுறுப்பாகிய தலையானைத் தலையாதலால், களிறென்றே கூறினர். களிறுபோலு முருகக்கடவுளைக் களிறென்றது உவமையாகுபெயர். திருவருணைக் கோபுரத்தின் வடபாரிசத்திலெழுந்தருளியிருக்கிற முருகக்கடவுளைக் கண்டு கொண்டேன் என்பது கருத்து.

## நூல்.

1. பேற்றைத்தவஞ்சற்றுமில்லாதவென்னைப்ரபஞ்சமென்னுஞ்
சேற்றைக்கழியவழிவிட்டவாசெஞ்சடாடவிமே
லாற்றைப்பணியையிதழியைத்தும்பையையம்புலியின்

இ - ள். பேற்றைத்தவம் - வீடுபேற்றுக் கேதுவாகிய தவதனை, சற்றும் இல்லாத - சிறிதும் உடையனல்லாத, என்னை - அடியேனை, ப்ரபஞ்சம் என்னும் சேற்றை - பிரபஞ்சமென்கிற அளற்றை, கழிய - நான் கடக்கும்படி, செம்சடாடவிமேல் - செவந்த சடைக்காட்டின்மீது, ஆற்றை - கங்காநதியையும், பணியை - பாம்பையும், இதழியை - கொன்றைமலரையும், தும்பையை - தும்பைமலரையும், அம்புலியின் கீற்றை - சந்திரகண்டத்தையும், புனைந்த - அணிந்த, பெருமான் - பெருமையுடையானாகிய சிவபிரானுக்கு, குமாரன் - (இளைய) புதல்வனாகிய, க்ருபாகரன் - தயாளுவானவன், வழிவிட்ட ஆறு என் - வழிவிடுத்த ப்ரகாரம் என்ன வியப்பு.

பேற்றை உருபுமயக்கம். அளறு - ஓர்நரக விசேடம். இது "உண்ணாமையுள்ள துயிர் நிலையூனுண்ண அண்ணாத்தல் செய்யாதளறு" என்னும் திருக்குறளானாயிற்காண்க. க்ருபா ஆகரன் எனப்பிரிக்க. ஆகரன்பிறப்பிடமாயுள்ளவன். தவமுடையாரைக் கழியவிடுதல் இயல்பாமன்றித் தவமுடையேனல்லாத என்னைக் கழியவிடுதல் ஒருவியப்பாமென்பார், தவஞ்சற்றுமில்லாத வென்னை ப்ரபஞ்சமென்னுஞ் சேற்றைக் கழியவழிவிட்டவா என்றார்.

**2.** அழித்துப்பிறக்கவொட்டாவயில்வேலன்கவியையன்பா
லெழுத்துப்பிழையறக்கற்கின்றிலீரெரிமூண்டதென்ன
விழித்துப்புகையெழப்பொங்குவெங்கூற்றன்விடுங்கயிற்றாற்
கழுத்திற்சுருக்கிட்டிழுக்குமன்றோகவிகற்கின்றதே.

இ - ள். அழித்து - இறந்து, பிறக்க - பிறக்கும்படி, ஓட்டா - (நம்மையிடயார் தரங்களில்செல்ல) ஓட்டாத, அயில் வேலன்கவியை - கூர்மையாகிய வேற்படையையுடையவனாகிய முருகக்கடவுளின் விடயமாகிய பாடல்களை, எழுத்துப்பிழை அற - எழுத்துவழுவில்லாமல், கற்கின்றிலீர் - கற்கமாட்டீர்களாயிருக்கின்றீர்கள், எரிமூண்டது என்ன - நெருப்பானது மூண்டெரிகின்றதென்னும்படி, விழித்து - கண்விழித்து, புகை எழ - (அதனிடத்துப்)புகையுண்டாக, பொங்கு - சீறுகின்ற, வெம்கூற்றன் - கொடியயமன், விடும்கயிற்றால் - விடுகின்ற காலபாசத்தால், கழுத்தில் சுருக்கிட்டு - கழுத்திற் சுருக்குப்போட்டு, இழுக்கும் அன்றோ - இழுக்கின்ற அந்நாளிற்றானோ, கவிகற்கின்றது - (நீங்கள் அவன்விடயமாகிய) பாடல்களைக் கற்கப்புகுவது. எ - று.

அழிந்து என்பது அழித்து எனவலித்தல் பெற்றது. உலகத்தாரே, நீங்கள் முருகக்கடவுள் விடயமாகிய பாடல்களைக் கல்லாதிருக்கின்றீர்கள்; கூற்றுவன்வந்து, தன் பாசக்கயிற்றால் உங்கள் கழுத்தில் சுருக்கிட்டுஇழுக்கும் அக்காலத்திலோ கற்க இருக்கின்றீர்கள் என்பது கருத்து.

3. தேரணியிட்டுப்புரமெரித்தான்மகன்செங்கையில்வேற்
கூரணியிட்டணுவாகிக்கிரௌஞ்சங்குலைந்தரக்கர்
நேரணியிட்டுவளைந்தகடகநெளிந்ததுசூர்ப்
பேரணிகெட்டதுதேவேந்த்ரலோகம்பிழைத்ததுவே.

இ - ள். தேர் அணியிட்டு - பூமியாகிய தேரின்பெருமையைக்கொண்டு, புரம் எரித்தான்-முப்புரங்களை நீறுபடுத்தினவனாகிய சிவபெருமானுக்கு, மகன் - குமாரனாகியமுருகக்கடவுளின், செங்கையில் - செவந்தகையிலுள்ள, வேல் - வேற்படையின், கூர் - நுனியானது, அணியிட்டு - படுதலால், கிரௌஞ்சம் - க்ரௌஞ்சமலையானது, அணுவாகிக்குலைந்து - அணுக்களாய் அழிந்து, அரக்கர் - அரக்கர்களுடைய, நேர்அணியிட்டுவளைந்த - நேர்மையாகிய வரிசையோடு கூடிவளைந்துகொண்ட, கடகம் - படைவகுப்பு, நெளிந்தது - உருக்கிற்று, சூர் - சூரபன்மனது, பேர் அணி கெட்டது - பெரிய அழகு அழிந்தது, தேவேந்தரலோகம் பிழைத்தது - தேவேந்திரனது உலகம் உய்ந்தது. எ - று.

சிவபெருமான் புதல்வனாகிய முருகக்கடவுளின் கைவேல்படுதலால், க்ரௌஞ்சமலையும் அரக்கர்படையும் அழிந்து சூரனும் மாண்டு தேவேந்தரலோகமும் உய்ந்தது என்பது கருத்து. க்ரௌஞ்ச மலையின்வரலாறு. கிரௌஞ்சன் என்னும் ஓர் அசுரன், தன்மாயையினால் மலைவடிவாகி, அநேகமாகிய சாதுஜநங்களையும் தேவர்களையும் வருத்திக்கொண்டிருந்தான், முருகக்கடவுளானவர் தன்கைவேலினால் சூரனுக்கிளைய தாருகனைக்கொன்றபோது இவனையும் இருகூறுசெய்தார் என்பது.

4. ஓரவொட்டாரொன்றையுன்னவொட்டார்மலரிட்டுனதாள்
சேரவொட்டாரைவர்செய்வதென்யான்சென்றுதேவருய்யச்
சோரநிட்டூரனைச்சூரனைக்காருடல்சோரிகக்கக்
கூரகட்டாரியிட்டோரிமைப்போதினிற்கொன்றவனே.

இ - ள். சென்று - போய், தேவர் உய்ய - தேவர்கள் பிழைக்க, சோரநிட்டூரனை - கள்வனாகிய நிஷ்ட்டூரனை, சூரனை - சூரபன்மனை, கார் உடல் - (அவனது) கருமையாகிய வுடம்பு, சோரிகக்க-உதிரத்தையுமிழும்படி, கூர - கூர்மையையுடைய, கட்டாரியிட்டு - வேற்படையினால், ஓர் இமைப்போதினில் - ஒரு இமைப்பொழுதில், கொன்றவனே - வதைத்தவனே, ஐவர் - (பொறிகளாகிய) ஐவர், ஒன்றை ஓரவொட்டார் - ஒன்றையுணரவொட்டார், உன்னவொட்டார் - நினைக்கவொட்டார், உனதாள் - உன்திருவடிகளில், மலர் இட்டு - மலர்களைத்தூவி, சேரவொட்டார் - அணுகவொட்டார், யான் செய்வது என் - (இதற்கு) நான் செய்யக்கடவது யாது. எ - று.

கடடாரி - ஓர் ஆயுதவிசேடம். அது இங்கு வேலையுணர்த்திற்று. ஐவர் என்றது மெய், வாய், கண், மூக்கு, செவியென்பவற்றை. ஐவர், உன் திருவடியைவழிபடவொட்டாமல் என்னைவருத்து கின்றார்கள், இதற்கு யான் செய்யக் கடவது யாது என்பது கருத்து.

**5.** திருந்தப்புவனங்களீன்றபொற்பாவைதிருமுலைப்பா
லருந்திச்சரவணப்பூந்தொட்டிலேறியறுவர்கொங்கை
விரும்பிக்கடலழக்குன்றழச்சூரழவிம்மியழுங்
குழந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றேதுங் குவலயமே.

இ - ள். திருந்த - திருத்தமாக, புவனங்கள் ஈன்ற - உலகங்களைப் பெற்ற, பொன்பாவை - பொற்பிரதிமையையொத்த வுமாதேவியின், திருமுலைப்பால் அருந்தி - திருமுலைப்பாலுண்டு, சரவணம் - சரவணப்பொய்கையாகிய, பூந்தொட்டில் ஏறி-பூந்தொட்டிலில் ஏறி, அறுவர் கொங்கை விரும்பி - (கிருத்திகைமுதலிய) அறுவர் முலைகளையுண்ண இச்சித்து,கடல் அழ-கடலழவும், குன்று அழ - க்ரௌஞ்சமலையழவும், சூர் அழ சூரன்அழவும், விம்மியழும் - விம்மியழுத, குழந்தை - சிறுகுழவியை, குவலயம - உலகமானது, குறிஞ்சிக்கிழவன் என்று ஓதும் - குறிஞ்சிக்கிழவனென்று சொல்லா நிற்கும். எ - று.

அறுவர்-கார்த்திகைமுதலியோர். கடல்முதலியவை அழும்படி அழுத குழந்தையாகிய முருகக் கடவுளைக் குறிஞ்சிக்கிழவன் என்று உலகஞ் சொல்லும் என்பது கருத்து. குறிஞ்சிக்கிழவன் என்பதற்கு குறிஞ்சி நிலத்து விருத்தன் எனவும்,குறிஞ்சி நிலத்துக்கு உரியோன் எனவும் பொருள் கொள்க குழந்தையென்பது குழந்து எனமெலித்தல் பெற்றது.

**6.** பெரும்பைம்புனத்தினுட்சிற்றேனல்காக்கின்றபேதைகொங்கை
விரும்புங்குமரனைமெய்யன்பினான்மெல்லமெல்லவுள்ள
வரும்புந்தனிப்பரமானந்தந்தித்தித்தறிந்தவன்றே
கரும்புந்துவர்த்துச்செந்தேனும்புளித்தறக்கைத்ததுவே.

இ - ள். பெரு - பெரிய, பை - பசுமையாகிய, புனத்தினுள்-புனத்தின்கண், சிற்றேனல் காக்கின்ற - சிறியதினைக் கொல்லைகளைக்காவல் செய்கின்ற, பேதை - பேதைப்பருவத்தையுடைய வள்ளிநாயகியின்,கொங்கை - தனங்களை, விரும்பும் - விரும்புகிற, குமரனை - முருகவேளை, மெய்யன்பினால் - உண்மையாகிய அன்பினால், மெல்ல மெல்ல உள்ள - பையப் பையநினைக்க, அரும்பும் - உண்டாகின்ற, தனி - ஒப்பற்ற, பரம ஆநந்தம்- மேலாகிய இன்பமானது, தித்தித்தறிந்த அன்றே - இனிக்கவுணர்ந்த அப்பொழுதே, கரும்பும் துவர்த்து - கருப்பஞ்சாறும் துவர்த்து, செந்தேனும் புளித்து - செந்தேனும் புளித்து, அறக்கைத்தது - மிகவுங் கசந்தது.

குமாரக்கடவுளை நினைத்த அளவில் நிரதிசயானந்த முண்டாகி, கரும்பு முதலிய இன் சுவைகள் எனக்கு வெறுத்தற்குரியவாயின என்பது கருத்து.

7. சளத்திற்பிணிபட்டசட்டுக்கிரியைக்குட்டவிக்குமென்ற
னுளத்திற்ப்ரமத்தைத்தவிர்ப்பாயவுணருரத்துதிரக்
குளத்திற்குதித்துக்குளித்துக்களித்துக்குடித்துவெற்றிக்
களத்திற்செருக்கிக்கழுதாடவேறொட்டகாவலனே

இ - ள். கழுது - அலகைகள், அவுணர் உரத்து - அரக்கர் மார்பினின்று மொழுகின, உதிரக்குளத்தில் குதித்து - உதிரக் குளத்திற்பாய்ந்து, குளித்து - மூழ்கி, களித்து - மகிழ்ந்து, குடித்து - பருகி, வெற்றிக்களத்தில் செருக்கி ஆட-வெற்றியையடைந்த போர்க்களத்தில் களித்து ஆடும்படி, வேல்தொட்ட-வேற்படையையேவிய, காவலனே - வேந்தனே, சளத்தில் பிணிபட்ட - துன்பத்தில் கட்டுப்பட்ட, சட்டுக்கிரியைக்குள் - உடற்றொழிலில் அகப்பட்டு, தவிக்கும் - தவிக்கின்ற, என்றன் உள்ளத்தில் - என்மனத்திலுள்ள, ப்ரமத்தை-மயக்கத்தை, தவிர்ப்பாய்-நீக்கியருள்வாய். எ - று.

சட்டு - சட்டகம் என்பதன் சிதைவு. அலகைகள் அரக்கருடைய உதிரப்பொய்கையில் குளித்தாடும்படி வேல்விடுத்த குமரவேளே, உடற்பிணிப்பில் கட்டுப்பட்டுத் தவிக்கின்றஎன்னுள்ளத்தின் மயக்கத்தை நீக்கியருளல் வேண்டுமென்பது கருத்து.

8. ஒளியில்விளைந்தவுயர்ஞானபூதரத்துச்சியின்மே
லளியில்விளைந்ததொரானந்தத்தேனையநாதியிலே
வெளியில்விளைந்தவெறும்பாழைப்பெற்றவெறுந்தனியைத்
தெளியவிளம்பியவாமுகமாறுடைத்தேசிகனே.

இ - ள். முகம்ஆறு உடைதேசிகன் - ஆறுமுகங்களையுடைய குருநாதன், ஒளியில்விளைந்த - ஒளியின்கண் உண்டாகிய, உயர் - உயர்ந்த, ஞானபூதரத்து உச்சியின்மேல் - ஞானமலையினுச்சியில், அளியில்விளைந்தது - கருணையில் உண்டானதாகிய, ஓர் ஆநந்தத்தேனை - ஒப்பற்ற இன்பத்தேனை, அநாதியிலே - முற்காலத்தில், வெளியில்விளைந்த-வெளியிலுண்டாகிய, வெறும்பாழை - சுத்தசூநியத்தை, பெற்ற - தன்னிடத்துக்கொண்டிருக்கின்ற, வெறுந்தனியை - சுத்த தனிப்பொருளை, தெளிய - தெளியும்படி, விளம்பிய ஆறு - சொன்னவிதம் (என்னவியப்புடைத்து). எ - று.

ஆறுமுகதேசிகன், உண்மைப் பொருளையெனக் கருள்செய்த விதமிருந்தவாறென்ன வியப்புடைத்து என்பது கருத்து. தேன், தனி என்பன ஒருபொருட் பன்மொழிகளாய் உண்மைப் பொருளையுணர்த்திநின்றன.

9. தேனென்றுபாகென்றுவமிக்கொணுமொழித்தெய்வவள்ளி
கோனன்றெனக்குபதேசித்ததொன்றுண்டுகூறவற்றோ
வானன்றுகாலன்றுதீயன்றுநீரன்றுமண்ணுமன்று
தானன்றுநானன்றசரீரியன்றுசரீரியன்றே.

இ - ள். தேன்என்று - தேனென்றும், பாகுஎன்று - பாகென்றும், உவமிக்க ஒண்ணு - உவமிக்கக்கூடாத, மொழி - சொல்லையுடைய, தெய்வம் வள்ளிகோன் - தெய்விகமாகியவள்ளிமணாளன், அன்று - அந்நாளில், எனக்கு உபதேசித்தது ஒன்று உண்டு - எனக்குப்போதித்ததொரு பொருளுளது, கூறவற்றோ - (அது) சொல்லப்படும் தரத்ததோ, வான் அன்று - ஆகாயமல்ல, கால் அன்று - காற்றல்ல, தீ அன்று - நெருப்பல்ல, நீர் அன்று - நீரல்ல, மண்ணும் அன்று - மண்ணுமல்ல, தான் அன்று - தானல்ல, நான் அன்று - நானல்ல, அசரீரி அன்று - அசரீரியல்ல, சரீரி அன்று - சரீரி அல்ல. எ - று.

வள்ளிமணாளன் எனக்குபதேசித்த பொருள் ஒன்றுளது, அது ஆகாசமுதலிய பொருள்களன்று, அவற்றிற்கு மேலாகியதத்துவப்பொருள் என்பது கருத்து.

10. சொல்லுகைக்கில்லையென்றெல்லாமிழந்துசும்மாவிருக்கு
மெல்லையுட்செல்லவெனைவிட்டவாவிகல்வேலனல்ல
கொல்லியைச்சேர்க்கின்றசொல்லியைக்கல்வரைகொவ்வைச்செவ்வாய்
வல்லியைப்புல்கின்றமால்வரைத்தோளண்ணல்வல்லபமே.

இ - ள். இகல்வேலன் - வலியமைந்த வேற்படையையுடையவன், நல்லகொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியை - நல்ல கொல்லிப்பண்ணைத் தழுவுகின்ற சொல்லையுடையவளை, கல்வரை - கல்லடர்ந்த குறிஞ்சி நிலத்திற்பிறந்த, கொவ்வைச் செவ்வாய்வல்லியை - கோவைக்கனிபோலும் செவந்தவாயையுடைய கொடிபோல்பவளை, புல்கின்ற - தழுவுகின்ற, மால்வரைத்தோள் - பெரியமலைபோலுந் தோள்களையுடைய, அண்ணல் - பெரியோனாகிய முருகக் கடவுளுடைய, வல்லபம் - ஆற்றலை, சொல்லுகைக்கு இல்லை - சொல்லுதற்கு ஆற்றலில்லை யென்று, எல்லாம் இழந்து - எல்லாவற்றையுமிழந்து, சும்மா இருக்கும் எல்லையிலே - சும்மா இருத்தற்குரிய எல்லையின்கண், செல்ல - சென்று நிலைபெறும்படி, என்னைவிட்டவாறு - என்னைச் செலுத்தினவிதம் என்ன வியப்பு. எ - று.

கொல்லி - ஓர்பண். சொல்லிவல்லி என்பது வள்ளிநாயகியை. முருகக் கடவுளின் ஆற்றலைப் புகழ்தற் கொல்லாதென்று சொல்லும் பொருளுமற்றுச் சும்மாவிருக்கு மெல்லையில் என்னை விடுத்த விதம் என்ன வியப்புடைத்து என்பது கருத்து.

**11.** குசைநெகிழாவெற்றிவேலோனவுணர்குடர்குழம்பக்
கசையிடுவாசிவிசைகொண்டவாகனப்பீலியின்கொத்
தசைபடுகால்பட்டசைந்தது மேருவடியிடவெண்
டிசைவரைதூள்பட்டவத்தூளின்வாரிதிடர்பட்டவே.

இ - ள். வெற்றிவேலோன் - வெற்றிவேலையுடைய வனாகியமுருகக் கடவுள், அவுணர்குடர்குழம்ப - தானவருடையகுடல்கலங்கும்படி, குசைநெகிழா - கடிவாளம் நழுவாத, கசையிடுவாசி - கவசமிடப்பட்ட குதிரையாகிய, விசைகொண்டவாகனம் - வேகங்கொண்ட வாகனமென்கிற மயிலின், பீலியின்கொத்து - கலாபத்தொகுதி, அசை - அசைதலில், படு - உண்டாகின்ற, கால்பட்டு - காற்றுப்பட்டு, மேரு அசைந்தது - மேருமலை சலித்தது, அடியிட - அடிபெயர்த்துவைக்க, எண்திசைவரை - அஷ்டதிக்குப்பர்வதங்களும், தூள்பட்ட - துகள்பட்டன, அத்தூளின் - அந்தத்துகளினால், வாரி - சமுத்திரங்கள், திடர்பட்ட - மேடுபட்டன. எ - று.

குமரவேள் அரக்கரை யதஞ் செய்யப் போம் போது அவனது வாகனமாகிய மயிற்றோகைக்காற்றினால் மேருமுதலிய பொருள்கள் நிலை கலங்கின என்பது கருத்து.

**12.** படைபட்டவேலவன்பால்வந்தவாகைப்பதாகையென்னுந்
தடைபட்டசேவல்சிறகடிக்கொள்ளச்சலதிகிழிந்
துடைபட்டதண்டகடாகமுதிர்ந்ததுடுப்படல
மிடைபட்டகுன்றமுமாமேருவெற்புமிடிபட்டவே.

இ - ள். படைபட்ட வேலவன் பால் வந்த - வேலாயுதத்தையுடையவனாகிய முருகக்கடவுளிடத்து வந்த, வாகைப்பதாகை என்னும் - வெற்றிக்கொடியென்கிற, தடைபட்ட சேவல் - (அவனால்) தடுக்கப்பட்ட சேவலானது, சிறகு அடிக்கொள்ள - சிறகையடித்துக் கொள்ள, சலதிகிழிந்து - சமுத்திரங்கள் கிழிபட்டு, அண்ட கடாகம் உடைபட்டது - அண்டமுகடு உடைந்தது, உடு படலம் உதிர்ந்தது - நட்சத்திரக் கூட்டம் உதிர்ந்தது, இடைபட்ட குன்றமும் - நடுவேயகப்பட்ட மலைகளும், மாமேருவெற்பும் - மகாமேருகிரியும், இடிபட்ட - இடிந்தன. எ - று.

குமரவேளின் வெற்றிக்கொடியாகிய சேவல் சிறகடித்துக் கொள்ள வுண்டாகிய காற்றினால் கடல் முதலாயினதத்தம் நிலை கலங்கினவென்பது கருத்து.

**13.** ஒருவரைப்பங்கிலுடையாள்குமாரனுடைமணிசேர்
திருவரைக்கிங்கிணியோசைபடத்திடுக்கிட்டரக்கர்

வெருவரத்திக்குச்செவிடுபட்டெட்டுவெற்புங்கனகப்
பருவரைக்குன்றுமதிர்ந்தனதேவர்பயங்கெட்டதே.

ஸ். ஒருவரை - ஒப்பற்றவராகிய சிவபெருமானை, பங்கில்உடையாள் - பாகத்தில் உடையவளாகிய உமாதேவிக்கு, குமாரன் - புதல்வனாகிய முருகவேளின், உடைமணிசேர் - உடைமணியோடு கூடிய, திருவரைக் கிங்கிணி - திருவரையிற் கட்டப்பட்ட கிங்கிணியின், ஓசைபட - ஓசையுண்டாகவே, அரக்கர் திடுக்கிட்டு வெருவர - அரக்கர் திடுக்கிட்டு அஞ்ச, திக்கு செவிடுபட்டு - திசைகள் செவிடுபட்டு, எட்டுவெற்பும் - அஷ்டகுலகிரிகளும், கனகப் பருவரைக்குன்றும் - பெரிய பொன்மலையும், அதிர்ந்தன - அதிர்ந்துபோயின, தேவர் பயம் கெட்டது-தேவர்களுடைய பயம் ஒழிந்தது. எ - று.

உடைமணி - அரையிற கடடிவடந்தாரமணி, இது, "உடைமணிகடடிச்சிறு தேருருட்டி" என்னுந் திருக்கோவையாரினுங் காண்க. குமரவேளின் திருவரையிற் கட்டிய கிங்கிணியோசை கேட்டளவில், அரக்கர் முதலாயினோர் அஞ்சிக்கலங்கினர், தேவர் பயமழிந்தது என்பது கருத்து. குலகிரிகள் எட்டாவன - கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என்பன.

14. குப்பாசவாழ்க்கையுட்கூத்தாடுமைவரிற்கொட்படைந்த
இப்பாசநெஞ்சனையீடேற்றுவாயிருநான்குவெற்பு
மப்பாதியாய்விழமேருங்குலுங்கவிண்ணாருமுய்யச்
சப்பாணிகொட்டியகையாறிரண்டுடைச்சண்முகனே.

- ஸ். கு - மண்ணுலகத்தில், பாசவாழ்க்கையுள் - பாசவாழ்க்கையில், கூத்தாடும் - கூத்தாடுகின்ற, ஐவரின் - ஐவரால், கொட்பு அடைந்த - சுழற்சியையடைந்த, இப்பாசநெஞ்சனை-இந்தப்பாசமனத்தையுடையேனை, ஈடேற்றுவாய் - ஈடேற்றக்கடவாய், இருநான்கு வெற்பும் - அஷ்டகுலகிரிகளும், அப்பாதியாய்விழ - அந்தப்பாதிபங்குகளாய் விழவும், மேரும் குலுங்க - மேருமலையும் குலுங்கவும், விண்ணாரும் உய்ய - தேவரும் பிழைக்கவும், சப்பாணி கொட்டிய - சப்பாணிகொட்டின, கை ஆறிரண்டு உடை - பன்னிரண்டுகைகளையுடைய, சண்முகனே - ஆறுமுகனே. எ-று

அஷ்ட குலகிரிகள் முதலாயின குலுங்கவும் தேவர்உய்யவும் சப்பாணி கொட்டிய பன்னிருகையனே, இந்த ப்ரபஞ்சவாழ்க்கையிற் சிக்கிவருந்துகின்ற என்னையீடேற்ற வேண்டும் என்பது கருத்து. ஈடேற்றல் - கடைத்தேறச்செய்தல். அன்றிப் பெருமையடையச்செய்தல் என்றனுமாம்.

15. தாவடியோட்டுமயிலிலுந்தேவர்தலையிலுமென்
பாவடியேட்டிலும்பட்டதன்றேபடிமாவலிபால்
மூவடிகேட்டன்றுமூதண்டகூடமுகடுமுட்டச்
சேவடிநீட்டும்பெருமாண்மருகன்றன்சிற்றடியே.

இ - ள். மாவலிபால் - மகாபலியினிடத்து, அன்று - அந்நாளில், மூவடிபடிகேட்டு - மூன்றடிமண்கேட்டு, (அவன் இசைந்தபிறகு) மூது - பழைய, அண்ட கூடமுகடுமுட்ட - அண்ட கூடத்தின் முகட்டிற்பட, சேவடி நீட்டும் பெருமாள் - திருவடியை நீட்டின திருமாலின், மருகன் தன் சிற்றடி - மருகனாகிய முருகவேளின் சிறிய திருவடி, தாவடி ஓட்டும் மயிலிலும் - (அவன்) போரிற் செலுத்துகின்ற மயிலின்மீதும், தேவர்தலையிலும் - தேவர்களுடைய சிரசிலும், என்பா - என்பாடல்கள், வடி ஏட்டிலும்-எழுதப்பட்ட ஏட்டிலும், பட்டது அன்றே-பட்டதல்லவா. எ - று.

முருகக்கடவுளின் சிறியதிருவடியானது மயிலின் மீதும் தேவர் தலையின் மீதும் என்பாட்டிலும் பட்ட தன்றே வென்பது கருத்து.

16. தடுங்கோண்மனத்தைவிடுங்கோள்வெகுளியைத்தானமென்று
இடுங்கோளிருந்தபடியிருங்கோளெழுபாருமுய்யக் [ம்
கொடுங்கோபச்சூருடன்குன்றந்திறக்கத்துளைக்கவைவேல்
விடுங்கோனருள்வந்துதானேயுமக்குவெளிப்படுமே.

இ - ள். மனத்தை தடுங்கோள்-மனத்தை (விஷயங்களில் செல்லவொட்டாமல்) தடைசெய்யுங்கள், வெகுளியை விடுங்கோள் - கோபத்தை விடுங்கள், என்றும், எப்பொழுதும், தானம் இடுங்கோள் - தானஞ் செய்யுங்கள், இருந்தபடியிருங்கோள் - சும்மா இருங்கள், (இப்படிசெய்வீர்களானால்) எழுபாரும் உய்ய - எழுலகங்களும் பிழைக்கும்படி, கொடுகோபம் - கொடிய கோபத்தையுடைய, சூருடன் - சூரனுடன், குன்றம் திறக்க - கிரௌஞ்சகிரியானது பிளவுபடும்படி, துளைக்க - தொளைக்கும் பொருட்டு, வைவேல் - கூரியவேற்படையை, விடும் - விட்ட, கோன் - இறைவனாகிய முருகக்கடவுளது, அருள் - திருவருளானது, தானே வந்து உமக்கு வெளிப்படும்-தானேவந்து உமக்கு வெளிப்படத் தோன்றும். எ-று.

உலகத்தாரே, நீங்கள் மனத்தைவிடயங்களிற் செல்லாமல் தடைசெய்யுங்கள், கோவத்தைவிடுங்கள், தானம்பண்ணுங்கள், இருந்தபடியிருங்கள், இப்படி செய்வீர்களாயின், குமாரக்கடவுளின் திருவருள் உங்களுக்கு எளிதிற்கிடைக்கு மென்பது கருத்து. இருந்தபடியிருத்தலாவது திருவருளில் வேற்றுமையின்றிக் கலந்திருத்தல். இதனைச் சும்மாவிருத்தல் என்பர்.

17. வேதாகமசித்ரவேலாயுதன்வெட்சிபூத்ததண்டைப்
பாதாரவிந்தமரணாகவல்லும்பகலுமில்லாச்
சூதானதற்றவெளிக்கேயொளித்துச்சும்மாவிருக்கப்
போதாயினிமனமேதெரியாதொருபூதர்க்குமே.

இ - ள். மனமே - நெஞ்சே, வேதாகமசித்ரம் - வேதாகமங்களால் பிரதிபாதிக்கப்படுகின்ற ஆச்சரிய குணங்களையுடைய, வேலாயுதன் - முருகவேளினது, வெட்சிபூத்த - வெட்சி மாலைபூத்த, தண்டை - தண்டையையணிந்த, பாதஅரவிந்தம் - திருவடித்தாமரையை, அரண் ஆக - நமக்குக் காவலாகக்கொண்டு, அல்லும் பகலும் இல்லா-இரவும் பகலுமற்ற, சூதானது அற்ற - குற்றமற்ற, வெளிக்கே ஒளித்து - பரவெளியில் மறைந்து, சும்மா இருக்க - சும்மா இருத்தற்கு, இனி போதாய் - இனிவருவாயாக, ஒரு பூதர்க்கும் தெரியாது - (இந்தவுபாயம்) ஒரு பூதசரீரிகளுக்கும் தெரியாது.

மனமே, முருகக்கடவுளின் திருவடியை நமக்கு ரக்ஷகமாகக் கொண்டு, சதோதயமாய் விளங்கு மிடத்தில் சும்மாவிருத்தற் பொருட்டு வருவாயாக, இது ஒருவருக்கும் உணரவொண்ணாதவுபாய மாம் என்பது கருத்து.

18. வையிற்கதிர்வடிவேலோனைவாழ்த்திவறிஞர்க்கென்றும்
நொய்யிற்பிளவளவேனும்பகிர்மின்களுங்கட்கிங்ஙன்
வெய்யிற்கொதுங்கவுதவாவுடம்பின்வெறுநிழல்போல்
கையிற்பொருளுமுதவாதுகாணுங்கடைவழிக்கே.

இ - ள். வையின் - கூர்மையோடு, கதிர் - ஒளியையுமுடைய, வடி - வடிக்கப்பட்ட, வேலோனை - வேலாயுதனை, வாழ்த்தி - துதித்து, வறிஞர்க்கு - வறியோருக்கு, என்றும் - எப்பொழுதும், நொய்யின்பிளவு அளவு எனும் - நொய்யின் பிளப்பளவாயினும், பகிர்மின் - பகிர்ந்திடுங்கள், (ஏனெனின்) நுங்கட்கு - உங்களுக்கு, இங்ஙன் - இவ்விடத்து, வெய்யிற்கு ஒதுங்க உதவா - வெயிலுக் கொதுங்கி நிற்கவு முதவாத, உடம்பின் வெறு நிழல்போல் - சரீரத்தின் பயனற்ற நிழல்போல, நும் கடைவழிக்கு - உமது கடைப்பிரயாணத்துக்கு, கையில்பொருளும் உதவாது - உங்கள்கையிலுள்ள பொருளும் துணைசெய்யாது. எ - று.

கடைவழி - முடிவாகிய பிரயாணம். (மரணப்ரயாணம்), உலகத்தரே, பொருள்முதலிய யாவும் நீங்களிறக்கும்போது கூடவாராதன ஆதலால், குமரவேளைவாழ்த்தி, எளியோர்க்கு உதவிசெய்யுங்கள் என்பது கருத்து. கடவுளை வாழ்த்தாதுசெய்யும் அறம், அறமாகாதாதலின் "வையிற்கதிர்வடிவேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்னும் நொய்யிற்பிளவளவேனும் பகிர்மின்கள்" என்றார்

19. சொன்னகிரௌஞ்சகிரியூடுருவத்துளைத்தவைவேல்
மன்னகடம்பின்மலர்மாலைமார்பமௌனத்தையுற்று
நின்னையுணர்ந்துணர்ந்தெல்லாமொருங்கியநிர்க்குணம்பூண்
டென்னைமறந்திருந்தேனிறந்தேவிட்டதிவ்வுடம்பே.

இ - ள். சொன்ன - சொல்லப்பட்ட, கிரௌஞ்சகிரி - க்ரௌஞ்சகிரியின், ஊடு உருவ - இடையிற்பட்டுருவிச்செல்ல, துளைத்த - தொளைசெய்த, வைவேல் - கூரியவேலையேந்திய, மன்ன - இறைவனே, கடம்பின் மலர்மாலைமார்ப - கடப்பமலர்மாலையை யணிந்த மார்பையுடையவனே, மௌனத்தைஉற்று - மௌனநிலையையடைந்து, நின்னைஉணர்ந்துஉணர்ந்து - உன்னை அறிந்து அறிந்து, எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம்பூண்டு - எல்லாமடங்கிய குணராஹித்யத்தைப் பூண்டு, என்னைமறந்து இருந்தேன் - என்னை மறந்திருந்தேன், இவ்வுடம்பு இறந்தேவிட்டது - இந்தச் சரீரவாசனை அற்றேயொழிந்தது. எ - று.

என்னை மறந்திருந்தேன் என்றது தற்போதமற்றிருத்தலை. கடவுளை உணர்ந்தார்க்குப்பின் உணர்தற்குக்கருவியாகிய சித்தவிருத்தியும் ஒடுங்குதலால் "எல்லாம் ஒருங்கிய" என்றார். இதனை "உணர்ந்தார்க்குணர்வரியோன்" என்னும் திருக்கோவையாருரையினும் காண்க. குணராஹித்யம் - முக்குணவியல்பற்றிருத்தல். சொன்ன கிரௌஞ்சகிரி - பொன்மயமாகிய கிரௌஞ்சமலை எனினும் பொருந்தும். குமரவேளே, மௌனநிலையையடைந்து, உன்னையறிந்து, என்னைமறந்திருந்தேன், இருந்தளவில், இந்தச் சரீரவாசனை பற்றற்றுப் போயிற்று என்பது கருத்து.

20. கோழிக்கொடியனடிபணியாமற்குவலயத்தே
வாழக்கருதுமதியிலிகாளுங்கள்வல்வினைநோய்
ஊழிப்பெருவலியுண்ணவொட்டாதுங்களத்தமெல்லாம்
ஆழப்புதைத்துவைத்தால்வருமோநும்மடிப்பிறகே.

இ - ள். கோழிக்கொடியன் - சேவற்கொடியை யுடையவனாகிய முருகவேளின், அடிபணியாமல் - திருவடியை வணங்காமல், குவலயத்தே வாழக்கருதும் - பூமண்டலத்தில் வாழநினைக்கிற, மதியிலிகாள் - அறிவிலிகளே, உங்கள் வல்வினைநோய் - உங்களுடைய வலிய வினைகள் காரணமாக வுண்டாகிய பிணிகளாகிய, ஊழி-யுகாந்தத்தின், பெருவலி - மிக்கவலியானது, உங்கள் அத்தம் எல்லாம் - உங்கள் பொருள்களையெல்லாம், உண்ணவொட்டாது - (உங்களை) அநுபவிக்கவொட்டாது, (அப்பொருள்களை) ஆழப்புதைத்துவைத்தால் - ஆழமாகப்புதைத்துவைத்தால், (அவை)

றும்அடி பிறகே வருமோ - உங்கள் காலின்பின்னே தொடர்ந்துவருமோ. எ - று.

முருகக்கடவுளின் திருவடியை வணங்காமல், உலகவாழ்க்கையில் மயங்கிக்கிடக்கின்ற அறிவிலிகளே, உங்கள் கைப்பொருள்முதலியவற்றை உங்கள் ஊழானது உங்களை யநுபவிக்க வொட்டாது, அவைகளை நிலத்திற் புதைத்துவைத்தால், அவைநீங்களிறக்கும்போது கூடவருமோ வென்பது கருத்து.

**21.** மரணப்ரமாதநமக்கில்லையாமென்றும்வாய்த்ததுணை
கிரணக்கலாபியும்வேலுமுண்டேகிங்கிணிமுகுள
சரணப்ரதாபசசிதேவிமாங்கல்யதந்துரக்ஷா
பரணக்ருபாகரஞானகரசுரபாஸ்கரனே.

இ - ள். கிங்கிணி - சதங்கையணிந்த, முகுளம் - (உடனேவிரியத்தக்க) பேரரும்புகள் சாந்தப்பெற்ற, சரணப்ரதாப - திருவடிப்ரதாபத்தையுடையவனே, சசிதேவி - இந்திராணியின், மாங்கல்யதந்து-மங்கலநாணை, ரக்ஷாஆபரண - காத்தலாகிய ஆபரணத்தைப் பூண்டவனே, க்ருபாகர - கருணாகரனே, ஞானஆகர - ஞானத்துக்குப் பிறப்பிடமானவனே, சுரபாஸ்கரனே - தேவர்களுள் சூரியனே, கிரணம் - ஒளியுள்ள, கலாபியும் - மயிலும், வேலும் - வேலாயுதமும், என்றும் வாய்த்ததுணை உண்டு - எக்காலத்தும் வாய்ப்பாகிய துணையாக எங்களுக்குண்டு, (ஆகையால்) மரணப்ரமாதம் - மரணமூர்ச்சையானது, நமக்கு இல்லைஆம் - எமக்கில்லையாகும்.

கலாபி - கலாபத்தையுடையது. கலாபம்-தோகை. கிங்கிணிமுகுள சரணம் என்பதற்கு,கிங்கிணிவாய்போல மெல்லமலர்ந்த தாமரைமலர்போலும் திருவடியென்றலுமாம். அரக்கரால் இந்திரன் இறந்தால் சசிதேவி மங்கலநாண் இழக்கவேண்டிவரும், அப்படி நேரிடாமல் அரக்கரைவதைத்து இந்திரனை ரக்ஷித்ததனால், "சசிதேவி மாங்கல்யதந்து ரக்ஷாபரண" என்றார். முருகவேளே, உன்வேலுமயிலும் எமக்குத் துணையுண்டாதலால், மரணமூர்ச்சை யெமக்கில்லையென்பது கருத்து.

**22.** மொய்தாரணிகுழல்வள்ளியைவேட்டவன்முத்தமிழால்
வைதாரையுமங்குவாழவைப்போன்வெய்யவாரணம்போல்
கைதானிருபதுடையான்றலைபத்துங்கத்தரிக்க
எய்தான்மருகனுமையாள்பயந்தவிலஞ்சியமே

இ - ள். மொய் - நெருங்கிய, தார் அணிகுழல்வள்ளியை வேட்டவன் - மலர்மாலையையணிந்த கூந்தலையுடைய வள்ளிநாயகியை விரும்பின

-வனும், முத்தமிழால் வைதாரையும் - முத்தமிழ்ப்பாடல்களால் வைதவரையும், அங்கு வாழவைப்போன் - அம்முத்தியுலகில் வாழவைப்போனும், வெய்யவாரணம்போல் - கொடிய யானைபோல, கைஇருபது உடையான்தலை பத்தும் - இருபது கைகளையுடையவனாகிய ராவணனுடைய பத்துத்தலைகளையும், கத்தரிக்க - சேதிக்கும்படி, எய்தான் - அம்பெய்தவனாகிய திருமாலுக்கு, மருகன் - மருகனும், (யாரெனின்) உமையாள் பயந்த இலஞ்சியமே - உமாதேவியீன்ற களஞ்சியம்போல் பவனாகிய முருகக்கடவுளே.

வாரணம் கடலெனக்கொண்டு, கடல்போன்ற நிறமுள்ளவன் என்றலுமாம். வள்ளியைவேட்டல்முதலாயின செய்தவன் உமையாள் புதல்வனாகிய முருகவேளேயென்பது கருத்து. முருகக்கடவுள் சர்வகலாநிபுணர் ஆதலின் தம்மை வைதாரையும் கலைத்திறத்துக்கிணங்க வாழவைப்பார் என்றற்கு "முத்தமிழால் வைதாரையு மங்குவாழவைப்போன்" என்றார்.

**23**. தெய்வத்திருமலைச்செங்கோட்டில்வாழுஞ்செழுஞ்சுடரே
வைவைத்தவேற்படைவானவனே மறவேனுனைநான்
ஐவர்க்கிடம்பெறக்காலிரண்டோட்டியதிலிரண்டு
கைவைத்தவீடுகுலையுமுன்னேவந்துகாத்தருளே.

இ - ள். தெய்வத்திருமலை - தெய்வத்தன்மையமைந்த திருமலையாகிய, செங்கோட்டில் - திருச்செங்கோட்டில், வாழும்-வாழ்கின்ற, செழுஞ்சுடரே - செழுமையாகிய சோதியே, வைவைத்தவேல்படை வானவனே - கூர்மையமைந்த வேற்படையையுடைய தேவனே, உன்னைநான்மறவேன் - உன்னைநான் மறக்கமாட்டேன், ஐவர்க்கு இடம்பெற - ஐவர்க்கு இடமுண்டாக, கால் இரண்டு ஓட்டி - இரண்டுகால்களை நிறுத்தி, அதில்- அதனிடத்து, இரண்டு கைவைத்த - இரண்டுகையமைத்த, வீடு - (இந்தச் சரீரமாகிய)வீடு, குலையுமுன்னே - கலைவதற்குமுன்பே, வந்துகாத்து அருள் - வந்து ரக்ஷித்தருள்வாயாக. எ - று.

முருகவேளே, இந்தச்சரீரம் விழுமுன்னமே வந்து என்னை ரக்ஷித்தருள வேண்டும் என்பது கருத்து. ஐவர் - ஐம்பொறிகள். வீட்டுக்குக்காலும் கையும்போல உடம்புக்கும் காலும் கையும் உள வாதலால் உடம்பையும் வீடென்றார். வீட்டுக்குக் கால் தூண், கை கொடுங்கை. இருகால் என்றது இரட்டைத்தூணை.

**24**. கின்னங்குறித்தடியேன்செவிநீயன்றுகேட்கச்சொன்ன
குன்னங்குறிச்சிவெளியாக்கிவிட்டதுகோடுகுழல்
சின்னங்குறிக்கக்குறிஞ்சிக்கிழவர்சிறுமிதனை
முன்னங்குறிச்சியிற்சென்றுகல்யாணமுயன்றவனே

இ - ள் கோடுகுழல் சின்னம்குறிக்க - ஊதுகொம்பும் வேய்ங்குழலும் திருச்சின்னமும் ஊத, குறிஞ்சிக்கிழவர் - குறிஞ்சிநிலத்துக் குரியவராகிய குறவரது, சிறுமிதன்னை - புதல்வியாகிய வள்ளிநாயகியை, முன்னம் - முற்காலத்தில், குறிச்சியில்சென்று - குறிஞ்சிநிலத்தூரிற்சென்று, கல்யாணம் முயன்றவனே - விவாகஞ்செய்ய முயன்றவனே, சின்னம்குறித்து - (என்) துயரத்தை நின் திருவுளத்தடைத்து, (அதை நீக்கும்பொருட்டு) அடியேன்செவி - அடியேன்காதில், கேட்க - கேட்கும்படி, நீ அன்று சொன்ன - நீஅன்றுசொல்லிய, குன்னம் - இரகசியம், குறிச்சி வெளியாக்கிவிட்டது - குறிஞ்சியாகிய இந்நிலத்தில் தன்னை வெளிப்படுத்தி விட்டது. எ - று.

இரகசியம் என்றது மெய்ஞ்ஞான உபதேசம். தன்னைப்பெற்ற என்னையும் மெய்ஞ்ஞானி ஆக்கிவிட்டது என்பதுபொருள். வெளியாக்கிவிட்டது என்பதற்கு ஒளியுருவாகச்செய்தது என்னலுமாம். வெளி - ஒளி. குறிஞ்சிநிலத்திற்சென்று வள்ளிநாயகியைக் கடிமணம்புணர்ந்த முருகக்கடவுளே, எனது பிறப்பிறப்பாலாகிய துன்பங்களை நீக்கும்படி திருவுளம்பற்றி, நீ என்செவியில் உபதேசித்த மெய்ஞ்ஞான உபதேசமானது என்னைத் தன் வடிவாக்கிக்கொண்டதென்பது கருத்து.

25. தண்டாயுதமுந் திரிசூலமும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாடவெட்டிவிழவிடுவேன் செந்தில்வேலனுக்குத்
தொண்டாகியவென்னவிரோதஞானச்சுடர்வடிவாள்
கண்டாயடாவந்தகாவந்துபார்சற்றென்கைக்கெட்டவே.

இ - ள். அந்தகா - யமனே, செந்தில் வேலனுக்கு - திருச்செந்தில் முருகவேளுக்கு, தொண்டு ஆகிய - அடிமையாகிய, என் அவிரோதஞானம் - என் அவிரோதஞானமாகிய, சுடர்வடிவாள் - ஒளியுள்ள வடித்த வாளை, கண்டாயடா-பார்த்தாயேடா, என்கைக்கு சற்று எட்ட - என் கைக்குச் சிறிது எட்டும்படி, வந்துபார்-வந்துபாராய், தண்டாயுதமும்-கதாயுதமும்-திரிசூலமும் - முத்தலைச்சூலமும், விழ - (உன்கையினின்றுங்கீழே) விழும்படி, உன்னைதாக்கி - உன்னைமோதி, திண்டாடவெட்டி - வலியழியும்படி வெட்டி, விழவிடுவேன் - உன்னைவிழுத்துவேன் எ - று.

முருகவேளின் திருத்தொண்டுபூண்ட இறுமாப்பினால் இங்ஙனம் கூறுவாராயினர் "இறுமாந்திருப்பன் கொல்லோ, ஈசன்பல்கணத்தெண்ணப்பட்டுச், சிறுமானேந்தி தன்சேவடிக் கீழ்ச்சென்றங் கிறுமாந்திருப்பன் கொல்லோ" எனமேலோர்கூறலுங்காண்க. அவிரோதம்-விரோதமின்மை. அவிரோதஞானமாவதுதடையற்ற ஞானம். தடை அஞ்ஞானம், சந்தேகம், வி

பாதமென மூவகைப்படும். அஞ்ஞானம்-சாராசாரவிவேகமின்மை. சந்தேகம்-ஐயம், அது குற்றியோமகனோ என்பது விபரீதம்-திரிபுணர்ச்சி, அது பழுதையைப்பாம் பென்பது, இம்மூவகையாகிய தடைகளோடு கூடியஞானம் பந்தநீக்கத்துக் கேதுவாகாமையால், அவிரோதஞானச் சுடர்வடிவாள் என்றார். "தடைகள்யாவெனினஞ்ஞானஞ் சந்தேகம்விபரீதங்கள், படர்செயுமிந்தமூன்றும் பலசன்மப் பழக்கத்தாலே, உடனுடன்வரும் வந்தக்காலுயர் ஞானங் கெடுமிவற்றைத், திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே" என்றார் பிறரும். "ஞானவாளேந்துமையர்" எனத்திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளலுங்காண்க. இயமனே, ஞானவாள் என்கையது, நீ யென்மீது வந்தால், நீ நோல்வியடைவா யென்பது கருத்து.

26. நீலச்சிகண்டியிலேறும்பிரானெந்தநேரத்திலும்
கோலக்குறத்தியுடன்வருவான்குருநாதன்சொன்ன
சீலத்தைமெள்ளத்தெளிந்தறிவார்சிவயோகிகளே
காலத்தைவென்றிருப்பார்மரிப்பார்வெறுங்கர்மிகளே

இ - ள். நீலச்சிகண்டியில் - நீலநிறமுள்ளமயிலின்மேல், ஏறும்பிரான் - ஏறுகின்ற பெருமானும், எந்தநேரத்திலும் - எந்தக்காலத்திலும், கோலக்குறத்தியுடன் வருவான் - அழகையுடைய குறச்சிறுமியோடு கூடி வருபவனும் ஆகிய, குருநாதன் சொன்ன-குருநாதன் சொல்லிய, சீலத்தை-ஒழுக்கத்தை, மெள்ளத்தெளிந்து இருப்பார் - மெல்லத்தேறியிருப்பவர்களாகிய, சிவயோகிகளே - சிவயோகிகளே, காலத்தை வென்று இருப்பார்-காலதத்துவத்தை ஜெயித்திருப்பார்கள், வெறும்கர்மிகள்-வெறுமையாகிய கர்மிகள், மரிப்பார் - மரணமடைவார்கள். எ - று.

குருநாதன் சொன்ன சீலம் ஒருமொழி. இதுமெல்லத்தெளிந்துணர்வார்க்கன்றிப்பயன் படாதென்றற்கு, "குருநாதன் சொன்ன சீலத்தை மெள்ளத்தெளிந்தறிவார்" என்றும், இவரோகாலதத்துவத்தைவெல்லற்குரியர் என்றற்கு, தெளிந்துணர்வார் சிவயோகிகளே காலத்தை வென்றிருப்பார் என்றும், மற்றையர்க்குக் கூடாதென்றற்கு, "மரிப்பார் வெறுங்கர்மிகள்" என்றும் கூறினர். காலதத்துவத்தை வெல்லுதலாவது மரணமடையாதிருத்தல். கர்மிகள் என்றது தீவினையாளரை. சிகண்டம்-தோகை, அதையுடையதாதலால் மயிலைச்சிகண்டியென்றார். முருகவேள் சொன்ன அர்த்தமுணர்ந்தார் இறவார், மற்றையர் இறப்பர் என்பது கருத்து.

27. ஓலையுந்தூதருங்கண்டுதிண்டாடலொழித்தெனக்குக்
காலையுமாலையுமுன்னிற்குமேகந்தவேண்மருங்கில்
சேலையுங்கட்டியசீராவுங்கையிற்சிவந்தசெச்சை
மாலையுஞ்சேவற்பதாகையுந்தோகையும்வாகையுமே.

இ - ள். கந்தவேள் - முருகவேளின், மருங்கில்சேலையும - திருவரையிற் கட்டிய ஆடையும், கட்டிய சீராவும் - அதன்மேலணிந்த கவசமும், கையில் - தோளிலணிந்த, செவந்தசெச்சைமாலையும் - செவந்தவெட்சிமலர்மாலையும், சேவல்பதாகையும் - கோழிக்கொடியும், தோகையும் - மயிலும், வாகையும் - வெற்றிமாலையும், எனக்கு - அடியேனுக்கு, ஓலையும் தூதரும் கண்டு - ஓலையையும் தூதுவரையும்பார்த்து, திண்டாடல் ஒழித்து - வலியழிதலைக்கெடுத்து, காலையும் மாலையும் - காலையிலும் மாலையிலும், முன்நிற்கும் - எனக்கு எதிரேநிற்கும். எ - று.

கை இவ்விடத்துத் தோளுக்காயிற்று. முருகக் கடவுளின் திருவிடையாடைமுதலியனஎந்நேரமும் எனக்கெதிரேதோன்றுவன வாதலால் இனி இயமனுக்குயான் அஞ்சவேண்டுவதில்லை யென்பது கருத்து. "சங்கங்களங் கழனிக்கரை சேர்செந்திற்றங்கின நஞ், சங்கங்களங்கர நண்ணரஞ்சே யெய்தச் சார்ந்தனஞ்சற், சங்கங்களங்கனியை நிகர்தண்ட தரற்கினிய, சங்கங்களங்கொன நின்ற யாங்கணெஞ்சங்கணைந்தே" என்றார் பிறரும்.

28. வேலேவிளக்குகையான்செய்யதாளினில்வீழ்ந்திறைஞ்சி
மாலேகொளவிங்ஙன்காண்பதல்லான்மனவாக்குச்செய
லாலேயடைதற்கரிதாயருவுருவாகியொன்று
போலே யிருக்கும் பொருளை யெவ்வாறு புகல்வதுவே.

இ - ள். வேலே விளக்குகையான் - வேற்படையையே விளங்கப்பண்ணுங்கையையுடையவனது, செய்யதாளினில் வீழ்ந்து இறைஞ்சி - சேவடியில் வீழ்ந்துவணங்கி, மாலேகொள்ள - அன்புமிக, இங்ஙன் காண்பது.அல்லால்-இவ்விடத்துக் காண்பதல்லது, மனவாக்குச்செயலாலே - மனம்வாக்கு காயம் என்பவற்றின் றொழில்களால், அடைதற்கு அரிது ஆய் - அடைதற் கரியதாகி, அருஉருஆகி - அருவமும் உருவமுமாகி, ஒன்றுபோலே யிருக்கும்பொருளை - ஒன்றுபோலிருக்கும் பொருளை, எவ்வாறு. புகல்வது - எந்தவிதம் சொல்லுவது. எ - று.

கையின் ஒளிக்குவேலொளிமழுங்கு மென்பார் "வேலேவிளக்குகையான்" என்றார். முருகக் கடவுளின் திருவடியையடைந்தாலன்றிமனோவாக்குக் காயங்களாகிய முக்கரணங்களுக்கு மெட்டாத பொருளைக்காணுதல் கூடாதென்பது கருத்து.

29. கடத்திற்குறத்திபிரானருளாற்கலங்காதசித்தத்
திடத்திற்புணையெனயான்கடந்தேன்சித்ரமாதரல்குல்
படத்திற்கழுத்திற்பழுத்தசெவ்வாயிற்பணையிலுந்தித்
தடத்திற்றனத்திற்கிடக்கும்வெங்காமசமுத்திரமே.

இ - ள். சித்ரம் - சித்திரித்தாற்போன்ற, மாதர் - மாதர்களுடைய, அல்குல் படத்தில் - பாம்பின்படம்போன்ற அல்குலிலும், கழுத்தில் - கழுத்திலும், பழுத்த செவ்வாயில் - பழுத்தசெவ்வாயிலும், பணையில் - மூங்கில்போன்ற தோள்களிலும், உந்திதடத்தில் - நாபிப்பிரதேசத்திலும், தனத்தில் - கொங்கைகளிலும், கிடக்கும் - தங்குகிற, வெம்காமசமுத்திரம் கொடிய காமமாகியகடலை, கடத்தில் குறத்தி - குறிஞ்சிநிலத்திலுள்ள குறச்சிறுமியாகிய வள்ளிநாயகிக்கு, பிரான் - பெருமானாகிய முருகக்கடவுளின், அருளால் - கருணையால், கலங்காதசித்தம்திடத்தின் - கலங்காத மனோதிருடத்தை, புணைஎன - மரக்கலமாகக்கொண்டு, யான்கடந்தேன் நான் தாண்டினேன். எ - று.

மாதர்மயக்கமாகிய கடலை முருகவேளின் திருவருளால் உண்டாகிய மனோதிரமாகிய மரக்கலத்தைக் கொண்டு கடந்து முத்திக்கரையேறினேனென்பது கருத்து.

30. பாலென்பதுமொழிபஞ்சென்பதுபதம்பாவையர்கண்
சேலென்பதாகத்திரிகின்றநீசெந்திலோன்றிருக்கை
வேலென்கிலைகொற்றமயூரமென்கிலைவெட்சித்தண்டைக்
காலென்கிலைமனமேயெங்ஙனேமுத்திகாண்பதுவே.

இ - ள். மனமே - நெஞ்சமே, பாவையர் மொழி பால் என்பது ஆக-மாதர்களுடைய சொல்லானது பாலென்றும், பதம்பஞ்சு என்பது ஆக- அடியானது பஞ்சென்றும், கண்சேல் என்பது ஆக - விழியானது சேல்மீனென்றும் (புலம்பி) திரிகின்ற நீ - அலைகின்ற நீ, செந்திலோன் - திருச்செந்திலையுடையவனாகிய முருகவேளின், திருக்கை-அழகியகையிலுள்ள, வேல்என்கிலை-வேலென்று சொல்லுகின்றிலை, கொற்றம் மயூரம் என்கிலை- வெற்றியையுடைய மயிலென்று சொல்லுகின்றிலை, வெட்சி - வெட்சிமாலையையும், தண்டை - சதங்கையையுமணிந்த, கால் என்கிலை - திருவடியென்று சொல்லுகின்றிலை, (ஆதலால்) முத்திகாண்பது - நீ முத்தியுலகையடைவது, எங்ஙனே - எப்படியோ (யான் அறியேன்). எ - று.

மனமே முத்திக்கேதுவாகிய முருகவேள் வர்ணனையை விட்டு பெத்தத்துக்கேது வாகிய மாதர்வர்ணனையைப் பற்றினையே,நீயெப்படி உய்வா யென்பது கருத்து.

31. பொக்கக்குடிலிற்புகுதாவகைப்புண்டரீகத்தினுஞ்
செக்கச்சிவந்தகழல்வீடுதந்தருள்சிந்துவெந்து
கொக்குத்தறிபட்டெறிபட்டுதிரங்குமுகுமெனக்
கக்கக்கிரியுருவக்கதிர்வேறொட்டகாவலனே

இ - ள். சிந்துவெந்து - கடல்வெதும்பி, கொக்கு - மாமரவுருவமா கவந்தசூரன், தறிபட்டு எறிபட்டு - இருபிளவாக வெட்டியெறியப்பட்டு, குமுகுமுஎன-குமுகுமென்று, உதிரங்கக்க - இரத்தத்தை உமிழவும், கிரிஉருவ-க்ரௌஞ்சகிரியையுருவிச் செல்லவும், வேல் தொட்ட-வேலெறிந்த, காவலனே - ரக்ஷகனே, பொக்கம் - பொய்யாகிய, குடிலில் - (சரீரமாகிய) வீட்டில், புகுதாவகை - (இனிப்) புகாதவண்ணம், புண்டரீகத்தினும் - தாமரைமலரினும், செக்கச்சிவந்த - மிகச்செவந்த, கழல் - உன்திருவடியென்கிற, வீடு - வீட்டை, தந்து அருள் - (அடியேனுக்குக்) கொடுத்தருள்வாய். எ - று.

கடல் முதலாயின நிலைகெடும்படிவே லேவியகந்தவேளே, இனி நான் பிறவாவகையருள் செய்யவேண்டு மென்பது கருத்து. "கஞ்சங்கரிதே யெனச்செய்கின் சரணடைந்ததே" என்றார்பிறரும்.

32. கிளைத்துப்புறப்பட்டசூர்மார்புடன்கிரியூடுருவத்
துளைத்துப்புறப்பட்டவேற்கந்தனே துறந்தோருளத்தை
வளைத்துப்பிடித்துப்பதைக்கப்பதைக்கவதைக்குங்கண்ணார்க்
கிளைத்துத்தவிக்கின்றவென்னை யெந்நாள்வந்திரட்சிப்பையே.

இ - ள். கிளைத்துபுறப்பட்ட-கிளைத்துவெளிப்பட்ட, சூர்மார்புடன்-சூரனதுமார்போடு, கிரி - க்ரௌஞ்சகிரியையும், ஊடுருவ - ஊடுருவும்படி, துளைத்துப்புறப்பட்ட - தொளைத்துவெளிப்பட்ட, வேல் - வேற்படையையுடைய, கந்தனே - கந்தவேளே, துறந்தோர் உள்ளத்தை - துறந்தோர் மனத்தையும், வளைத்துப்பிடித்து - வளைத்துப்பற்றி, பதைக்கப்பதைக்க - துடிக்கத் துடிக்க, வதைக்கும் கண்ணார்க்கு - வதைசெய்கிற கண்களையுடைய மாதருக்கு, இளைத்துத்தவிக்கின்ற - மெலிந்து பரிதபிக்கிற, என்னை-அடியேனை, எந்நாள் வந்து இரட்சிப்பையே-எக்காலம் வந்து காத்தருள்வையோ. எ - று.

சூர்மார்பும் கிரௌஞ்சகிரியும் உருவும்படி வேல்விடுத்தோனே, அந்த வேலைக்கொண்டு, மாதர்கண்வேல் பட்டுவருந்து மென்னை யெந்நாள்வந்து காத்தருள்வையோ வென்பது கருத்து.

33. முடியாப்பிறவிக்கடலிற்புகார்முழுதுங்கெடுக்கு
மிடியாற்படியில்விதனப்படார்வெற்றிவேற்பெருமா
ளடியார்க்குநல்லபெருமாளவுணர்குலமடங்கப்
பொடியாக்கியபெருமாடிருநாமம்புகல்பவரே.

(இ - ள்.) வெற்றிவேல் பெருமாள் - வெற்றிவேலையுடைய பெருமான், அடியார்க்கு நல்லபெருமாள் - அடியவர்க்கு நல்லபெருமாள், அவுணர் குலம் அடங்க - அரக்கர்கூட்டமுழுதும், பொடிஆக்கியபெருமாள் - பொடிபடுத்தியபெருமாள், (அவரது) திருநாமம்புகல்பவர் - திருநாமத்தை யுச்சரிப்பவர், முடியா - (மெய்ஞ்ஞானியர்க் கன்றி மற்றையர்க்குக் கடக்க) முடியாத, பிறவிக்கடலில் புகார் - ஜன்மசாகரத்தில் இனிப் பிரவேசியார், முழுதும் கெடுக்கும் - எல்லாச்சுகங்களையும் அழிக்கின்ற, மிடியால் - வறுமையால், படியில் - பூமியில், விதனப்படார் - கிலேசப்படமாட்டார்.

பெருமாள் பெருமான் என்பதின் திரிபு. பொருள் பெருமையுடையான் என்பது. தன்னடியவர்க்கு அவர் வேண்டியவற்றையெல்லாம் வரையாது அருள்செய்தலால் அடியார்க்கு நல்லபெருமாளென்றும், வெற்றிவேலைக்கொண்டே தம்மையடைந்தவர்க்கு எல்லாக்காரியங்களையும் முற்றுவித்தருள்பவராதலால் வெற்றிவேற்பெருமாள் என்றும், சூரனாகிய அவுணர் குலத்தலைவனை யழித்தபோதே அவன்குலமுழுதும் அழிந்ததாதலால் அவுணர்குலமடங்கப் பொடியாக்கிய பெருமாள் என்றும், பிறவிக்கடல் ஞானமாகிய மரக்கலமேறினோர்க்கன்றி மற்றையர்க்குக் கடக்கமுடியாமையால் முடியாப்பிறவிக்கடல் என்றும், வறுமையானது இருமையின்பங்களையும் அழிப்பதாதலால் முழுதுங்கெடுக்கு மிடிஎன்றும் கூறினர். வறுமை இருமை யின்பங்களையுங் கெடுக்கும் என்பதை, "முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான் முடியுமெனப், பனிவருங் கண்பர மன்றிருச் சிற்றம்பலமனையாய், துனிவரு நீர்மையிதென்னென்று தூநீர் தெளித்தளிப்ப, நனிவரு நாளிது வோவென்று வந்திக்கு நன்னுதலே" எனவும், "வறியாரிருமை யறியாரென மன்னுமாநிதிக்கு, நெறியாரருஞ்சுரஞ் செல்லலுற்றார்நமர் நீண்டிருவ, ரறியாவளவுநின் றோன்றில்லைச் சிற்றம்பலமனைய, செறிவார் கருங்குழல் வெண்ணகைச்செவ்வாய்த் திருநுதலே." எனவும் திருவாதவூரடிகள் திருக்கோவையாரினும், "இன்மையென வொருபாவிமறுமையுமிம்மையுமின்றி வரும்" எனத்தெய்வப்புலவர் திருக்குறளினும், வற்புறுத்திக் கூறியிருத்தல் காண்க. முருகக்கடவுளின் திருநாமத்தை யுச்சரிப்பவர் பிறவிமுதலியவற்றால் வருந் துன்பங்களை அநுபவியார் என்பது கருத்து.

34. பொட்டாகவெற்பைப்பொருதகந்தாதப்பிப்போனதொன்றற்
கெட்டாதஞானக்கலைதருவாயிருங்காமவிடாய்ப்
பட்டாருயிரைத்திருகிப்பருகிப்பசிதணிக்குங்
கட்டாரிவேல்விழியார்வலைக்கேமனங்கட்டுண்டதே.

(இ - ள்.) இருகாமவிடாய்பட்டார் - பெரியகாமவிடாய்ப் பட்டவரது, உயிரை - சீவனை, திருகிப்பருகி - திருகியுண்டு, பசிதணிக்கும் - பசியைநீக்கிக்கொள்ளுகின்ற, கட்டாரி - கட்டாரியாகிய, வேல்விழியார் - வே

ற்பவைட்போன்ற கண்ணையுடையவராகிய மாதரொன்கிற, வலைக்கே - வலை யின்கண்ணே, மனம் கட்டுண்டது-என்மனமாகிய மான் கட்டுப்பட்டது, (ஆகையால்) பொட்டுஆக - தொளையுண்டாக, வெற்பைப்பொருத-க்ரௌஞ்சகிரியை (வேலால்) தாக்கின, கந்தா - கந்தவேளே, தப்பிப்போனது - (என்னைவிட்டுத்) தப்பிப்போனதாகிய, ஒன்றற்கு எட்டாத - ஒன்றுக்கும் எட்டவொண்ணாத, ஞானக்கலைதருவாய் - ஞானமாகிய கலையை யெனக் கருள்செய்வாயாக. எ - று.

கட்டாரி - ஓராயுதம், அது இவ்விடத்து வேலுக்காயிற்று. "சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக் - கூரகட்டாரி யிட்டோரிமைப் போதினிற்கொன்றவனே" என்னும், இந்நூலின் நான்காம்பாட்டிலும் கட்டாரியென்பது வேலையுணர்த்தல்காண்க. கட்டாரிவேல் கட்டாரியா கிய வேல் என விரிதலால் இருபெயரொட்டு. கட்டாரி வேல் கட்டாரியா கிய படையெனினுமாம். அன்றிக் கட்டாரி வேல்விழியார் என்பதற்கு கட்டாரியையும் வேலையும் நிகர்த்த கண்களையுடைய மாதர் எனினு மமை யும். மாதர்கண்ணை வலையாகக்கூறுதல் "காய்சினவேலன்ன மின்னியல்கண் ணின் வலைகலந்து வீசினபோது என்னுந் திருக்கோவையார் செய்யுளானு முணர்க. ஞானகலை ஞானகலைப்பொருள்எனினுமாம். ஞானகலை-பதிபசுபா சம் என்னும்முப்பொருள்களி னிலக்கணத்தையும்முத்திநெறியையு முணர் த்தும் நூல். இது அறிவு நூல் எனவும் வீட்டுநூல் எனவும் படும். கந்தவே ளே, என்மனமாகிய மான் மாதர்கண்வலையிற் சிக்கி வருந்துகின்றது அதனை மீட்டுக் கொடுக்கவேண்டுமென்பது கருத்து.

35. பத்தித்துறையிழிந்தானந்தவாரிபடிவதினுன்
புத்தித்தரங்கந்தெளிவதென்றோபொங்குவெங்குருதி
மெத்திக்குதிகொள்ளவெஞ்சூரனைவிட்ட சுட்டியிலே
குத்தித்தரங்கொண்டமராவதிகொண்டகொற்றவனே.

இ - ள். பொங்கு - பெருகுகின்ற, வெம் குருதி-வெவ்வியவுதிரம், மெத்திக் குதிகொள்ள - நிறைந்தலை யெறிய, வெம் சூரனை - கொடிய சூரனை, சுட்டியிலேகுத்தி - நெற்றியிற்குத்தி, தரம்கொண்டு - வெற்றிகொண்டு, விட்ட அமராவதிகொண்ட - (இந்திரனால்) விடப்பட்ட அமராவதி யைக் கைக்கொண்ட, கொற்றவனே-அரசனே, நான் - (யானாகிய) அடி யேன், பத்திதுறை இழிந்து - பத்தியாகியதுறையில் இறங்கி, ஆனந்தவாரி படிவதில் - இன்பக்கடலில் மூழ்குவதனால், புத்தி தரங்கம் - என்மனமா கிய அலையடங்கி, தெளிவது - (என்னறிவு) தெளிவடைவது, என்றோ - எக்காலமோ. எ - று.

சுட்டி - நுதலணி, அது ஈண்டு வெற்றிக்காயிற்று. ஆநந்தவாரியென்றார் அதிற் படிந்தோர் கரைகாணுதமூழ்ந்துதலின். "ஆநந்தமாக்கடல்" என்றார் திருவாதவூரடிகளும். ஆநந்தம் இறைவனது எண் குணத்துளொன்று. சூரனைக் கொன்று சுரபுரங் கொண்ட சூரனே, நான் உன்பத்தி மேலிட்டால் ஆநந்தமாக் கடலாடப்பெறுவது என்றோ வென்பது கருத்து.

36. சுழித்தோடு மாற்றிற் பெருக்கான துசெல்வந் துன்பமின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே.

இ - ள். நெஞ்சே - மனமே, செல்வம் - செல்வமானது, சுழித்து ஓடும் ஆற்றில் - சுழித்துக்கொண்டு ஓடுகின்ற நதியில், பெருக்கு ஆனது - பிரவாகத்தை நிகர்த்தது, துன்பம் இன்பம் கழித்து - (அச்செல்வத்தின் போக்கு வரவுகளாலுண்டாகின்ற) துக்க சுகங்களையொழித்து, ஓடுகின்றது (நாம் துறவின்கண்) விரைந்து செல்வது, எக்காலம் - எந்த நாள், (அவற்றைக் கடந்தோடி மாற்றவில்லாத நீ) கரிக்கோட்டு முத்தை - யானைக்கொம்பிலுண்டாகிய முத்துகளை, கொழித்து ஓடு - கொழித்துக் கொண்டு விரைந்துசெல்லுகின்ற, காவிரி - காவேரியாற்றங்கரையிலுள்ள, செங்கோடன் என்கிலை - திருச்செங் கோட்டையுடையவனே என்று சொல்லுகின்றிலை; குன்றம் எட்டும் - திசைகளிலுள்ள எட்டு மலைகளையும், கிழித்து ஓடு - பிளந்துபோதற்குரிய, வேல் என்கிலை - வேலேயென்று சொல்லுகின்றிலை; முத்தி கிட்டுவது - நாம் வீட்டையடைவது, எங்ஙன் - எவ்வாறு எ - று.

திருமுறையால் சுழித்தோடும் நதியின் பெருக்கு அது இல்லாத போது இல்லையாதல்போல, செல்வம் நல்வினையுள்ள காலத்து வந்து அது இல்லாதபோது இல்லையாகுந் தன்மையதாதலால், சுழித்தோடு மாற்றிற் பெருக்கானது செல்வம், என்றும், அச்செல்வம் வாராக்கால் துன்பமும், வரின் இன்பமுமுளவாத வியற்கையாதலால், அடுத்துத் "துன்பமின்பம் என்றும், அவற்றைக் கடந்து துறவின் கட்சேற லருமையாதலால், கழித்தோடுகின்றதெக்காலம், என்றும், அவ்வாறு செல்லுதற்கு மனவுறுதிவேண்டப்படுதலால் நெஞ்சே" என்றும், இப்படி செய்யவியலாவிடின், அம்மனவுறுதியை யருள்செய்வோன் திருச்செங் கோடனாதலால், அவனையாயினும் துதிப்பாய் என்றற்கு, செங்கோடனென்கிலை, என்றும், அதுவு மியையாதாயின் அவனது சம்பந்தியாய் இரண்டெழுத்தாலாகிய வேலென்றாயினு முச்சரியாய் என்றற்கு,' குன்றமெட்டுங் கிழித்தோடுவேலென்கிலை என்றும், இவற்றி லொன்றையேனுஞ் செய்யாவழி முத்திகிட்டுவதரிதாதலால்" "எங்ங

னேமுத்திகிட்டுவதே" என்றும் கூறினர். யானைக்கொம்பில் முத்துண்டாதல் "தந்திவராக மருப்பிப் பிபூகந்தழைகதலி, நந்து சலஞ்சலமீன்றலை கொக்கு நனினமின்னார்-கந்தரஞ் சாலிகழை கன்னலாவின் பல் கட்செவிகார்-இந்துவுடும்பு கராமுத்த மீனுமிருபதுமே" "கயல் கொக்குடும்பின் சிரசுகளுங்-கரிக்கோடேனமுடக்கோடும், கழையுங் கரும்புங் கமுகினமுங் கதலிசாலி கடிக்கமலம் - புயனத் தாதிதருமுத்தம் - புனலிற் சுனலிற் புடவியினிற்-பொன்றும் பொதியிற்கே ழொளிபோம் - பொருந்தும் விலையுண்டவை வேண்டேம் - இயல் புற்றோன் றுனழிவிலதாய் - என்றும் புதுமை தருமொளியாய்-எவர்க்கு மதிக்கவரிதாகியிருந்து மிகுந்தமதுரமெலாம் - முயல்வுற்றளிக்கு நின்கனிவாய்-முத்தந்தருக முததமே, முகுந்தன் மருகாசமரபுரி-முருகாமுத்தந்தருகவே" என்பவற்றால் இனிது விளங்கும். "துக்கத்துட்டுங்கித் துறவின் கட்சேர்கலா மக்கள்" எனமேலோர் கூறலால் இவரும் துன்பமின்பம் எனத்துன்பத்தை முன்வைத்தார். துறவின்கண் விரைந்து சேறற்குத்துன்பம் முக்கிய காரணமாதலால் அதனை முன்வைத்தார் எனினுமமையும் மனமே, இல்லற வாழ்க்கையின் அல்லலைக் கடந்து, துறவறத்திற் செல்வாயுமல்லை, அவ்வாறு செல்லு மனவுறுதியை நமக்கருள் செய்கிற முருகவேளையும் அவனது வேற்படையையுந் துதிப்பாயுமல்லை, நமக்கு முத்திகிட்டுவ தெவ்வாறு என்பது கருதது.

37\. கண்டுண்டசொல்லியர்மெல்லியர்காமக்கலவிக்கள்ளை
மொண்டுண்டயர்கினும்வேன்மறவேன்முதுகூளித்திரள்
டுண்டுண்டுடுடுடுடூடூடுடுடுடுடுண்டுடுண்டு [னே.
டிண்டிணடெண்கொட்டியாடவெஞ்சூரக்கொன்றராவுத்த

இ - ள். முது கூளித்திரள் - முதிர்ந்த பேய்க்கூட்டம், டுண்டுண் டுடுடுடு டூடூ டுடுடுடு டுண்டு டுண்டு டிண் டிண்டு என *, கொட்டி-பறைகொட்டி, ஆட - கூத்தாடும்படி, வெம் சூர்கொன்ற ராவுத்தனே-(மயிற்பரியேறி) கொடிய சூரனைக்கொன்ற வீரனே, கண்டு உண்டசொல்லியர் - கற்கண்டின் சுவையை வென்ற சொல்லையுடையவராகிய, மெல்லியர்-மாதரது, காமக்கலவிக் கள்ளை - காமப்புணர்ச்சியாகிய கள்ளை, மொண்டு உண்டு - அள்ளிக்குடித்து, அயர்கினும் - (அவ்வெறியால்) புத்திமயங்கினும், வேல் மறவேன் - உன்வேலாயுதத்தையான் மறக்க மாட்டேன். எ - று.

கண்டு-கற்கண்டு. அது இவ்விடத்து அதன் சுவையையுணர்த்திற்று. ராவுத்தன் - திசைச்சொல், பொருள் குதிரை வீரன் என்பது. சூரனைக் கொன்ற சூரனே, மாதரது காமக்கலவிக் கள்ளையுண்டு அறிவழிந்திருக்குங் காலத்திலும், உன் திருக்கையிலுள்ள வெற்றி வேலைமறவேன் என்பது கருத்து.

38 நாளென்செயும்வினை தானென்செயுமெனை நாடிவந்த
கோளென்செயுங்கொடுங்கூற்றென்செயுங்குமரேசரிரு
தாளுஞ்சிலம்புஞ்சதங்கையுந்தண்டையுஞ்சண்முகமுந்
தோளுங்கடம்புமெனக்குமுன்னேவந்துதோன்றிடினே.

இ - ள். குமரேசர் - முருகேசரது, இருதாளும் - இரண்டு திருவடிகளும், * சிலம்பும் சதங்கையும் தண்டையும், சண்முகமும் - ஆறு திருமுகங்களும், தோளும் - பன்னிருதிருப் புயங்களும், கடம்பும் - கடப்பமலர்மாலையும், எனக்கு முன்னே - எனக்கெதிரில், வந்து தோன்றிடின் - வந்து தோன்றுமாயின், நாள் என்செயும் - (எனக்கு) நட்சத்திரம் என்ன தீமையைச் செய்யும், வினைதான் என் செயும் - தீ வினைதான் என்ன தீமையைச் செய்யும், என்னை நாடிவந்த - என்னை வருத்தும்படி தேடிவந்த, கோள் என்செயும் - நவக்கிரகம் என்ன தீமையைச் செய்யும், கொடுங்கூற்று என் செய்யும் - கொடிய யமன் என்னதீமையைச் செய்வான். எ - று.

நாள் முதலாயினவும் தமக்குத்தீங்கிழையாவகை யருள்புரிவது முருகவேளின் திருவடியாதலால், முதற்கண், "முருகேசரிருதாளும்" என்றும், அவற்றைச் சேர்ந்தழகு செய்வன சிலம்புமுதலியனவாதலால், அடுத்துச் "சிலம்புஞ் சதங்கையுந் தண்டையும்" என்றும், அடியார்க்குப் புகலிடமாவது திருவடியாதலால் அதனை யநுபவித்து மேல் நோக்கினவாறே திருமுகப்பொலிவு கண்மனங்களைக் கவர்ந்தமையால் "சண்முகமும்" என்றும், அதிற் சற்றிழிதலும் புயங்களியங்கலால் "தோளும்" என்றும், அவற்றைச் சேர்ந்தழகு செய்வது கடப்ப மலர்மாலையாதலால், "கடம்பும்" என்றும் கூறினார். சண்முகமும் என்றதை யடுத்துத் தோள் என்றமையால் பன்னிரண்டென்பது வருவித்துரைக்கப் பட்டது. முருகக் கடவுளின் திருவடி முதலாயின எனக்கெதிரே தோன்றுமாயின் நாண் மீன்முதலியன என்னை வருத்தமாட்டாவென்பது கருத்து.

39. உதித்தாங்குழல்வதுஞ்சாவதுந்தீர்த்தெனையுன்னிலொன்றா
விதித்தாண்டருடருங்காலமுண்டோவெற்புநட்டுரக
பதித்தாம்புவாங்கிநின்றம்பரம்பம்பரம்பட்டுழல
மதித்தான்றிருமருகாமயிலேறியமாணிக்கமே.

இ - ள். வெற்பு நட்டு - (மந்தர) மலையைமத்தாக நட்டு, உரகபதித்தாம்பு வாங்கிநின்று (அந்தமத்தை) நாகராஜனாகிய வாசுகி யென்கிற தாம்பினால் வளைத்து நின்று, அம்பரம் - கடலானது, பம்பரம்பட்டு உழல - பம்பரத்தின் தன்மையையடைந்து சுழலும்படி, மதித்தான் - கடைந்தவனாகிய திருமாலின், திருமருகா - திருமருகனே, மயில் ஏறியமாணிக்கமே - மயிலின் மேல் ஏறியமாணிக்கமே, உதித்து ஆங்கு உழல்வதும் - பிறந்து

அவ்விடத்துச் சஞ்சரிப்பதையும், சாவதும் - இறப்பதையும், தீர்த்து-நீக்கி, என்னை - அடியேனை, உன்னில் ஒன்றா - உன்னிடத்தில் ஐக்கியமாம்படி, விதித்து - நியமித்து, ஆண்டு - ஆட்கொண்டு, அருள்தரும் காலம் உண்டோ - அருள் புரியுங் காலமும் உளதோ. எ - று.

ஆங்கு என்றது - வினைக்கீடாகச் சென்றுபிறக்கும் அவ்விடத்தை. செவ்வேளாதலால் மாணிக்கமே யென்றார். அமுதக்கடல் கடைந்த அச்சுதன்மருகனே, பிறப்பிறப்புக்களினின்றும் நீக்கி என்னையாண்டருளுங்காலமு முண்டோ வென்பதுகருத்து.

40. சேல்பட்டழிந்ததுசெந்தூர்வயற்பொழில்தேங்கடம்பின்
மால்பட்டழிந்ததுபூங்கொடியார்மனமாமயிலோன்
வேல்பட்டழிந்தனவேலையுஞ்சூரனும்வெற்புமவன
கால்பட்டழிந்ததிங்கென்றலைமேலயன்கையெழுத்தே.

இ - ள். செந்தூர்வயல் - திருச்செந்தூரிலுள்ள கழனி, சேல்பட்டு அழிந்தது - சேல்மீன்கள் தாக்குதலால் அழிந்தது, பூங்கொடியார் மனம் - மாதர்மனம், பொழில் தேம் கடம்பின் - சோலையிலுள்ள மணம் பொருந்திய கடப்பமலரின், மால்பட்டு அழிந்தது - விருப்பம் படுதலால் அழிந்தது, வேலையும் சூரனும் வெற்பும் - கடலும் சூரனும் கிரௌஞ்சமலையும், மாமயிலோன் - பெரியமயில் வாகனத்தையுடையோனாகிய முருகக்கடவுளின், வேல்பட்டு அழிந்தன - வேலாயுதம் படுதலால் அழிந்தன, இங்கு எனது தலைமேல் - இவ்விடத்தில் என்சிரசின்மேல், அயன் கையெழுத்து - பிரமனது கையெழுத்தானது, அவன் கால்பட்டு அழிந்தது - அவனது திருவடிபடுதலால் அழிந்தது. எ - று.

பிரமனால் படைக்கப்படுதலாகிய தொழில் ஒழிந்ததென்றற்கு, என் தலைமேலயன் கையெழுத்து அழிந்தது என்றார். எனவே இறத்தலுமில்லை யென்றதாயிற்று. "அவன் கால் பட்டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே" என்பதற்கு உதாரணமாக, "வல்லைத் தூர்ந்த முலை நுனிமாதர்வலையெறியப் - பல்லைத்திறந்துறுமிக் கவிதாலப்பழமுருக்குர் - தொல்லைத் திருத்திகழ் போரூர்க்குகன்பதஞ் சூடுஞ் சென்னிக - ணில்லைப்பிரமன்று யருறக்கிறு மெழுத்துக்களே" என்றார் பிறரும் வயல்பொழில் என்பதை வயலும் பொழிலும் என்றுரைத்து அழிந்தன எனப் பன்மையில்முடிப்பினுமாம்.

41. பாலேயனையமொழியார்தமின்பத்தைப்பற்றியென்று
மாலேகொண்டுய்யும்வகையறியேன்மலர்த்தாடருவாய்
காலேமிகவுண்டுகாலேயிலாதகணபணத்தின்
மேலேதுயில்கொள்ளுமாலோன்மருகசெவ்வேலவனே.

இ - ள். காலே மிகவுண்டு - வாயுவையே மிகவும் புசித்து, காலே யிலாத - கால்களேயில்லாத, கணபணத்தின்மேலே-கூட்டமாகிய படங் களையுடைய ஆதிசேடன் என்னும் பாம்பின்மீது, துயில்கொள்ளும்-யோக நித்திரைசெய்கிற, மாலோன் மருக-திருமால் மருகனே, செவ்வேலவனே-செவந்த வேலாயுதத்தையுடையவனே, பாலே அனைய-பாலையே நிகர்த்த, மொழியார்தம் - சொல்லையுடையமாதரது, இன்பத்தைப்பற்றி - சுகத் தைப்பற்றி, என்றும் - எக்காலத்தும், மாலேகொண்டு - மயக்கத்தையே மேற்கொண்டு, உய்யும் வகை அறியேன்-பிழைக்கும் விதம் அறிந்திலேன், (ஆதலால் நான்பிழைக்கும் வண்ணம்) மலர்த்தாள் தருவாய்-தாமரைமலர் போலும் உன் திருவடியைத் தந்தருள்வாயாக. எ - று.

திருமால் மருகா, மாதர்மயக்கங்கொண்டு, உய்யும் வகையறியாதவனு யிருக்கிறேன், ஆதலால் உன்திருவடியை யருள் செய்யவேண்டும் என் பது கருத்து. பாம்புக்குக் காற்றேயுணவாதலால், "காலேமிகவுண்டு" என் றும், 'காலிலியாதலால்' "காலேயிலாதகணபணம்"என்றும் கூறினர். உய் யும் வகையறியாமைக்குக் காரணம் மாதரின்பமென்றூராயிற்று. பாம்புக் குக் காற்றேயுணவென்பதை,"வாயுவும் பூவின் மணமிரண்டும் புசித்திருக் கும்" என்னுஞ் சித்தராரூடச் செய்யுளானும்,

"சிலைமதனம்படமொறெழுஞ்சேய்மயிலுச்சிட்டவெச்
சிலைமதனம்படுசிந்துவையிந்துவைச்செய்வதென்யான்
சிலைமதனம்படுகாட்டுவர்கேளிருஞ்செங்கழுநீர்ச்
சிலைமதனம்படுதாமரைவாவித்திரள்சங்கமே'

என்னுங் கந்தரந்தாதிச் செய்யுளில், "சேய்மயிலுச்சிட்ட வெச்சில்"என் பதனானும் உணர்க.

42. நிணங்காட்டுங்கொட்டிலைவிட்டொருவீடெய்திநிற்கநிற்குங்
குணங்காட்டியாண்டகுருதேசிகனங்குறச்சிறுமான்
பணங்காட்டுமல்குற்குருகுங்குமரன்பதாம்புயத்தை
வணங்காத்தலைவந்திதெங்கேயெனக்கிங்ஙன்வாய்த்ததுவே.

இ - ள். நிணம் காட்டும் கொட்டிலைவிட்டு - நிணத்தையே மிகுதி யாகக் காட்டுகிற சாலையாகிய சரீரத்தைவிட்டு, ஒரு வீடு எய்திநிற்க-ஒப் பற்ற வீட்டையான் அடைந்து நிலைத்திருக்க, நிற்கும் குணம் காட்டி - நிற் றற்குரிய தன் அருட்குணத்தைக்காட்டி, ஆண்ட-என்னையாட்கொண்ட, குருதேசிகன் - குருநாதன், அம்குறச்சிறுமான் - அழகிய குறச்சிறு பெண் ணாகிய, பணம் காட்டும் அல்குற்கு - பாம்பின் படத்தின் தன்மை யைக்காட்டுகின்ற அல்குலையுடைய [illegible], உரு கும் உருகுகின்ற, குமரன் - முருகன், (அவனது) பத அம்புயத்தை -

திருவடித்தாமரையை, வணங்காதலை இது எங்கே வந்து-பணியாதசிரசாகிய இது எப்படிவந்து, எனக்கு இங்ஙன்வாய்த்தது-எனக்கு இவ்விடத்தில் அமைந்தது. எ - று.

குருதேசிகன் இருபெயரொட்டெனினுமமையும். மான் உவமையாகு பெயர். பிறவித்தொடக்கொழிந்து பேரின்ப வீடடையும்படி யான் நிற்கவேண்டிய தன்திருவருள் நிலையையெனக் கருளிய குமரவேளின் திருவடித் தாமரை மலரைச் சூடாத தலையெனக்கேன் வாய்த்த தென்பது கருத்து.

**43.** கவியாற்கடலடைத்தோன்மருகோனைக்கணபணக்கட்
செவியாற்பணியணிகோமான்மகனைத்திறலரக்கர் [பாற்
புவியார்ப்பெழத்தொட்டபோர்வேன்முருகனைப்போற்றியன்
குவியாக்கரங்கள்வந்தெங்கேயெனக்கிங்ஙன்கூடியவே.

இ - ள். கவியால் - வாநரங்களைக்கொண்டு, கடல் அடைத்தோன் மருகோனை-சமுத்திரத்தை அணைகட்டித்தடுத்தோனாகிய திருமாலின் மருகனை, கண பணம் - கூட்டமாகிய படங்களையுடைய, கட்செவியால் - பாம்பைக்கொண்டு, பணி அணி - ஆபரணமாகப் பூண்ட, கோமான் மகனை - சிவபெருமானுக்குப் புதல்வனை, திறல் அரக்கர் புவி - வலியையுடைய அரக்கர்வாழ்கின்ற உலகங்களெல்லாம், ஆர்ப்பு எழ-கதறும்படி, தொட்ட-பிரயோகித்த, போர்வேல்-போர்த்தொழிலில்வல்ல வேற்படையையுடைய, முருகனை - குமாரக்கடவுளை, அன்பால் போற்றி - அன்போடுவணங்கி, குவியாக் கரங்கள்-கூம்பாதகைகள், எனக்கு எங்கேவந்து - எனக்கு எப்படிவந்து, இங்ஙன் கூடிய - இவ்விடத்துப் பொருந்தின. எ-று.

கடலடைத்தது-இராவணவதத்தின் பொருட்டு இலங்கைக்குச்சென்ற காலத்தில். பாம்பு உருவப் புலனுக்குரிய பொறியாகிய கண்ணையே ஓசைப்புலனுக்குரிய பொறியாகிய செவியாகவுங் கொண்டிருப்பதாகையால் கட்செவியெனப் பட்டது. கணபணக் கட்செவியாற் பணியணி கோமான் என்பதை, "திகழ்கனகாதினகரனந்த நடனர்"

"காம்பிணையாற்களிமாமயிலாற்கதிர்மாமணியால்
வாம்பிணையால்வல்லியொல்குதலான்மன்னுமம்பலவன்
பாம்பிணையாக்குழைகொண்டோன்கயிலைப்பயில்புனமுந்
தேம்பிணைவார்குழலாளெனத்தோன் றுமென்சிந்தனைக்கே"

கூம்பலங்கைத்தலத்தன்பரென்பூடுருகக்குனிக்கும
பாம்பலங்காரப்பரன்றில்லையம்பலம்பாடலரிற்
றேம்பலஞ்சிற்றிடையீங்கிவளீங்கணிவாய்கமழு
மாம்பலம்போதுளவோவளிகாணும்மகன்பணையே''

என்றற் றொடக்கத்தன வற்றுற் காண்க.

முருகக்கடவுளை அஞ்சலியாத கைகள் எனக்கேனுண்டாயின வென் பது கருத்து.

**44.** தோலாற்சுவர்வைத்துநாலாறுகாலிற்சுமத்தியிரு
காலாலெழுப்பிவளைமுதுகோட்டிக்கைநாற்றிநரம்
பாலார்க்கையிட்டுத்தசைகொண்டுமேய்ந்தவகம்பிரிந்தால்
வேலாற்கிரிதொளைத்தோனிருதாளன்றிவேறில்லையே.

இ - ள், (மனமே) தோலால் சுவர்வைத்து - தோலினால் சுவரெழுப்பி, நாலாறு காலில் சுமத்தி - பத்துக் கால்களினாற்றாங்குவித்து, இருகாலால் எழுப்பி - இரண்டுகால் களால் எழப்பண்ணி, வளைமுதுகு ஓட்டி - வளைந்த முதுகெலும்பாகிய முகட்டைவேய்ந்த, கைநாற்றி - இருகையாகிய கொடுங்கைகளைத் தொங்க அமைத்து, நரம்பால் ஆர்க்கை இட்டு-நரம்புகளால் கட்டி, தசைகொண்டு மேய்ந்த - மாமிசத்தால் வேய்ந்த, அகம் பிரிந்தால் (உடம் பாகிய) வீட்டை விட்டு யாம் நீங்கினால், (நமக்கு உறைவிடமாவது) வேலால் - வேலாயுதத்தால், கிரிதொளைத்தோன் - க்ரௌஞ்சமலையைத் தொளைத்தவனாகிய முருகவேளின், இருதாள் அன்றி-இரண்டு திருவடியல்லது, வேறு இல்லை - வேறொருதுணையில்லை. எ - று.

பத்துக்கால்கள் என்றது தசவாயுக்களை. அவையாவன பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்பன. இவற்றுள், இதயத்தியங்குவது பிராணன், உச்சர்க் கந்தலத்திடை நிற்பது அபானன், கந்தரசக்குழியிற் சந்திடை நிற்பது சமானன், நாபியில் நிற்பது உதானன், சரீரமுழுதும் வியாபித்திருப்பது வியானன், நீட்டலு முடக்கலும் சொல்லலும் செய்வது நாகன், உரோமம் புளகித்திமைப்பது கூர்மன், முகத்திடை நின்று தும்மலுஞ் சினமும் வெம்மையும் விளைப்பது கிருகரன், ஓட்டமு மிளைப்பும் வியர்த்தலும் விளைப்பது தேவதத்தன், உயிர் நீங்கினும் நீங்காது உடம்பை வீக்கித் தலைகிழித்த கல்வது தனஞ்சயன். இவற்றின் விரிவெல்லாம் யோக நூல்களிற்காண்க. மனமே, இந்தச்சரீரத்தை விட்டு நீங்குங்காலத்தில், முருகவேளின் திருவடியிணை யன்றி நமக்கு வேறுதுணையில்லை யென்பது கருத்து.

**45.** ஒருபூதருமறியாத்தனிவீட்டிலுரையுணர்வற்
றிருபூதவீட்டிலிராமலென்றனிருகோட்டொருகைப்
பொருபூதரமுரித்தேகாசமிட்டபுராந்தகற்குக்
குருபூதவேலவனிட்டூரசூரகுலாந்தகனே.

இ - ள். இருகோடு - இரண்டு கொம்புகளையும், ஒருகை - ஒருதுதிக்கையையுமுடைய, பொரு-போர் செய்கிற, பூதரம்-மலையை, உரித்து - உரித்து, ஓகாசம் இட்ட - உத்தரீயமாகப் போர்த்த, புராந்தகற்கு - திரிபுரநாசகனுக்கு, குரு - தேசிகனும், பூதம் வேலவன்-பரிசுத்தமாகிய வேலாயுதத்தையுடையவனும், நிட்டூரம் - நிஷ்டூரத்தையுடைய, சூரகுலம் அந்தகன் - சூரனது வம்சத்துக்கு யமனும் ஆகிய முருகவேள், பூதவீட்டில் இராமல் - பூதவீடாகிய சரீரத்திலிராமல், ஒரு பூதரும் அறியா - ஒரு பூததேகிகளும் உணராத, தனி வீட்டில்-ஒப்பற்ற வீட்டில், உரை உணர்வு அற்று - சொல்லும் உணர்ச்சியும் ஒழிந்து, இரு என்றான்-இருப்பாயென்று சொல்லியருளினான். எ - று.

ஒரு பூதரும என்பதற்கு ஒப்பற்ற பரிசுத்தான்மாக்களும் என்றுரைத்தலுமாம். தனிவீடு - மோக்ஷம். பஞ்சபூதாத் மகமாதலால் சரீரம் பூதவீடு எனப்பட்டது. பூதரம் - மலை, அது இருகோட்டொருகைப் பொரு என்னுமடையடுத்து நின்றமையானும்,உரித்து எனமேலொருவினைவரலானும் இவ்விடத்து யானையையுணர்த்திற்று. சிவகுருவாதலால் புராந்த கற்குக் குரு, என்றார். இது உபசாரம். குமரவேள், இந்தப் பூதவீட்டை விட்டு அந்தப் பூதவீட்டையடை யென்றான் என்பது கருத்து.

46. நீயானஞானவிநோதந்தனையென்றுநீயருள்வாய்
சேயானவேற்கந்தனேசெந்திலாய்சித்ரமாதரல்குற்
றோயாவுருகிப்பருகிப்பெருகித்துவளுமிந்த
மாயாவிநோதமனோதுக்கமானதுமாய்வதற்கே.

இ - ள். சேய் ஆன - குழந்தையாகிய, வேல்கந்தனே - வேல் முருகனே, செந்திலாய் - திருச்செந்திலையுடையானே, சித்ரம் - அதிசயித்தற்குரிய, மாதர் - மாதரது, அல்குல்-நிதம்பத்தடத்தில், தோயா - படிந்து, உருகி - மனமுருகி, பருகி - அவரது சுகத்தை அநுபவித்து, பெருகித் துவளும் - மிகுந்து சோர்கின்ற,இந்தமாயாவிநோதம் - இந்தமாயாவிசித்ரத்தாலுண்டாகிற, மனோ துக்கமானது - மனத்துன்பமானது, மாய்வதற்கு - கெடும் பொருட்டு, நீயான - நீயாகிய, ஞானவிநோதம் தன்னை - ஞானலீலையை, என்று - எக்காலத்தில், நீ அருள்வாய் - நீ எனக்குக் கிருபை செய்வாய், எ - று.

நீயாதல்-யான் என்னுந் தற்போத மொழிந்து சிவத்து ளொடுங்கல். பசுகரணங்கள் கெட்டுச் சிவகரணங்கள் தோன்றல் எனினுமாம். குழந்தைவேலன் என்றற்குச் சேயான வேற்கந்தனே என்றும், தன்னுருவமாகிய ஞானலீலையைத் தன்னடியார்க் கருள் செய்வோனாதலால் "நீயான ஞான

விநோதந்தனை யென்று நீயருள்வாய்" என்றும் கூறினார். மாயாவி நோதத்தைக் கெடுப்பது ஞானவிநோத மாதலால், மாயாவிநோதமநோ துக்கமானது மாய்வதற்கு நீயான ஞானவிநோதந் தனையென்று நீயருள் வாய்என்றார். முருகா, மாதர்மயக்கிலாழ்ந்து வருந்துவது ஒழியுமாறு, உன் ஞானலீலாரூபத்தை எனக்கு என்று காட்டியருள்வை யென்பது கருத்து.

47. பத்தித்திருமுகமாறுடன்பன்னிருதோள்களுமாய்த்
தித்தித்திருக்குமமுதுகண்டேன்செயன்மாண்டடங்கப்
புத்திக்கமலத்துருகிப்பெருகிப்புவனமெற்றித்
தத்திக்கரைபுரளும்பரமானந்தசாகரத்தே.

இ - ள். செயல் மாண்டு அடங்க - செய்கையற்றொடுங்க, புத்தி கமலத்து உருகி - (அப்பொழுது) இதயதாமரையினின்றும் உருகி, பெருகி - பெருக்கெடுத்து, புவனம் எற்றி - உலகங்களாகிய மணிகளை யெறிந்து, தத்தி - தாவி, கரைபுரளும் - கரைகடந்தோடுகின்ற, பரமம் ஆனந்தம் சாகரத்து - மேலாகிய இன்பக்கடலின்கண், பத்திதிருமுகம் ஆறுடன் - வரிசையாகிய ஆறுதிருமுகங்களோடும், பன்னிருதோள்களும் ஆய் - பன்னிரண்டு புயங்களையுடையதுமாகி, தித்தித்து இருக்கும் - (தன்னைக் கண்டவருடைய வுள்ளத்தின்கண்) இனித்திருக்கின்ற, அமுது கண்டேன் - ஒரு அமிர்தத்தை யான்பார்த்தேன். எ - று.

தேவர்கள் அமுதசாகரத்தில் சாவாமைக்கேதுவாகிய அமிர்தத்தைக் கண்டாற்போல, யானும் பரமாநந்தசாகரத்தில் பன்னிருதோளனென்னும் சாதல் பிறப்பொழிதற் கேதுவாகிய அமிர்தத்தைக் கண்டேன் என்பது கருத்து. செயல்மாண்டடங்கல் - சும்மாவிருத்தல். அமுது - சாவாமையைத் தருமருந்து.

48. புத்தியைவாங்கிநின்பாதாம்புயத்திற்புகட்டியன்பாய்
முத்தியைவாங்கவறிகின்றிலேன்முதுசூர்நடுங்கச்
சத்தியைவாங்கத்தரமோகுவடுதவிடுபடக்
குத்தியகாங்கேயனேவினையேற்கென்குறித்தனையே.

இ - ள். குவடு - க்ரௌஞ்சமலையானது, தவிடுபட - பொடியடும்படி, குத்திய காங்கெயனே - (அதனைவேலாயுதத்தால்) குத்தினகங்காபுத்ரனே, புத்தியைவாங்கி - புலன்வழியே செல்லுகின்ற என்மனத்தை வலித்துத்தடுத்து, நின்பாத அம்புயத்தில் புகட்டி, உன்பாத தாமரையிற் பதித்து, அன்பு ஆய் - அன்புகொண்டு, முத்தியைவாங்க - மோக்ஷத்தைக் கவர்ந்து

கொள்ள, அறிகின்றிலேன் - உணர்ந்திலேன், முது சூர்நடுங்க - பழைய சூரனானவன் நடுங்கும்படி, சத்தியைவாங்க-அவ் வேலையெடுக்க, தரமோ-(அவன்) தரத்தனோ, வினையேற்கு - வினையினேனுக்கு, என்குறித்தனை யாது செய்யக் கருதினை. எ - று.

தரத்தன் - பக்குவன். உன் ஞானசத்தியை அபக்குவியாகிய அவன் மீதெடுக்கத்தகாதென்றபடி சூரன் நூற்றெட்டுயுக மிருந்தானாதலால் முதுசூர் என்றார். உன் திருவடிக்குப் பத்திசெய்ய வறிந்திலேன், அடியேனுக்கு என் செய்ய நினைத்திருக்கிறாய், சூரனது வினையைப் பொடிசெய்தது போல என்வினையையும் பொடிசெய்தருளல் வேண்டும் என்பது கருத்து.

49. சூரிற்கிரியிற்கதிர்வேலெறிந்தவன்றொண்டர்குழாஞ்
சாரிற்கதியன்றிவேறிலைகாண்டண்டுதாவடிபோய்த்
தேரிற்கரியிற்பரியிற்றிரிபவர்செல்வமெல்லாம்
நீரிற்பொறியென்றறியாதபாவிநெடுநெஞ்சமே.

இ - ள். தண்டு தாவடிபோய் - சேனையுடன் போர்க்குச்சென்று, தேரில் - இரதத்தின் மேலேறியும், கரியில - யானையின் மேலேறியும், பரியில் - குதிரையின்மேலேறியும், திரிபவர் - திரிவோராகிய அரசருடைய, செல்வம் எல்லாம் - ஐசுவரிய மெல்லாம், நீரில பொறிஎன்று - நீர்மேலெழுத்தாமென்று, அறியாத - உணராத, பாவிநெடுநெஞ்சமே - பாவியாகிய பெரியமனமே, சூரில் - சூரன்மீதும், கிரியில் - க்ரௌஞ்சகிரியின்மீதும், கதிர்வேல் எறிந்தவன் - ஒளியையுடைய வேலாயுதத்தைப் பிரயோகித்தவனாகிய முருகக்கடவுளது, தொண்டர் குழாம - அடியார் கூட்டத்தை, சாரின்-அடைந்தனையாயின், கதி அன்றி - நமக்குக்கிடைப்பது முத்தியே யல்லது, வேறு இல்லை - வேறோர் பொருளுமன்று. எ - று.

தொண்டர் குழாத்தை எழுவாயாக்கி, சார் இல் எனப்பிரித்து, அடையு மிடம் என்றுரைப்பினுமாம். ரதகஜதுரகங்களோடு திரிபவருடைய செல்வமெல்லாம் நீரிலெழுத்தென்றுணராதமனமே, முருகவேளின் தொண்டர் கூட்டத்தை அடைவையாயின் நமக்குக்கிடைப்பது மோக்ஷமேயன்றி வேறுபொருளன்றென்பது கருத்து.

50. படிக்குந்திருப்புகழ்போற்றுவன்கூற்றுவன்பாசத்தினாற்
பிடிக்கும்பொழுதுவந்தஞ்சலென்பாய்பெரும்பாம்பினின்று
நடிக்கும்பிரான்மருகாகொடுஞ்சூரனடுங்கவெற்பை
யிடிக்குங்கலாபத்தனிமயிலேறுமிராவுத்தனே.

இ - ள். பெருங் பாம்பில் நின்று - பெரிய (காளிங்கன் என்னும்) பாம்பின்மேல் நின்று, நடிக்கும் பிரான்மருகா - நடித்த உபகாரசீலனாகிய திருமாலுக்கு மருகனே, கொடு சூரன்நடுங்க - கொடிய சூரனானவன் நடுங்கும்படி, வெற்பை இடிக்கும் - க்ரௌஞ்சமலையைப் பொடிபடுத்தின, கலாபம் - தோகையையுடைய, தனி - ஒப்பற்ற, மயில் ஏறும் - மயிற்பரிமேலேறுகின்ற, இராவுத்தனே - குதிரைவீரனே, படிக்கும் - அறிஞர் படனம் பண்ணுதற்குரிய, திருப்புகழ் - உன்திருப்புகழை, போற்றுவன் - நானும் புகழ்வேன் (ஆதலால்), கூற்றுவன் - இயமனானவன், பாசத்தினால் - தன் கைப்பாசக்கயிற்றினால், பிடிக்கும்பொழுது - என்னைக்கட்டிப் பிடிக்குங் காலத்தில் - வந்து - (எனக்கெதிரில்) எழுந்தருளி, அஞ்சல் என்பாய் - அஞ்சாதேயென்றருளக் கடவாய். எ - று.

சூரன் நடுங்க எறியமயில் - இந்திரனாகிய மயில். இராவுத்தன் என்ற தற்கேற்ப மயிலைப்பரியென்றனம். முருகவேளே, இயமன், தன் பாசத்தினாற் பிணிக்கும்போது உன் திருப்புகழைப் படித்துப்போற்றுவேன், அக்காலத்தில் நீ வந்து அஞ்சலென்றருள் செய்யவேண்டுமென்பது கருத்து.

51. மலைபாறுகூறெழவேல்வாங்கினானை வணங்கியன்பி
னிலையானமாதவஞ்செய்யுமினோ நும்மைநேடிவருந்
தொலையாவழிக்குப்பொதிசோறுமுற்றதுணையுங்கண்டீ
ரிலையாயினும்வெந்ததேதாயினும்பகிர்ந்தேற்றவர்க்கே.

இ - ள். (உலகத்தாரே) ஏற்றவர்க்கு - (உம்மிடத்துவந்து) யாசித்தவர்க்கு, இலை ஆயினும் - இலைக்கறியையாயினும், வெந்தது ஏதாயினும் - வெந்ததாகிய வேறெந்தப் பொருளையாயினும், பகிர்ந்து - பகுத்திட்டு (உண்டு), மலைஆறுகூறு எழவேல் வாங்கினானை அன்பின்வணங்கி - க்ரௌஞ்சமலையை ஆறுபங்காயெழும்படி வேலெடுத்தவனாகிய குமாரக்கடவுளை அன்போடு பணிந்து, நிலை ஆனமாதவம் செய்யுமின் - நிலையாகிய பெருந்தவத்தைச் செய்யுங்கள், (அப்படிசெய்வீராயின், அது) நும்மை நேடிவரும் - (யமன்) உம்மைத்தேடிவருகின்ற - தொலை யாவழிக்கு - தொலையாதநெறிக்கு, பொதிசோறும் - கட்டமுதும், உற்றதுணையும் - உற்றதுணையுமாகும். எ - று.

தொலையாவழிக்குப் பொதிசோறும் உற்றதுணையும் நும்மை நேடிவரும் என அந்வயித்து, அத்தவம் தொலைபாத தென்திசைப் பிரயாணத்துக்குக் கட்டமுதும் உற்றதுணையுமாகி உம்மைத்தேடிவரும் என வுரைப்பினுமாம். வேலினது ஆறுமுகத்தானுங் கூறுபட்டமை தோன்ற, "ஆறுகூறெழ" என்றார். வேல்விடுத்தானை யென்னாது வேல்வாங்கினானை யென்றது அவ்வேலினது பேராற்றலை யுணர்த்தற்கு "கறங்குதிரைக் கருங்கட

துங்காரவுணப்படருங்கடலுங் கலங்கக்கார்வாரு, துறங்குசிகைப்பொருப்புங் குருரப்பொருப்பும் பிளப்ப மறையுணர்ந்தோரரற்றும், அறங்குலவு மகத் தழலுமவுணமடவார்வயிற்றினழலு மூள, மறங்குலவு வேலெடுத்த குமர வேள் சேவடிகள் வணக்கஞ்செய்வாம்'' என்றார்பிறரும். உலகத்தாரே, முருகக்கடவுளைவணங்கித் தவஞ்செய்யுங்கள், செய்வீர்களாயின், அத்தவமே உமது கடைவழிக்குக் கட்டமுதும் உற்றதுணையுமாகும் என்பது கருத்து.

52. சிகராத்ரிகூறிட்டவேலுஞ்செஞ்சேவலுஞ்செந்தமிழாற்
பகரார்வமீபணிபாசசங் க்ராம பணாமகுட
நிகராட்சமபட்சபட்சிதுரங்கந்ருபகுமரா
குகராட்சசபட்சவிட்சோபதீரகுணதுங்கனே.

இ - ள். பணிபாசசங்க்ராம - தாழ்ந்த பாசப்போரையுடையவனே, பணாமகுடநிகரம் - படத்தைக்கொண்ட முடிக் கூட்டத்தையுடைய, அட்சமம்பட்ச - பாம்பைப் புசிப்பாகவுடைய, பட்சிதுரங்க - பறவையாகிய மயிலைவாகனமாகவுடையவனே, ந்ருபகுமரா - ராஜகுமாரனே, குக - குகனே, ராட்சசபட்ச - அசுரநாசகனே, விட்சோப - கலக்கமில்லாதவனே, தீர - தைரியசாலியே, குணதுங்கனே - பரிசுத்தகுணத்தையுடையவனே, சிகர அத்ரி - சிகரங்களையுடைய கிரௌஞ்சமலையை, கூறு இட்ட - பாகிந்த, வேலும் - உன்வேலாயுதத்தையும், செம் சேவலும் - செம்மையாகிய கோழிக் கொடியையும், செந்தமிழால் பகர் ஆர்வம் - செந்தமிழ்ப்பாக்களாற் புகழ்தற்குரிய விருப்பத்தை, ஈ - கொடுத்தருளல் வேண்டும். எ - று.

அட்சமம் - அழுக்காறு. இது அழுக்காற்றையுடைய பாம் புக்காயிற்று. பாம்புகளுடைய தாயாகிய கத்துருவிடத்துள்ள அழுக்காற்றைப் பாம்புகளுக்கு மேற்றியுரைத் தார்போலும். அவள் அழுக்காற்றையுடைய வள் என்பதை அவளது சரித்திரம் நன்கு விளக்கும். மயிலுக்குப் பாம்புஇரையாதலால், "பணாமகுட நிகராட்சமபட்சபட்சி" என்றார். சிவபெருமானுக்கு, மேலானவர் ஒருவருமில்லையாதலால், அவரை ந்ருபர் என்றார். அன்றி ந்ருப, குமரா, என இரண்டாகப்பிரித்து இறைவனே, குமரனே, என்று ஒப்பினுமமையும். குகன் - என்பதற்கு சிவகுருவானவன் என்பது பொருள்.

53. வேடிச்சிகொங்கைவிரும்புங்குமரனைமெய்யன்பினாற்
பாடிக்கசிந்துள்ளபோதேகொடாதவர்பாதகத்தாற்
றேடிப்புதைத்துத்திருட்டிற்கொடுத்துத்திகைத்திளைத்து
வாடிக்கிலேசித்துவாழ்நாளைவீணுக்குமாய்ப்பவரே.

இ - ள். வேடிச்சி கொங்கைவிரும்பும் - குறத்தியாகிய வள்ளிநாயகியின் தனங்களை யிச்சித்த, குமரனை - முருகனை, மெய்அன்பினால்பாடி - உண்மையாகிய அன்பினால்பாடி, கசிந்து - மனங்கரைந்து, உள்ளபோதே - சைவயிற் பொருளுள்ளகாலத்திலேயே, கொடாதவர் (சற்பாத்திரத்தில்) தானஞ்செய்யாதவர், பாதகத்தால்தேடி-பாவவழியால் பொருளைச் சம்பாதித்து, புதைத்து - மண்ணிற்புதைத்து, திருட்டில்கொடுத்து -கள்வருடைய திருட்டிலிழந்து, திகைத்து இளைதது - மனம் பிரமித்து உடம்புமெலிந்து - (அதனால்) வாடிக்கிலேசித்து - வாடித்துக்கித்து, வாழ்நாளை (இவவாறு) தமது ஆயுள்நாளை, வீணுக்கு மாய்ப்பவரோ - வீணில்அழிப்பவரோ யாவர்.

கடவுளை நினைத்துச்செய்யாத தானம் பயன்படாதாதலால் "குமரனை மெய்யன்பினாற்பாடிக் கொடாதவர் என்றும், செல்வம் ஓரிடத்து நிலையாமையையே யியற்கையாக வுடையதாதலால், உள்ளபோதே கொடாதவர் என்றும், பாவவழியால் தேடினபொருள் தானமுதலியவைகளுக்கு உபயோகமாகாமல் தானும் அனுபவியாமல் மண்ணிற்புதைத்துவைத்தற்கே யுரியதாகுமாதலால், "பாதகத்தால் தேடிப்புதைத்து" என்றும், "புதைத்தபொருள் திருடர் முதலானோர்க்கே யுரியதாகுமாதலால், "திருட்டில் கொடுத்து என்றும், இழந்தவன் இனி யென் செய்வோமெனத் திகைத்தலியற்கையாதலால், "திகைத்து" என்றும், திகைத்தலும் உடம்பிளைக்குமாதலால், "இளைத்து" "என்றும" பொருளையீட்டலும் அநுபவியாது இழத்தலும் அதனால் துக்கமடைந்து மெலிதலுமாகிய இவைகளாலே தமது ஆயுளைக் கழித்து இறைவனது திருவருளுக்குரிய காரியமொன்றுஞ் செய்திலராதலால்,"வாழ்நாளை வீணுக்குமாய்ப்பவரோ"என்றுங் கூறினார். "கைத்துண்டாம்போழ்தே கரவாதறஞ்செய்ம்மின்" என்றும், "உடாஅது முண்ணாதுந்-தம்முடம்பு செற்றும், கெடாஅத நல்லறமுஞ்செய்யார்-கொடாஅது, வைத்தீட்டினாரிழப்பர் வான்றோய்மலைநாட, வுய்த்தீட்டுந் தேனீக்கரி." என்றும், பிறரு மிவ்வாறு கூறுதல்காண்க. கொடாதவர் என்றதற்கேற்பப் பொருளும், பாதகத்தால் தேடியிழத்தல் முதலியன மேலேவருதலாலும் தானம் என்பதற்கு சற்பாத்ரமும் வருவித்துரைக்கப்பட்டன. தமதுபொருளைப் பகவதர்ப்பணம்பண்ணி, சற்பாத்திரத்தில் தானம்பண்ணுதவர் அதனை திருடர்முதலியோரா லிழந்து வருந்தித்தம் வாணாளை வீணாளாய்க் கழித்திறப்பரென்பது கருத்து.

54. சாகைக்குமீண்டுபிறக்கைக்குமன் றித்தளர்ந்தவர்க்கொன்
றீகைக்கெனைவிதித்தாயிலையேயிலங்காபுரிக்குப்
போகைக்குநீவழிகாட்டென்றுபோய்க்கடறீக்கொளுந்த
வாகைச்சிலைவளைத்தோன்மருகாமயில்வாகனனே.

இ - ள். இலங்காபுரிக்குப் போகைக்கு - இலங்கைப்பட்டணத்துக்குப் போவதற்கு, நீவழிகாட்டு என்றுபோய் - நீவழிகாட்டக் கடவையென்று சமுத்ரராஜனிடம் சென்று, அவன் கடல்-அவனது இடமாகிய கடலானது, தீகொளுந்த - நெருப்புப்பற்றியெரியும்படி, வாகை சிலைவளைத்தோன் - வெற்றியையுடைய கோதண்டத்தை வளைத்தவனாகிய திருமாலுக்கு, மருகா-மருகனே, மயில்வாகநனே-மயில்வாகநத்தையுடையவனே, சாகைக்கும் மீண்டு பிறக்கைக்கும் அன்றி - இறத்தற்கும் திரும்பிப்பிறத்தற்குமே என்னைப்படைத்தனையன்றி, தளர்ந்தவர்க்கு - வறுமையால் தளர்வடைந்தோர்க்கு, ஒன்று ஈகைக்கு - ஒருபொருளைக் கொடுத்தற்கு, என்னை விதித்தாயில்லையே - என்னைச்சிருஷ்டித்தாயில்லையே (இதென்ன அநீதி).

மயில்வாகநக்கடவுளே பிறக்கவும் இறக்கவும் என்னைப்படைத் தனையன்றி வறுமையால் தளர்ந்துவந்தவர்க்குக்கையிலுள்ள தோர்பொருளைக் கொடுக்க என்னைப்படைத்தாயில்லையே யென்பது கருத்து.

55. ஆங்காரமுமடங்காரொடுங்கார்பரமானந்தத்தே
தேங்கார்நினைப்புமறப்புமறார்தினைப்போதளவு
மோங்காரத்துள்ளொளிக்குள்ளேமுருகனுருவங்கண்டு
தூங்கார்தொழும்புசெய்யாரென்செய்வார்யமதூதருக்கே.

இ - ள். ஆங்காரமும் அடங்கார் - அகங்காரமுதலிய நான்கும் அடங்கப்பெறாதவரும், பரமானந்தத்தே ஒடுங்கார் - மேலாகிய இன்பத்தின் கண்ணே யொடுங்காதவரும், தேங்கு ஆர்நினைப்பும் மறப்பும் அறார் - நிறைதலைப்பொருந்திய நினைப்பையும் மறப்பையும் ஒழியாதவரும், தினைப்போது அளவும் - தினைப்பொழுதினளவாயினும், ஓங்காரத்து உள் ஒளிக்குள்ளே - பிரணவத்தினது உள்ளொளியின்கண், முருகன்உருவம்கண்டு-முருகக்கடவுளின் உருவத்தைத் தெரிசித்து, தூங்கார் - (அவ்விடத்தே)உறங்காதவரும், தொழும்புசெய்யார் - தொண்டுசெய்யாதவரும் ஆகிய இவர், யமதூதருக்கு - இயமனது தூதர்செய்யும் துன்பத்துக்கு, என்செய்வார்-யாது பரிகாரம் செய்துகொள்வார். எ - று.

அந்தக்கரணசதுஷ்டயத்தில் ஒன்றாகிய ஆங்காரமும் என்ற உம்மையால் மனம் புத்தி சித்தங்களாகிய மற்றைமூக்கரணங்களும் வருவிக்கப்பட்டன. தினை காலத்தின் சிற்றளவைக்குறித்து நின்றது. கரணசேஷ்டையொடுங்கி முருகக்கடவுளை நினைப்பு மறப்புக்களற்ற இடத்திற்கண்டு வணங்கி அவருக்குத் தொண்டுசெய்யாதவர், யமதூதர்செய்யும் துன்பத்துக்குப் பரிஹாரமாகயாதுசெய்யக் கடவர் என்பது கருத்து.

56. கிழியும்படியடற்குன்றெறிந்தோன்கவிகேட்டுருகி
யிழியுங்கவிகற்றிடாதிருப்பீரெரிவாய்நரகக்
குழியுந்துயரும்விடாய்ப்படக் கூற்றுவனூர்க்குச்செல்லும்
வழியுந்துயரும்பகரீர்பகரீர்மறந்தவர்க்கே.

இ - ள். கிழியும்படி - பிளவுபடும்படி, அடல்குன்று எறிந்தோன் - வலிமையுள்ள க்ரௌஞ்சகிரியை வேலாலெறிந்தவனாகிய முருகக்கடவுளின் விஷயமாகிய, கவி - பாடல்களை, கேட்டு உருகி - கேட்டு மனமுருகி, இழியும்கவிகற்றிடாது இருப்பீர்-இழிந்த வேறு விஷயமாகிய பாடல்களைக் கல்லாதிருக்கக்கடவீர், எரிவாய் நரகக்குழியும் துயரும் - எரிவாயாகிய நரகக்குழியையும் அதில் துன்பங்களையும், விடாய்ப்பட - விடாய்க்கும் படி, கூற்றுவன் ஊர்க்குச்செல்லும் - யமபுரத்துக்குப்போகின்ற, வழியும் துயரும் - வழியையும் அதிற்றுன்பங்களையும், மறந்தவர்க்கு - (அறிஞர் சொன்னதைக்கேட்டு) மறந்தவர்களுக்கு, பகரீர் பகரீர்-சொல்லீர் சொல்லீர்.

குமரவேள் விஷயமாகிய கவிகளைக்கற்பதும் வேறுகவிகளைக் கல்லாமையுமாகிய இவைகளைச்செய்யுங்கள், நரகவேதனைமுதலியவைகளை அறிஞர் சொல்லக்கேட்டு மறந்தவர்களுக்கு வற்புறுத்திச் சொல்லுங்கள் என்பது கருத்து.

57. பொருபிடியுங்களிறும்விளையாடும்புனச்சிறுமான்
றருபிடிகாவலசண்முகவாவெனச்சாற்றிநித்த
மிருபிடிசோறுகொண்டிட்டுண்டிருவினையோமிறந்தா
லொருபிடிசாம்பருங்காணாதுமாயவுடம்பிதுவே.

இ - ள். (நெஞ்சமே) இரு வினையோம் இறந்தால் - இரு வினையை யுடையோமாகிய நாம் இறந்தோமாயின், மாயஉடம்பு இது-மாயாகாரியமாகிய சரீரமென்னும் இது, ஒருபிடிசாம்பரும் காணாது-ஒருபிடிசாம்பலுமாகாதொழியும், (ஆதலால்) பொரு - போர்செய்தற்குரிய, பிடியும்களிறும்-பெண் யானையும் ஆண் யானையும், விளையாடும்-விளையாடுதற்கிடமாகிய, புனச்சிறுமான் - புனத்தின்கண்ணுள்ள சிறிய மானானது, தரு - பெற்ற, பிடி - பெண்யானைக்கு, காவல - தலைவனே, சண்முகவா - அறுமுகனே, எனச் சாற்றி - என்று உச்சரித்து, நித்தம் - நாள்தோறும், பிடிசோறுகொண்டு இட்டு - ஒரு பிடிசோற்றையாயினு மெடுத்து இரப்போர்க்குக்கொடுத்து, உண்டு - பிறகு நீ புசித்து, இரு - சும்மா இரு, எ - று.

இரப்போர்முதலியோர்க்குக் கொடாதாடி [illegible] உடம்பு நிலைத்திராதென்றற்கு, "பிடிசோறுகொண்டிட்டுண்டிரு வினையோ மிறந்தால் ஒரு பிடிசாம்பருங்காணாது மாயவுடம் பிதுவே" என்றார். பிடி - வள்ளிநாயகி, இவள் மான்வயிற்றுதித்தமையால் 'மான்தருபிடி' என்றார். இந்த மாயவுடம்பைப் பேணாது இரப்போர்க்குக் கொடுத்து நீங்களுமுண்டு முருகக் கடவுளைத் துதித்திருங்கள் என்பது கருத்து.

**58.** நெற்றாப்பசுங்கதிர்ச்செவ்வேனல்காக்கின்றநீலவள்ளி
முற்றாத்தனத்திற்கினியபிரானிக்குமுல்லையுடன்
பற்றாக்கையும்வெந்துசங்க்ராமவேளும்படவிழியாற்
செற்றார்க்கினியவன்றேவேந்த்ரலோகசிகாமணியே.

இ - ள். நெற்றாது - முதிர்காயாக, பசுங்கதிர் செவ்வேனல் - பசுமையாகிய கதிர்களையுடைய செந்தினையை, காக்கின்ற - (ஒடியெறிந்து) காவல் செய்கிற, நீலவள்ளி - நீலநிறத்தையுடைய வள்ளிநாயகியின், முற்றாதனத்திற்கு - (என்றும்) முதிராததனங்களுக்கு, இனியபிரான் - இனிமையாகிய பெருமானும், சங்க்ராமம் - போரில் வல்லவனாகிய, வேளும்-மன்மதனும், இக்கு முல்லையுடன் - கருப்புவில் முல்லை மலர்க்கணை இவைகளுடன், பற்றாக்கையும் வெந்து - பற்றாக்கையும் வெந்து, பட - இறக்கும்படி, விழியால் - நெற்றிக்கண்ணினால், செற்றார்க்கு-வென்றவராகிய சிவபெருமானுக்கு, இனியவன் - இனிமையாயிருப்பவனுமாகிய முருகக் கடவுள், தேவேந்தரலோகசிகாமணி - தேவேந்த்ரலோகத்துக்கு முடியணிபோல் பவனுவன். எ - று.

நெற்றா - நெற்றாகாத எனினுமாம். முல்லையொன்றையே கூறினாரயினும், இனம்பற்றி, தாமரை, மா, அசோகு, நீலம் என்பவைகளாகிய நான்கும் உடன் கொள்ளப்படும். இவையே மன்மதனது பஞ்சபாணம் எனப்படுவன. இவற்றுள் தாமரைமலருக்கு நினைப்பூட்டுவதும், மாமலர்க்குப் பசலைநிறத்தையுண்டாக்குவதும், அசோகமலர்க்கு உணவுமுற்றும் வெறுக்கச்செய்வதும், முல்லைமலர்க்குக் கிடையாய்க்கிடக்கச் செய்வதும், நீலமலர்க்குக் கொல்லுவதும் குணங்களாம். இவை எய்யப்படுமிடங்கள், முறையே நெஞ்சு, கொங்கை, விழி, சிரம், அல்குல் என்பவைகளாம். இவைகளை, "நினைக்கு மரவிந்த நீள்பசலைமாம்பூ, அனைத்துணவு நீக்குமசோகு, வனத்திலுறும், முல்லைகிடைகாட்டுமோதே முழுநீலம், கொல்லுமதனம்பின் குணம்" "நெஞ்சிலரவிந்த நீள் குதங் கொங்கையிலே, துஞ்சும் விழியிலசோகமாம், வஞ்சியர்தம், சென்னியிலே முல்லை திகழ் நீலமல்குலிலே, அன்னவேளெய்யுமியல்பாம்" என்னுஞ் செய்யுட்களாலுணர்க. "மதன்

நீலக்கணையிற்கை வைத்தானினிச்சற்று நேரநிற்பித், காலற்கிணையிடு மென்னுவினை" எனவும், "அனங்கனெய்த தன்னஞ்சிலம்புருவனையல்லாது தணந்தனனே" எனவும் பிறர் கூறுதலுங்காண்க. வள்ளிகாதலனே, சிவகுருவே, தேவலோகத்தார்க்கு முடிமணியே, எம்மைக் காக்கவேண்டுமென்பது கருத்து. வள்ளிகாதலன் தேவேந்த்ரலோகசிகாமணியென்பன இம்மைமறுமையின் பயன்களைத்தருவோனென்பதையும், இக்குமுல்லை யுடன் பற்றுக்கையும் வெந்துசங்க்ராமவேளும்படவிழியாற் செற்றார்க் கினியவன் என்பது வீடுபேறாகிய முத்தியின் பத்தைத்தருவோன் என்பதையும் குறித்து நின்றன. பிரான், இனியவன், இவைகளை அண்மை விளியாக்கி, பிரானே, இனியவனே என்றுரைப்பினுமாம். பற்றுக்கை - அம்பு கட்டுங்கயிறு.

59. பொங்காரவேலையில்வேலைவிட்டோனருள்போலுதவ
வெங்காயினும்வருமேற்பவர்க்கிட்ட திடாமல்வைத்த
வங்காரமுமுங்கள்சிங்காரவீடுமடந்தையருஞ்
சங்காதமோகெடுவீருயிர்போமத்தனிவழிக்கே.

இ - ள். (உலகத்தாரே) ஏற்பவர்க்கு இட்டது - இரப்போர்க்கு அளித்ததின்பயன், பொங்கு-ஆர - பொங்குதல்பொருந்த, வேலையில் - கடலின்மீது, வேலைவிட்டோன் - வேற்படையையேவினவனாகிய முருகக் கடவுளின், அருள்போல் - திருவருள்போல, உதவ - உதவும்பொருட்டு, எங்கு ஆயினும்வரும் - எவ்விடத்தாயினும் வரும், (அவ்வாறு) இடாமல் வைத்த - கொடாமல்வைத்த, வங்காரமும் - பொன்னும், உங்கள் சிங்கார வீடும் - உங்களுடைய அழகியவீடும், மடந்தையரும் - மாதரும், உயிர் போம் - உயிர்செல்லுகின்ற, அத்தனிவழிக்கு - அந்த ஒப்பற்ற வழிக்கு, சங்காதமோ - துணையாமோ. எ - று.

கெடுவீர் என்பது தன்மையில் கெட்டேனென்பதுபோல முன்னிலையில் வரும் இரக்கப்பொருடருவ தோரிடைச்சொல். அன்றிவிளியெனினுமமையும். உலகத்தாரே, ஏற்பவர்க்கிட்டது முருகவேளின் திருவருள் போல எவ்விடத்தும் உங்களுக்குதவும், மற்றைப்பொருள்கள் உங்களுக்குதவா என்பது கருத்து. வங்காரம் - பொன். இது திசைச்சொல்

60. சிந்திக்கிலேனின்றுசேவிக்கிலேன்றண்டைச்சிற்றடியை
வந்திக்கிலேனொன்றும்வாழ்த்துகிலேன்மயில்வாகனனைச்
சந்திக்கிலேன்பொய்யைநிந்திக்கிலேனுண்மைசாதிக்கிலேன்
புந்திக்கிலேசமுங்காயக்கிலேசமும்போக்குதற்கே

இ - ள். புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கு - மனோதுக்கங்களையும் தேகதுக்கங்களையும் ஒழித்தற்பொருட்டு, மயில்வாகனனை - மயில்வாகனத்தையுடைய முருகக்கடவுளை, சிந்திக்கிலேன் - நினைக்கிலேன், நின்றுசேவிக்கிலேன் - நின்றுசேவியேன், தண்டைச்சிற்றடியை - தண்டையையணிந்த சிறிய திருவடியை, வந்திக்கிலேன் - வணங்கிலேன், ஒன்றும் வாழ்த்துகிலேன் - சிறிதும் துதிக்கிலேன், சந்திக்கிலேன் - கூடிலேன், பொய்யை நிந்திக்கிலேன் - பொய்க்காரியங்களைப் பழிக்கிலேன் உண்மை சாதிக்கிலேன் - உண்மையைச்சாதிக்கிலேன். எ - று.

மனோதுக்கம்-வியாகுலம் முதலாயின. தேகதுக்கம், பிணிமுதலாயின. சந்தித்தல் - ஆலயங்களிற் சென்று திவ்யியமங்கள விக்ரஹங்களைத் தரிசித்தல். முருகக்கடவுளை மனமுதலிய முக்கரணங்களானும் வழிபடேன்,யான் எவ்வாறு உட்புறக்க வலைகளை யொழித்துய்வேன் என்பது கருத்து.

61 வளையற்றவுணர்சிரமற்றுவாரிதிவற்றச்செற்ற
புரையற்றவேலவன்போதித்தவாபஞ்சபூதமுமற்
றுரையற்றுணர்வற்றுடலற்றுயிரற்றுபாயமற்றுக்
கரையற்றிருளற்றெனதற்றிருக்குமக் காட்சியதே.

இ - ள். பஞ்சபூதம்அற்று ஐம்பெரும்பூதங்களும் அற, உரைஅற்று-சொல்லற, உணர்வுஅற்று - அறிவற, உடல்அற்று - உடம்பற,உயிர்அற்று-பிராணனற, உபாயம்அற்று - தந்திரமற, கரைஅற்று - வரம்பற, இருள் அற்று - அந்தகாரமற, எனதுஅற்று - எனதென்பதற, இருக்கும் - தானேயாயிருக்கிற,அக்காட்சியது அந்தஞானத்தையுடையதாகியதத்துவநிலையை, வளைஅற்று - கிரௌஞ்சமலைபிளந்து, அவுணர்சிரம்அற்று - அரக்கர்தலைகள் அறுபட்டு, வாரிதிவற்ற - கடல் வறளும்படி, செற்ற — வென்ற, புரைஅற்ற வேலவன் - குற்றமற்ற வேலாயுதத்தையுடையவனாகிய முருகக்கடவுள், போதித்த ஆறு - எனக்கு அறிவுறுத்தினவாறு (என்னவியப்பு)எ-று.

தத்துவநிலையையுணரவே, பஞ்சபூதாதிகள் தாமே யொழியுமாதலால் இவ்வாறுகூறினார். முருகக்கடவுள் எனக்கறிவுறுத்தின உண்மைஞானம் பஞ்சபூதாதிகளை எனக்குப் பொய்யாய்த் தோற்றுவித்தது என்பதுகருத்து.

62 ஆலுக்கணிகலமவெண்டலைமாலை
மாலுக்கணிகலந்தண்ணந்துழாய்மயிலேறுமையன்
காலுக்கணிகலம்வானோர்முடியுங்கடம்புங்கையில்
வேலுக்கணிகலம்வேலையுஞ்சூரனுமேருவுமே.

இ - ள். ஆலுக்கு - சிவபெருமானுக்கு, அணிகலம் - ஆபரணமாவது, வெள்தலைமாலையே - வெண்மையாகிய சிரமாலைகளே, அகிலம் உண்டமாலுக்கு - உலகத்தைவிழுங்கின திருமாலுக்கு, அணிகலம் - ஆபரணமாவது, தண் அம் துழாயே-குளிர்ந்த அழகிய துளசிமாலையே, மயில் ஏறும் ஐயன் - மயிலின்மேலேறுகிற கடவுளுடைய, காலுக்கு-திருவடிக்கு, அணிகலம் - ஆபரணமாவது,வானோர்முடியும் - தேவர்களுடையமகுடங்களும், கடம்புமே-கடப்பமலர்மாலையுமே, கையில்வேலுக்கு-அவன்கையிலுள்ள வேலாயுதத்துக்கு, அணிகலம், ஆபரணமாவது,வேலையும்-கடலும், சூரனும்-சூரபன்மனும், மேருவுமே - க்ரௌஞ்சமலையுமே, எ - று.

ஆல்உஎனப் பிரித்து, கல்லாலின்கீழலி லெழுந்தருளி யிருக்கிற சிவபெருமான் எனப்பொருள் கொள்க. அன்றி ஆலம் ஆல்எனக்குறைந்து நின்றதெனக்கொண்டு விஷத்தைப்பருகினவன் எனினுமாம். உ - சிவன். தேவரிடையருது மிடைந்து வணங்கலால் வானோர் முடியுமென்றும், கடல்முதலிய மூன்றையு மழித்த ஆற்றலுண்மையால், வேலையுஞ் சூரனும் மேருவும் என்றும் கூறினார். மேரு - ஈண்டுக் கிரௌஞ்சமலைக்காயிற்று. சிவபெருமான் முதலியோர்க்குப் பிறவாகிய அணிகலங்களுளவாயினும் இவைவ சிறந்தனவாதலால் இவ்வாறு கூறினார்.

63. பாதித்திருவுருப்பச்சென்றவர்க்குத்தன்பாவனையைப்
போதித்தநாதனைப்போர்வேலனைச்சென்றுபோற்றியுய்யச்
சோதித்தமெய்யன்புபொய்யோவழுதுதொழுதுருகிச்
சாதித்தபுத்திவந்தெங்கேயெனக்கிங்ஙன் சந்தித்ததே.

இ - ள். பாதிதிருவுரு - பாதியுருவம், பச்சென்றவர்க்கு - பச்சென்றிருப்பவராகிய சிவபெருமானுக்கு, தன்பாவனையை-தனது ஞானபாவனையை, போதித்தநாதனை-அறிவுறுத்தின இறைவனை, போர்வேலனை - போர்க்குரிய வேலையேந்தினவனை, சென்று போற்றி உய்ய - யான்போய்வணங்கிப்பிழைக்க, சோதித்த மெய்யன்பு - (அந்நாளில் அவர்) பரீக்ஷித்த உண்மையன்பு, பொய்யோ-பொய்யன்புதானோ, அழுதுதொழுது உருகி-(அந்நாளில் மெய்யன்புடையவர்போல) அழுது பணிந்துருகி, சாதித்த புத்தி - சாதித்த மனமானது, எங்கேவந்து-எப்படிவந்து, எனக்கு இங்ஙன்சந்தித்தது-எனக்கு இவ்விடத்துக்கூடிற்று. எ - று.

பச்சென்று என்பதில் என்று பண்பில்வந்தது. பச்சைநிறமுள்ள உமாதேவியை ஒருபாகத்துடையவராதலால் பாதித்திருவுருப்பச் சென்றவர், என்றார். அக்காலத்தில், முருகக்கடவுளை அழுது தொழுதுருகிச்சாதித்த

மெய்யன்பானது இக்காலத்தில் இல்லையாயிற்றாதலால், மெய்யன்பர்போல நடித்தற்குக் காரணமாகிய மனம் அக்காலத்தில் எனக்கெப்படி யுண்டாயிற் றென்பது கருத்து.

௬௪. பட்டிக்கடாவில்வருமந்தகாவுனைப்பாரறிய
வெட்டிப்புறங்கண்டலாதுவிடேன்வெய்யசூரனைப்போய்
முட்டிப்பொருதசெவ்வேற்பெருமாடிருமுன்புநின்றேன்
கட்டிப்புறப்படடாசத்திவாளென்றன் கையதுவே.

இ - ள். வெய்யசூரனை - கொடியசூரபன்மனை, போய்முட்டி பொருத - சென்றுதாக்கிப் போர்புரிந்த, செவவேல்பெருமாள்-செவந்த வேலாயுதத்தைத்தாங்கிய முருகக்கடவுளின், திருமுன்புநின்றேன்-- சந்நிதிக்கெதிரில் நின்றேன், பட்டிக்கடாவில்வரும்-களவையுடைய எருமைக்கடாவின் மேலேறிவருகின்ற, அந்தகா - யமனே, உன்னை-உன்னை, பார்அறிய - உலகமறியும்படி, வெட்டி - துணித்து, புறங்கண்டு அல்லாது - முதுகுகண்டன்றி, விடேன் - விடமாட்டேன், சத்திவாள் - சத்தியாகிய வாளானது, என்கையது - என்கையினிடத்தது, கட்டிப்புறப்படடா - நீ உன்விருது முதலியவற்றைக் கட்டிக்கொண்டு வெளிப்படடா. எ - று.

பட்டி-வஞ்சம் எனினுமாம். பட்டிமையென்பது ஈறுகெட்டுப் பட்டி யென நின்றது. சத்திவாள் - ஆற்றலாகியவாள் எனினும் பொருந்தும். கட்டியென்பதைக் கட்ட எனச்செய்தெனெச்சத்திரிபாக்கி, என்னை உன் கைப்பாசத்தாற் பிணிக்க என்றுரைத்தலுமொன்று கூற்றுவனே, முருகக் கடவுளது சந்நிதியில் நிற்கிறேன், அவரது வல்லமையாகிய வாளும் என் கையினிடத்தது ஆதலால் நீ என்மீது வருவையாயின் தோல்வியடைவா யென்பதுகருத்து.

௬௫. வெட்டுங்கடாமிசைத்தோன்றும்வெங்கூற்றன் விடுங்கயிற்றாற்
கட்டும்பொழுதுவிடுவிக்கவேண்டுங்கராசலங்க
ளெட்டுங்குலகிரியெட்டும்விட்டோடவெட்டாதவெளி
மட்டும்புதையவிரிக்குங்கலாபமயூரத்தனே.

இ - ள். கர அசலங்கள் எட்டும் - கைம்மலைகளெட்டும், குலகிரி எட்டும் விட்டு ஓட - அஷ்டகுலமலைகளையும் விட்டோடவும், எட்டாத வெளிமட்டும் புதைய - (கட்புலனுக்கு) எட்டாத ஆகாயம் வரைக்கும் மறையவும், விரிக்கும் - விரித்த, கலாபம் - தோகையையுடைய, மயூரத்தனே - மயிலையுடையவனே, வெட்டும் - கொலைசெய்கின்ற, கடாமிசைத் தோன்றும்-எருமைக் கடாவின்மேலேறிவருகிற, வெம் கூற்றன்-கொடிய

யமனானவன், விடும் கயிற்றால் - வீசுகின்ற தன்கைப்பாசத்தினால், கட்டும் பொழுது - (என்னைப்) பிணிக்கும்போது, விடுவிக்கவேண்டும் - என்னை அவன்கையினின்றும் விடுவித்தருளவேண்டும். எ - று.

கைம்மலைகள் எட்டு - அஷ்டதிக்குயானைகள். அவை:—ஐராவதம், புண்டரீகம், வாமநம், குமுதம், அஞ்சநம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபம் என்பன. இவற்றிற்கு முறையே பெண்யானைகளாவன-அப்பிரமை,கபிலை,பிங்கலை,அநுபமை,தாமிரபர்ணி,சுதந்தி, அஞ்சனை,அஞ்சனாவதி என்பன. குலகிரிகள் எட்டாவன-கைலை,இமயம்,மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி,கந்தமாதநம் என்பன. மயில்தன்தோகையைவிரித்தலா லுண்டாகிற காற்றினால்அஷ்டதிக்கு யானைகளும்அஷ்டதிக்குமலைகளைவிட்டோடினவென்றதாயிற்று. யானைகள் ஓடினதுபோல மலைகளும் ஓடின வெனப்பொருள்கொள்ளின் ஓடுதல்நிலைபெயர்தலாகக்கொள்க. அன்றி யானைகளும் மலைகளும் பூமிபாரத்தைத் தாங்குவதை விட்டு ஓடவெனினும் அமையும். வெட்டுதல்-கொம்பினால் குத்துதலென்றலுமாம். கூற்றுவன் என்னைத் தன்பாசத்தாற் பிணிக்கிறமரணகாலத்தில்,அவன் கையினின்றும் என்னை விடுவிக்கவேண்டுமென்பது கருத்து.

66. நீர்க்குமிழிக்குநிகரென்பர்யாக்கைநில்லாதுசெல்வம்
பார்க்குமிடத்தந்தமின்போலுமென்பர்பசித்துவந்தே
யேற்குமவர்க்கிடவென்னினெங்கேனுமெழுந்திருப்பார்
வேற்குமரற்கன்பிலாதவர்ஞானமிகவுநன்றே

இ - ள். யாக்கை நீர்க்குமிழிக்கு நிகர் என்பர் - சரீரமானது நீர்க்குமிழிக்குச் சமாநமென்பார்கள், செல்வம் - செல்வமானது, நில்லாது-நிலைத்திராது, பார்க்கும் இடத்து-இதனை ஆராய்ந்து பார்க்குமிடத்தில், அந்த மின்போலும் என்பர் - அந்தமின்னலை நிகர்க்கு மென்பார்கள், (இவ்வாறு நிலையாமையையுணர்ந்துபிறர்க் கறிவுறுத்தினவர்கள்) பசித்து வந்து ஏற்குமவர்க்கு இட என்னின்-பசித்து வந்து இரப்பவர்க்கு இடவேண்டு மென்றால், (விருப்பமின்றி) எங்கு ஏனும் - எவ்விடத்துக் காயினும், எழுந்திருப்பார் - எழுந்து போவார்கள், (ஆதலால்) வேல்குமரன்கு - வேலையேந்திய குமாரக் கடவுளிடத்து, அன்பு இல்லாதவர் - பத்தியில்லாதாருடைய, ஞானம் - ஞானமானது, மிகவும் நன்று - மிகவும் அழகிது. எ - று.

முருகக் கடவுளிடத் தன் பில்லாதவர் பேசும் ஞானம் வாசாஞானமேயன்றி மெய்ஞ்ஞான மன்றென்பது கருத்து.

67. பெறுதற்கரியபிறவியைப்பெற்றுநின்சிற்றடியைக்
குறுகிப்பணிந்துபெறக்கற்றிலேன்மத கும்பகம்பத்
தறுகட்சிறுகட்சங்க்ராமசயிலசரசவல்லி
யிறுகத்தழுவுங்கடகாசலபன்னிருபுயனே.

இ - ள். மதம் - மதத்தையும், கும்பம் - கும்பஸ்தலத்தையும் உடைய, கம்பம் - கட்டுத்தறியிற்கட்டப்படுகிற, தறுகண் - அஞ்சாமையும், சிறு கண் - சிறியகண்களுமுள்ள, சங்க்ராமசயிலம் - போர்மலையினிடத்துப்பிற ந்த, சரசவல்லி - சரசநாயகியாகிய தெய்வயானையை, இறுகத்தழுவும் - இறுக ஆலிங்கனம்பண்ணுகிற, கடகம் - கடகத்தையணிந்த, அசலம் - மலை போன்ற, பன்னிருபுயனே - பன்னிருதோள்களை யுடையவனே, பெறு தற்கு அரிய பிறவியைப்பெற்றும் - அடைதற்கரிதாகிய மானிடப்பிறவியை யடைந்தும், நின்சிற்றடியை - உன்சிறியதிருவடியை, குறுகி - அணுகி, பணிந்து - வணங்கி, பெற - (பெறுதற்குரிய வீடு பேற்றைப்) பெறுவதற்கு, கற்றிலேன் - கற்றேனில்லை, எ - று.

சயிலம் என்பது சங்க்ராமமென்னும் விசேடணத்தால் யானையையுண ர்த்தி, அது, சரசவல்லியென மேல்வருதலால் ஐராவதத்தையுணர்த்திற்று. கும்பஸ்தலத்தை மத்தகமென்றுங் கூறுதலுண்டு. மானிடப்பிறவி பெறு தற்கரியதென்பதை, "பெறுதற்கரிய பிறப்பீது" "எறியுங்கடலினுகத் தொளையிலியாமைக் கழுத்துப்புகுவதுபோற், பொறிவெம் பிறவியநேகத் தாற் புருடன் விவேகியெனப்பிறந்து" என்றற்றொடக்கத் தனவற்றாற் காண்க.

68. சாடுஞ்சமரத்தனிவேன்முருகன்சரணத்திலே
யோடுங்கருத்தையிருத்தவல்லார்க்குகம்போய்ச்சகம்போய்ப்
பாடுங்கவுரிபவுரிகொண்டாடப்பசுபதிநின்
றாடும்பொழுதுபரமாயிருக்குமதீதத்திலே.

இ - ள். ஓடுங்கருத்தை - ஓடும்இயல்புள்ளமனத்தை, சமரம் சாடும் - யுத்தகளத்தில் பகைவரையழிக்கின்ற, தனிவேல் - தனிமையாகிய வேற் படையையுடைய, முருகன் - முருகக்கடவுளின், சரணத்திலே - திரு வடியின்கண்ணே, இருத்தவல்லார்க்கு - இருத்தவல்லவர்க்கு, (பதமுத்தி சித்தியாயிருத்தலேயன்றி) உகம்போய் - யுகமுடிவுபெற்று, சகம்போய் - உலகம்முடிவுபெற்று, பாடும்கவுரி - பாடாநின்றகவுரியானவள், பவுரிகொண் டாட - (தானும்) பவுரிக்கூத்தை மெச்சாநிற்க, அதீதத்தில் - தத்துவா தீதநிலையில், பசுபதி - சிவபெருமான், நின்று ஆடும்பொழுது - நின்று நட னம்பண்ணும்போது, பரமாய் இருக்கும் - பரமுத்தியுஞ் சித்தியாயிருக் கும். எ - று.

பவுரி - ஒருவகைக்கூத்து, இதுவலமிடமாகச் சுழன்றுவெது. தத்துவாதீதம்-தத்துவங்களைக்கடந்தநிலை, பசுபதிநின்று ஆடும்பொழுது என்றது சருவசங்காரகாலத்தை. ஒடுங்கருத்தை யிருத்தவல்லார் - யோகிகள். முருகக்கடவுளின் திருவடியின்கண்ணே தம்மனத்தை யிருத்தவல்லார்களாகிய யோகிகளுக்குப் பதமுத்திகளேயன்றிச் சருவசங்காரகாலத்தில் பரமுத்தியும் கிடைக்குமென்பது கருத்து.

பசு - ஆன்மா, பதி - இறைவன்.

**69.** தந்தைக்குமுன்னந்தனிஞானவாளொன்றுசாதித்தருள்
கந்தச்சுவாமியெனைத்தேற்றியபின்னர்க்காலன்வெம்பி
வந்திப்பொழுதென்னையென்செயலாஞ்சத்திவாளொன்றினாற்
சிந்தத்துணிப்பன்றணிப்பருங்கோபத்ரிசூலத்தையே.

இ - ள். தந்தைக்கு-(பரமசிவனாகிய தன்)பிதாவுக்கு,முன்னம்-முன்னே, தனி-ஒப்பற்ற, ஞானவாள் ஒன்று-ஞானவொளியொன்றை, சாதித்தருள் - உபதேசித்தருளிய, கந்தச்சுவாமி - முருகவேள்,என்னைத் தேற்றிய பின்னர் - என்னை ஞானோபதேசத்தால் தெளிவித்த பிறகு, காலன் - யமனானவன், வெம்பிவந்து - கோவித்துவந்து, இப்பொழுது-இப்போது, என்னை என்செயல் ஆம் - என்னை யென்ன செய்யலாம், தணிப்பு அரு கோபம் - தணித்தற்கரிதாகிய கோபத்தையுடைய, த்ரிசூலத்தை - (அவனது) த்ரிசூலத்தை, சத்திவாள் ஒன்றினால் - (அந்தக் கந்தச்சுவாமியின்) சத்திவாள் ஒன்றைக்கொண்டே, சிந்தத்துணிப்பன் - உதிரும்படி துண்டித்து விடுவேன். எ - று.

சாதித்தல் - உள்ளத்தழுத்தல் என்னுமமையும். த்ரிசூலம்-முத்தலைசூலம். சிவகுருவாகிய கந்தவேள் எனக்கு ஞானோப்தேசம் செய்தருளினமையால், இயமன்வந்து என்னை யென்ன தீமையிழைக்கலாகும், அவனது முத்தலைச் சூலத்தைக் கந்தச்சுவாமியுடைய சத்தியாகிய வாளொன்றினால் துணித்து விழுத்தி அவனைத்தோல்வியடையச்செய்வேன் என்பதுகருத்து.

**70.** விழிக்குத்துணைதிருமென்மலர்ப்பாதங்கண்மெய்ம்மைகுன்றா
மொழிக்குத்துணைமுருகாவெனுநாமங்கண்முன்புசெய்த
பழிக்குத்துணையவன்பன்னிருதோளும்பயந்ததனி
வழிக்குத்துணைவடிவேலுஞ்செங்கோடன்மயூரமுமே.

இ - ள். விழிக்குத்துணை - என் கண்களுக்குத் துணையாவது, செங்கோடன் திருமென் மலர்ப்பாதங்களே-திருச்செங்கோட்டையுடைய முருகக்கடவுளுடைய அழகாகிய மெல்லிய தாமரைமலர்போன்ற திருவடிகளே, மெய்ம்மை குன்றாமொழிக்குத் துணை - (எனது) உண்மைகுறையாத மொழிக்குத் துணையாவது, முருகா என்னும நாமங்கள் - (அவனுடைய

முருகா என்னுந்திருநாமங்களே, முன்பு செய்தபழிக்குத்துணை - யான் முற்பிறப்பிற்செய்த பாவத்தை நீக்குதற்குத் துணையாவது, அவன் பன்னிருதோளும்-அவனுடைய பன்னிருபுயங்களுமே, பயந்த-யான் அஞ்சுதற்குரிய, தனிவழிக்குத்துணை - தனிவழிக்குத்துணையாவது, வடிவேலும் மயூரமுமே - அவனது வடித்தவேலும் மயிலுமே. எ - று.

வடியென்பதைப் பெயராக்கிக் கூர்மையெனப் பொருளுரைப்பினுமமையும். முருகக்கடவுளின் திருவடிகள் தமது அன்புமிகுதியால் உருவெளித்தோற்றமாய்க் கட்புலப்படுதலால் விழிக்குத்துணை திருமென் மலர்ப்பாதங்கள் என்றும், அவர்திருநாமங்கள் வாக்கிலிருத்தலால் மொழிக்குத்துணை முருகாவெனுநாமங்கள் என்றும், தீயானைவெகுளும் படைகளோடு கூடிய அவர் திருத்தோள்கள் வினைக்குப்பற்றுக் கோடாகிய புத்தியிற் பதிந்திருத்தலால் முன்பு செய்த பழிக்குத்துணையவன் பன்னிருதோள்கள் என்றும், வேலுமயிலுந்துணை யென்பது தனிவழியிலுண்டாகும் அச்சத்தைத் தவிர்த்தலால் பயந்த தனிவழிக்குத்துணை வடிவேலுமயூரமும் என்றும் கூறினர். முருகவேளின் திருவடிமுதலியவை என் கண்முதலியவற்றிற்குத் துணையாகு மென்பது கருத்து.

**71.** திருத்தியெனும்படிகும்பித்துவாயுவைச்சுற்றிமுறித்
தருத்தியுடம்பையொறுக்கிலென்னாஞ்சிவயோகமெனுங்
குருத்தையறிந்துமுகமாறுடைக்குருநாதன்சொன்ன
கருத்தைமனத்திலிருத்துங்கண்டீர்முத்திகைகண்டதே.

இ - ள். உடம்பை திருத்தி என்னும்படி-உடம்பை (கன்மயோகஞ்செய்வோரே, தோலினாற்செய்யப்பட்ட) திருத்தியென்று சொல்லும்படி, வாயுவைகும்பித்து - காற்றைக்கும்பித்து, சுற்றி - சுழற்றி, முறித்து முறியப்பண்ணி, அருத்தி - ஐம்புல ஆசையை, ஒறுக்கில் என் ஆம் - அடக்கினால் என்னபயனுண்டாம், சிவயோகம் என்னும் - சிவயோகமென்கிற, குருத்தை அறிந்து - குருத்தையுணர்ந்து (அதிற்பயின்று), முகம்ஆறுஉடை-ஆறுமுகங்களையுடைய, குருநாதன்சொன்ன - குருதேசிகன் உபதேசித்தருளிய, கருத்தை - தாற்பரியத்தை, மனத்தில் இருத்தும் - (நீங்கள் உங்கள்) உள்ளத்தில் நிறுத்துங்கள், (அப்படிசெய்வீராயின்) முத்திகைகண்டதே - மோக்ஷலாபம் கைகூடினதேயாகும், எ - று.

கும்பித்தல் - பிராணவாயுவைச் சமப்படுத்தியடக்கல். கன்மயோகத்தால் பயனில்லையாதலால், உடம்பைத் திருத்தியெனும்படி கும்பித்து வாயுவைச்சுற்றி முறித்தருத்தி யொறுக்கிலென்னாம் என்றும், சிவயோகமானது குருத்துப்போலத் திருவருளால் வளர்தலால் சிவயோகமெனுங் குரு

த்து என்றும் கூறினர். கைகண்டது - சித்தித்தது. கன்மயோகஞ்செய்வோரே, சிவயோகத்திற்பழகி, முருகவேள் திருவாய்மலர்ந்தருளிய வுபதேசவுண்மையை மனத்திலிருத்துங்கள், இப்படிசெய்வீர்களாயின், உங்களுக்கு மோக்ஷலாபம் சித்திக்கும் என்பது கருத்து.

**72.** சேந்தனைக்கந்தனைச்செங்கோட்டுவெற்பனைச்செஞ்சுடர்வேல்
வேந்தனைச்செந்தமிழ்நூல்விரித்தோனைவிளங்குவள்ளி
காந்தனைக்கந்தக்கடம்பனைக்கார்மயில்வாகனனைச்
சாந்துணைப்போதுமறவாதவர்க்கொருதாழ்வில்லையே.

இ - ள். சேந்தனை - சேந்தனை, கந்தனை - கந்தனை, செங்கோட்டு வெற்பனை-திருச்செங்கோட்டு மலையையுடையவனை, செம்சுடர்வேல் வேந்தனை - செவந்த ஒளியுள்ள வேற்படையையுடைய இறைவனை, செந்தமிழ் நூல்விரித்தோனை-செந்தமிழ் நூல்களை (அகத்தியருக்கு) விரித்துரைத்தருளினவனை, விளங்கு வள்ளிகாந்தனை - (அழகினால்) பிரகாசிக்கிற வள்ளிமணாளனை, கந்தக் கடம்பனை - பரிமளமுள்ள கடப்பமலர்மாலையையணிந்தவனை, கார்மயில்வாகனனை - கரியமயில்வாகனத்தை யுடையவனை, சாந்துணைப்போதும் - இறக்குமெல்லையளவும், மறவாதவர்க்கு - மறவாமல் விருப்பவர்க்கு, ஒருதாழ்வு இல்லை - ஒருகுறைவில்லை, எ - று.

சேந்தன் - செம்மைநிறமுள்ளவன், கந்தன் - ஆறுருவுமொன்றாகக் கூடினவன், அன்றி, பகைவரையழிப்பவன் எனினும், தெய்வப்பெண்ணின் தரிசனத்தால்ஸ்கலிதமான சிவவீரியத்தால் உற்பவித்தவன் எனினும் அமையும். சாந்துணைப்போது - இறக்குங்காலத்தில் என்றலுமொன்று. முருகவேளை மரணகாலத்தில் மறவாதவர்க்கு ஒருகுறைவுமில்லையென்பது கருத்து.

**73.** போக்கும்வரவுமிரவும்பகலும்புறம்புமுள்ளும்
வாக்கும்வடிவுமுடிவுமில்லாதொன்றுவந்துவந்து
தாக்குமனோலயந்தானேதருமெனைத்தன்வசத்தே
யாக்குமறுமுகவாசொல்லொணாதிந்தவானந்தமே.

இ - ள். அறுமுகவா - ஷண்முகா, போக்கும்வரவும் - போதலும் வருதலும், இரவும்பகலும் - அல்லும்பகலும், புறம்பும் உள்ளும் - வெளியும் உள்ளும், வாக்கும் - சொல்லும், வடிவும் - உருவமும், முடிவும் - இறுதியும், இல்லாது ஒன்று - இல்லாததாகியவொருபொருள், வந்துவந்துதாக்கும் - வந்துவந்து (என்னைப்) பொருந்தாநிற்கும், மனோலயம்தானேதரும் - (எனக்கு)மனவொடுக்கத்தைத் தானேயுண்டாக்கும், என்னைத் தன்வசத்தே ஆக்கும் - என்னைத்தன் அதீனப்படுத்தும், இந்த ஆநந்தம் சொல்லொணாது - இந்தப்பேரின்பத்தின் தன்மையைச் சொல்லவொண்ணாது, எ - று.

ஒன்று-திருவருள். ஆறுதிருமுகங்களையுடைய முருகக்கடவுளே, போக்குவரவுமுதலிய விகாரங்கள் இல்லாத உன்திருவருள் என்கிற ஒருபொருள், பலகால்வந்து என்னைத்தாக்கித் தன்வயப்படுத்தி மனோலயத்தையுண்டாக்கிப் பேரின்பத்தைத் தராநின்றது என்பதுகருத்து.

**74.** அராப்புனைவேணியன்சேயருள்வேண்டுமவிழ்ந்தவன்பாற்
குராப்புனைதண்டையந்தாடொழல்வேண்டுங்கொடியவைவர்
பராக்கறல்வேண்டுமனமும்பதைப்பறல்வேண்டுமென்று
மிராப்பகலற்றவிடத்தேயிருக்கையெளிதல்லவே.

**இ - ள்.** (சீவன்முத்திநிலையிலிருத்தற்கு) அராபுனை வேணியன்சேய் அருள்வேண்டும் - பாம்பையணிந்த சடையையுடைய சிவபெருமானுக்குப் புதல்வனாகிய முருகக்கடவுளது திருவருள்வேண்டும், அவிழ்ந்தஅன்பால் - விரிந்தஅன்பினால், குராபுனை - குராமலரையணிந்த, தண்டை-தண்டையோடுகூடிய, அம் - அழகிய, தாள்-(அவனது) திருவடியை, தொழல் வேண்டும் - வணங்கவேண்டும், கொடியஐவர் - கொடுமையையுடைய (புலன்களாகிய) ஐவரது, பராக்கு - புறத்தொழில், அறல்வேண்டும் - கெடுதல்வேண்டும், மனமும்பதைப்பு அறல்வேண்டும் - மனமும்துடித்தலையொழியவேண்டும், என்றால் - என்னுமிடத்து, இராப்பகல் அற்றஇடத்து- இராப்பகல்களில்லாத அந்தஇடத்தில், இருக்கை-இருத்தல், எளிதுஅல்ல- எளிதாகிய காரியமன்று, எ-று.

இராப்பகல்களற்றுச் சதோதயமாகிய இடத்திலிருத்தற்கு முருகக்கடவுளது திருவருள்முதலியன வேண்டும் என்பது கருத்து.

**75.** படிக்கின்றிலைபழனித்திருநாமம்படிப்பவர்தாண்
முடிக்கின்றிலைமுருகாவென்கிலைமுசியாமலிட்டு
மிடிக்கின்றிலைபரமானந்தமேற்கொளவிம்மிவிம்மி
நடிக்கின்றிலைநெஞ்சமேதஞ்சமேதுநமக்கினியே.

**இ - ள்.** நெஞ்சமே - மனமே, பழனித்திருநாமம் - (முருகக்கடவுளது) திருப் பழனியென்னும் திருநாமத்தை, படிக்கின்றிலை - படனம் பண்ணுகின்றிலை, படிப்பவர்தாள்-படனம் பண்ணுவோருடைய திருவடியை, முடிக்கின்றிலை - சிரத்தில் முடிமாலையாக அணிகின்றிலை, முருகா என்கிலை- முருகாவென்று(அவனை)அழைக்கின்றிலை.முசியாமல் இட்டுமிடிக்கின்றிலை- வறியார்மெலியாமல்உணவுமுதலியவற்றைக்கொடுத்து நீவறுமையடைகின்றிலை, பரமாநந்தம்மேற் கொள்ள - பரமசுகம் அதிகரிக்க, விம்மிவிம்மி- அழுதழுது, நடிக்கின்றிலை - கூத்தாடுகின்றிலை, இனிநமக்கு தஞ்சம் ஏது- இனிநமக்குப் பற்றுக் கோடாவதுயாது. எ - று.

பழனி - முருகக்கடவுளது ஆறு திருப்பதிகளில் ஒன்றாகிய திருவாவினன்குடி. மனமே, நீ முருகக்கடவுளது திருப்பதியாகிய திருவாவினன்குடியை நினைத்தல் முதலிய வற்றைச் செய்கின்றிலை, இனிநமக்குத் தஞ்சம்யாது என்பது கருத்து.

76. கோடாதவேதனுக்கியான்செய்தகுற்றமென்குன்றெறிந்த
தாடாளனேதென்றணிகைக்குமரநின்றண்டையந்தாள்
சூடாதசென்னியுநாடாதகண்ணுந்தொழாதகையும்
பாடாதநாவுமெனக்கேதெரிந்துபடைத்தனனே.

இ - ள். குன்று எறிந்ததாடாளனே-க்ரௌஞ்சகிரியைப் பிளந்த வூக்கமுடையானே, தென்தணிகைகுமர - தென்றணிகையில் வாழ்கின்ற குமாரக்கடவுளே, நின் தண்டை அம்தாள் - உன் தண்டையணிந்த திருவடியை, சூடாதசென்னியும் - (முடிமலராகத்) தரிக்காத தலையையும், நாடாதகண்ணும்-(உன்திருவடியை) நோக்காத கண்ணையும், தொழாதகையும் - (உன்திருவடியைக் கூப்பி) வணங்காதகையையும், பாடாதநாவும் - (உன்திருவடிப்புகழைப்) பாடாதநாவையும், எனக்கே தெரிந்துபடைத்தனன் - எனக்கே ஆராய்ந்துபடைத்தான், கோடாத வேதனுக்கு - (தன் முறைமையிற்) கோடுதலில்லாத பிரமனுக்கு, யான் செய்த குற்றம் என் - நான்செய்த பிழையாது. எ - று.

முருகக்கடவுளே, உன்திருவடியைச் சூடாத சென்னிமுதலிய வற்றைப் பிரமன் எனக்குப் படைத்தனன், அவனுக்கு யான்செய்த குற்றம் யாதோ அறிகிலேன் என்பது கருத்து.

77. சேல்வாங்குகண்ணியர்வண்ணப்பயோதரஞ்சேரவெண்ணி
மால்வாங்கியேங்கிமயங்காமல்வெள்ளிமலையெனவே
கால்வாங்கிநிற்குங்களிற்றான்கிழத்திகழுத்திற்கட்டு
நூல்வாங்கிடாதன்றுவேல்வாங்கிபூங்கழற்கேநெஞ்சே.

இ - ள். சேல்வாங்கு கண்ணியர் - சேல் மீனின்தன்மையைக் கவர்ந்து கொண்ட கண்களையுடையமாதரது, வண்ணம்-அழகாகிய, பயோதரம் - ஸ்தனங்களை, சேர எண்ணி - தழுவக்கருதி, மால் வாங்கி ஏங்கி - மயக்கங்கொண்டு ஏக்கமுற்று, மயங்காமல் - திகையாமல், வெள்ளிமலை எனவே - வெள்ளிமலையென்றே சொல்லும்படி, கால்வாங்கி நிற்கும்-கால்களைக்கொண்டு (நிற்பதுபோல) நிற்கிற, களிற்றான் - வெள்ளை யானையையுடையவனாகிய இந்திரனுக்கு, கிழத்தி - மனைக்கிழத்தியாகிய இந்திராணியின், கழுத்தில் கட்டும் - கழுத்திற் கட்டிய, நூல் - மங்கலநாணை; வாங்கிடாது-வாங்காமலிருக்கும்படி, அன்று-அக்காலத்தில், வேல்வாங்கி-

(அவனுக்குப் பகைவராகிய அசுரர்மீது) வேலெடுத்தவனாகிய முருகக் கடவுளின், பூகழல்-தாமரைமலர் போன்ற திருவடியை, நெஞ்சே நோக்கு-மனமே கருதுவாயாக (நோக்கினால் முத்திசித்திக்கும்.) எ - று.

இந்திரனது யானை வெண்ணிற முள்ளதாதலால் வெள்ளிமலையென, என்றார். வெள்ளிமலை - கைலாயம். கிழத்தி - மனையறமெல்லாவற்றிற்கும் உரியவள். வாங்கி - வாங்கினவன். பூங்கழல் - அழகாகிய திருவடியெனினுமாம். திருவடிக் கழகாவது அடைந்தாரை யுய்வித்தல். மனமே, பந்தத்துக் கேதுவாகிய மாதர்மயக்கத்தையொழித்து, முத்திக்கேதுவாகிய முருகக்கடவுளின் திருவடியைக் கருது வாயென்பது கருத்து.

**78.** கூர்கொண்டவேலனைப்போற்றாமலேற்றங்கொண்டாடுவீர்காள்
போர்கொண்டகாலனுமைக்கொண்டுபோமன்றுபூண்பனவுந்
தார்கொண்டமாதருமாளிகையும்பணச்சாளிகையு
மார்கொண்டுபோவரையோகெடுவீர்நும்மறிவின்மையே.

இ - ள். கூர்கொண்டவேலனைப்போற்றாமல்-கூர்மையைக்கொண்ட வேற்படையையுடைய முருகக்கடவுளை வணங்காமல், ஏற்றம் கொண்டாடுவீர்காள் - (உங்களால் அணியப்படுவனமுதலிய வற்றால்) நும் உயர்ச்சியைக்கொண்டாடுவோர்களே, போர்கொண்டகாலன் - போர்த்தொழிலைத்தனக்குரிமையாகக் கொண்டயமன், உமை கொண்டுபோம் அன்று - உங்களைத் தன்கைப்பாசத்தால் கட்டிக்கொண்டுபோகிற அந்தமரணகாலத்தில், பூண்பனவும்-(உங்களால்) அணியப்படுமவற்றையும், தார்கொண்ட மாதரும்-பூமாலையையணிந்தமடவாரையும், மாளிகையும்-வீட்டையும், பணச்சாளிகையும் - பணப்பையையும், ஆர்கொண்டுபோவர் - எவர் கொண்டு போகக்கடவர், ஐயோகெடுவீர் - ஐயோகெடுவீர்காள், நும் அறிவின்மை ஏ - உமது அறிவில்லாமையிருந்தவாறு என்னை. எ - று.

ஐயோ, கெடுவீர், ஏ, மூன்றும் இரக்கப் பொருள் தருமிடைச் சொற்கள். ஏற்றம் - நானே உயர்ந்தவனென்னும் உள்ளக்கிளர்ச்சி. பூண்பன முதலிய வற்றால் உங்கள் மேன்மையைக் கொண்டாடி, முருகக்கடவுளை வணங்காதிருக்கின்றீர்களே, உங்களைக்காலன் கொண்டுபோம்போது இவைகள் உங்களோடுவருமோ,ஐயோ,உங்களறியாமையிருந்த வாறென்னையென்பது கருத்து.

**79.** பந்தாடுமங்கையர்செங்கயற்பார்வையிற்பட்டுழலுஞ்
சிந்தாகுலந்தனைத்தீர்த்தருள்வாய்செய்யவேன்முருகா
கொந்தார்கடம்புபுடைசூழ்திருத்தணிக்குன்றினிற்குங்
கந்தாவிளங்குமராவமராவதிகாவலனே.

இ - ள். செய்யவேல் முருகா - செவந்த வேலாயுதத்தையுடைய முருகக்கடவுளே, கொந்து ஆர்-பூங்கொத்துகள் நிறைந்த, கடம்பு-கடப்ப மரங்கள், புடைசூழ் - பக்கங்களில் வளர்ந்த, திருத்தணிக்குன்றில் நிற்கும்- திருத்தணிமலையில் நிலைத்திருக்கிற, கந்தா - கந்தனே, இளங்குமரா - இளமையாகிய குமரவேளே, அமராவதிகாவலனே-அமராவதிநகரத்துக்கு அரசனே, பந்து ஆடும் - பந்தாட்டமாடுகின்ற, மங்கையர் - மாதர்களுடைய, செங்கயல் - செவந்த சேல் மீன்போன்ற, பார்வையில் பட்டு - கண்ணுகிய வலையிலகப்பட்டு, உழலும் - சுழல்கின்ற, சிந்தாகுலந்தனை - (என்) மனோவியாகுலத்தை, தீர்த்தருள்வாய் - நீக்கியருள்வாய். எ - று.

அமராவதிக்குக் காவலன் இந்திரனேயாயினும், அவன் அவ்விடத்து நிலைபெறச்செய்தவர் இவராதலால் அமராவதி காவலனே என்றும், கண் பிறழ்ச்சியாலும் உருவத்தாலும் நிறத்தாலும் மீனை ஒத்திருத்தலால் செங்கயற்பார்வை "என்றும், செவ்வரிபடர்ந்திருத்தலால் செங்கயல் என்றும் கூறினர். உழலல் - மான்போலவும் மீன்போலவும் உழலல். இதை, "வலைத்தலைமானன்ன நோக்கியர் கண்ணின் வலையிற்பட்டு" எனவும், "காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து வீசின போதுள்ள மீனிழந்தார்" எனவும் வருவனமுதலியவற்ருற்காண்க. சிந்தா ஆகுலம் எனப் பிரிக்க. முருகக்கடவுளே, மாதர்மயக்கத்திருல் வருந்துகின்ற என்மனவருத்தத்தை நீக்கியருளவேண்டும் என்பது கருத்து.

**80.** மாகத்தைமுட்டிவருநெடுங்கூற்றன்வந்தாலென்முன்னே
தோகைப்புரவியிற்ருேன்றிநிற்பாய்சுத்தநித்தமுத்தித்
த்யாகப்பொருப்பைத்த்ரிபுராந்தகனைத்த்ரியம்பகனைப்
பாகத்தில்வைக்கும்பரமகல்யாணிதன்பாலகனே.

இ - ள். சுத்தநித்த முத்தி - சுத்தமும் நித்தமுமாகிய முத்திப்பொருளை, த்யாகப்பொருப்பை - (தன் அன்பர்க்குக்) கொடுக்கின்ற மலையை, த்ரிபுராந்தகனை - திரிபுரநாசகனை, த்ரியம்பகனை - முக்கண்ணனை, பாகத்தில்வைக்கும்-(தன்வலப்) பாகத்தில் வைக்கின்ற, பரமகல்யாணிதன் பாலகனே - மேலாகிய மங்கள குணங்களையுடையவளாகிய உமாதேவியின் புதல்வனே, மாகத்தை முட்டிவரும்-ஆகாயத்தை முட்டிவருகின்ற,நெடுங் கூற்றன் வந்தால் - நீண்டயமன் (இறுதிக்காலத்து எருமைக்கடாவின் மீதேறி) வந்தால், என்முன்னே - எனக்கெதிரில், தோகைப்புரவியில்-மயிலாகிய குதிரையின் மீது ஏறிவந்து, தோன்றி நிற்பாய் - (அப்பொழுது) தரிசனம் தந்து நிற்பாயாக. எ - று.

முன்னொருகால் ஒருவரால் தோல்வியடைந்தவன், பின்பு அவன் புதல்வர் முதலானோரைக்காணினும் அஞ்சுவனாதலால், பரமசிவனால் முன்னொருகால் தோல்வியடைந்த கூற்றுவன் முருகக்கடவுளைக் கண்டால் அஞ்சுவனென்பது கருதி இவ்வாறு வேண்டிக் கொண்டனர்போலும். மாகத்தை முட்டியென்றது அவனுருவப் பெருமையை வற்புறுத்தற்கு. முருகக்கடவுளே, இயமன் தன்வாகனத்திலேறி வருங்காலத்தில் நீயும் உன்வாகனத்தின் மீதேறி எனக்கெதிரே வரவேண்டுமென்பது கருத்து.

**81.** தாராகணமெனுந்தாய்மாரறுவர்தருமுலைப்பா
லாராதுமைமுலைப்பாலுண்டபாலனரையிற்கட்டுஞ்
சீராவுங்கையிற்சிறுவாளும்வேலுமென்சிந்தையவே
வாராதகலந்தகாவந்தபோதுயிர்வாங்குவனே.

இ-ள். தாராகணம் எனும் - நக்ஷத்ரகூட்டமென்கிற, தாய்மார் அறுவர் - தாய்மார் அறுவரும், தரும்முலைப்பால் - தந்த முலைப்பாலை, ஆராது-உண்டு அமையாமல்,உமை - உமாதேவியின், முலைப்பால் உண்ட-முலைப்பாலையுமுண்ட, பாலன்-பாலகனாகிய முருகக் கடவுளின், அரையில் கட்டும் - அரையில் கட்டப்பட்ட, சீராவும்-திருவரைக் கச்சும், கையில் சிறுவாளும் - திருக்கரத்திலுள்ள சிறியவாளும், வேலும் - வேலாயுதமும், என் சிந்தைய - என்மனத்தின்கண்ண, (ஆதலால்) அந்தகா - யமனே, வாராது அகல் - என்னைநாடிவராது நீங்கு, (வருவையாயின்) வந்தபோது-வந்த அப்பொழுதே, உயிர்வாங்குவன்-உன்னுயிரைக் கவர்வேன். எ - று.

தாராகண மெனுந்தாய் மாரறுவர் என்றது கார்த்திகைப் பெண்களை. இயமனே, முருகவேளின் திருவரைக் கச்சுமுதலியன என்மனத்திலுள்ளன, ஆதலால், என்னிடத்து வராதொழி, வந்தால் உன் உயிரைக்கவர்வேன் என்பது கருத்து.

**82.** தகட்டிற்சிவந்தகடம்பையுநெஞ்சையுந்தாளிணைக்கே
புகட்டிப்பணியப்பணித்தருளாய்புண்டரீகனண்ட
முகட்டைப்பிளந்துவளர்ந்திந்த்ரலோகத்தைமுட்டவெட்டிப்
பகட்டிற்பொருதிட்டநிட்டூரசூரபயங்கரனே.

இ-ள். புண்டரீகன் அண்ட முகட்டைப்பிளந்து - பிரமாண்ட முகட்டைக் கிழித்து, வளர்ந்து-பெருகி, இந்த்ரலோகத்தை முட்ட எட்டி-இந்திரநகரத்தை முட்டும்படியெட்டிச்சென்று, பகட்டின் பொருதிட்ட - இக்களும் போலவந்து போர்புரிந்த, நிட்டூரசூரபயங்கரனே - நிஷ்டூரனாகிய சூரனுக்கு அச்சத்தையுண்டாக் கினவனே, தகட்டின் சிவந்த கடம்

யையும் - தளிரைப்போலச் செவந்த கடப்பமலர் மாலையையும், நெஞ்சையும், என் மனத்தையும், தாள் இணைக்கே-உன் இரண்டுதிருவடியின் கண்ணே, புகட்டி-பொருந்தச்செய்து, பணிய-வணங்கும்படி,பணித்தருளாய்-என்னை நியமித்தருள்வாயாக. எ - ு.

முட்டவெட்டியெனப்பிரித்து,முழுதும்அழித்து எனவுரைப்பினுமாம். தகட்டின்-தகட்டினும் என்றுரைத்தலுமொன்று. தகடு-இலை, அது இளந் தளிருக்காயிற் றென்று கொள்ளினும் கொல்லுலையிற் காய்ந்த சிவந்த இருப்புத்தகடென்று கொள்ளினும் அமையும். சூரசங்காரனே, என்மனம் உன் திருவடியின் கண்ணே யழுந்தும்படி நீபணித்தருளல் வேண்டும் என்பது கருத்து. கிட்டேன்-வன்சொல்லன்.

83. தேங்கியவண்டத்திமையோர்சிறைவிடச்சிற்றடிக்கே
பூங்கழல்கட்டும்பெருமாள்கலாபப்புரவிமிசை
தாங்கிநடப்பமுறிந்ததுசூரன்றளந்தனிவேல்
வாங்கியனுப்பிடக்குன்றங்களெட்டும்வழிவிட்டவே.

இ - ள். தேங்கிய-(செல்வமுதலிய வற்றால்) நிறைந்த, அண்டத்து இமையோர் - சுவர்க்கலோகத்திலுள்ள தேவர்களுடைய, சிறைவிட - சிறைமீட்க, சிற்றடிக்கு - தனது சிறிய திருவடியின்கண், பூங்கழல் கட்டும் பெருமாள் -பொலிவாகிய வீரக்கழல் கட்டிய முருகவேளின், கலாபப்புரவி - தோகையையுடைய குதிரையாகிய மயில், மிசைதாங்கிநடப்ப- தன்மீது இறைவனைச் சுமந்து நடத்தலும், சூரன் தளம்முறிந்தது-சூரனது சேனையானது முறிபட்டது, தனிவேல் வாங்கி அனுப்பிட - ஒப்பற்றவேற் படையை இறைவனெடுத்தனுப்பவே, குன்றங்கள் எட்டும் - மலைகளெட்டும், வழிவிட்ட - வழிவிட்டன. எ - று.

சிற்றடியென்றார் கழல் கட்டற்குரிமையின்மை விளக்குதற்கு. முருகக் கடவுளை மயில்வாகனந்தாங்கிச் செல்லவே, சூரனது சேனைமுறிபட்டது, அக்கடவுள் வேல்விடுக்கவே மலைகளெட்டும் வழிவிட்டன என்பது கருத்து.

84. மைவருங்கண்டத்தர்மைந்தகந்தாவென்றுவாழ்த்துமிந்தக்
கைவருந்தொண்டன்றிமற்றறியேன்கற்றகல்வியும்போய்ப்
பைவருங்கேளும்பதியுங்கதறப்பழகிநிற்கு
மைவருங்கைவிட்டுமெய்விடும்போதுன் னடைக்கலமே.

இ - ள். மைவரும் கண்டத்தர்-(விஷத்தால்) கருமை பொருந்திய கண்டத்தையுடையவராகிய சிவபெருமானுக்கு, மைந்த - புதல்வனே, கந்தா-கந்தனே, என்றுவாழ்த்தும்-என்று உன்னைத்துதிக்கின்ற, இந்தக்கை

வரும் தொண்டு அன்றி - இந்தக்கைவந்த தொண்டையே யல்லது, மற்று அறியேன்-வேறொன்றைச்செய்ய அறிந்திலேன், கற்ற கல்வியும்போய் - நான் கற்றகல்விகளும் நீங்கி, பைவரும் கேளும்-பசியராகிய உறவினரும், பதியும் - வீட்டிலுள்ளாரும், கதற - கதறும்படி, பழகிநிற்கும் - பழகியிருக்கிற, ஐவருங்கைவிட்டு - ஐவரும் நழுவவிட்டு, மெய்விடும்போது - இந்த உடலை விட்டு நீங்கும்போது, உன் அடைக்கலம் - நான் உன் அடைக்கலம்.

கைவரும் தொண்டு-பழகினதொண்டு. பை-பசுமை. அது இவ்விடத்து பற்றுடைமை மேலது. இவ்வாறன்றித்துன்பம் என்னும் பொருள்தரும் பைதல் என்பது பை எனக்குறைந்து நின்றதெனக் கொள்ளினும் அமையும். பழகி நிற்கும் ஐவர்-பிறந்த நாள் முதலாக இடையறாது பழகி நிற்கிற ஐம்புலங்கள். முருகக் கடவுளே, உன்னைக் கந்தவென்று வாழ்த்துதலாகிய இந்தத்தொண்டை யன்றி வேறுதொண்டுசெய்ய அறியேன், ஆதலால் நான் இந்தவுடம்பைவிட்டு நீங்கும்போது நீயே யெழுந்தருளி என்னைக் காத்தருளவேண்டு மென்பது கருத்து.

85. காட்டிற்குறத்திபிரான்பதத்தேகருத்தைப்புகட்டின்
வீட்டிற்புகுதன்மிகவெளிதேவிழிநாசிவைத்து
மூட்டிக்கபாலமூலாதாரநேரண்டமூச்சையுள்ளே
யோட்டிப்பிடித்தெங்குமோடாமற்சாதிக்கும்யோகிகளே

இ - ள். விழிநாசிவைத்து-கண் பார்வையை நாசிநுனியில்வைத்து, மூட்டி - மூலக்கனலை மூள்வித்து, கபாலம் மூலாதாரம் நேர்அண்ட-கபாலத்துக்கும் மூலாதாரத்துக்கும்நேரேபொருந்தும்படி,மூச்சை-சுவாசத்தை, உள்ளே ஓட்டி - உள்ளிடத்தே யோடப்பண்ணி, எங்கும் ஓடாமல் பிடித்து-மற்றெவ்விடத்தும் ஓடாமல் பற்றி, சாதிக்கும் யோகிகளே-யோகம் சாதித்தமையாலுண்டாகிய யோகிகளென்னும் பெயர் பூண்டவர்களே, காட்டில் குறத்திபிரான் - காட்டிலுள்ள குறத்தியாகிய வள்ளிநாயகிக்குத் தலைவனாகிய முருகவேளுடைய, பதத்தே-திருவடியின்கண்ணே, கருத்தை புகட்டின் - மனத்தைப்பதித்தால், வீட்டில் புகுதல் - மோக்ஷவீட்டிற் பிரவேசித்தல், மிகஎளிது-மிகவும் எளிதாகும். எ - று.

கபால மூலாதார நேரண்ட மூச்சையுள்ளேயோட்டலாவது-சுஷு்மனாநாடியின்வழியாக மூச்சையுள்ளே செலுத்தல். எங்குமோடாமற் சாதித்தலாவது - இடைபிங்கலைகளின்வழியே இயங்கவொட்டாதுதடுத்தல். யோகிகளே நீங்கள் சாதிக்கும் யோகத்தால் வீடுபேற்றையடைதல் மிகவுமரிது, முருகவேளின் திருவடியின் கண்ணே உங்கள் மனத்தை யழுந்துவித்தால் அதனை யடைதல் மிகவும் எளிது என்பது கருத்து.

86. வேலாயுதன்சங்குசக்ராயுதன்விரிஞ்சனறியாச்
சூலாயுதன்றந்தகந்தசுவாமிசுடர்க்குடுமிக்
காலாயுதக்கொடியோனருளாயகவசமுண்டென்
பாலாயுதம்வருமோயமனோடுபகைக்கினுமே.

இ - ள். வேலாயுதன் - வேற்படையையுடையவன், சங்கு சக்ரா யுதன் விரிஞ்சன் அறியா சூலாயுதன் தந்த கந்தசுவாமி - சங்குசக்ராயுதங் களையுடைய திருமாலும் பிரமனும் அறியாத சூலாயுதத்தையுடைய வளு கிய சிவபெருமான் ஈன்றருளிய கந்தசாமி, சுடர்குடுமிகாலாயுதக் கொடி யோன் - ஒளியுள்ள உச்சிக்கொண்டையையுடைய கோழிக் கொடியை யுடையவன், (அவனது) அருள் ஆய - திருவருளாகிய, கவசம் உண்டு - கவசம் (என்மீது) உளது, (ஆதலால்) யமனொடுபகைக்கினும் - யமனுடன் பகைத்தாலும், என்பால் ஆயுதம் வருமோ-என்னிடத்து (அவனது) சூலா யுதம் வந்து என்னை ஊறு செய்யுமோ. எ - று.

குமரவேளின் திருவருளாகிய கவசம் பூண்டிருக்கிறேன் ஆதலால், இயமனது கைச்சூலம் வந்து என்னை யூறுசெய்யாது என்பது கருத்து.

87. குமராசரணஞ்சரணமென்றண்டர்குழாந்துதிக்கு
மமராவதியிற்பெருமாடிருமுகமாறுங்கண்ட
தமராகிவைகுந்தனியானஞானதபோதனர்க்கிங்
கெமராசன்விட்டகடையேடுவந்தினியென்செயுமே.

இ - ள். குமரா - குமரவேளே, சரணம் சரணம் என்று - அடைக் கலம் அடைக்கலமென்று, அண்டர் குழாம் துதிக்கும் - தேவசமூகங்கள் தோத்திரம் பண்ணுகிற, அமராவதியில் பெருமாள் - அமராவதிபட்டண த்திலெழுந்தருளிய குகப்பெருமாளுடைய, திருமுகம் ஆறும் கண்ட - ஆறு திருமுகங்களையுஞ் சேவித்த, தமர் ஆகிவைகும் - அவரடியாராயிருக் கிற, தனியான ஞானம் - ஒப்பற்ற ஞானத்தையுடைய, தபோதனர்க்கு- தபோதனர்களுக்கு, இங்கு - இவ்விடத்தில், எமராசன் விட்ட-யமராஜன் (இறுதிக்காலத்தில்) அனுப்பிய, கடையேடுவந்து - முடிவேடுவந்து, இனி என் செய்யும் - (அவலா) இனியென்னதுயர் செய்யும். எ - று.

கடையேடு - ஆயுள்முடிவுவரையப்பட்ட ஓலை. தமர்-பற்றுடையார். முருகக் கடவுளின் திருமுகத்தைத் தரிசித்த தபோதனரிடத்து, யமனோலை செல்லாதென்பது கருத்து.

88. வணங்கித்துதிக்கவறியாமனிதருடனிணங்கிக்
குணங்கெட்டதுட்டனையீடேற்றுவாய்கொடியுங்கழுகும்
பிணங்கத்துணங்கையலகைகொண்டாடப்பிசிதர்தம்வாய்
நிணங்கக்கவிக்ரமவேலாயுதத்தொட்டநிர்மலனே.

இ - ள். கோடியும் கழுகும் பிணங்க - காக்கையும் கழுகும் ஒன்றோடொன்று பிணங்கவும், அலகை துணங்கைகொண்டாட - பேய்கள் துணங்கைக் கூத்தாடவும், பிசிதர்தம்வாய் நிணம்கக்க - அரக்கர் தம்வாயால் உதிரத்தைக்கக்கவும், விக்ரமம்-வெற்றியையுடைய, வேலாயுதம் தொட்ட-வேற்படையைப் பிரயோகித்த, நிர்மலனே - பரிசுத்தனே, வணங்கி-(உன்னைப்) பணிந்து, துதிக்க - தோத்திரம் பண்ண, அறியா - அறியாத, மனிதருடன் இணங்கி - துட்ட மனிதரோடு நட்புச்செய்து, குணம் கெட்ட - (அவ்விணக்கத்தால்) நற்குணமழிந்த, துட்டனை - துஷ்டனாகிய என்னை, ஈடேற்றுவாய் - கடைத்தேற்றுவாயாக. எ - று.

துணங்கைக்கூத்து - இருகையுமுடக்கிப் பழுப்புடை யொற்றியாடுவதோர் கூத்து. அது "முடக்கிய விருகைபழுப்புடையொற்றித், துடக்கிய நடையது துணங்கையாகும்" என்பதனாலினிது விளங்கும். அசுரகுலகாலனே, உன்னை வணங்கியுய்ய வறியாத துட்டரோடிணங்கித் துட்டனாகிய என்னையீடேற்றியருளல் வேண்டு மென்பது கருத்து. துட்டரோடிணங்கினவருந் துட்டராவார் என்பதை, "நிலத்தியல் பானீர்திரிந்தற்றாகு மாந்தர்க், கினத்தியல்ப தாகுமறிவு" என்பதனாலுணர்க.

89. பங்கேருகனெனைப்பட்டோலையிலிடப்பண்டுதளை
தங்காலிலிட்டதறிந்திலனோதனிவேலெடுத்துப்
பொங்கோதம்வாய்விடப்பொன்னஞ்சிலம்புபுலம்பவரு
மெங்கோனறியினினிநான்முகனுக்கிருவிலங்கே.

இ - ள். பங்கேருகன் - பிரமன், என்னை - அடியேனை, பட்டோலையில் இட - தனது பட்டோலையிற்பதிய, பண்டு - முற்காலத்தில், தம்காலில் தளையிட்டது - (முருகக்கடவுள்) தன் காலில்விலங்கிட்டதை, அறிந்திலனோ - அறியானோ, தனிவேல் எடுத்து - ஒப்பற்ற வேலையெடுத்து, பொங்கு ஓதம்வாய்விட-பொங்குகின்ற கடல் வாய்விட்டலறவும், பொன்னஞ் சிலம்பு புலம்ப - அழகாகிய க்ரௌஞ்சகிரிபுலம்பவும், வரும் - வந்த, எம்கோன் அறியின்-எம்மிறைவனாகிய அந்தமுருகக்கடவுள் அறிவானாயின், இனி-இனி, நான்முகனுக்கு - பிரமனுக்கு, இருவிலங்கு - இரண்டுவிலங்குகள் உளவாகும். எ - று.

பட்டோலை - கணக்கேடு. பொன்னஞ் சிலம்பு - பொன்மயமாகிய மலையெனினுமமையும். புலம்பல்-இரங்கல். பிரமன் இனித்தன்கணக்கேட்டில் என்னைப்பதிப்பனாயின், முருகக்கடவுள் முன்னாளிவிட்ட ஒருவிலங்குபோல, இந்நாளில் இருவிலங்கு பூட்டப்படுவன் என்பது கருத்து.

90. மாலோனமருகனை மன்றாடிமைந்தனை வானவர்க்கு
மேலானதேவனை மெய்ஞ்ஞானதெய்வத்தைமேதினியிற்
சேலார்வயற்பொழிற்செங்கோடனைச்சென்று கண்டுதொழ
நாலாயிரங்கண்படைத்திலனேயந்தநான்முகனே.

இ - ள். மாலோன் மருகனை - திருமாலுக்கு மருகனை, மன்று ஆடி மைந்தனை - அம்பலத்தாடுவோனுக்குப் புதல்வனை, வானவர்க்கு மேலான தேவனை - தேவர்களுக்கு மேலாகிய கடவுளை, மெய்ஞ்ஞான தெய்வத்தை - உண்மை ஞானத்தையுடைய தேவதையை, மேதினியில் - உலகத்தில், சேல் ஆர்வயல் பொழில் செங்கோடனை - சேல்மீன்கள் நிறைந்த கழனிகளும் சோலைகளும் சூழ்ந்ததிருச்செங்கோட்டையுடையவனை, சென்றுகண்டுதொழ - போய்த்தரிசித்து வணங்க, அந்த நான்முகன் - அந்தப்பிரமன், நாலாயிரம் கண்படைத்திலனே-(எனக்கு) நாலாயிரங்கண்களைப்படைத்தானில்லையே, எ - று.

மன்று - பொது. அதுசிற்சபை பொற்சபைமுதலியவை. மெய்ஞ்ஞானதெய்வம் - மெய்ஞ்ஞானத்தைத் தருந்தெய்வம் எனினுமாம். வயல்பொழில் - வயலினுள்ளபொழில் என்றலுமொன்று. திருச்செங் கோட்டிலெழுந்தருளிய முருகக் கடவுளின் பேரழகைக் கண்டுவணங்குதற்கு, பிரமன் எனக்கு நாலாயிரங்கண்களைப்படைத்தானில்லையேயென்பது கருத்து.

"செப்பத்திலுன்னைத்தொழவாயிரங்கண்ணுஞ்செல்லும்பொல்லேன்
தப்பத்தவறத்தொழுதாலுஞ்சொக்கர்தடம்புயத்துக்
கொப்பத்திரண்டகொங்காயுன்னவயவமொன்றுக்கொன்று
முப்பத்திரண்டுகண்வேண்டுங்கண்டாயென்முகத்திலுக்கே"

எனப்பிறர் கூறுதலுங்காண்க.

91. கருமான் மருகனைச்செம்மான்மகளைக்களவுகொண்டு
வருமாகுலவனைச்சேவற்கைக்கோளனைவானமுய்யப்
பொருமாவினைச்செற்றபோர்வேலனைக்கன்னிப்பூகமுடன்
றருமாமருவுசெங்கோடனைவாழ்த்துகைசாலநன்றே.

இ - ள். கருமால் மருகனை - கரியதிருமாலுக்கு மருகனை, செம்மான் மகளைக்களவுகொண்டுவரும் மாகுலவனை-சிவந்த மான்மகளாகிய ...ள்ளிநாயகியைக் களவுசெய்து வந்த மிகப்பெரிய மேன்மையையுடைய ...ன, சேவல்கைகோளனை-சேவற்கொடியைக் கைக்கொண்டிருப்பவனை, ...ம் உய்யபொரும் மாவினைச் செற்றபோர்வேலனை - தேவருலகுய்யும் ... போர்புரிந்த சூரனாகிய மாவினைக்கொன்றபோர் வேலையுடையவனை

கன்னிப்பூகமுடன் தரும் ஆமருவு செங்கோடனை-இளங்கமுகமரங்களோடு டன் வளர்கின்ற ஆச்சாமரங்களும் பொருந்திய திருச்செங்கோட்டையுடையவனை, வாழ்த்துகை-வாழ்த்துதல், சால நன்று-மிகவும் நன்மையாம்.

தருமா என்பதை முன்பின்னாகச் சொன்னிலைமாற்றி மாதரு எனவைத்து மாமரம் எனவுரைத்தலுமொன்று. இதில் கருமான், செம்மான், மாகுலவன், கைக்கோளன், வேலன், செங்கோடன் எனச்சாதிப் பெயர்கள் சொன்னயமாய்வருதல்காண்க. கருமான் - கொல்லன், செம்மான்-சக்கிலியன், மாகுலவன்-வேடன், கைக்கோளன்-தந்துவாயன் (நெய்வோன்) வேலன் - வெறியாடுவோன் (பூசாரி). செங்கோடன் - செங்கோட்டு மலையிலுள்ளவன், (குறவன்). யாவருக்கும் முருகக் கடவுளைவாழ்த்துதல் மிகவும் நன்மையாகும் என்பது கருத்து.

92. தொண்டர்கண்டண்டிமொண்டுண்டிருக்குஞ்சுத்தஞானமுந்
தண்டையம்புண்டரிகந்தருவாய்சண்டதண்டவெஞ்சூர் [டக்
மண்டலங்கொண்டுபண்டண்டரண்டங்கொண்டுமண்டிமிண்
கண்டுருண்டண்டர்விண்டோடாமல்வேலெறிட்டகாவலனே.

இ - ள். சண்டம் - வேகத்தையும், தண்டம் - தண்டாயுதத்தையும் உடைய, வெஞ்சூர்-கொடிய சூரனானவன், பண்டு-முற்காலத்தில், மண்டலம் கொண்டு-மண்ணுலகை கவர்ந்து, அண்டர் அண்டம்கொண்டு-தேவருலகையும் கவர்ந்து, மண்டிமிண்டக்கண்டு-நெருங்கி நெருக்கக்கண்டு, அண்டர்-தேவர்கள், உருண்டு விண்டோடாமல் - (அச்சத்தால்) உருண்டுதம்முலகைவிட்டோடா இருக்கும்படி, வேல்தொட்டகாவலனே-வேலைப்பிரயோகித்தரக்ஷகனே, தொண்டர்-அடியார்கள் (ஆகியவண்டுகள்), கண்டு அண்டி-கண்டுநெருங்கி, மொண்டுஉண்டுஇருக்கும்-முகந்துபருகியிருக்கிற, சுத்தஞானமுபரிசுத்தஞானமாகிய தேனையுடைய, தண்டை-தண்டையணிந்த, அம்-அழகிய, புண்டரிகம்-தாமரைமலர்போன்றதிருவடியை, தருவாய்-எனக்குந்தந்தருள்வாய்.

சண்டதண்ட - வேகமாகிய சேனையையுடைய என்றலுமொன்று. சுத்தஞானமெனுந் தண்டையென்றும் பாடமுண்டு. இதற்கு பரிசுத்தஞானமென்கிற தண்டையெனவுரைக்க. புண்டரிகத்துக்குத் தேன்சிறந்தமையாயால் முற்பொருளே நற்பொருளாதலமையும். தண்டையென்னும் விசேடணத்தால் புண்டரிகம் திருவடிக்காயிற்று. முருகவேளே, உன்னன்பர்க்கருளுந் திருவடியை யெனக்குந் தந்தருளவேண்டு மென்பது கருத்து.

93. மண்கமழுந்தித்திருமால்வலம்புரியோசையந்த
விண்கமழ்சோலையும்வாவியுங்கேட்டதுவேலெடுத்துத்
திண்கிரிசிந்தவிளையாடும்பிள்ளைதிருவரையிற்
கிண்கிணியோசைபதினாலுலகமுங்கேட்டதுவே.

இ - ள். பண்கமழ் - மண்பரிமளிக்கிற, உந்தி - நாபியையுடைய, திருமால் - திருமாலின், வலம்புரி ஓசை - வலம்புரிச்சங்கின்ஓசையை, அந்தவிண் - அந்தவிண்ணுலகத்தில் உள்ள, கமழ் சோலையும் - பரிமளிக்கிற சோலையும், வாவியும் - அங்குள்ள தடாகமும், கேட்டன - கேட்டன, திண்கிரிசிந்த - வலியமலையுதிரும்படி, வேல் எடுத்து விளையாடும் - வேலையேந்திவிளையாடுகின்ற, பிள்ளை - குழந்தையாகிய முருகரது, திருஅரையில் - திருவரையிற்கட்டிய, கிண்கிணி ஓசை - கிண்கிணியின் ஓசையை, பதினாலு உலகமும் - பதினான்கு லோகங்களும், கேட்டன - கேட்டன. எ - று.

கேட்டல்-புலப்படல். திருமாலின் பாஞ்சஜந்யத்தின் முழக்கம் விண்ணுலகொன்றிலுமே கேட்டது, முருகர் திருவரைக்கிண்கிணிச் சத்தம் பதினாலுலகிலுங் கேட்டதென்பது கருத்து. திருமால் வலம்புரியோசை யந்தவிண்கமழ்சோலையும் வாவியுங்கேட்டது என்றது, திருமால் கிருஷ்ணவதாரத்தில் தேவரைவென்று, அவருலகிலுள்ள மலர்மரங்களையுங் கொடிகளையுங் கொணர்ந்த வெற்றியைக்குறித்தது. அன்றி, பாரதம் பதினெண்நாட்போரில் முழக்கிய சங்கினோசையைக் குறித்ததெனினும் அமையும். வேலெடுத்துத் திண்கிரிசிந்த விளையாடும் பிள்ளைதிருவரையிற் கிண்கிணியோசை பதினாலுலகமுங்கேட்டது என்றது, முருகக்கடவுள், பதினாலுலகத்தாரையும் தன்னுளடக்கிக் கொடுமைசெய்த சூரன்முதலிய அசுரரை யழித்த வெற்றியைக்குறித்தது.

**94.** தெள்ளியவேனலிற்கிள்ளையைக்கள்ளச்சிறுமியெனும்
வள்ளியைவேட்டவன்றாள்வேட்டிலைசிறுவள்ளைதள்ளித்
துள்ளியகெண்டையைத்தொண்டையைத்தோதகச்சொல்லை
வெள்ளியநித்திலவித்தாரமூரலைவேட்டநெஞ்சே. [நல்ல

இ - ள். சிறுவள்ளை தள்ளி - (மாதருடைய) சிறியவள்ளைத்தண்டைத்தள்ளி, துள்ளியகெண்டையை - துள்ளிய கெண்டைமீனையும், தொண்டையை - கோவைக்கனியையும், தோதகச்சொல்லை-(ஆடவர்க்கு விருப்பத்தையுண்டாக்குகின்ற) வஞ்சகவார்த்தையையும், நல்லவெள்ளியநித்திலம்- நல்லவெண்மையாகிய முத்தையொத்த, வித்தாரமூரலை - (ஒளிப்)பெருக்கையுடைய நகையையும், வேட்டநெஞ்சே-விரும்பினமனமே, தெள்ளிய - கொழித்தெடுத்தற்குரிய, ஏனலில் கிள்ளையை - தினைப்புனத்துக் கிளியை, கள்ளச்சிறுமியென்னும் வள்ளியை - குறச்சிறுமியென்கிற வள்ளிநாயகியை, வேட்டவன் - விரும்பினவனாகிய முருகனது, தாள்வேட்டிலை - திருவடியை விரும்பினாயில்லை - (இனியாயினும் விரும்புவாய்) எ - று.

வள்ளை - காது, கெண்டை - கண், தொண்டை - அதரம், மூரல்-பல், கிள்ளை - வள்ளிநாயகி. தினைப்புனத்துக்கும் கிள்ளைக்கும் பொருத்தமுண்மையான், புனம் என்றதற்கேற்பக் கிள்ளையென்றார்.

"பாவுசெய்தாணடும் பலத்துப்பயில்வோன் பரங்குன்றின்வா
யருவிசெய்தாழ்புனத் தைவனங்கொய்யவு மிவ்வனத்தே
பிரிவுசெய்தாலரி தேகொள்கபேயொடு மென்னும்பெற்றி
பிருவிசெய்தாளி னிருந்தின்றுகாட்டு மிளங்கிளியே" எனவும்,

"பேயோடெயினரமுதாலயத்திற்பிறந்தவுன்னை
யேயோதிணைப்புனங் காவல்வைத்தா ரொழுபாருமுண்ட
வாயோன்றிருவுந்தி பூத்தோனரங்கன் மணிவரைமேல்
ஆயோவெனுங்குர லந்தோபுனத்தை யழிக்கின்றதே" எனவும்,

"வனமார்குடிளைப் பகைக்குரலாமென வாணன் றஞ்சைப்
புனமார்குளிரிப் புடைப்பொலியாற் கிள்ளை போயின மீண்
டினமாமெனவந்திவ் வேனலெல்லாம் வவ்வு மென்பதற்கோ
கனமாநறுங்குழ லீர்மொழியாதொழி காரணமே. எனவும்,

பிற இடங்களிலுங் கூறப்படுதல் காண்க. பந்தத்துக்கேதுவாகிய மாதராசை யைப்பற்றி யுழலும் மனமே, இதனையொழித்து முத்திக்கேதுவாகிய முருகக்கடவுளது திருவடியை விருப்பி யடைவாய் என்பது கருத்து.

95 யான்றானெனுஞ்சொல்லிரண்டுங்கெட்டாலன்றியாவருக்குந்
தோன்றாதுசத்தியந்தொல்லைப்பெருநிலஞ்சூகரமாய்க்
கீன்றான்மருகன் முருகன்க்ருபாகரன்கேள்வியினாற்
சான்றாருமற்றதனிவெளிக்கேவந்துசந்திப்பதே.

இ - ள். தொல்லை பெருநிலம் - பழமையாகிய பெரியபூமியை, சூகரம் ஆய் - வராகவுருவங்கொண்டு, கீன்றான் மருகன் - தோண்டினவனாகிய திருமாலுக்கு மருகன், முருகன் - முருகன், க்ருபாகரன் - கருணாகரன், (அவனது) கேள்வியினால் சான்று - உபதேசத்தால் அமைந்து, ஆரும் அற்ற - ஒருவருமில்லாத, தனிவெளிக்கேவந்து சந்திப்பது - வெறுவெளி யில் வந்து கூடுவதாகிய இந்தநிலை, யான்தான் என்னும் சொல் இரண்டும் கெட்டால் அன்றி - நான்தான் என்கிற சொற்களிரண்டும் ஒழிந்தாலல்லது, யாவருக்கும் தோன்றாது - எவருக்கும் உண்டாகாது, சத்தியம்-இது உண்மை, எ - று.

க்ருபாகரன் சான்றாருமற்ற தனிவெளிக்கே வந்து சந்திப்பது, யான் றானெனுஞ் சொல்லிரண்டுங் கெட்டாலன்றி, கேள்வியினால் யாவருக்கும் தோன்றாது சத்தியம் என்றந்வயித்து, முருகக்கடவுள் சாட்சியொருவரு மில்லாத தனிவெளியில் வந்து சந்தித்தல் யான்தான் என்னுஞ் சொல்லிர ண்டும் ஒழிந்தாலன்றி நூற்கேள்வியினால் யாவர்க்காயினு முண்டாகாது. இதுஉண்மையென்று பொருளுரைப்பினுமாம். யான்-பசு, தான்-பதி, இவ்விரண்டுங் கெடுதலாவது - சிவபர ஐக்கியம். நான் தான் என்னும்

வேற்றுமையற்றாலன்றிச் சாத்திரஞானத்தால் "முருகக்கடவுளது காட்சி யுண்டாகாதென்பது கருத்து. ஈண்டான் என்பது. ஈன்றான் என நின்றது.

96. தடக்கொற்றவேண்மயிலேயிடர்தீரத்தனிவிடினீ
வடக்கிற்கிரிக்கப்புறத்துநின்றோலகையின்வட்டமிட்டுக்
கடற்கப்புறத்துங்கதிர்க்கப்புறத்துங்கனகசக்ரத்
திடர்க்கப்புறத்துந்திசைக்கப்புறத்துந்திரிகுவையே.

இ - ள். தடக்கொற்ற வேள்மயிலே - பெரியவெற்றியையுடைய முருகக்கடவுளது வாகனமாகியமயிலே, இடர்தீர - என்துன்பம் நீங்க, தனி விடின் - (என்னை அத்துன்பத்தினின்று)நீக்கித் தனியே விடுவையாயின், நீ - நீ, வடக்கில் கிரிக்கு அப்புறத்து - வடமலைக்கப்பால், நின்தோகையின் வட்டம்இட்டு - உன்கலாபத்தோடு சுழன்று, கடற்கு அப்புறத்தும்-பெரும்புறக்கடலுக்கு அப்பாலும், கதிர்க்கு அப்புறத்தும் - இருசுடர்களுக்கு அப்பாலும், கனகசக்ரத்திடர்க்கு அப்புறத்தும்-பொன்மயமாகிய சக்ரவாளகிரிக்கு அப்பாலும், திசைக்கு அப்புறத்தும் - அஷ்டதிக்குகளுக்கு அப்பாலும், திரிகுவை-(நீ மனக்களிப்போடு) சஞ்சரிக்கக்கடவை.

இவ்வாறன்றி, மயிலே, முருகக்கடவுளுக்கு வாகனமாயிருத்தலாகிய துன்பம்நீங்க உன்னைத்தனிவிடின் வடமலை முதலியவற்றிற் கப்புறஞ்சென்று சஞ்சரிப்பாய் எனவும், முருகக்கடவுளைக்கொணர்ந்து எனக்கெதிரில் தனியேவிடுவையாயின், நீயதேச்சையாய்த் திரியக்கடவை யெனவு முரைத்தலும் கூடும். வடக்கிற்கிரி-மேருமலை. கனகசக்கிரத்திடர் என்றமையால், கடல்என்பது பெரும்புறக்கடலென் றுரைக்கப்பட்டது. இடர் - மேடு, அது இவ்விடத்து மலைக்காயிற்று.

97. சேலிற்றிகழ்வயற்செங்கோடைவெற்பன்செழுங்கலபி
யாலித்தனந்தன்பணாமுடிதாக்கவதிர்ந்ததிர்ந்து
காலிற்கிடப்பனமாணிக்கராசியுங்காசினியைப்
பாலிக்குமாயனுஞ்சக்ராயுதமும்பணிலமுமே

இ - ள். சேலின்திகழ்வயல் - சேல்மீன்களால் விளங்குகின்ற கழனிசூழ்ந்த, செங்கோடைவெற்பன் - திருச்செங்கோடை மலையையுடையானது, செழுகலபி - செழுமையாகிய மயில்வாகனமானது, ஆலித்து - களித்து, அநந்தன் பணாமுடிதாக்க - ஆதிசேடனுடைய பணாமுடிகளைத் தாக்குதலால், அதிர்ந்து அதிர்ந்து - ஒலித்து ஒலித்து, காலில்கிடப்பன -(அம்மயிலின்) காலிற்கிடப்பன (யாவையெனின்) மாணிக்கராசியும் - மாணிக்கத்தொகுதியும், காசினியைப்பாலிக்கும் மாயனும் - உலகத்தைரக்ஷிக்கிற திருமாலும், சக்ராயுதமும் - (அவனது) சக்ராயுதமும், பணிலமுமே - சங்குமேயாம், எ - று.

முருகா நு மயில்வாகநமானது களிக்குத்தாக்குதலால், ஆதிசேடன் முடியினின்றுதிர்ந்த மணிகளும், அவன்மீது துயிலுந் திருமாலும், அவனுயுதங்களும் அதின்காலின்கண் தங்கிக்கிடப்பன வென்பது கருத்து.

98. கதிதனையொன்றையுங்காண்கின்றிலேன்கந்தவேன்முருகா
நதிதனையன்னபொய்வாழ்விலன்பாய்நரம்பாற்பொதிந்த
பொதிதனையுங்கொண்டுதிண்டாடுமாறெனைப்போதவிட்ட
விதிதனைநொந்துநொந்திங்கேயென்றன்மனம்வேகின்றதே.

இ - ள். கந்த - கந்தனே, வேல்முருகா - வேல்முருகனே, கதிதனை ஒன்றையும் காண்கின்றிலேன் - நற்கதியைச் சிறிதும் காணுமாற்றலில்லேன், நதிதனை அன்ன - கான் யாற்றுநீர்ப்பெருக்கையொத்த, பொய்வாழ்வில் அன்பு ஆய் - (இவ்வுலகப்) பொய்வாழ்க்கையில் அன்புடையோனாய், நரம்பால்பொதிந்த - நரம்பாற்கட்டிய, பொதிதனையுங்கொண்டு (உடம்பாகிய) பொதியையுங்கொண்டு, திண்டாடுமாறு - கலங்கும்வண்ணம், என்னைப்போதவிட்ட - என்னைத்திரியவிட்ட, விதிதனை - விதியை(நினைத்து), நொந்துநொந்து - வெறுத்துவெறுத்து, இங்கே - இவ்விடத்தே, என்றன்மனம் வேகின்றது - என்மனமானது வேகாநின்றது, எ - று.

என்மனம்வேகின்றது இவ்வேதலைக்கண்டதன்றி நற்கதியொன்றுங் காண்கிலேன் எனவுரைப்பினுமமையும். பிரபஞ்சப்பொய்வாழ்க்கை விரைக்கேடாகத்தோன்றி அது அற்றவிடத்தே விரைந்தழிதலால், அதனை, மிகுமழை காரணமாக வுண்டாகி அதுவிட்டளவில் நீங்கும் கான்யாற்றுநீர்ப்பெருக்குக்கு உவமையாக்கினார். பொதி-சுமை. கந்தவேளே, கதியொன்றும் காணுமாற்றலிலேனாய், உலகப்பொய்வாழ்வில் உழன்று வருந்தாநின்றேன் என்னை நீயேகாத்தருளவேண்டுமென்பது கருத்து.

99. காவிக்கமலக்கழலுடன்சேர்த்தெனைக்காத்தருளாய்
தூவிக்குலமயில்வாகனனே துணையேதுமின்றித்
தாவிப்படரக்கொழுகொம்பிலாததனிக்கொடிபோற்
பாவித்தனிமனந்தள்ளாடிவாடிப்பதைக்கின்றதே.

இ - ள். தூவி - தோகையுடைய, குலம் - உயர்வாகிய, மயில்வாகனனே - மயிலைவாகனமாக வுடையவனே, தாவிப்படர - தாவிப்படர்வதற்கு, கொழுகொம்புஇல்லாத - கொழுகொம்பில்லாத, தனிக்கொடிபோல் - தனிமையாகிய கொடியைப்போல, துணைஏதும்இன்றி - உதவிசிறிதும் இல்லாமல், பாவித்தனிமனம் - பாவிகளில் இணையற்ற (என்) மனமானது, தள்ளாடி வாடி பதைக்கின்றது-அசைந்து வாடித் துடிக்கின்றது, (ஆதலால்) காவிக்கமலம்-செந்தாமரைமலர்போன்ற, கழலுடன்சேர்த்து-உன்திருவடியோடணைத்து, என்னைக் காத்தருளாய் - என்னை ரக்ஷித்தருள்வாயாக.

தூவிக்குலம் என்பதற்கு இறகினற்சிறப்பையுடைய, இறகினெருகு தியையுடைய, எனவுமுரைத்தல் கூடும். கொழுகொம்பு - படர்கொடிகள் பந்தர்க்கேறுமாறு அவற்றிற் கிடையே நடப்படுவதோர்கழி. காவி - காவிக் கல். அது இவ்விடத்து அதின் நிறமாகிய செம்மைக்காயிற்று. இவ்வாறன்றி காவிக்கமலக் கழல் என்பதற்கு, நீலமலர்களையணிந்த தாமரைமலர்போ லுந்திருவடி யெனினுமாம். மயில்வாகனனே, உதவியின்றி வாடுகின்றேனு உன்திருவடியை யெனக்குதவியாகத் தந்தருளவேண்டும் என்பது கருத்து.

**100.** இடுதலைச்சற்றுங்கருதேனைப்போதமிலேனையன்பாற்
கெடுதலிலாத்தொண்டரிற்கூட்டியவாகிரௌஞ்சவெற்பை
யடுதலைச்சாதித்தவேலோன்பிறவியறவிச்சிறை
விடுதலைப்பட்டதுவிட்டதுபாசவினைவிலங்கே.

இ - ள். கிரௌஞ்சவெற்பை-க்ரௌஞ்சமலையை, அடுதலைச்சாதித்த- வெல்லுதலைச்சாதித்த, வேலோன் - வேலாயுதன், இடுதலைசற்றும் கருதே னை-ஈகையைச்சிறிதும் நினையேனை, போதம் இல்லேனை - ஞானமிலேனை, அன்பால் - தன்பேரன்பினல், கெடுதல் இல்லா - கெடுதியற்ற, தொண்ட ரில் கூட்டிய ஆறு - அடியாரோடு சேர்த்தவாறென்ன வியப்புடைத்து, (என்னெனின்) பிறவி அற - என்பிறப்பு அற்றொழிய, இச்சிறைவிடுதலைப் பட்டது - இந்தச்சிறையானது என்னைவிட்டது, பாசவினை விலங்குவிட் டது - பாசவினை விலங்கானதுகழன்றொழிந்தது. எ - று.

சாதித்தல் இவ்விடத்துச் செய்தலுக்காயிற்று. வேலாயுதக்கடவுள் என்னைத் தன்னடியாரோடு கூட்டியருளலும், என்பிறவிப்பற்றொழிந்ததெ ன்பது கருத்து. இதனல் அடியார்பெருமை வற்புறுத்தப்பட்டது. சிறை தநுகரணபுவந போகங்களாகிய காவல். விடுதலைப்பட்டது ஒருசொற்றன் மையது.

நூற்பயன்.

சலங்காணும்வேந்தர்தமக்குமஞ்சாரியமன் சண்டைக்கஞ்சார்
துலங்காநரகக்குழியணுகார் துட்டநோயணுகார்
கலங்கார்புலிக்குங்கரடிக்கும்யானைக்குங்கந்தனன்னூ
லலங்கார நூற்றுளொருகவிதான்கற்றறிந்தவரே.

இ - ள். நன்னூல் - நல்லநூலாகிய, கந்தர் அலங்காரம் நூற்றுள் கந்தரலங்காரத்தின் நூறுபாடல்களுக்குள், ஒருகவிதான்கற்று - ஒருபாட லையாயினும் கற்று, அறிந்தவர் - அதின்பொருளை யுணர்ந்தவர், சலம்காணு ம்வேந்தர் தமக்கும்அஞ்சார் - இவ்வுலகத்தில் தீராக் கோபத்தையுடைய அரசருக்கும் அஞ்சமாட்டார், யமன்சண்டைக்குஅஞ்சார் -(முடிவுக்காலத் தில்) இயமனது போர்க்கு அஞ்சமாட்டார், துலங்காநரகக்குழி அணுகார்-

(இறந்துபிறந்து)விளங்காத நரகக்குழியையடையார், துட்டநோய் அணுகார் - தீராதகொடுமையாகிய பிறவிப்பிணி யணுகப்பெறார், புலிக்கும் கரடிக்கும் யானைக்கும் - துட்டமிருகங்களாகிய புலிக்கும் கரடிக்கும யானைக்கும், கலங்கார் - மனங்கலங்கமாட்டார். எ-று.

முருகக்கடவுள் விஷயமாகிய கந்தரலங்காரம் என்னும் இந்நூலிலுள்ள ஒருபாடலையாயினும் கற்று அதின்பொருளை யறிந்தவர்களுக்கு இம்மையில் ராஜபயம்முதலிய துன்பங்களும் மறுமையில் நரகத்துன்பமும் இல்லையென்பது கருத்து.

கந்தரலங்காரம முற்றுப்பெற்றது.

சிலபிரதிருபங்களிலே

## அதிகமாகக் காணப்பட்ட செய்யுள்கள்.

---

1. திருவடியுந்தண்டையுஞ்சிலம்புஞ்சிலம்பூடுருவப்
பொருவடிவேலுங்கடம்புந்தடம்புயமாறிரண்டு
மருவடிவானவதனங்களாறுமலர்க்கண்களுங்
குருவடிவாய்வந்தென்னுள்ளங்குளிரக்குதிகொண்டவே.

இ-ள். திருவடியும் - (குமாரக்கடவுளுடைய)திருவடிகளும், தண்டையுஞ்சிலம்பும் -(அத்திருவடிகளிலணிந்த) தண்டைகளுஞ் சிலம்புகளும், சிலம்பூடுருவப் பொருவடிவேலும் - கிரௌஞ்சகிரியை யூடுருவப்பொருத கூர்மையாகிய வேலாயுதமும், கடம்பும - கடப்பமலர்மாலையும், ஆறிரண்டு தடம் புயமும் - பன்னிரண்டு பெருமையாகிய திருப்புயங்களும், வடிவு மருவு ஆன ஆறுவதனங்களும் - அழகு பொருந்துதலான ஆறுதிருமுகங்களும், மலர்க்கண்களும் - தாமரைமலர்போலும் (பன்னிரண்டு) திருக்கண்களும், என்னுள்ளங்குளிரக் குருவடிவாய்வந்து-எனதுமனங்குளிரக் குருவடிவாகித்தோன்றி, குதிகொண்ட - குதித்தல்கொண்டன. எ-று.

குமரவேளின் திருவடிமுதலியன எனக்குக் குருவடிவாய்த் தோன்றி என்மனங் குளிர வீற்றிருந்தன என்பது கருத்து.

2. இராப்பகலற்றவிடங்காட்டியானிருந்தேதுதிக்கக்
குராப்புனைதண்டையந்தாளருளாய்கரிகூப்பிட்டநாள்
கராப்படக்கொன்றக்கரிபோற்றநின்றகடவுண்மெச்சும்
பராக்ரமவேலநிருதசங்காரபயங்கரனே.

இ-ள். கரிகூப்பிட்டநாள் - (கஜேந்திரன்என்னும்) யானையானது (ஆதிமூலமேயென்று)கூப்பிட்டநாளில், கராப்படக்கொன்று அக்கரிபோற்றநின்ற கடவுள்மெச்சும் - (அதனைக்கவ்விய) முதலையை யழியக்கொன்று

அந்த யானை துதிக்கின்ற திருமாலும் மெச்சுகின்ற, பராக்ரமவேல நிருத சங்கார (நிருத) பயங்கரனே-பராக்கிரமத்தை உடையவரே, வேலாயுதத்தையுடையவரே, அசுரரையழிப்பவரே, அசுரருக்குப் பயத்தைச்செய்பவரே, இராப்பகலற்ற இடங்காட்டி - (இரவென்றும் பகலென்றுந் தோன்றுமையால்) அவ்விரவும் பகலுமற்றஇடமாகிய ஞானநிலையைக்காட்டி, யானிருந்தேதுதிக்கக்குராப்புனைதாள அருளாய் - யான் (அந்நிலையில்) இருந்தே துதிக்க நமமுடைய திருவடியைத் தந்தருளவீர். எ-று.

முருகக்கடவுளே, ஞானநிலையாகிய இராப்பகலற்ற இடத்திலிருந்து உன்னைத்துதிக்கும்பொருட்டு, உன்னுடைய திருவடியை எனக்கருள் செய்யவேண்டும் என்பது கருத்து.

3. சேங்கேழுடுத்தசினவடிவேலுந்திருமுகமும்
பங்கேநிரைத்தநற்பன்னிருதோளும்பதுமமலர்க்
கொங்கேதரளஞ்சொரியுஞ்செங்கோடைக்குமரனென
எங்கேநினைப்பினுமங்கேயென்முன்வந்தெதிர்நிற்பனே.

இ - ள். பதுமமலர்க்கொங்கே தரளஞ்சொரியுஞ் செங்கோடைக்குமரனென எங்கே நினைப்பினும - தாமரைமலரினின்று தேனும் முத்துஞ் சொரியப்பெறுந் திருச்செங்கோட்டுமலையிலுள்ள குமாரக்கடவுளென்று (யான்) எவ்விடத்திலே நினைத்தாலும், அங்கே - அவ்விடத்தே, சேங்கேழுடுத்த சினவடிவேலும் - செந்நிறமையாகிய நிறஞ்சார்ந்த சினத்தையுடைய கூர்மையாகிய வேற்படையும், திருமுகமும் - (ஆறு) திருமுகங்களும், பங்கேநிரைத்தநற்பன்னிருதோளும் - இருபக்கத்தும் வரிசையுற்ற நல்லபன்னிரண்டாகிய திருப்புயங்களுங் (கொண்டு), என்முன்வந்தெதிர்நிற்பனே - (அக்கடவுள்) எனக்குமுன்வந்து எதிர்நிற்பார்.

திருச்செங்கோட்டுமலையில் எழுந்தருளிய முருகவேளேயென்று யான் எவ்விடத்து நினைத்தாலும், அவ்விடத்தே அவர் தமது வடிவேல் முதலியவற்றோடு எனக்கெதிரே தோன்றிநிற்பார் என்பது கருத்து.

4. ஆவிக்குமோசமவருமாறறிந்துன்னருட்பதங்கள்
சேவிக்கவென்றுநினைக்கின்றிலேன்வினைதீர்த்தருளாய்
வாவித்தடவயல்சூழுந்திருத்தணிமாமலைவாழ்
சேவற்கொடியுடையானேயமரசிகாமணியே

இ - ள். வாவித்தடவயல் சூழுந்திருத்தணி மாமலைவாழ் சேவற்கொடியுடையானே அமர சிகாமணியே - குளங்களையுடைய பெருமையாகிய வயல்கள் சூழப்பெறுந் திருத்தணிகையாகிய பெரியமலையில் வாழும் கோழிக்கொடியையுடையவரே தேவர்க்கு முடிமணியானவரே, ஆவிக்கு மோசமவருமாறறிந்து உன் அருட்பதங்கள் சேவிக்க என்று நினைக்கின்றிலேன் வினைதீர்த்தருளாய் - (உடலோடுகூடிய) உயிருக்கு அவ்வுடலை விட்டுப் பிரிதலாகிய மோசமவருமாற்றையறிந்தும் நமது அருளையுடைய திருவடிகளைச் சேவிக்கவென்று நினைக்கின்றிலேனாகிய வென்னுடைய வினையை நீக்கியருள்வீர், எ - று.

முருகக்கடவுளே, உடம்பைவிட்டு என்உயிர் நீங்குமேயென்றாலும் திருவடியைச் சற்றும் நினையாதேயாயினும், நீயென்னைக் கைவிடாது என்வினையை யொழிக்கவேண்டும் என்பது கருத்து.

கொள்ளித்தலையிலெறும்பதுபோலக்குலையுமென்றன்
னுள்ளத்துயரையொழித்தருளாயொருகோடிமுத்தந்
தெள்ளிக்கொழிக்குங்கடற்செந்தின்மேவியசேவகனே
வள்ளிக்குவாய்த்தவனேமயிலேறியமாணிக்கமே.

இ - ள். ஒருகோடிமுத்தந் தெள்ளிக்கொழிக்குங் கடல் செந்தில் மேவியசேவகனே - ஒருகோடியளவினவாகிய முத்துகளைத் தெள்ளிக்கொழிக்குங் கடலையுடைய திருச்செந்திற் பதியிற்பொருந்திய (அசுரரையழித்த) வீரரே, வள்ளிக்குவாய்த்தவனே - வள்ளிநாயகியாருக்கு வாய்த்தநாயகரே, மயில்ஏறிய மாணிக்கமே - மயில்வாகனத்திலேறியருளு மாணிக்கம் போல்பவரே, கொள்ளித்தலையில் எறும்பதுபோலக் குலையும என்றன் உள்ளத்துயரை ஒழித்தருளாய் - (இருதலைக்)கொள்ளி யிடத்துள்ள எறும்பு போலவுலையுமெனது மனத்துயரை நீக்கியருளவீர். எ-று.

முருகக்கடவுளே, இருதலைக்கொள்ளியினுள் அகப்பட்ட எறும்புபோலத் திகைக்கின்ற என்மனத் துன்பத்தை நீக்கியருளவேண்டும் என்பது கருத்து.

6 சூலம்பிடித்தெமபாசஞ்சுழற்றித்தொடர்ந்துவருங்
காலன்றனக்கொருகாலுமஞ்சேன்கடன்மீதெழுந்த
வாலங்குடித்தபெருமானகுமாரனறுமுகவன்
வேலுந்திருக்கையுமுணடேநமக்கொருமெய்த்துணையே.

இ - ள். கடல்மீது எழுந்த ஆலம்குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன் - பாற்கடலில்உண்டாகிய நஞ்சையுண்டருளிய இறைவராகிய பரமசிவனுடைய குமாரராகிய ஆறுமுகக்கடவுளுடைய,வேலும் திருக்கையும் ஒரு மெய்த்துணைநமக்கு உண்டே - வேலாயுதமுந் திருக்கரமுமாகிய ஒப்பற்ற மெய்த்துணைநமக்கு உண்டே,(ஆதலின்) சூலம்பிடித்து எமபாசம் சுழற்றித்தொடர்ந்துவரும் காலன்றனக்கு ஒருகாலும் அஞ்சேன் - சூலாயுதத்தையும் (பாம்பினைச்சுப்பல்லிலொன்றாகிய) எமன்போலும் பாசத்தையுஞ் சுழற்றிக்கொண்டு தொடர்ந்துவருங் கூற்றுவனுக்கு யானொருகாலும் அஞ்சேன், எ - று.

முருகக்கடவுளது வேலாயுதமும் அதையேந்தியகையும் எனக்கு மெய்த்துணையாயிருத்தலால், யான் இயமனுக்குச் சிறிதும் அஞ்சேன் என்பது

# முகவுரை

திருச்சிற்றம்பலம்.

## தேவாரம்.

*ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் றோன்றினராய்*
*மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க*
*ஏன்றா னிமையவர்க் கன்பன் றிருப்பா திரிப்புலியூர்த்*
*தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே.*

திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகமென்பது, திருப்பாதிரிப்புலியூரிற் கோயில்கொண்டெழுந்தருளிய சிவபெருமான்மீது தொல்காப்பியத்தேவரென்னும் பெரியோரால் இயற்றப்பெற்றது; இதிலுள்ள செய்யுட்டொகை - ௧0௩ (பாயிரம் ௩; நூல் ௧00).

திருப்பாதிரிப்புலியூரென்னும் தலம், நடுநாட்டிலுள்ள தேவாரம்பெற்ற சிவஸ்தலங்கள் இருபத்திரண்டனுள் ஒன்று; இத்தலத்திற்குரியபதிகம் - ௨ (திருஞா. பதி. ௧; திருநா. பதி. ௧). வடமொழி தென்மொழியிரண்டிலும் இதற்குப்புராணங்களுள்ளன; இப்போது அச்சிடப்பெற்றுவழங்கும் தமிழ்ப்புராணம், திருவாவடுதுறையாதீன வித்வானும் சற்றேறக்குறைய நூறுவருஷங்களுக்குமுன்பிருந்தவருமாகிய இலக்கணம், ஸ்ரீ சிதம்பரநாதமுனிவராலியற்றப்பெற்றது. விசாரித்தபொழுது, இத்தலத்துத் திருக்கோயிற் கருப்பக்கிருகத்தின் மேல்புறச்சுவர்ச் சிலாசாஸனத்துள்ள, "தழைத்ததிருப்பாதிரிப் புலியூர்" என்பதுமுதலிய இரண்டுசெய்யுட்களால, *கன்னிவனப் புராணம், புலியூர்நாடகமென்னும் இரண்டுநூல்கள் ஒரேபுலவராலியற்றப்பெற்று இந்தலத்திற்குரியனவாயிருந்தமை வெளியாகின்றதென்றும் சிலாசாஸனங்களில் ஸ்வாமிதிருநாமம் கடைஞாழல் மஹாதேவரென்றே வழங்கப்படுகின்றதென்றும் சிலாசாஸனபரிசோதகராகிய நண்பர் ம-ா-ா-ஸ்ரீ து. அ. கோபிநாதராவ் அவர்கள், M.A., சொன்னார்கள். அந்நூல்கள் இக்காலத்து யாண்டுள்ளனவோ சிறிதும் விளங்கவில்லை; நிற்க.

கலம்பகமாவது, தமிழ்ப்பாஷையிலுள்ள தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று; இதன் இலக்கணத்தைப் பன்னிருபாட்டியல் முதலியவற்றாலுணர்க.

* [illegible] [illegible] [illegible] [illegible] வேண்டும்.

இனி இக்கலம்பகம் பாடப்பெற்றசரித்திரம் வருமாறு:—

இந்நூலாசிரியராகிய தொல்காப்பியத்தேவரென்பவர், சிலையொன்றற்காகச் செங்கல் அறுக்கச்சொன்னபொழுது, திருப்பாதிரிப்புலியூர்க்கோயில் விசாரணைக்காரர் கோபங்கொண்டு இவரை நோக்கி, 'நீர் இங்ஙனஞ்செய்வித்தல்முறையோ' என்றுகேட்டனர். உடனே இவர், *"வேத மொழிவிசும்பு மேனி" என்னும் ஒரு வெண்பாவைக்கூறி, அதன்முகமாகத் தம்முடையகருத்தை வெளிப்படுத்தினர். கேட்டவர்கள், இவருடைய கருத்தை அறிந்து ஆறுதலுற்று, இவருடைய பரிபக்குவத்தையும் பக்திமிகுதியையும் கல்விவன்மைமுதலியவற்றையும் இவர் சிறந்த பிரபந்தவாக்கியாயிருத்தலையுமறிந்து விம்மிதமுற்று இவரைநோக்கி, 'தேவரீர் இவ்வெண்பாவை இடையே அமைத்துத் திருப்பாதிரிப்புலியூர்ச் சிவபெருமான்மீது கலம்பகமொன்றுபாடியருளுக' என்று வற்புறுத்திவேண்டிக்கொண்டனர். அவர்களுடையவேண்டுகோளுக்கிரங்கி அங்ஙனமே இந்நூலைப் பாடிமுடித்தனர். அப்பால் இக்கலம்பகம் சிறந்த கவிஞர்களாற்பாராட்டிப் படிக்கப்பெற்றுத் தமிழ்நாடெங்கும்பரவி வழங்கலாயிற்று. அக்காலத்தில், சிதம்பரத்துள்ள அடியார்குழாங்கள், அங்கே தரிசனத்திற்குவந்த இரட்டையர்களைநோக்கி, 'திருப்பாதிரிப்புலியூர்க்குத் தொல்காப்பியத்தேவரியற்றியதுபோலச் சிதம்பரத்திற்கு நீங்கள் ஒருகலம்பகமியற்றியருளவேண்டும்' என்று வேண்டினர். இரட்டையர்கள்,

கோச்சகக்கலிப்பா.

†"தொல்காப் பியத்தேவர் சொன்னதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நானுரைப்ப தேறுமோ
மல்காப் புனறதும்ப மாநிலத்திற் கண்பிசைந்து
பல்காற் பொருமினர்க்குப் பாற்கடலொன் றீந்தாகமே."

என்னும்செய்யுளைக்கூறி, 'சிவபெருமான்மீது கலம்பகம்பாடுதற்கு யாம் வல்லேமல்லேம்' என்றார்கள். கேட்டவர்கள், அதனால் தடைப்படலின்றி, அங்ஙனங்கூறினமைபற்றியே நன்குமதித்துக் கலம்பகம்பாடும்படி பின்னும் வற்புறுத்த, அவர்கள் அப்பொழுதுந் துணிவின்றி இக்கலம்பகப்புத்தகத்திற்கயிறுசார்த்திப்பார்த்தார்கள்,

---

* இஃது இந்நூலில் உ - வது செய்யுள்.

† இச்செய்யுள் தமிழ்நாவலர்சரிதையிலும் திருவாமாத்தூர்க்கலம்பக ஏட்டுப்பிரதிகளிலும் காணப்படுகின்றது; 'நானுரைத்தது' எனவும் பாடம்.

பார்த்தபொழுது, "பாடுவார்பாடும்" (கூ - ம்செய்யுள்) என்னும் பாட்டு அகப்பட்டது. அதனைக்கண்ணுற்ற இரட்டையர்கள் அச்செய்யுளின் பின்னிரண்டடியின்பொருளையறிந்து மனமுருகி, தம்மைப்பாடும்படி ஸ்ரீ ஆநந்தநடராஜர் கட்டளையிட்டருளியதாக வேதினைந்து துணிந்து செய்யத்தொடங்கிச் சிலதினங்களில் தில்லைக் கலம்பகத்தைப் பாடிமுடித்தார்கள். இவ்வரலாறு *தமிழ்நாவலர் சரிதையிலிருந்து ஊகித்தறிந்து எழுதப்பெற்றது.

தில்லைக்கலம்பகம், தெய்வீகவுலாமுதலியவற்றைப் பாடியருளியவர்களும் சிவபக்திச்செல்வம் வாய்ந்தவர்களும் பலசிவஸ்தலங்களின் பண்டைச்சரிதங்களையும் உண்மைநாயன்மார்களுடைய அருமைச்செயல்களையும் சிவபுராணகதைகள் பலவற்றையும் மிகப்புராதனமான நூல்களின் கருத்துக்களையும் தம்முடைய நூல்களுள் மிக அழகாக அமைத்துப்பாடிப் பிற்காலத்தார்க்கு வழிகாட்டிப் பெரும்புகழ்பெற்ற மஹோபகாரிகளும், "கலம்பகத்திற் கிரட்டையர்கள்", †"தங்கமு மணியு மிடைக்கிடைக் கொண்டு தனைநிகர் தபதியாற் சமைத்த, சிங்கமா முகப்புத் தண்டிகை யேறித் திரியினுஞ் சித்தியில் புலவோர், பங்கனுங் குருடன் றானுமா ‡திகழப் பாவலர் பதத்துகள் புனையார்" என்று அறிஞர்களாற் புகழப்பெற்றவர்களுமாகிய இரட்டையர்களே பாராட்டிப்புகழ்ந்தனரென்றால், இந்நூலாசிரியரின்பெருமையும் இந்நூலின்பெருமையும் என்னுடையசொல்லில் அடங்குவனவோ!

இரட்டையர்களுடையகாலத்திற்குமுற்பட்டவரென்று தெரிதலால், இந்நூலாசிரியர், அவர்களாற்பாடப்பெற்ற வரபதியாட்கொண்டானென்னும் பிரபுவுக்கும் அவன்விருப்பத்தின்படி பாரதம்பாடிய ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வாருக்கும் அவர்காலத்தவர்களாகிய ஸ்ரீ அருணகிரியார்முதலியவர்களுக்கும் முற்பட்டவராக எண்ணப்படுகிறார்.

திருவாமாத்தூர்க்கலம்பகமுதலியவற்றில் இந்நூலின்கருத்துக்களைப் பரக்கக்காணலாம்.

கெடிலநதி இத்தலத்திற்குத்தெற்கே ஓடிக்கொண்டிருந்ததென்பதுமுதலிய பண்டைவரலாறுகளும் பிறவும் இந்நூலால் அறியலாகும்.

---

* இப்புத்தகம் இன்னும் பதிப்பிக்கப்படவில்லை.

† திருவாமாத்தூர்ப்புராணம், இரட்டைப்புலவர்வந்தபடலம், உ௪.

‡ திகழ் அப்பாவலர்.

# முகவுரை

மேற்கூறிய தமிழ்நாவலர்சரிதையால் இந்நூலுண்டென்பதை யறிந்து யான் பலவிடத்துந்தேடிக்கொண்டிருக்கையில், வளவனூர் ம-ா-ா-ஸ்ரீ தேசிக சடகோபபிள்ளையவர்கள் இந்நூல் ஏட்டுப்பிரதிகள் இரண்டு அனுப்பினார்கள். முன்னர்ப் பழக்கமில்லாமலிருந்தும் வலிந்து பிரதிகளை அனுப்பிய அவர்களுடைய தமிழ்ப்பாஷாபிமானமும் அன்பும் மிகப் பாராட்டற்பாலன.

இந்நூலை இன்னும் சிலபிரதிகளைக்கொண்டு பரிசோதிக்கவேண்டுமென்று எண்ணியிருந்தும் இந்தத் தைமீ ௨௪-ம்தேதியில் நடத்தப்பெறும் ஸ்ரீ பிரஹந்நாயகியம்மையின் மஹா கும்பாபிஷேகத்துக்குள் எப்படியாவது இதைப்பதிப்பித்துப் பலர்க்கும்பயன்படும்படி வெளிப்படுத்தவேண்டுமென்று திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடத்துத்தலைவர்களும் வித்தியாபரிபாலகர்களுமாகிய ஸ்ரீமத் சிவஷண்முகமெய்ஞ்ஞானதேசிகரவர்கள் பலமுறைவற்புறுத்தி எழுதினமையால், விரைவில இதனைப் பதிப்பிக்கலானேன்.

திருப்பாதிரிப்புலியூர்க்கோயில் தர்மகர்த்தாவும் செவ்வனே திருப்பணிசெய்துவருபவர்களுமாகிய (புதுக்கோட்டையைச்சார்ந்த இராமசந்திரபுரம்) ம-ா-ா-ஸ்ரீ தீ. சோ. முருகப்பசெட்டியாரவர்கள், இவ்வரியநூலைப் பதிப்பித்தற்குப் பொருளுதவிசெய்தார்கள்.

இதனை ஆராய்ச்சிசெய்தபொழுதும் பதிப்பிக்கும்பொழுதும் உடனிருந்து உதவிசெய்தவர், மைலாப்பூர் P. S. ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதராகிய ம-ா-ா-ஸ்ரீ இ. வை. அநந்தராமையரவர்கள்.

இந்நூலாசிரியர் தெய்வத்தன்மை உள்ளவராதலாலும் வேறு பிரதிகளின் ஸகாயமில்லாமையாலும் எழுதுவோராற் பிழைபட்டு விளங்காதசிலவற்றைத் திருத்துவதற்கு அஞ்சி, பிரதிகளில் இருந்த வண்ணமே பதிப்பிக்கும்படிநேர்ந்தது.

நேரிசை வெண்பா.

நாவுக் கரசு நரலையழுந் தாதெடுத்த
சேவுக் கரசு சிவக்கொழுந்து - யாவுக்குஞ்
சான்றாந் தலங்குமுதல் சம்புக்கடை ஞாழலில்வாழ்
தோன்றாத் துணையே துணை.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

பிலவங்க௵
தைமீ ௧௨-உ.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்

## பாயிரம்.

### காப்பு.

சொன்னவாறறிவிநாயகர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

*பொன்னினன் மாட மோங்கும் பாதிரிப் புலியூ ரைய*
*னென்னையா ளுடைய வீசன் றன்னிடத் திருந்த வோங்கற்*
*கன்னிதா னீன்றெ டுத்த கடம்பொழி சுவட்டு நால்வாய்ச்*
*சொன்னவா றறியும் யானை *துணையடி தொழுவோம் யாமே.* (௧)

மேற்குமதில்விநாயகர்.

நேரிசைவெண்பா.

*தேனார் திருப்பா திரிக்கீழ்த் தவம்புரியுங்*
*கானார் குழலாள் கருத்துறைசேய் - வானார்*
*குடகமதில் வீற்றிருக்குங் குஞ்சரக்கன் றென்பாற்*
*கிடமுளரி மாத †ிருப்பு.* (௨)

* சொன்னவாறறிவிநாயகரென்பது, இத்தலவிநாயகர் திருநாமம்; "முன்ன வாவிய் பழம்பொருள் யாவையு முனிந்து, பின்ன வாவிய பெரும் பொருள் யாவையு நல்கும், பொன்ன வாஞ்சடைப் பாடலேச் சுரனருள் புதல்வன், சொன்ன வாறறி களிற்றெழிற் றுணைமலர்ச் சரணே." (திருப்பாதிரிப்புலியூர்ப்புராணம், காப்பு, ௨.)

† முளரிமாதர் - அஷ்டலக்ஷுமிகள்.

## ஸ்தலவிருக்ஷம்.

கட்டளைக்கலித்துறை.

*அன்னை யருந்தவஞ் செய்கின்ற காலத் தருநிழலாய்க்*
*கன்னி வனத்தி லொருபா திரிகைதை செங்கழுநீர்*
*பன்னு மலர்க்கொன்றை செண்பகங் கோங்குடன் ஞாழன் மத்தம்*
*புன்னை நறும்பிச்சி வெள்ளெருக் கம்புயம் பூத்ததுவே.* (௩)

---

## நூல்.

ஒருபோகுமயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

*பூமாலை புனைந்தேத்திப் பொன்மாலை முடிதாழ்த்துப்*
*பாமாலை நவின்றேத்திப் பலவமர ரடிவணங்க*
*வாழிமறை பொருணான்கு மண்முதலா வியவைந்து*
*மூழிகளும் படைத்துடைய வொருமுதல்வி யுடனிருப்ப*
*வெம்முடைய பவமுனியுங் கயமுனியு மிகவிமையோர்*
*தம்முடைய தவமுனியுந் *தாரகனுந் தனிநிற்ப*
*ஞானத்தின் வடிவாய நந்தீசர் பணிகேட்பக்*
*கானத்தின் முதலாய கன்னிவனத் தினிதுறைவோய்!*

(இஃது எட்டடித்தரவு.)

*வேதமுதற் றனிவிளக்கின் மெய்ஞ்ஞானச் சுடர்ச்சிகைமே*
*லோதமதற் கப்புறமாய் நணுகரிய வொருபொருணீ*
*படைத்தருள வயனாகிப் பாலித்தற் கரியாகித்*
*துடைத்தருள நீயாகித் தோன்றுவதுன் றொழிலாமே!*

---

ஸ்தலவிருக்ஷம்—கன்னிவனம் - இத்தலத்தின் திருநாமம். ஞாழல் - புலிநகக்கொன்றை. பாதிரி, தாழம்பூமுதலியவற்றைப் பூத்ததென்பதை, இந்நூல் ௩௧, ௪௧ - ம் செய்யுட்களாலும், "பன்னிரு பூமலர் பாதி ரிக்கணே" (திருநகர. ௭௩.) எனவும், "புன்னைபுண் டரீகம் பூக்கும் பாதிரிப் புலியூர்" (பிரமசில. ௨) எனவும், "கோங்கு சண்பகம் பிச்சிவெள் ளெருக்குச்செங் குவளைதா மரைபுன்னை, தேங்க மழ்கொன்றை ஞாழனுன் மத்தங்கான செழித்தலர் தாழம்போ, தோங்கு பாதிரி காலையு மாலையு முகைத்தவிழ்ந் துமைபூசைக், காங்கு வேண்டிய தருணத்தி னுதவிடு மற்புதஞ் சொலற், பாற்றே" (பாடலமூல. ௧௨) எனவும் வரும் இத்தலபுராணச்செய்யுட்களாலு முணர்க.

*தாரகன் - பிள்ளை; முருகக்கடவுள்.

வானவரும் பூசுரரு மறைநெறியால் வகுத்தமைத்த
போனகங்க ளனைப்பலவும் புனிதமெனக் கொள்ளாது
கண்ணப்பன் மணிவாய்ப்பொற் கலசவிரைப் புனலாட்டி
யுண்ணப்பா வெனவளித்த வூனமுத முகந்தனையே!

வானவராய் நரகராய் மானிடராய் விலங்காகித்
தானவராய்ப் பிறவுமாய்த் தம்முள்ளே தடுமாறி
யெண்ணரிய பல்லுயிரு மிறந்துபிறந் துழலுமது
விண்ணவனே நீவகுத்த விளையாட்டின் கூத்தன்றே!

(இவ் மூன்றும் நாலடித்தாழிசைகள்.)

அடையலர் திரிபுர மழலெழ வொருமுறை
வடவரை தொடுசிலை வளைவுசெய் தருளினை;

தடவரை தொடவரு தசமுக னொருவனை
யுடலொடு முடியற வொருவிர னிறுவினை;

(இவை இரண்டும் ஈரடி அராகங்கள்.)

அரவநெடுந் திரைக்கடல்வா யாலால மெழநடுங்கிச்
சுரர்பரவச் சிறிதிருண்ட சுந்தரகந் தரத்தினையே!

அருமுனிவ னடியிணையி லபயமென வீழ்பவன்மேல்
வருமறலி யுயிர்வீழ மறிந்தருள வுதைத்தனையே!

அனைத்துலகிற் பல்லுயிர்க்கு மாருயிரா யமர்ந்தனையே!
நினைப்பவனாய் நினைப்புமாய் நினைப்பதுமாய் நின்றனையே!

வேடுருவந் தரித்தருளி விசயனுடன் பொருதனையே!
நாடறியத் திருத்தூது நம்பிவிட நடந்தனையே!

விண்ணவர்நின் றபயமிட மேல்வருவ தோராது
கண்ணருளென் றிருந்தபடி கடுவிடமுண் டருளினையே!

(இவை ஐந்தும் பெயர்த்தும்வந்த ஈரடித்தாழிசைகள்.)

சொரிமத கரியை யுரித்தனை
சுரநதி சடையி லடக்கினை
பொருபுலி யதளை யுடுத்தனை
பொறியர வரையி லசைத்தனை.

(இவைநான்கும் முச்சீரோரடி அம்போதரங்கங்கள்.)

மறைவிரித்தனை பிறைமுடித்தனை
பொருடொகுத்தனை பவமறுத்தனை
மழுவலத்தினை பெண்ணுமாயினை
மானிடத்தினை யாணுமாயினை.

(இவை எட்டும் இருசீரோரடி அம்போதரங்கங்கள்.

எனவாங்கு,

(இது தனிச்சொல்.)

மெய்ம்மொழி வேதியர் நெய்ம்மலி வேள்வியிற்
பண்ணுறு நறும்புகை விண்முகில் காட்டுஞ்
சீத வார்பொழிற் பாதிரிப் புலியூ
ரருமறை முதல்வநின் றிருவடி பரவுதுந்
தீநெறிப் படரார் செம்மைநீ பணித்த
தூநெறிச் சென்ற தொண்டரிற் கூட்டா
தொழியாப் பிறவியுட் கூட்டினு
மழியா வன்புதந் தருளுக வெனவே.

(இஃது ஆசிரியச்சுரிதகம், க)

நேரிசைவெண்பா.

வேத மொழிவிசும்பு மேனி சுடர்விழிமண்
பாதந் திருப்பா திரிப்புலியூர் - நாதர்
பரமாம் பரமாம் படிகடலெண் டிக்குங்
கரமா மவர்க்குயிர்ப்பாங் கால். (உ)

கட்டளைக்கலித்துறை.

கால்கொண்டு கண்ணழல் கொண்டுகை யிற்றிரி சூலமென்னும்
வேல்கொண்டு காலனை வேளினை வெந்திற லந்தகனைச்
சேல்கொண்ட வாவித் திருப்பா திரிப்புலி யூரிற்செல்வர்
பால்கொண்ட நீற்ற ருதைத்ததுஞ் சுட்டதும் பாய்ந்ததுமே. (ங)

---

உ. பரம அம்பரமாம் படி கடல் - மேலான ஆடையாகும், ஒலிக்கின்ற கடல். இச்செய்யுளும், "பாடுவார் பாடும்" என்னும் கஅ - ம் செய்யுளும் தமிழ்நாவலர்சரிதையில் எடுத்தாளப்பட்டுள்ளன.

ங. அந்தகன் - அந்தகாசுரன். இச்செய்யுள் நிரனிறை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாய்ந்தநீர் பரந்த வேணிப் பாதிரிப் புலியூ ரைய
ராய்ந்தநூல் வரைந்த வேட்டுக் கஞ்சனக் காப்புச் சாத்த
வாய்ந்தநீர்க் கடல்க ளாற்று மற்றவர் பெருமை மண்மேற்
றேய்ந்தநாற் சிறிது வாணுண் மனிதரோ செப்பு வாரே. (௪)

## தவம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சென்று பூதலத் தெல்லை காணிலென்
றெய்வ மாநதித் துறைக ளாடிலென்
னின்று தீயிடைத் தவமி யற்றிலென்
னீறி டார்களே கிரய வாணரே
கொன்று தீவினைக் கொடுமை யாளருங்
கோதி லஞ்செழுத் தோதி நீறணிந்
தின்று பாதிரிப் புரிசை சேர்வரேல்
யாவ ராயினுந் தேவ ராவரே. (௫)

## தலைவியிரங்கல்.

எழுசீராசிரியச்சந்தவிருத்தம்.

தேவா சுரர்பிற ருரகா திபர்செய
லறியா தயர்வுறு சிறியோமைக்
காவா யெனவெறி கடல்வாய் விடமுகர்
கருணா லயர்பயில் கடைஞாழற்
பூவா தொழிகில குரவா திகண்மயில்
செயலோ விதுகுயில் பொழிறோறுங்
கூவா வதிவன வவரோ வருகிலர்
கொடியே னெதுசெய்து முடிவேனே. (௬)

அஞ்சனக்காப்பு - மைக்காப்பு. நூல் - நூலறிவு; செயற்கையறிவு. சிறிதுவாணுள் - சில்வாழ்நாள்.

௫. "பரவை யாடினு நதிக ளாடினும்" என்னும் திருவருணைக்கலம்பகச்செய்யுள், இதன்கருத்தைத்தழுவிவந்துள்ளது.

௬. உரகாதிபர், எழுவாய். கடைஞாழல் - இத்தலத்தின் திருநாமம்; இஃது இக்கோயிற் சிலாசாஸனத்துங் காணப்படும்.

### சந்தக்கலித்துறை.

முடியுடை யமரரு முனிவரு முறைமுறை தொழுதேதிக்
கடியுடை விரைமலர் பலகொடு வழிபடு கடைஞாழற்
கொடியுடை விடையினர் குலமறை முடிமிசை வருகோலத்
தடியுடை யவரடி பணிபவ ரிமபுர மடையாரே. (எ)

### அறுசீராசிரியச்சந்தவிருத்தம்.

அடல்விடை தன்னை யுகைத்தா
ரதளுரி தன்னை யுடுத்தா
ரரவுகள் பின்னி முடித்தா
ரழகிய ரென்ன விருப்பார்
மடவரன் மன்னு மிடத்தார்
மறலியை முன்ன முதைத்தார்
மருவிய கன்னி வனத்தார்
மலர்மிடை புன்னை நிழற்கீ
ழுடலிடை யென்னுயி ரொப்பீ
ருருவுடை யன்ன நிகர்ப்பீ
ரொளிமதி யன்ன முகத்தீ
ரொருமயில் வன்ன நிகர்ப்பீர்
தடமுலை துன்ன நினைத்தே
தளர்வுறு மின்னு மிருக்கோர்
சரணுள தென்ன வுரைப்பீர்
தனிபடு மின்ன றவிர்த்தே.

(தலைவன் தலைவியை இரந்து பின்னிற்றல். அ)

### அம்மானை.

### கலித்தாழிசை.

இன்ன திருவென் றிறைவன் றிறமதனைச்
சொன்ன மறையுந் துணிந்திலகா ணம்மானை
சொன்னமறையுந் துணியாத் தோன்றாத் துணையினைநங்
கன்னி வனத்திடையே காணலா மம்மானை
கண்டார் பிறிதொன்றுங் காணார்கா ணம்மானை. (௯)

௯. தோன்றாத்துணையென்பது ஸ்வாமி திருநாமம்; "தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே" (திருநா. தேவாரம்).

### கட்டளைக்கலித்துறை.

மானுள பேதை மயிலுள சாயன் மறக்கவொட்டா
தேனுள வல்லி பலவுள கிள்ளை சிலமிழற்றுங்
கானுள கண்ணுதல் கன்னி வனங்கரு தாரிணையும்
யானுள னெஞ்சம் பிறிவதெவ் வாறிவ் விரும்பொருட்கே.
(பொருள்வயிற்பிரியுந்தலைவன் அழுங்கல். ௧௦)

### புயவகுப்பு.

பொருள்புரி மறைநாலு முறைநின் றியம்பின
புகலியர் பெருமானு மரசும்புகழ்ந்தன
புலநெறி தொடராத விதயம்புரிந்தன
புகர்முக மதவேழ வதனம்பிளந்தன
வருளுடை மலைமாதி னகலம்புணர்ந்தன
வவமதி விதிபேணு மகமன் றுசிந்தின
வழல்வழி திரிசூல வயில்வென் றிகொண்டன
வரிமுத லிமையோர்க ளபயம்புகுந்தன
மருள்புரி மணிவீணை யிசைகொண்டளைந்தன
மதுகர கிளைசூழு மலர்கொன்றை துன்றின
வரமிகு திருநீறு முழுதுந்துதைந்தன
வடிவுடை வடிகாதின் மகரங்கிடந்தன
விருள்கெட மணிநாக வலயஞ்செறிந்தன
விடம்வல மடமானு மழுவும்பொருந்தின
விகலினர் புரமாள வெரியம்புகொண்டன
வியல்பயில் கடைஞாழ லிறைவன்புயங்களே. (௧௧)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புயங்களி லகன்ற மார்பிற் புரிசடைப் பரப்பிற் காதில்
வயங்கொளி நுதலிற் கையின் மருங்கினி லரையிற் றாளிற்
பயங்கொள வரவ மார்த்த பாதிரிப் புலியூ ரையர்
நயங்குறற் கொன்றைக் கின்றென் னறையலாண் மையா லாமே.
(பாங்கிகூற்று. ௧௨)

---

௧௧. 'புகலியர் பெருமானு மரசும் புகழ்ந்தன' என்றார். இந்த இருவ
ருடையதேவாரங்களே இத்தலத்திற்குண்மையின்.

கோச்சகக்கலிப்பா.

மையன் மடவீர் வயற்பா திரிப்புலியூ
ரையர் திருக்கெடில மாட்டி யவர்சாந்தந்
தையன் முலைமேற் றடவாதே புன்மருந்து
செய்ய விவள்பசலை தீருமோ தீராதே.

(பாங்கிகூற்று. கரு)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தீராத விருவினையுந் தீர்த்து மேன்மை
தெளியாத மனந்தெளிவித் தென்னைப் பின்னை
வாராத வகைசெய்த மன்னன் கன்னி
வனநாதன் கடைஞாழன் மருங்கு வாய்விட்
டாராத கருங்கடலு முன்றில் வாய்நின்
றாற்றாத வன்றிலுநின் றழலே சிந்தி
யிராத வாடையுந்தந் தகன்று ரல்ல
ரென்கொலோ தலைவர்பிரிந் திருந்த வாறே.

(தலைவிகூற்று. கச)

## தலைவி இரங்கல்.

கலிநிலைத்துறை.

இரைதேர் குருகே யெறிவார் திரையே திரைமோதுங்
கரைசேர் பொழிலே பொழில்சூழ் கழியே கண்டீரே
நரைதேர் விடையார் கடைஞா ழலினுண் மலரூதும்
விரைதே ரளிபோல் வினவா தகல்வார் மெய்ப்பாடே. (கரு)

கோச்சகக்கலிப்பா.

பாடுவார் பாடும் பரிசில் வரிசையெல்லா
மாடுவா ரன்றி யயலா ரறிவாரோ
தோடுவார் காதன்றே தோன்றுந் துணையயர்
பாடுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே. (கசு)

---

கரு. கெடிலம் - இத்தலத்தைச்சார்ந்த நதி.

கசு. பாடுவார்ஓரிருவர் - கம்பளர், அசுவதரர்; "காதிலிரண்டுபேர்" என்பது தில்லைக்கலம்பகம்.

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

படைவாள்*முறிந்து விழவாலறைந்து படிவாளையுந்தி வெருவா
மடைவாய்விழுந்து முழவோர்மலங்கி னுடனேபிணங்கு வயல்சூழ்
கடைஞாழலெந்தை மலைவாணர்தந்த கனிவாய்மடந்தை தனிநீர்
குடைவானடைந்த சுனையேதருங்கொல் குறுவேர்வரும்பு குறியே.
(சுனையியந்துரைத்தல். ௧௭)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குறியா வின்ப மன்பருக்கே கொடுப்பார் திருப்பா திரிப்புலியூர்
மறியார் கையர் மலைவாழு மயிலே யனையீர் மான்கெடுத்திங்
கறியா துங்கண் மருங்கணைந்தோ மறியா மயங்க விழிவேல்கொண்
டெறியா வவ்வேல் பறியாதே யேகா திற்ற லாகாதே.
(தலைவன்கூற்று. ௧௮)

காலம். மடக்கு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காதலா ரங்கிருந்து பொன்படைக்குங் காலங்
கதிர்முலையு மிங்கிருந்து பொன்படைக்குங் கால
மேதிலார் கொடியவா யலர்தூற்றுங் கால
மிளந்தென்றல் கொடியவா யலர்தூற்றுங் காலந்
தாதுலா மலர்க்கொன்றைச் சடையர்கடை ஞாழற்
சங்கரர்பொங் கரவணையார் தமதருள்போற் குளிர்ந்து
மீதுலா மதிக்கதிரு மெனக்கழலுங் கால
மெய்ந்நிறையுங் கைவளையு மெனக்கழலுங் காலம் (௧௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காலமுங் கழிந்து மற்றைக் கடவுள ரிறந்து விண்ணு
ஞாலமுங் குலையும் போது பாதிரிப் புலியூர் நாதர்
கோலமுங் கூத்துக் கேற்பக் கொண்டுதிண் டோள்கள் வீசிச்
சூலமுந் திரித்தா டல் புரிவரச் சுடலை மீதே. (௨0)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வீது படம்புர மும்புர வாணரு மென்னகை வெங்கனலிற்
றீது படும்படி வென்றவர் நின்ற திருக்கடை ஞாழலின்வா

*படைவாள் - கலப்பை.

யாது படுங்கொல் பிரிந்தவர் நெஞ்ச மிருந்தவர் நெஞ்சுருகிக்
கோது படும்படி வுந்தெரி சிந்தின கொண்டலி னுண்டுளியே.
(பாங்கி இரங்கல். உக)

களி.

எழுசீர்க்கழிநெடிலடி இரட்டை ஆசிரியவிருத்தம்.

துள்ளித் துடிதருவரு கின்றவரு கந்தமுனி
கோசார மின்றுகொளுவத்
*தோண்டிக் குடத்தைவர வைபூச ணைக்குரிய
சோமாசி யாரவர்பனங்
கள்ளுக்கு நல்லவ ரவர்க்கந்த மந்திர
மிடும்புத்தர் கஞ்சனுக்குங்
காலங் கழிந்தவாக டென்னங்க ளுண்பவர்கள்
கடைஞாழ லுடையாகண்முன்
றெள்ளித் தெளிதமுது சன்னுசி நீபுதிய
தெய்வங்க ளாடுவதடா
தேவாசு ராதியர்கள் வாமாதி பூசையி
லெடுத்துப் பொடித்தநுரையைத்
தள்ளித தெறித்தவொரு விந்துக் கொடுபபமிகு
சந்துட்ட ராவர்பனவர்
சாமாதி வேதமிவை வாமா கமத்திலுள
தத்வப்ர சித்தியிதுவே. (உஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இலங்கை காவல னொருபது முடிகளு மிருபது தடந்தோளு
மலங்க மால்வரை யடியினின் மடிதர மணிவிரல் புணிகொண்டார்
கலங்கள் சூழ்கடல் சேர்கடை ஞாழலங் கடவுளர் கமழ்கொன்றை
யலங்க லாலினி யென்குறை யென்மக ளதன்வண மானுளே.
(செவிலி யிரங்கல். உங)

ஷை வேறு.

ஆனுடைய கொடிவலத்த ரருளுடைய கொடியிடத்த
ரலர்ந்த கொன்றைக்
காளுடைய சடைமுடியர் கடைஞாழன் மருக்கொருவா
கனிவாயையாதே

* தோணி என்பதும் பாடம்.

தேனுடைய தழையுடையர் திகைப்புடையர் சிலையுடைய
ரலரே யெய்த
மானுடையர் முருகனிலும் வடிவுடைய ரிவர்க்கிதுவென்
வந்த வாறே.
(பாங்கி தலைவிக்குத் தலைவன் குறையுணர்த்தல். உச)

ஊசல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாசக் குழலசைய வாடீ ரூசல்
மகரக் குழையசைய வாடீ ரூசல்
பூசற் கயல்புரள வாடீ ரூசல்
புருவச் சிலைவளைய வாடீ ரூசல்
தேசத் தவரெவர்க்கு மரணா மண்ண
றிருப்பா திரிப்புலியூர்ச் செல்வ ரீந்த
நேசக் கழல்பாடி யாடீ ரூச
லிளைவளையீர் நெஞ்சுருக வாடீ ரூசல். (உரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஊச லாடு மிடத்தில்லை யுறையு மிதணத் துளரல்லர்
பேச லாவ தொருதுணையுங் காணேன் பேணார் புரமாளப்
பூச லாடு மரன்கன்னி வனத்துப் புனத்தென் னிறைகொண்ட
மாசி லாத மணிமுறுவல் மாணா ரெங்கே போனாரே.
(தலைவன் வறுங்களநாடி மறுகல். உசு)

௸ வேறு.

போனக மேவிட மேறுவ தேறுடை தோல்புனை பூணரவங்
கானக மேயிட மாகிலு மாதொடு கன்னி வனத்துறைவார்
தேனகு நாண்மல ரோனொடு மான்முத லாகிய தேவரெலாம்
வானக மானவை யாளவு மேவுவர் மீளவு மாறுவரே. (உஎ)

சந்தத்தாழிசை.

மூறி லாமலைக் கொடிபாகர் வாவு போர்விடைக் கொருபாகர்
மாசி லாமறைத் திருநூலர் மார்பு சேருமுப் புரிநூலர்
நீறு பூசுமெய்த் தவவேடர் நேரி லாதவற் புதவேடர்
நீடு மாமதிற் புடைசூழு நேசர் பாதிரிப் புலியூரி

லாறு சூழ்துறைக் கருகாகி யாதி மாதவர்க் கரிதாகி
யாறு கோடி கற் பகநீடி யாடன் மாமயிற் குலமேவி
நாறு தேன்மலர்ச் சுனையாடி நாடு வார்பனிக் கறைகூடி
நானு மாமிருப் பிடமேவி நாக பூமியொப் பெனலாமே.

(இடம்பெற்றுத்தழால். ௨அ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆமாகி லவர்க்கிப்போ தகல்வ தற்றே
யகன்றிடினுஞ் சிறிதேனு மாற்றே னென்றூர்
தாமாகித் தனிமடவார் தவிர்க வென்றாற்
றவிர்வரோ தமைத்தவிரத் தள்ளி யுள்ளம்
போமாகிற் போகாமற் புகுந்தாட் கொள்ளும்
புனிதர்திருக் கடைஞாழல் பொருந்தா தார்போல்
யாமாமித் தனியுயிர்கொண் டிருப்போ மன்ப
ரெடுத்தவினை முடிப்பதற்கே யேகு வாரே.

(தலைமகள் வருந்தல். ௨௯)

நேரிசை வெண்பா.

†ஏகாய மென்மூலையே விட்டா ரிடைகெட்டே
னாகாய மென்னு தலர்புனைந்தார் - மாகாயக்
கைம்மானைச் செற்றார் கடைஞாழ லேயனையீ
ரெம்மானைத் தாய்மா ரிரந்து.

(தலைம்கன் கூற்று. ௩௦)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரவ லாளருக் குதவ மாகிதிக்
கென்று கானிடைச் சென்ற வீரர்தேர்
வரவு தாழுமுற் படமு கிற்குலம்
வந்த தாமெனச் சிந்தை செய்திட
லரவ மேகலைத் தெரிவை வான்முழக்
கல்ல விம்முழக் கில லோகமும்
பரவு பாதிரிப் புலிசை மாநகர்ப்
பரமர் கோயிலிற் பணைமு ழக்கமே.

(தலைமகளைப் பாங்கி ஆற்றுவித்தல். ௩௧)

---

கற்பகம் - தென்னை. † ஏகாயம் - உத்தரீயம்

## பிச்சியார்.

பணைம தக்கதக் கரியு ரித்தகைப்
பரமர் பாதிரிப் புலிசை நாதர்தந்
துணைம லர்த்திருக் கழல்வ ழுத்துமெய்த்
தொண்டு பாடுசெந் தொண்டை வாயினீ
ரிணைசி லைப்பிறைக் கிசைய நீறுகொண்
டிட்ட சுட்டி *நெஞ் சுட்டி யிட்டதெம்
†முணர்வி ளக்கவோ நகைவி ளக்கினீ
ருயிர்கு றைக்கவோ மயிர்கு றைத்ததே. (௩௨)

## ஷை வேறு

குறைவிளம்ப வயன்முதலோர் காலம் பார்த்துக்
கொற்றவா யிற்புறத்து நிற்ப வேத்தி
மறைவிளம்ப வொருமுனிவன் மைந்தற் கன்பான்
மறிகடலன் றளித்தருள்வோர் வடிவார் கண்டக்
கறைவிளம்ப வருங்கருணை யெல்லை தொல்லைக்
கன்னிவனத் திருந்தவர்க்கென் கன்னி மைய
லிறைவிளம்பத் தவிருமது தவிரா தாறு
லெறிவலாயீர் வெறிதொடங்கி யென்செய் தீரே.

(வெறிவிலக்கியவழி அறத்தொடுநிற்றல். ௩௩)

## வஞ்சித்துறை.

என்னை யயர்த்தன
முன்னை வினைத்தொகை
கன்னி வனத்திறை
தன்னை நினைக்கவே. (௩௪)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தன்னையா னினைப்பத் தந்து தலையளிப் பதற்கு நாயேன்
பின்னையான் செய்யுங் கைம்மா றறிகிலேன் பெருமை யாலே
முன்னையா ரணங்க ளோதும் பாதிரிப் புலியூர் மூர்த்திக்
கென்னையாட் கொடுப்ப தன்றி யேழையே னென்செய் கேனே. (௩௫)

---

* நெஞ்சன் றியிட்டது. † உணர்வு இளக்கவோ.

நேரிசை வெண்பா.

செய்ய கரிய திகழ்கண் மணிப்பாவை
யைய வரியவே யானலு - செய்தல்
கழிவெலாம் பூக்குங் கடைஞாழல் காணு
விழிவெலாங் காணு விழி. (௬௬)

தாழிசை.

விழியி னீளமொரு கிழியி லேமுடிய
வெழுதி மீளமுலை யெழுதவீ
ரொழியு மேயிதனை நினைவு றாதபனை
மடலி னாவர வுரைசெய்தீர்
கழியில் வாளைவய லிடையு லாவுகடை
ஞாழ லாதிகர மானனார்
மொழியை நேரிடையை நடையை வேறெழுத
வியலு மாகிலிது முயலுமே.

(பாங்கி தலைமகளவயவத் தருமைசாற்றல். ௬௭)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முயலி னுறுதுய ரகல வருள்புரி
முதல்வர் வளரிள முகிழ்முலைக்
கயலி னிகர்வரு நயனி யிடமகிழ்
கடவு ளுறைகடை ஞாழல்வா
யியலின் மயிலனை யவரொ டெழிதிரை
மருவி யிடையிடர் படவரும்
புயலி னழகிய குழலி நனைதுகில்
புலர வெனதுயிர் புலருமே.

(தலைவன் இன்றியமையாமையியம்பல். ௬௮)

கட்டளைக்கலித்துறை.

புலவர்க் கருளும் பொருளுடைத் தாய்ப்புய நான்குடைத்தாய்க்
கலவக் குலமயில் பங்குடைத் தாய்க்கன்னி காவணத்தே
பலவர்ப் புதமலர் காட்டிய கோட்டுப்பொற் பாதிரிக்கீழ்
நிலவச் சடைமுடிக் குன்றடி யேனுக்கு நேர்பட்டதே (௬௯)

"முன்னநின்றமுடக்கான்முயற்கருள்செய்துநீள், புன்னைநின்றுகமழ் பாதிரிப்புலியூருளான்" (திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம், ௧)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண்ட ரவக நடித்த காளி லபித்த நீறு பரப்பிவெண்
கொண்டல் வந்து படிந்த பொன்வரை யொக்கு மேனி குனித்தநா
ளண்ட முட்ட வழற்ப ரப்பி யகற்ப டுத்ததை யொக்குமெய்
கண்ட தென்கடை ஞாழ லாதிபர் கையில் வைத்த கபாலமே. (௪0)

மடக்கு.

கட்டளைக்கலிப்பா.

பாலற் கேவரப் பாவின் பரப்பையே
    படர்ச டாடவிப் பாவின் பரப்பையே
யால முண்ப ரகிலம் புரக்கவே
    யரணி லெய்வ ரழலம் புரக்கவே
கோல மல்லது பாடலச் சாகையே
    கூத்தர் மேவுபொற் பாடலச் சாகையே
காலந் தோறுந் தரும்பிற போதுமே
    காண லாங்கடை ஞாழலெப் போதுமே. (௪௧)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஞாழலிற் போது தத்தந் தலைப்பெய்து நறும்பூந் தாழைச்
சூழலுக் கருகே சோதி பாதிரிப் புலியூர்ச் சோலை
நீழலிற் பன்மான் சூழ நின்றமா னொன்றுக் குள்ளந்
தாழலிற் பெரிய மேன்மை யழிவதோ தக்க வாறே.
(கற்றறிபாங்கன்கழறல். ௪௨)

ம த ங் கு.

எழுசீர்க்கழிநெடிலடி இரட்டையாசிரியவிருத்தம்.

தக்க னொன்று தலைக்கு லைத்தவ ரங்கி ருக்கவி ருப்புடைத்
    தையல் பங்குடை யையர் செய்ய தழற்பொ லித்தறு கட்பனைக்
கைக்க ருங்களி றொன்று ரித்த கரத்தர் தென்கடை ஞாழலெங்
    காளை கண்டர் திறம்பு கழ்ந்தெதிர் மீள விட்ட பதத்திடைப்
புக்கு நின்று புரிந்த ரங்கின டந்து வந்து புகுந்துதைப்
    பேரதெ டுத்தூர டித்து வாண்முக மீதெ டுத்திரு [illegible]
[illegible] சென்று மீள மதங்கி தாள [illegible]
    [illegible] பெய்கின் மாமறை [illegible] (௪௩)

### தாழிசை.

சாதி பேத விகற்ப மாவன கற்பு தாதி சடங்கள்சங்
தர்ப்ப மல்லது தத்வ பேத மநேக மாவ தனுக்குளே
நீதி நீதி யெனக்க ளித்து நினைக்க நின்ற வனைத்திலு
நிற்ப தொன்றுள தென்று நாமு ளிருந்த நேமி வரைப்புறத்
தாதி தென்கடை ஞாழ லாதி யகண்ட ரூபி யரிக்கெய்தா
யன்ப ரான பசுக்கள் பாச மறுக்கு மத்த வராகமெய்
சோதி ஞான முணாக்க வந்தது சாதி யேதிது நிற்கநீ
சுத்த ஞாக வனுக்ர கிதகது மித்தை யேநினை நித்தமே. (சச)

### தவம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நித்தில முறுவற் பவழவாய்ப் பிறழுங்
கயல்விழி நிறைவளை யிடமாக்
கைத்தலத் திருந்த புள்ளிமான் மறியக்
* கடிலமா நதியதன் வடபாற்
செய்த்தலைக் குவளை மகளிர்கண் காட்டுந்
திருக்கடை ஞாழலி லிருந்த
பைத்தலைத் துத்திப் பணியணி யாரப்
பரமர்தாள் பணிவது வரமே. (சரு)

### மறம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வரிக்கறையா னரித்தபனஞ் சருகோ தூதா
மண்ணரசர் திருமுகமாய் வந்த தெங்க
ளரிக்கயல்வாள் விழிக்குயிலைத் தருக வென்று
லவனிதன்மேற் பரிசமழ கியதே யன்றோ
கரிக்கரட வரைப்படுத்த கன்னி காப்புக்
கருவேடன் மகன்புணர்ந்த பெருவே டன்பெண்
டருக்குலமென் றறிந்திலனோ நன்று வென்றிச்
இலைகொடுவா தலைகொடுவர் திடுவ தற்கே. (சசு)

* கெடிலமாநதி - கடிலமஹாநதி.

கைடி வேழ.

இடிக்குமெரு தொன்றுதனி லேறிவளை மார்பத்
 தென்புவரி யாமையொ டிலங்கெயி றழுந்தக்
கடிக்குமர வங்களு மணிந்துபலி கொள்ளக்
 கன்னிவன நாதர்கடை' யின்புற நடந்தா
லடிக்குமது மாலைபுனை வார்குழலின் மீதே
 யாரமணி வார்முலையி லஞ்சன மளிப்பார்
வடிக்குநெடு வேல்விழியின் மென்களப முய்ப்பார்
 வல்லியர் தொடங்குவன சொல்லிமுடி யாதே. (௪௭)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சொல்லொன்று கவிக்கரசைத் துகில்புனையா தவர்கடலிற்
 றொடுத்து விட்ட
கல்லொன்று புணையாக்கிக் *கரையேற்றும் பிரான்கன்னி
 வனமே யன்னீர்
வில்லொன்றை நுதலாக்கி விழியிரண்டைச் சரமாக்கி
 வேளை வாளா
தில்லென்று நீரேபோ யவனுண்மை தனைச்செலுத்தி
 நிற்கின் றீரே. (௪௮)

சந்தவிருத்தம்.

நினைபவர் தீவினை யான துரந்தவர்
 நிலநெடு வானுல காள வரந்தரு
திருமலர் பாதிரி நீழ லமர்ந்தவர்
 திரைவளை வாணகை மாதொருபங்கினர்
கனமுழ வோடிசை கூட நடம்புரி
 கனக சபாபதி யானன் மணங்கமழ்
கழிபுடை சூழ்கடை ஞாழல் விரும்பிய
 கடவுளர் சேர்கயி லாய மருங்கொரு
சுனையிடை யாழ்புன லாடி விழுந்திவ
 டுறைவழு வாவிழ வாயலமந்துறு

*கரையேறவிட்டவரென்பது இத்தலத்தில் ஸ்வாமியின் திருநாமம்; திருநாவுக்கரசுநாயனாரைக் கடலினின்றும் கரையேறவிட்டதுபற்றி இது வழங்கலாயிற்று. அவர் கரையேறிய இடம் கரையேறவிட்ட குப்பமென

துயர்படு போதிரு தோளில் விழுந்திவ
டுணைமுலை தோளொடு கூட முயங்குபு
வினைபுனை வார்குழ லாளை யதன்கணா
மிசைவசை யோடிசை யாவகைதந்தொரு
விடலைமு னேகினன் யானது கண்டனன்
விளைவறி யேனினி மேல்விதிகின்றதே.

(புனறருபுணர்ச்சியால் அறத்தோடுநிற்றல். சகூ)

## சம்பிரதம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

நின்ற குலக்கிரி யெட்டையு மெட்டி
வளைப்பன் மறித்திவையே
நிலைபெறு விப்பனி நீள்வல யத்தையொர்
சிறுகடு குட்பொதிவன்
சென்று குளிப்பன் முகிற்பட லத்து
மறித்து நிலத்திழிவன்
றிகையை விழுங்குவ னிவையல வித்தை
திருந்தலர் விட்டவுழைக்
கன்று தரித்த கரத்தமு தக்கடல்
கன்னி வனப்பெருமான்
கழனிளை யாதவர் புரிபெரு வேள்வி
கலங்க நடுங்கிவளைத்
தன்று கணத்தொடு சென்று திகைப்ப
வடங்க வுறப்பழியா
வமர ரொருத்தனை வரவு மழைப்பனி
வவனி தலத்திடையே. (௫௦)

## கலிச்சந்தவிருத்தம்.

தலைவானவர் தலைமாலைகண் மிடைதாழ்சடை மிசையோர்
கலைவான்மதி புனைவேணியர் கடைஞாழலை யுடையார்
மலைவாய்வனி தையரோபொரு மகராலய வனசத்
தலைவாய்வரு மமுதோடெழு மவரோவரு மிவரே.

(ஐயம். ருக)

## தலைவியிரங்கல்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வருந்தாத வகைநாங்கள் வருந்தத் தேங்கி
வளர்மாவின் றளிர்கோதி மலர்ந்த புன்னைக்
கருந்தாது புரைநிறத்துக் குயில்க ளாலக்
கண்டாலும் வாரார்கொல் கன்னி காப்பர்
திருந்தாதார் புரமூன்று மெரித்த மேருச்
சிலையினர்பா திரிப்புலியூர்ச் செல்வர்க் கன்பு
பொருந்தாதார் மனம்போலப் பொன்றுங் காலம்
பொருள்வேண்டி யருண்மறந்து போயி னூரே. (ருஉ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

போயின கைவளை வந்தது மால்புகை கின்ற துயிர்ப்படருந்
தீயென வந்தெழு கின்றது திங்க டிருக்கடை ஞாழலின்வா
யாயின செஞ்சடை யந்தணர் கொன்றை யளித்தில ராயர்தம்வேய்
வாயின தெங்கண் மடந்தைத னுருயிர் மாரனும் வெம்பகையே.

(பாங்கிபுலம்பல். ருங)

## கைக்கிளை.

### மருட்பா.

கைத்தா மரைவையார் காற்று மரைநிலந்து
வைத்தா ரிமைத்தா மரையிமைத்தா-ரித்தினிற்
போதுறை மகளி ரல்லர்
பாதிரிப் புலியூர்ப் பாவைய ரிவரே.

(துணிவு. ருச)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

பாவலர் பரவுந் தமிழ்மொழி யரசும் படிபுகழ் தருகாழிக்
காவலர் நிலவுங் கவுணியர் முதலும் பரவிய கடைஞாழற்
சேவலர் கொடியெஞ் சிவன்முடி யணியுந் திருமலர் தரின்வாழுங்
கோவலர் குழலுங் குளிர்மதி யழலும் மிவள்குறை நிறையாவே.

(பாங்கிபுலம்பல். ருரு)

### நேரிசையாசிரியப்பா.

நிறைபல வளந்தரு மறைபுனற் பழனத்துக்
கடல்விளிம் புடுத்த கண்ணகன் செறுவிற்
செந்நிறச் செந்நெல் வித்தி நன்னிற
வெள்ளிக் கொழுமுளை யொழுக்கித் தெள்ளிய
மரகதச் செழுஞ்சுருள் விரிதரப் புனைதவ
வடிமுதற் பணைத்த கிளைய வாகி
நடுநா ளமயங் குறுகி முடியமைத்துக்
கருங்கை மள்ளர் பெரும்பகடு பூட்டிப்
பவளப் பல்கொடி முறியத் தவளச்
சங்கின மிரியல் போகப் பங்கயச்
செழுமலர்ப் பன்முகங் கிழியக் கொழுமடுத்துக்
கதலிக் கனியின் கமழ்சேறு படுத்துப்
பதவிய சோலைப் புதுக்கோட் பலவின்
பூவுறு பெரும்பழ மழையெனச் சொரியுந்
தீந்தே னீத்தம் பாய்ச்சி மாவின்
கொழுங்கனி வண்ட லோட்டிச் செழுங்கொடி
நாறுநாட் செய்யு மாறுசூழ் வளவயற்
சீத வார்பொழிற் பாதிரிப் புலியூர்
யாமினிப் புகலுவ தெவனோ மாமுனி
கரத்திற் கண்ணுடை யவனும் வரத்திற்
றுளி ஞட்டத் தவனுமாம் வாள்வரிப்
புலிக்காற் பெரும்பெயர் முனியு மொலித்திரைப்
பாலின் பரவைபெற் றவனும் *ஞால
மதஞ்சலி கூப்பும் பதஞ்சலி யண்ணலு
மென்றிவர் முதலா மிருந்தவத் தலைவர்
பொன்றிகழ் புரிசடைப் புனிதனை வணங்கி
யன்ன தமையா ததனிடை யுற்றன
ரின்னு மதன்றிற மியம்பிற் பொன்மலை
வல்லி மாதவம் புரிந்தன ணல்லிசை
நாவினுக் கரசனு ஞானசம் பந்தனும்
பாவினன் மாலையாற் பரமனைப் புகழ்ந்தனர்
பனிமதி வெண்குடைப் பருதிகுல முதல்வனு

---

*ஞாலமது அஞ்சலிகூப்பும்.

மனுநெறி பேணு மாதி ராசன்
முயல்வடி வாகிய முனிவனை யெறிந்த
மயலுறு தீவினை மாற்றுதற் பொருட்டால்
வடதிசை மருங்கிற் போகிப் படிபுக
ழுந்தரு வேதிகை குறுகி யதன்வயிற்
செந்தீ மூன்றுஞ் செவ்விதின் வளர்ப்போர்
வீறுசால் சிறப்பின் விழுக்குடிப் பிறந்தோ
*ராறறு பதின்ம ரந்த ணாளர்
நீற்றொடு சிறந்த நெற்றியர் நாற்றிசை
தருமறை தெரிந்த நாவினர் பரிவொடு
சிவன்வீற் றிருந்த சிந்தையர் தவநெறி
யருளொடு தயங்கிய தண்மையர் தம்மொடு
தன்னெதிர் போகாத் தண்டமிழ் வைப்பிற்
கன்னி காவனங் குறுகி யன்னவ
ரிருமூ வொருப திசைந்த வாண்டிலங்
கொருவ ரொருதின முரிமை பூண்டு
திருக்கடை ஞாழலிற் †சிவக்கொழுந் ததனை
யருச்சனை செய்ய வமர்ந்தினி திருந்தன
னினையன பலவு மிடர்கெட விரித்து
விண்ணவர் புகழி னல்லது
மண்ணவர்க் கிப்பதி வழுத்தலோ வரிதே. (௧௬)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரியானு மயனானு மமர ரானு
மருண்முனிவர் பலரானு மளவு கூறத்
தெரியாத திருவுருவ முடைய சோதிச்
சிவக்கொழுந்தை நினைந்துருகிச் சிறந்த காதற்
றரியாத வகைபெருகப் பரமா னந்தத்
தனிக்கடல்வாய் விழுந்தெழுந்து தடங்கண் மாரி
சொரியாத புனல்பெருகுந் தொண்ட ரோடுந்
தோற்றுவார் பவக்கடலை மாற்று வாரே. (௧௭)

---

* ஆறறுபதின்மர் - மூன்றூற்றறுபதின்மர்; "பழந்தொண்ட ரொருமூன் றூற்றறுபதின்மர்" என்பர் பின்னும்; ௩௦.

† சிவக்கொழுந்தென்பது, இத்தலத்தில் ஸ்வாமியின் திருநாமம்.

கலிவிருத்தம்.

மாற்றுவார் மறலியை மலர வன்சிரத
தூற்றுவார் கரியுவ னுதிரந் தீயினைப்
போற்றுவார் பாதிரிப் புலிசை யார்தொழத்
தோற்றுவார் சுரிகுழற் *றோகை பாகரே. (௫௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாக வான்மதி புனைசடை முடியினர் பாதிரிப் புலியூரின்
†மேக வாகன ரடிபணி யலரென வெங்கரி திரிகானி
ணுக வாயுமிழ் நவமணி யொளிதர நள்ளிரு டனினீவர்
தேக வாணுத லுய்கில ளையனே யிரவர லொழிவாயே.

(பாங்கி தலைமகனை வரவுவிலக்கல். ௫௯)

ஷை வேறு.

ஒழியாத பழந்தொண்ட ரொருமுந்நூற் றறுபதின்ம
ருளமெய் போதுங்
கழியாத சேவடியான் கன்னிவனத் தொருசிறுமான்
கவர்ந்த துள்ள
மொழியாத லம்மானின் முறுவலிள நிலவாதன்
முகத்து லாவும்
விழியாதல் கொண்டன்றி வேறொன்று விந்தமயன்
மீட்கொ ணாதே.

(தலைவன் வேட்கை தாங்கற்கருமைசாற்றல். ௬௦)

கிழவி சுவடுகண்டிரங்கல்.

ஷை வேறு.

மீளிதிருந்தடி யிங்கிவையுங்குவை
வெவ்வினை யேனுடைய
மெல்லியன்மெல்லடி வேலைகொளுந்த
விழித்துயி ருண்டுவரும்

---

*தோகைநாயகியென்பது, இத்தலத்தில் அம்பிகையின்திருநாமம்

†"மேகநலூர்தியர்" (திருப்புகலூர்த்தேவாரம், திருநா.)

காளிமுனின்று நடம்புரிகண்ணுதல்
கன்னி வனப்பெருமாள்
கவுரிமனோகர னைப்பிரியாத
கருத்துடை யார்வினைபோ
லாளிமறிந்து விழுந்துகிடந்தது
மற்புத மேயிதுவு
மண்ணவிடந்திகழ் வண்ணநெடுஞ்சிலை
கால்வளை வித்ததனல்
வாளிதுரந்திட வந்துவிளைந்தது
மற்றது வெங்கதிர்வேன்
மன்னனுமங்கையு மின்னுயிரொன்றொடு
சென்ற வழிச்சுவடே. (௬௧)

## மேகவிடுதூது.

### வேறு.

வழிப்பட்ட கருமுகில்காண் முற்பட்டென் வரவுரைமின்
மலர்ந்த புன்னை*
கழிப்பட்ட புலவகற்றுங் கடைஞாழன் மருங்கிரண்டு
கயல்போ னீண்ட
விழிப்பட்ட புனலுந்தன் மெய்ப்பட்ட பசலையும்பொய்ப்
பட்ட வாழிச்
சுழிப்பட்ட வளைத்தளிருந் துயர்ப்பட்ட மனமுமுடைத்
தோகை யாட்கே. (௬௨)

### வேறு.

தோகையே யனைய மாதர் துயர்படச் சுடுவெங் கானிற் [சே
போகையே பொருளென் றெண்ணிப் பொருள்வயிற் போந்த நெஞ்
பாகையேர் சொல்லி பங்கன் பாதிரிப் புலியூர் பாடாச்
சேகையேர் மனத்தர் போல மீளவுஞ் சிந்திப் பாயே.

(தலைவன் நெஞ்சொடுகிளத்தல். ௬௩)

பிரனலம் பொருந்துங் கண்ணூர் பயிலினந் துறந்து விட்டுப்
பூநலங் கமழுங் கானற் பாதிரிப் புலியூர் வாழு

* "புன்னைநின்று கமழ்பாதிரிப்புலி யூருளான்" என்பது தேவாரம்.

மேனவெண் மருப்ப ணிந்த வெம்மானை யிறைஞ்சு வார்மே
லானவர் பவக்க டற்றாழ் சுழியினி லழுந்தார் மன்னோ. (௬௪)

கலிவிருத்தம்.

மன்ற மேயிட மாநட மாடிய
குன்ற மேகடை ஞாழலெங் கொற்றவா
சென்ற மேவல ரூர்நகைத் தீச்சுட
நின்ற மேருவின் கோடு நிமிர்ந்ததே. (௬௫)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கோடெலாமறு கான்முரன்றெழு கொய்ம்மலர்க்குளிர் சோலையின்
பாடெலாமணி வாவிபோதணி பாதிரிப்புலி யூருளார்
நாடெலாமடி யோதுவார்பெற நல்கியாதுகொ ஞரிமார்
வீடெலாமுறை யேநுழைந்தொரு வெண்டலைப்பலி கொண்டதே.()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொண்ட லடிப்ப வுடைந்த கடற்றிரை கோலு மணற்கரையின்
கண்ட லடிப்பல சங்கின மொய்த்தெழு கன்னி வனப்பெருமா
ளண்டர் துதித்தெழ நஞ்சு களத்திடை யன்று தரித்தவரித்
தண்டர ளத்தொளி வென்ற நகைக்குயில் சங்கை தவிர்த்திலரே.
(பாங்கிபுலம்பல். ௬௭)

ஷை வேறு.

இல்லாத விடையுடைய விணைக்கொம்பை யணைப்பான்போ
லிருங்கூற் றன்ன
பொல்லாத விழிக்கொம்பைப புயத்தணைக்கப் புரிகின்றான்
பொருவிற் காளை
கல்லாதார் மனத்தணுகாக் கடைஞாழற் சிவக்கொழுந்தைக்
கருத்துள் வைத்துச்
செல்லார்போற் பழிபெறுமோ சேர்வார்போற் புகழ்பெறுமோ
தெரிகி லோமே.
(பாங்கி தலைவன் எண்ணந்தெளிதல். ௬௮)

ஷை வேறு.

தெருவிற் பெருமா விழவோவாத் திருவார் தருபா திரிப்புலியூ
ருருவிற் றிகழு முமைபாக ரொருவர் திருமா மலைச்சாரற்
கருவிற் குறவர் குலக்கொடியே காத லவர்தேர் வரக்காணார்
திருவிற் புனந்தாங் கண்டுநிற்பார் செய்வார் யாதென் றறியேனே.
(பாங்கிகூற்று. ௬௯)

## நாரைவிடுதூது.

கலிநிலைத்துறை.

ஏன மருப்பு மாமையு மார்பத் திசைவித்துக்
கான வெருக்கின் கண்ணி முடித்தார் கடைஞாழ
ஞான மணக்குந் தண்டுறை வாயென் னலனுண்டு
போன வரைக்கொண் டிவ்வழி வாராய் போதாவே. (எ0)

வஞ்சிவிருத்தம்.

போத கத்துரி போர்வையார
மீத கத்திகழ் மேனியார்
பாதி ரிப்புலி யூரையே
யோதி நிற்பது ஞாலமே. (எக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஞால மனைத்து முகத்து நயன மெனப்பெயர் பெற்ற
வாலம் விழித்திடு மென்றே யமரரு முய்ந்தி டலாகார்
காலன் விழப்பதம் வைத்த கண்ணுதல் கன்னிவ னத்துக்
கோல மலர்க்கொடி மார்பிற் கொங்கை முகிழ்த்திட வந்தே.

(தலைவன் தலைவி யறிவுடைமைமொழிதல். எஉ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வந்தியே னின்பதமென் சிரத்தால் வாக்கால்
வழுத்திலே னின்புகழ்தான் வரம்பு கோலிச்
சிந்தியே னென்மனத்தா லென்று முன்றன்
றிருவருளுக் கடியேனிற் சிறந்தா ருண்டோ
நந்தியே முதலாய தேவர்க் கெல்லா
நாயகனே கடைஞாழ னம்பா நின்பான்
முந்தியே துயர்கெடுக்க வெண்ணும் பேரின்
முதலடிக்கில் யானன்றோ முன்னிற் பேனே. (எ௩)

## குறம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முன்னிய தொன்றுள தென்று மூதறி பெண்டிர் தொகுப்பத்
துன்னிய நெல்லை வகுத்துத் தும்பை கமழ்ந்துள தென்னை
சென்னியில் வைத்தன ளங்கை திருந்திழை மையன் மருந்து
கன்னி வனத்துள தென்றாள் கட்டுவி கட்ட தெடுத்தே. (எ௪)

௯௪ வேறு.

எடுத்ததா ளண்ட கூட மிடித்ததிங் கிட்ட பொற்று
டடுத்ததா ரணியைக் கொண்டு தாழ்த்தது சூழ்த்த திக்குப்
படுத்ததோ ளெட்டும் வீசிப் பாதிரிப் புலியூர் நாத
ரடுத்ததாண் டவக்கூத் தாடக் காளிகூத் தடங்கி னாளே. (எ(

நிலைமண்டில ஆசிரியப்பா.

நான்மறை விளங்கின வாணினம் வளர்ந்தன
வேந்த னோங்கினன் வான்புயல் பொழிந்தன
மறக்கிளை மாண்டன வறப்பயிர் விளைந்தன
கடவுள் பாதிரிப் புலியூர்ச் சுனைதொறு
மடலவிழ் தாமரை மலர்தலிற் சிறந்தே. (எ

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிறந்த வன்றிலுஞ் சேவுடை மணியுந்
தென்ற லுந்திகழ் மன்றலம் பொதியிற்
பிறந்த சாந்தமு மாயர்தம் வேயும்
பிறையும் வந்தன கறையுடைக் கண்ட
நிறந்த வானவ ரென்பினை யணியு
மேக நாயக ரெழிற்கடை ஞாழற்
புறந்த ழைந்திடு புரிகுழன் மடந்தை
பொங்கு வெம்முலை பொதிர்ந்தன பொன்னே.

(கவின்ழிபுரைத்தல். எஎ

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னலம் பெருகிடும் பரிபுரக் கழலொழார்
போருவெங் கானில் வந்தி
ன்னலம் பெருகவின் றிரவுநீ ரிவளுட
னெம்மனைத் தங்கி நாளைக்
கன்னலுங் கதலியுங் கமுகமும் பலவுடன்
காவிசூழ் வாவி யூடே
செங்நலங் கமலமுந் திகழ்திருப் பாதிரிப்
புலிசையிற் செல்ல லாமே.

(விருந்துவிலக்கல். எஅ)

வண்டுவிடுதூது.
கட்டளைக்கலித்துறை.

செல்லவற் றேதிருப் பாதிரிக் கீழ்ச்சென்று சேர்கின்று
சொல்லவற் றேயென் றுயரா வதுதனைத் தொங்கற் கொன்றை
புல்லவற் றேபுர மூன்றெரித் தாரருள் பூண்டுகொண்டு
மெல்லவற் றேயவற் கென்குறை சொல்லி விரித்தவண்டே. (எகூ)

ஊர்.
அறுசீர்ச்சந்தவிருத்தம்.

விரித்தார் மறைப்பொருள் விளைப்பார் திருக்கழன்
மிகைத்தார் புரத்தினைநகைத்
தெரித்தார் மடக்கொடி யிடத்தார் மழுப்படை
வலத்தா ரரக்கனைவிழ
நெரித்தார் திருப்பொது வினிற்பா ரிணைப்பத
நினைப்பார் கடைப்பிறவியைத்
திரிப்பார் சிரப்பரி கலத்தா ரிருப்பது
திருப்பா திரிப்புலிசையே. (அ0)

கட்டளைக்கலித்துறை.

புலிக்கான் முனிமைந்தன் பாற்கடல் பெற்றனன் பொய்த்துவரு
கலிக்கால் புகாத கடற்கடை ஞாழலெங் கண்ணுதலே
யெலிக்கா வுலகங்கள் யாவையு மீந்தனை யின்றுநன்று
பலிக்கா நடத்தியென் றேதுயர் கூருமிப் பாரிடமே. (அக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாதியோர் பெண்ணா தாகும் பாதிரிப் புலியூ ரையர்
பூதியு மென்புந் தோலும் புயங்களில வயங்கச் சாத்தி
யாதிநீ ளரியின் பாற்றோன் றையமேற் றருளி யாளக்
காதிய வுதிர மேற்குங் கபாலமுங் கைய தாமே. (அஉ)

விருத்தம்.

கைத்தகடுக்களம் வைத்தெரிகைத்தலம்
வைத்தனை யிற்கனலும்
பைத்தபடத்தை யுடுத்துநடித்தவர்
பாதிரி நீழலின்வாய்
மொய்த்தகுழற்கொரு கொத்தலர்வைத்திட
வண்டுகண் மொய்த்திடினும்
பொய்த்தவிடைக்கொரு பற்றிலெநற்றியொர்
பொட்டினை யிட்டிடலே.

(தலைவன்கூற்று. அ௩)

சித்து.

விருத்தம்.

இட்டமேதுனக்கினியெழுந்துவாவிரதத்திலே
யிரதமிட்டிருப்புநாகமிந்த்ரசாலமிட்டபின்
பிட்டநாபிசூதகத்தில்வேதகத்திலெம்முடைப்
பிரமயோகியாயிருந்தபின்னுகன்கடைக்குணஞ்
சிட்டவர்க்கமுற்பவித்திடப்பெருந்தவங்களைச்
செய்துகன்னிகாவனத்திருந்தசித்தர்நாமுமே
புட்டமிப்பொரிக்கறிக்குவித்துமெத்துபோசனம்
புத்திபண்ணிவைக்கினுமுமுத்திதந்துபோனுமே. (அச)

கலிவிருத்தம்.

தவளப்பொடி யணிமேனியர் தருணக்கொடி வெருவக்
கவளக்கரி யுரிசெய்தவர் கடைஞாழன் மருங்கே
குவளைக்கவள் விழியொப்பன கொங்கைக்கிடை யிடையுந்
துவளப்படு மதரத்தொடு மொப்பாவன துப்பே.

(இயலிடங்கூறல். அரு)

கட்டளைக்கலித்துறை.

துப்பார் சடையர் திருக்கடை ஞாழலிற் சூளையர்வாய்த்
தப்பாத வெச்சிலைத் தாராது மைந்த சடைக்கங்கையா
மப்பாற் கழுவி யறுவையி னுற்றுடைத் தாழமுங்கி
யிப்பான் முலையருந் தித்தரு வாய்கின் னெழின்முத்தமே.

(பாலனைப்பழித்தல். அசு)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மேலைமுப் புரமும் வெந்தழல் கொளுந்த மேருவில் வாங்கிய வீரா
வாலையப் பழனப் பாதிரிப் புலியூ ரம்பிகை பரவுமா ரமுதே
சோலையிற் கமழுஞ் சண்பகஞ் சாடிச் சூதமென் போதினை மோதி
மாலையிற் கழுநீர் மல்லிகை யளைந்து வந்தது மந்தமா ருதமே.

(பாங்கிகூற்று. அஎ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாதளை வீழ்கனிமேன் மல்லிகை முகையவிழா
மாதவி நிழலிடையே வண்டர ளங்குவியாச்
சீதள வுளருமிளந் தென்றல் வளைந்தபொழிற்
றிங்க டவழ்ந்ததிருப பாதிரி நீழலுளாய்

சூதள வெனுமுலையார் கைவளை யோடளையிற்
றாசு நெகிழ்ந்துவிழத் தூமணி யேய்மடவார்
காதள வோடுநெடுங் கண்க டழும்பியசீர்
கடைபடு மிவருயிரைக் காவல்செய் தருள்வாயே.
(பாங்கிபுலம்பல். அஅ)

கட்டளைக்கலித்துறை.

அறுகா னிறையும் பொழில்சூழ் திருப்பா திரிப்புலியூ
ரறுகா னிறையு முடியா ரடிவணங் கார்களென்ன
வறுகா லலைப்புண்ணு நாகத் தடவி வருதலஞ்சி
யறுகால் வணங்குவ னின்னடிப் போதினி லாண்டகையே.
(இரவுவரல்விலக்கல். அ௯)

நேரிசைவெண்பா.

ஆண்டானை யன்றயன்மா றேட வளப்பரிதாய்
நீண்டானை நீல மிடற்றானை - மாண்டார்க
ளென்பணிய மேனி யிறையைக் கடைஞாழன்
முன்பணிய நெஞ்சே முயல். (௯0)

கலிவிருத்தம்.

முயலார் வருவார் துயர்மோ தியிடுஞ்
செயலார் கடைஞா ழல்செறிந் திலர்போற்
புயலார் குழன்மீ தளிபொங் கவருங்
கயலார் விழிதந் ததுகா தரமே.
(தலைவன் உற்பதுணைத்தல். ௯க)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காத ரங்கத்தர் கைவளை கழன்றிடக் கயல்விழி யிணைகூர
மாத ரங்கத்துக் கடுக்கையுஞ் சாந்தமு மத்தமு மிவைவைத்தார்
மீத ரங்கிடு முப்புரம் பொடிபட மேருவெஞ் சிலைவாங்கித்
தீத ரங்கிடத் திகழ்திருப் பாதிரிப் புலிசையிற் சேர்வாரே. (௯உ)

நேரிசைவெண்பா.

சேதாம்பல் பூக்குந் திருப்பா திரிப்புலியூர்
வேதாந்த நாதர் வியன்கயிலை - மாதர்
மொழியா மமுத முகமா முளரி
விழியாங் கொலைபயிலும் வேல்.
(செவ்விசெப்பல். ௯௩)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வேதனைப் படுவீர் பாதிரிப் புலியூர்
வேதனை விமலனை விரும்பாப்
பாதகத் தேனுக் கருளுமா ரமுதைப்
பரமனைப் பிரமனைச் சிரங்கொள்
பூதனைப் பூதப் படையனை விடைமேற்
புனிதனைக் கனிதனைப் பொதுவி
னாதனை *நாதப் பறையனைப் பிறையார்
நம்பனைச் செம்பொனைத் தொழுமே. (௯௪)

கட்டளைக்கலித்துறை.

தொழக்கற் றிலைதொல்லைப் பாதிரிக் கீழ்ச்சென்று சூழவந்து
விழக்கற் றிலைவிடை யோனென் கிலைமெய் யுருகியன்பா
லழக்கற் றிலையடி யாரொடுஞ் சேர்ந்திலை யாசைபொங்கி
யெழக்கற் றிலைநெஞ்ச மேகெடு வாய்புகல் யாருனக்கே. (௯௫)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

யாரே யினியிப படியே ருடையா
ரெழிலார் தருபா திரிநீ ழலின்வாய்த்
தாரேர் தருகொன் றையணிந் ததிருச்
சடையார் கடைஞா ழலினீ டளிசேர்
நீரேர் கமழுங் கழுநீ ருடனே
நிறைபன் மலர்வா வியுமவிண் டலரும்
பாரே கமழும் பொழில்சந் தனநீ
பங்கே ருகம்வாழ் தருபைந் தொடியே.

(தலைவன் தலைவியைப்புகழ்தல். ௯௬)

## இ ர ங் க ல்.

அறுசீர்ச்சந்தவிருத்தம்.

பைந்துணை ருங்கிள ருந்தனி ருஞ்சில கோதிய கோகிலமே
பண்பெ டும்படி வந்தல வன்பெடை யோடுறை பூவனையே
சந்தன முன்றிகழ் சண்பக முந்திப மாதவி சூழ்பொழிலே
சங்குதி ரண்டுத ருந்தர ளங்குலை நீவிய வார்மணலே.

---

"*நாதப்பறையினானேயென்னும்" என்பது, திருவாசகம்.

கந்தம ரும்புசு ரும்புமு ரன்றெழு காதல்வி டாமடுவே
    கண்டரி டம்பயின் மங்கைத வம்புரி கன்னிவ ளம்பதியே
யந்திப டும்பொழு தஞ்சிய மென்பெடை கூடிய நீள்குருகே
    யன்பர்ந டந்திடி லெங்கள்பெ ருந்துய ராயின கூறிடுமே. (௬௭

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

கூறு நான்மறையர் கோல மானிடவர் கூரு நீண்மழுவர் வீரமா
லேறு சேர்கொடிய ரேக மாமொருவ ரீறி லாதகடை ஞாழலார்
பாறு சேர்தலையர் பாணி சேரனலர் பாதி சேர்பிறையர் மீதுசே
ராறு சூழ்சடைய ரானை யீருரிய ராக மேயணிவர் நாகமே. (௬௮)

அறுசீர்ச்சந்தவிருத்தம்.

நாகம் வருக்கை விளைகமழ் நாறு கடுக்கை முகையவிழ்
    ஞாலம் விதித்து வளர்கடை ஞாழ லிடத்து மதியொரு
பாக முடித்த சடையினர் பாதி யிடத்து மலைதரு
    பாவை தவத்து முயல்வதொர் பாதி ரியொக்கு கிழவிடை
மேக நிரைத்த குழலினை வீயின் முடித்தும் விழியெனும்
    வேலி னைவிட்டு மிளைஞரை வீழ வருத்து முலையிடை
யேக வடத்தி னிடையிடை யாரு மிளைப்ப மதனனை
    யேவி யொருத்த ருலகினை யீடு படுத்த முயல்வரே.

(காதலன் தலைவி முதறிவுடைமைமொழிதல். ௬௯)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புத்தினை முகந்துபவ ளக்கொடியை வாரி
    மோதியிரு டண்டலை முறித்துமத குந்தித்
தத்திவரு சந்தன மெறிந்தகி லுருட்டித்
    தாமரையு நீலமு மணிந்தத மெல்லா
மெத்திவரு கின்றகெடி லத்துவட பாலே
    மெல்லிய றவஞ்செய்கடை ஞாழலை விரும்பிப்
புத்தியுட னன்புசெய்து போதுசொரி வாரைப்
    புணர்ந்துபிரி யாள்விரைசெய் போதிலுறை பூவே.

முற்றிற்று.

---

மன்மத௵ ஆனிமீ ௨௨ - இது, ஆறுங்கூர்ப் பொய்யைப்பாக்கம் ?தையவாத்தியார் குமாரன் முத்துக்குமாரஸாமி எழுதி நின்றவேறியது.

இப்படி, ஓர் ஏட்டுப்பிரதியின் இறுதியில் எழுதப்பெற்றிருந்தது.

# செய்யுள்முதற்குறிப்பகராதி


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அடல்விடை | ௯. |
| அரியாதுமய | உக. |
| அறகானிறையும் | உ௯. |
| அன்னையருந்தவ | உ. |
| ஆண்டானை | உ௯. |
| ஆமாலிலவர்க்கு | கஉ. |
| ஆறுடையகொடி | க0. |
| இட்டமேதனக்கி | உ௮. |
| இடிக்குமெருது | க௭. |
| இரவலாளருக்கு | கஉ. |
| இளைதேர் | ௮. |
| இல்லாதவிடை | உ௪. |
| இலங்கைகாவல | க0. |
| இன்னதிதுவென்று | ௯. |
| ஊசலாடுமிடத் | கக. |
| எடுத்ததாளண்ட | உ௯. |
| என்னையயர்த்த | க௩. |
| ஏகாயமென் | கஉ. |
| ஏனமருப்பு | உ௫. |
| ஒழியாதபழர் | உஉ. |
| காதரங்கத்தர் | உக. |
| காதலாரங்கிருந் | ௯. |
| கால்கொண்டு | ௪. |
| காலமுங்கழிந்து | ௯. |
| குறியாவின்பம் | ௯. |
| குறைவிலம்ப | க௩. |
| கூறான்மறை | ௩க. |
| கைத்ததெக்களம் | உ௭. |
| கைத்தாமரை | க௯. |
| கொண்டலடிப்ப | உ௪. |
| கோடொடவாமறு | ,, |
| [illegible]போத | க௯. |
| [illegible] | உ௯. |
| [illegible] | க௪. |
| செல்லவற்றே | உ௭. |
| சென்றபூதலத் | ௫. |
| சேதாம்பல் | உ௯. |
| சொல்லொன்று | க௭. |
| ஞாலமனைத்து | உ௫. |
| ஞாழலிற்போது | க௫. |
| தக்கனென்று | ,, |
| தலைவானவர் | க௮. |
| தவளப்பொடி | உ௮. |
| தன்னையானினை | க௩. |
| திராதவிருவினை | ௮. |
| துப்பார்சடை | உ௮. |
| துள்ளித்துடித்து | க0. |
| தெருவிற்பெரு | உ௪. |
| தேவாசுரர்பிற | ௫. |
| தேனூர்திருப்பா | க. |
| தொழக்கற்றிலே | ௩0. |
| தோலையே | உ௩. |
| நாகம்வருக்கை | ௩க. |
| நான்மறை | உ௯. |
| நித்திலமுறுவற் | க௯. |
| நிறைபலவளர்தரு | உ0. |
| நின்றகுலக்கிரி | க௮. |
| நினைபவர்தீவினை | க௭. |
| படைவாண்முறிந் | ௯. |
| பண்டாரங்க | க௫. |
| பனைமதக்கத | க௩. |
| பாக்வாண்மதி | உஉ. |
| பாவோர் | ௮. |
| பாதியோர் | உ௭. |
| பாய்ந்தநீர் | ௫. |
| பாலத்வேர் | க௫. |
| பாவலர்பரவு | க௯. |
| பானலம்பொருந் | உ௩. |
| புயங்களிலகன்ற | ௭ |
| புலவர்க்கருளும் | க௪ |
| புலிக்கான் | உ |
| பூமாலைபுனைந் | உ |
| பைந்துணை | ௩0 |
| பொருள்புரிமறை | ௭ |
| பொன்னலம் | உ௯ |
| பொன்னினன் | க |
| போதகத்துரி | உ௫ |
| போயினகைவளை | க௯ |
| போனகமேவிடம் | கக |
| மன்றமேயிட | உ௪ |
| மாதனைவீழ்கனி | உ௮ |
| மாற்றுவார்மறலி | உஉ. |
| மாறிலாமலை | கக. |
| மானுளபேதை | ௭. |
| மீதுபடும்புர | ௯. |
| மீளிதிருந்தடி | உஉ. |
| முடியுடையமர | ௯. |
| முத்தினைமுகந்து | ௩க. |
| முயலார் | உ௯. |
| முயலினுறுதுயர் | க௪. |
| முன்னியதொன் | உ௫. |
| மேலைமுப்புர | உ௮. |
| மையன்மடவீர் | ௮. |
| யாரேயினி | ௩0. |
| வந்தியேனின் | உ௫. |
| வரிக்கறையான் | க௪. |
| வருந்தாதவலை | க௯. |
| வழிப்பட்ட | உ௩. |
| வாசக்குழலசைய | கக. |
| விரித்தார்மறை | உ௭. |
| விழியினிலொரு | க௪. |
| வேதமொழி | ௪. |


தோன்றுந்துணைசெந்துணை.

கணபதிதுணை.

திருவாவடுதுறையாதீனத்துச்

சுவாமிநாததேசிகர்

இயற்றிய

# திருச்செந்திற்கலம்பகம்

இது

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகரும

திருவாவடுதுறையாதீன வித்துவானுமாகிய

சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரால்

பரிசோதிக்கப்பட்டது.

"செந்தமிழ்"ப்பிரசுரம்-

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

௧௯௦௫

1905

(விலை அணா-3)

கணபதிதுணை.

# திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறைஆதீனத்து

# சுவாமிநாததேசிகர் சரித்திர சங்கிரகம்

இந்நூல் செய்தருளிய சுவாமிநாததேசிகர் செந்தமிழ்ப்பாண்டித் திருவளநாட்டிலே சற்றேறக்குறைய நூற்றைம்பது வருடத்திற்குமுன்னர்ப் பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே திருவவதாரஞ்செய்து, நற்குணங்களுடன்வளர வளர்ந்து, இளமைப்பருவத்திலே திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தையடைந்து, அக்காலத்திலே எழுந்தருளியிருந்த ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிகமூர்த்திகளை வணங்கிச், சமய விசேட தீக்ஷைகளைப் பெற்றுத், துறவறத்தையடைந்து, நித்தியநியமங்களிலே வழுவாதொழுகி, அத்துறவறநூல்களைக் கற்றுணர்ந்து, தவத்தான் மனத்தூய்மையுடையராகித், தம்முடைய ஞானதேசிகரை நீங்காது, அவரருட்பணிசெய்து திருவணுக்கத் தொண்டராய் அமர்ந்திருந்தனர்.

அக்காலத்திலே முற்கூறிய பாண்டித்திருவள நாட்டிலே திருநெல்வேலியெனுஞ் சிவபுரத்திலே பரம்பரைச் சைவவேளாளர்குலத்திலே தாண்டவமூர்த்திப்பிள்ளை செய்ததவத்தால் வந்துதித்த † மயிலேறும்பெருமாள்பிள்ளை யென்பவர் கல்வி அறிவொழுக்கஞ் செல்வ முதலிய நன்மைகளிற் குறைவில்லாதவராய் மேற்கூறிய ஆதீனத்துக்குரிய சிஷ்யவர்க்கங்களிற் சிறந்தவராயிருந்தனர். இவர் ஆதீனத்துக்கு வழக்கப்படிவந்து ஞானதேசிகரைத் தரிசித்துச் செல்லுங்காலங்களில் ஓர்காலத்தில் இந்நூலாசிரியருடைய அறிவின் மிகுதியையும் ஒழுக்கமன்புமுதலிய நற்குணங்களையுங்கண்டுவியந்து, இளமைப்பருவத்திலே இக்குணங்களையுடையராயிருத்தல் அருமையாமென வியந்து, நாங்கற்றகல்விப்பொருளை இந்த முனிவருக்குக் கற்பித்தால் உலகத்திற்கு மிகப் பயன்படுவதன்றி நமக்கும் இம்மை மறுமைப் பயனெய்துமெனக் கருதிக், தங்கருத்தினை ஞானதேசிகர்பால் விண்ணப்பஞ்செய்து, அவர்கட்டளையிட் டருளியபடியே இந்நூலாசிரியரை அழைத்துக்கொண்டு சென்று, தமதுவீட்டில் வைத்து மிகுந்த உபசாரத்துடன் கற்பிப்பாராயினர்.

அகத்தியமகாமுனிவருடைய முதன்மாணுக்கராகிய தொல்காப்பிய முனிவர் அருளிச்செய்த இலக்கண நூலாகிய தொல்காப்பியத் திற்குரையாகிய இளம்பூரணமும், பேராசிரியமும், சேனாவரையமும், நச்சினார்க்கினியமும் எனப்படு நான்குரைகளையும், மற்றை யிலக்கண நூல்களையும் திருவள்ளுவர் குறளுரையையும், திருக்கோவையாருரையையும், சிந்தாமணிமுதலியபஞ்சகாவியங்களையும், கலித்தொகை முதலிய சங்கச் செய்யுட்களையும், ஐயந்திரிபின்றி விளங்குமாறு கற்பித்தனர்.

அன்றியும் வடமொழியினும் வல்லவராகக் கருதித் திருநெல்வேலிக்குக் கீழ்பாலுள்ள செப்பறைப்பதியில் வடமொழி வல்லராயிருந்த சிவப்பிராமணராகிய கனகசபாபதி சிவாசாரியரைக்கொண்டு, வியாகரணமுதலிய நூல்களைக்கற்பித்தனர். அக்கனகசபாபதிசிவாசாரியர் வடமொழி கற்பித்தவர் என்பதனை இந்நூலாசிரியர் தாஞ் செய்தருளிய இலக்கணக்கொத்துப்பாயிரத்துள் "செப்பறைப் பதியில் வாழ்சிவத் துவிசன்-கனக சபாபதி கருதுவட நூற்கடற்-றபோதனர் புகழுஞ் சைவாதி ராச-னுபய பதங்களை யுண்மையொடு பணிவாம்" எனக்கூறியதனாலறிக.

மயிலேறும்பெருமாள்பிள்ளை, தம்மை நீங்காது உடனிருந்து கற்றுத்தேறிய இந்நூலாசிரியரை ஆதீனத்துக்கு அழைத்துக்கொண்டுவந்து, ஞானதேசிகரைத்தரிசித்து, இந்நூலாசிரியருடைய கல்வித்திறமை யாவும் பரீக்ஷைசெய்து காட்டினார். ஞானதேசிகர் மிக மகிழ்ச்சியடைவதை அறிந்து, தாமும் பேரானந்தமுற்றவராகி இந்த முனிவரை ஞானாசாரியமூர்த்தியாகச் செய்தால் உலகிற்குப் பேருபகாரமாமென்று, பெருங்காதலோடு விண்ணப்பஞ்செய்தனர். அதற்கு ஞானதேசிகர் "அவ்வாறே செய்வோம்" என்று திருவாய்மலர்ந்தருள, மனமகிழ்ந்து, வணங்கி விடைபெற்றுத், தமதிடத்திற்கு மீண்டு வந்திருந்தனர்.

பின்பு இந்நூலாசிரியர் நிருவாணதீக்ஷைபெற்று, வீடுபேற்றிற்குரிய ஞானநூல்களாகிய சிவஞானபோதமுதலிய நூல்களையெல்லாங்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தனர்.

அதன்பின்பு தாங்கற்ற இலக்கணவிலக்கியங்களிலே இலைமறைகாய்போற் கிடந்த அரியவிதிகளையெல்லாந்திரட்டிக், கற்றோர்கட்குப்

பயனுறும்படி இலக்கணக்கொத்து எனவொருநூலையும், தசகாரிய முதலிய ஞானநூல்களையுஞ் செய்தருளினர்.

இவ்வாசிரியர் தமது ஆச்சிரமமும், தம்முடைய ஆசிரியராயிருந்த மயிலேறும்பெருமாள்பிள்ளை ஆச்சிரமமும் பேதமாயிருப்பினும் அப்பேதங்கருதாது, தாஞ்செய்த இலக்கணக்கொத்துப் பாயிரத்திலே "திருநெல் வேலி யெனுஞ்சிவ புரத்தன்-முண்டவமூர்த்தி தந்த செந் தமிழ்க்கடல்-வாழ்மயி லேறும் பெருமான் மிகுபதி-யிருபத கமல மென்றலை மேற்கொண்-டிலக்கணக் கொத்தெனு நூலியம் புவனே" என வணக்கங் கூறினர். இவ்வாசிரியர் கல்வித்திறமையையும் நல்லொழுக்கங் குருபத்திமுதலிய நற்குணங்களையும் புகழ்ந்து பாராட்டாத கற்றோர்களில்லை.

இவ்வாறிருக்குங்காலத்திலே திருவாரூரென்னுஞ் சிவநகரத்திலே சைவாசாரியராயிருந்து, இலக்கணவிளக்கமுதலிய நூல்களைச் செய்து, புலவர் திலகராயிருந்த வைத்தியநாதநாவலர், ஆதீனத்துக்குவந்து ஞானதேசிகரைக்கண்டு கலந்து உரையாடியிருந்து பந்தியிற்போசனஞ்செய்து, கரசுத்திசெய்துவந்து, பின்பு ஞானதேசிகரைக் காணுங்காலையில் ஞானதேசிகர் வைத்தியநாத நாவலரைநோக்கி "வந்தவிளைப்பாற்போசனஞ் செவ்வையாகச் செய்தற்கிசையவில்லையோ" என வினவ, அவர் "வந்தவிளைப்பு" என்னுந்தொடர்மொழிக்கு இலக்கணம் விசாரிக்கத்தொடங்கினர். அப்பொழுது ஞானதேசிகர் தமதருகிருந்த இந்நூலாசிரியர்மீது திருக்கண்சாத்தியருள, உடனே இந்நூலாசிரியர் அச்சொற்குள்ள இலக்கணமெல்லாம் விரித்துரைத்தனர். அதைக்கேட்ட வைத்தியநாதநாவலர் மிக மகிழ்ச்சியடைந்து, "தொல்காப்பிய முதலிய நூல்களை எழுத்தெண்ணிப்படித்த சுவாமிநாதமூர்த்தியா? தேவரீர் இங்ஙனங்கற்றுத் தெளிந்திருப்பதை யானறிந்திலேன்" என்று மிக்க விநயமொழிகூறி மிக வியந்தனர்.

பின்பு வைத்தியநாதநாவலர் இந்நூலாசிரியருடன் சிலநாள் அளவளாவியிருந்து, தொல்காப்பியமுதலிய நூல்களைப் பாராட்டியிருந்ததுமன்றி, இலக்கணக்கொத்து முதலிய நூல்களையுங்கேட்டு "இங்ஙனஞ் செய்வது கற்றோர் யாவருக்கும் அரிது அரிது" என்று வியந்துகூறித் தமதிடத்திற்குச் சென்றனர்.

ஞானதேசிகர் மயிலேறும் பெருமாள்பிள்ளை விண்ணப்பஞ்செய்துகொண்டபடியே இந்நூலாசிரியருக்கு ஆசாரிய அபிஷேகஞ்செய்யத் திருவுளங்கொண்டு; அப்பொழுது இரண்டாவது சந்நிதானம் இருந்தமையால் இவ்வாசிரியருக்குச் சங்காபிஷேகஞ்செய்து, ஈசானதேசிகர் என்று அபிஷேகச்சிறப்புப்பெயருங் கட்டளையிட்டருளித், திருநெல்வேலியில் ஆதீனத்தைச்சார்ந்த மடாலயத்தி லிருக்கும்படி கட்டளையிட்டருளினர். அம்மடாலயத்திற்கு ஈசானமடாலயமென இன்றும் பெயராயிருக்கின்றது.

அவ்வாறே இந்நூலாசிரியர் ஈசானமடாலயத்தில் எழுந்தருளியிருந்து நன்னூற்கு விருத்தியுரைசெய்த சங்கரநமச்சிவாயப் புலவர் முதலாயினோர்க்குக் கற்பித்து இத்தேசத்திற்கு ஓர் தமிழ்த்தெய்வமாய் விளங்கியிருந்தனர்.

இச்சரித்திரத்தின் விரிவெல்லாம் ஸ்ரீ-ஆறுமுகநாவலரவர்கள் அச்சிட்டு வெளிப்படுத்திய இலக்கணக்கொத்தினால் இனிது விளங்கும்

ஈசானதேசிகர் அவ்வாறு விளங்கியிருக்குங்காலத்தில் திருச்செந்தூர்க்குச் சென்று விசேடபுண்ணியகாலங்கடோறும் முருகக்கடவுளைத் தரிசித்துவருவாராதலால், அம்முருகக்கடவுளின்மீது வைத்த பேரன்பினால், பலவிதமான செய்யுட்களுங் கலந்திருத்தலிற் கலம்பகமென்றுரைக்கும் இந்நூலை இயற்றிக், கற்றோருள்ளங் கனிந்து வாழ்த்த, முருகக்கடவுள் சந்நிதியில் அரங்கேற்றுவித்தனர். அன்றுமுதலாக இக்கலம்பகத்திலே முப்பத் தோத்திரச்செய்யுள் வேறெடுத்து முருகக்கடவுள் பள்ளியறைக்கு எழுந்தருளுங்காலத்தில் ஓதுவாமூர்த்திகள் தோத்திரஞ்செய்வது வழக்கமாயிருக்கின்றது. அவ்வாறே மற்றையருந் தோத்திரஞ்செய்வர்.

இவ்வாறு பலநூல்களைச் செய்து, பலர்க்குங் கற்பித்திருந்து, நெடுங்காலஞ் சென்றபின்னர் அத்திருநெல்வேலி யென்னுஞ் சிவபுரத்திலே பரிபூரணதசையையடைந்தனர்.

யான் திருநெல்வேலித் தெற்குப் புதுத்தெருவிலிருக்குஞ் சைவசமயவிருத்திப் பிரியராகிய ஸ்ரீ-பால்வண்ணமுதலியார் எனப் பெயர்பெற்ற நண்பருடன் திருச்செந்தூருக்குச் சென்று, முருகக் கடவுளைத்தெரிசித்துப் பேரானந்தமுற்று, இத்தேசத்தில் அதிகாரஞ்

செய்திருந்து, காசிமுதற் கன்னியாகுமரிவரை தொண்ணூற்றாறு சத்திரங் கட்டிவைத்து முருகக்கடவுளின் திருவருளைப்பெற்று வாழ்ந்த மாவைக் குமாரசாமிமுதலியார் எனப்பெயர்பெற்ற மகாப்பிரபுவின் சத்திரத்தில் வசித்திருக்கும் நாளில் ஒருநாள், அம்முருகக்கடவுளின் சந்நிதியிலே தேவாரம் ஓதும்பணிசெய்யுந் திருப்புகழோதுவாமூர்த்தி யெனப் பெயர்பெற்ற மிகுந்த விருத்தாப்பியர் ஒருவர் அங்குவந்து உரையாடியிருக்குஞ் சமயத்தில் இக்கலம்பகத்தில் "எனதேகுகன் செந்தில்" என்னுங்கவியைக்கூறினர். யான் இக்கவி யாவராற்செய்யப்பட்டதென்று பிரியமுற்று வினவினேன்; அவர் இலக்கணக்கொத்தியற்றிய சுவாமிநாததேசிகமூர்த்தியாற் செய்யப்பட்ட திருச்செந்திற் கலம்பகத்திலுள்ளது என்று கூறி, உடனே என்னுடைய நண்பரையும் என்னையும் அழைத்துக்கொண்டு போய்த், தமது மனையிலிருந்த ஏடுகளைச்சோதித்துப், பழைய ஏட்டுப்பிரதி ஒன்றையெடுத்து இதனை உலகிற்குபகாரமாக வெளியிடவேண்டுமென உதவினர். அதிலே முப்பது தோத்திரச் செய்யுண்மாத்திரம் வேறெடுத்தெழுதி அத்தலத்துள்ளார் பலருஞ் சிந்தித்திருக்கின்றனர்.

பின்பு அப்பழைய பிரதியை உற்றுநோக்கி வாசிக்கும்பொழுதில் எழுதுவோரால் இயன்ற பிழைகள் பற்பல இருந்தன. அவற்றையெல்லாம் என் சிற்றறிவிற்கு எட்டியவாறு சீர்திருத்திச் சுத்தப்பிரதியாகச்செய்து வெளியிடலாயினேன்.

அதிமதுரமாகியுள்ள இக்கலம்பகத்திலே பின்னர்க் குறிக்கப்படுகின்ற முப்பது தோத்திரச் செய்யுட்களையுந் தினந்தோறும் பேரன்புடனே தோத்திரஞ் செய்பவர்களுக்குத் திருச்செந்திலம்பதியில் எழுந்தருளிய முருகக்கடவுள் வேண்டும் வரங்களை அருள்செய்வார். ஆதலாற் சைவசமயிகள் அவ்வாறு தோத்திரஞ் செய்து, இம்மை மறுமைப் பயன்களைப் பெற்று வாழ்வாராகுக!

சுவாமிநாததேசிகர் சரித்திரசங்கிரக முற்றிற்று.

இங்ஙனம்,

சேற்றூர்ச்சுப்பிரமணியக்கவிராயர்,
சைவநூற்பரிசோதகர், மதுரைத் தமிழ்ச்சங்கம்.

# பாயிரம்

மதிக்கும்பருதிக்கடவுளுக்கும்வழங்கும்விழியானருண்மதலைக
ளிதக்கும்படக்குங்கலம்பகப்பாவிசைக்குந்தமிழாலினிதிசைத்தான்
புதுக்குந்தமிழ்த்தென்கடல்கடக்கப்பொருந்துந்தோணிபோலியல்
துதிக்குந் தமிழோர் துறைசைநகர்ச் சுவாமிநாததேசிகனே. [செய்

இச்செய்யுள் செந்திற்கலம்பகஏட்டுப்பிரதியின் முதற்கண்
எழுதப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

# திருச்செந்திற் கலம்பகம்.

---

## விநாயக வணக்கம்.

---

*நிலம்பக வீழ்சடை நீறணி வான்மைந்த னீடயிலோன்*
*கலம்பகஞ் செந்தமிழ்ப் பாமாலை யார்செந்திற் கண்மருவு*
*சிலம்பக மெல்லடி வல்லைபை கேள்வனைத் திங்கள்வெண்கோட்*
*டிலம்பக யானை முகத்தானை வாழ்த்தி யியம்புவனே.*

---

## நூல்.

### மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

#### நாலடித்தரவு—௨.

*சொல்வாய்மை தருநகடவுட் சுருதிகரு தியபொருளைப்*
*பல்சான்ற பெருங்கேள்விப் பனிமலைய முனிவினவ*
*வம்புயனு மறியாத வறமுதலாந் தமிழ்மூன்றுஞ்*
*சம்புவுமன் றுடனுணரத் தருவோய்நீ குருகோனே*
*கண்சுருங்க விரித்தபசுங் கலவமயி லெனத்திருமுன்*
*மண்சுருங்க விரித்தகுண மணியாழி யெழுபரித்தே*
*ரநதினக ரனைக்தடுகெகு மணிமணிமா ளிகைப்புரிசைச*
*செந்தினகர்ச சினகாத்துத் திருத்தகவீற் றிருந்தனையால்.*

#### ஈரடித்தாழிசை—௩.

*ஊனாகி யுயிராகி யுணர்வாகி யுணர்வுதவுங்*
*கோனாகி வினையளவுங் குணத்தளவுந் தனக்களவாய்*
*விரவாதி யந்தமிலா வெளியாகித் தெளியாது*
*பரவாதி யருமுலவாப் பாமறையுந் தாமறைய*
*வாக்குமன முங்கடந்து மண்ணொடுவிண் ணிடத்தியற்றும்*
*போக்குவர வொழிந்துவிழிப் புலத்துருவு மருவமுமாய்*
*வேதாந்தஞ் சித்தாந்தம் விளங்குகலாந் தந்தெளிந்த*
*போதாந்த நாதாந்தப் புறத்தினுமப் புறம்போகி*

புணர்ந்தாரு முணராரு முணரா மலுயிர்க்குயிராய்ப்
புணர்ந்தாலு மாறாறு புலனலமுங் கலவாது
நின்றதனிப் பரம்பொருளா நினக்கொருபே ரிலையெனினு
மின்றுருக வெனைப்பெறுவ திளையோய்நின் விளையாட்டே.

### ஈரடி அராகம்—௪.

அருமறை முறையிட வறைகழல் பறையிட வடியரு ணினைவதுன்னடி
யொருமையி னிருமையு முதவிய மதியென வொளியொடு குளிர்வதுன்முகம்
வருமுலை வனிதைய ரிருவரு மயிலின மழையென விழைவதுன்னெழில்
பெருகலை கெழுகலி கடலினு மெழுமடி பெருகுவ துருகுநின்னருள்.

### பெயர்த்தும்-ஈரடித்தாழிசை—௫.

தாயென்றுந் தந்தையென்றுஞ் சகமீன்று தருமுனக்குச்
சேயென்று பின்னுமொரு திருநாமம் வருமாறென்?
முந்திலென்றே யடியருள முளரிதொறு மிருந்தாய்க்குச்
செந்திலென்றே யுரைக்குமொரு திருப்பதியும் விருப்புளதே!
மயிலேற்று வருங்கால மல்லானீ கொல்லாயோ
மயிலேற்ற மேனுனக்கு மூற்றேற்றம் பெற்றிலையோ?
வேறாறு பனிமதியி னொடுபவள வரையினிரைத்
தீராறு தினகரரு மிடையிடையே யுதித்தாங்குக்
கருணைபொழி திருமுகமுங் கணமணிக்குண் டலநிரையுந்
திருநெடுந்தோள் களுங்கமலச் சேவடியுந் தாவடியும்
பாடாது நினையாது பரவாத வெனக்குவினை
கூடாத தொண்டரொடுங் கூட்டியுநீ காட்டினையால்.

### நாற்சீரடி அம்போதரங்கம்—௨.

பிறந்தது மிறந்ததும் பெரும நின்புகழ்
மறந்தது மல்லது வணங்கி லேனினைக்
காமமும் வெகுளியுங் களிமயக்கமுந்
தாமிடை கலந்தெனைத் தலைமயக்கினால்.

### நாற்சீரடி அம்போதரங்கம்—௪.

உண்பது முடுப்பது முவந்து தேடினேன்
கண்படை நனவினிற் கலங்கி வாடினே
னுய்திற மிதுவென வுணர்வு போயினேன்
செய்திற மிதுவெனுந் தெரிவில் பேயினேன்

# திருச்செந்திற் கலம்பகம்.

## முச்சீரடி அம்போதரங்கம்—௪.

எவ்வா றெனையுய் யக்கொள்வா
யெழுதா மறையின் றிறத்துள்ளாய்
செவ்வா னனையான் றிருப்பிள்ளாய்
தெரியா தினியுன் செயல்விள்ளாய்.

## இருசீரடி அம்போதரங்கம்—௮.

மெய்யுநீஇ பொய்யுநீஇ விண்ணுநீஇ மண்ணுநீஇ
மையைநீஇ செய்யைநீஇ யாதிநீஇ சோதிநீஇ.

## தனிச்சொல்.

என வாங்கு.

## ஆறடிநேரிசையாசிரிப்பா—சுரிதகம்.

நீயல தில்லை யாவையு முலக
மற்றவற் றிடையா னவத்துடற் பொறையொடு
சுழங்கெனத் திரியாது பிறங்குசுற வெறியு
நந்தூர் கடற்றுறைச் செந்தூர் பரவுவன்
காமரு பூந்தொடைக் கடம்பனின்
றாமரை மலரடி சருகமா வெனவே. (௧)

## வெண்பா.

எனதே குகன்செந்தி லேத்துதொழி லென்றேன்
றனதே யெனையாளுந் தன்மை—வினவின்
மறத்திமணா ளன்புமுதல் வாழ்வையெலா நெஞ்சே
குறத்திமணா ளன்பகமே கொள். (௨)

## கலித்துறை.

கொள்ளார் பவப்பிணி கூற்றுக்கஞ் சாரன்பர் கூட்டமல்லா
னள்ளார் பிணியி னலிவு படார்தெய்வ நாளுமற்றென்
றுள்ளார் முருகன்செந் தூர்பிரி யாதவ னொண்கமலக்
கள்ளார் விரைமலர்த் தண்டையந் தாடொழக் கற்றவரே. (௩)

## ஆசிரியவிருத்தம்.

கற்றாலு நீமொழி கழித்தாலுங் கழியாத கறையில் வாழ்வு
பெற்றாலு முருகனடிக் கன்புபெறா தவருலகிற் பிறவி தீரா
ரிற்றாலுங் கலிநலிய விரந்தாலும் பேதையரா யெழுத்தா றுள்ளத்
தற்றாலு மவனிருக்குஞ் செந்திலென்றோர் முந்திலென்று மடைவர் தாமே.

# திருச்செந்திற் கலம்பகம்.

## ஆசிரியப்பா.

தாமரை பயின்ற நான்முகக் கடவு
ளெழுதா மறைப்பொருட் பழுதாங் குரைப்ப
வீங்குமணிக் கடகந் தாங்குதிணி தடக்கை
முன்வருத் தியவா றின்னமும் வருத்த
விரும்பிய தாலெனத் திரும்பிட நஞ்சேய்
பாயிருள் பருகும் பல்கதிர்க் குழவி
ஞாயிறுசுற வெறி நாண்முரி திரைமுகட்
டெழுவது போல மழைதழை கலாபச
செறிமயிர்ச் சிறையார் பொறிமயிற் புறத்துக்
சேயொளிமேனி திகழவீங்கெழுந்தனை
செய்யவான் சருணியு மொய்வரை யருணியுந்
தாவலங் கயிலுஞ் சேவலங் கொடியு
மாறு முகமு நீறணி புயங்களும்
பண்டைய மறைபுகழ் கண்டையந் தாள்களுங்
கர்தநின் ஞமமுஞ் செந்துலம் பதியும்
வணங்கவு நினைக்கவும் வாழ்த்தவு
மிணங்கவிற் பாவினை னெனை விதித் ததற்கே. (ரு)

## வெண்பா

அதற்கிதற் கென்றுள் ளவம்போக்கி யாக்க
முதற்பொருட்கு மின்றி முயன்று—நுதற்கணவன்
சந்ததியா னஞ் செய்யான் றுனுவந்து செந்திநகர்
வந்ததியா னஞ்செய்யா மல். (சூ)

## புயவகுப்பு-ஆசிரிய வண்ண விருத்தம்.

மலர்தலை ஞாலத் தலகில வாமுற் றுயிர்களு முந்திக் கண்பண்டு தந்தன
மறைபகர்வாய்மைத்திசைமுகனோவுற்றிடுமுறைதண்டித்தன்றங்கைகன்றின
மகபதி வானத் தரசுவ ழாமற் றிருமுடி ரன்பிற் கொண்டெம்பு னைந்தன
வழிபடு கீரற் கழிசிறை தீரப் பரிவொடு முந்திச் சென்றஞ்ச லென்றன
குலமடமான்மெய்ப்புதல்வியும் யானைக்குமரியுமொன்றெத்தின்பங்கவர்ந்தன
குழையுமென் வாய்மைத் தமிழுந வீபத் தொடையலு மொண்பொற் சந்து
[ந்த வழ்ந்தன
குரைகழ னுடித் தொழுநெறி சேர்கொத் தடியவர் தங்கட்டுன்பங்க ளீந்தன
குவிமுலை வேலைக் கவிழிணர் மாலைத் தடிசூலு மன்றிக் குன்றும்பிழந்தன
வுலகுண ராமுத் தமிழுணர் நீதிக் குறுமுனி வந்தித் தென்றும்பு கழ்ந்தன
வுலைமலி வாகைத் திருநெடு வேலிற் சிரமவி தங்கட் கங்கங்கி யைந்தன

வுமைமுலை பீர்விட் டொழுகிய பாலுக் கழுதுயர் பொன்றக் கொண்டுகக [ணுந்தின
வுருகெழுகோலத் திருமுது சூரைக்கிளையொடு மஞ்சக் கொன்றங்கம் வென்
கலவம யூரத் துரகத மேறிப் புவனியு மெண்டிக் கெங்குந்திரிந்தன [றன
ககனவ ளாகத் தளவிய கோழிக் கொடிவளர் கம்பத் தம்பம்பொ ருந்தின
கலைமதி போலத் திருமுக நீள்கட் கடையருள் பொங்கிச் சிந்துந்தி பம்பின
கடலலைவாய்முத் தினவலை வீசிக்கரைபொரு செந்திற் கந்தன்புயங்களே.(எ)

## கலித்துறை.

புயமா றிரண்டுக்கும் பொன்னணியாம்புள்ளி மான்மகட்குங்
கயமான் மகளுக்கு நகண்ணிணை யாங்கடுங கூற்றுவந்தா
னயமாய தொண்டர்க்கு நற்றுணை யாஞ்செந்தி னன்னகர்மே
வியமான் மருகன் றிருக்கரத் தேந்திய வேற்படையே. (அ)

## கலிவிருத்தம்.

படைக்கணார் மைமலேய்ப் படுவ தல்லது
சடைக்கணன் பாகதி காணு மாறுண்டோ
விடைக்கண திபன்றனக் கிளைஞ்செந் தார்த்தமிழ்த்
தொடைக்கணன் றயாபுயத் தோகை பாகனே. (௯)

## குறளடிவஞ்சிப்பா.

பாகந்தரு பனிவான்மதி
தாரகையொடு கார்முகிலிடைப்
பொருதெனவலை யுடனிலகிய
நவமணியுமிழ் சுவிகெழுபுனற்
றிரைபொருமொலி முரசுடனதிர்
பைந்தமிழ்வளர் செந்திலின்வரு
சேயோன்
திருந்தடி துணையெனச் சேர்பவர்
பொருந்துவர் யாரும் புகலரு நெறியே. (௰)

## கலிப்பா.

நெறிகுஞ்சித் தலைமறலி நெருங்கியெதிர் வருங்காலஞ்
செறிக்குஞ்சித் திகடருநின் செந்திலுமென் புந்தியதே
பொறிக்குஞ்சித் திரத்தினுடப் பொரியாகப் புகுந்து கொத்திக்
கொறிக்குஞ்சித் திரச்சரணப் படைச்செவ்வேற் கொடியோனே

# திருச்செந்திற் கலம்பகம்.

## வண்டோச்சி மருங்கணைதல்—ஆசிரிய விருத்தம்.

கொடியாகின் றிடைதேய்ந்து கொழுங்கலைவைத் துணைமுலையுங் குழலுந்தாங்கி
யொடியாகின் றுளதின்னு முமக்குநிரங் காதவுள்ள முளவோ வண்டீர்
படியாகின் றிலங்கிலைவேல் வலனேந்தி செந்திலரு மருந்தன் னுடன்
முடியாகின் றளியெனுஞ்சொன் முடியாகின் றநுராக முயல்கின் றீரே. (௰௨)

## வண்டுவிடுதூது—வெளிவிருத்தம்.

ஈர நாண்முகை யிளமுலைப் பசப்பொழித் தளியீரே
சூர ருள்விழித் துணையிணை கொள்வதற் களியீரே
நார நாளமென் னளினநீர்ச் செந்தில்புக் களியீரே
யார நாள்வரு வேங்கையின் மலர்கொணர்ந் தளியீரே. (௰௩)

## வஞ்சித்துறை.

அளியாலுஞ் சோலை
யொளிசேர்வான் செந்தூர்
தெளிவாயா னொருசே
யழியாவீ டுண்டே. (௰௪)

## மேகவிடுதூது—கலித்துறை

உண்டு வாருதி பசுஞ்சிறைக் கிளிமயி லுருவாகி
யெண்டி சாமுகம் புதைத்தயி லெனமினி யிமைத்தீரேற்
கண்டு நாணிரு கண்களு முள்ளமுங் களிகூரக்
கொண்டல் காளினிச் செந்தில்வாழ் குமரனைக் கொணர்வீரே. (௧௫)

## அம்மானைமடக்குத்தாழிசை.

வீரனெடு வெள்வேல் வியன்செந்தி லெம்பெருமான்
பாரிலுயி ரெல்லாம் படைத்தனன்கா ணம்மானை
பாரிலுயி ரெல்லாம் படைத்தனனே யாமாகி
லாரணங்க ணான்கு மறிவனோ வம்மானை
யறிந்து சிறையயனுக் காக்கினன்கா ணம்மானை. (௧௬)

## இரங்கல்-வஞ்சிவிருத்தம்.

மான்மகள் காதலர் மஞ்சுருந்
தேன்மலி காவுயர் செந்தூரர்
கான்மண நாறு கடம்பேனும்
யான்மகிழ் கூர விரங்காரோ. (௧௭)

# திருச்செந்திற் கலம்பகம்.

## ஒரோலி வெண்டுறை.

காரோய் பிறத்தருகட் கறுவுடைக் கடுங்கூற்றங் கலந்த காலை
யாரோ விலக்குவா ரந்தோ நமரங்கா ளறிதி ரன்றே
நீரோ யுய்ப்போமா றின்று வலித்தீரேற்
கூரோய் வடிவேற் குமரன் குடநாட்டுச்
சீரோய் திருச்செந்திற் சென்று தொழுமினே. (௧அ)

## வெண்பா.

தொழுதிரந்து வெம்பசியாற் சோர்ந்திடுவார் கைபார்த்
தழுதலமந் தேங்கி யலைவார்—பழுதும்
பெருகுகலை வாரிமணி பெய்திரைக்குஞ் செந்தில்
வருகுகனை வாழ்த்தா தவர். (௧௯)

## கலிப்பா.

வரங்கொண்ட புனைமுலைப்பான் மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட கரிமயிலும் பன்னிரண்டு கண்மலருஞ்
சிரங்கொண்ட மறையிறைஞ்சுஞ் சேவடியுஞ் செந்தூரன்
கரங்கொண்ட வேலுமென்றன் கண்ணைவிட்டு நீங்காவே. (௨௦)

## பாண்—கலித்துறை.

நீங்காத நேயத்தி னீதைத்த தையலு நன்னையுமன் றிப்
பாங்காய பாண பிரிந்ததென் றூலுமை பாலன்செந்தில்
யாங்கா ணலமேனி வெண்மை விளைவுதி யேதிலரைத்
தாங்காது நின்மதி துன்னூசி யின்றிறந்தான் பிழைத்தே. (௨௧)

## ஆசிரியவண்ணவிருத்தம்.

பிழையாத தொண்டர் சிறிதேசெ யன்பு பெரிதாக நெஞ்ச மகிழ்வா
ருழையினு மெங்கள் குறமாது கொண்க ருமைபாலர் தங்கு மிடமாம்
புழைவாய் திறந்து வளைசூலு ளைந்து பொழியார மிந்து வெனவே
மழைபோன் முழங்கி யலையாழி சிந்து வளமேவு செந்தி னகரே. (௨௨)

## தலைவிகூற்று—வெண்பா.

நகைமதிய மேவடைவை நாப்போலிவ் வண்ண
தகைமதியாய் நின்று தழல்வா—யகமகிழ்ந்து
கற்பகலை தந்தார் கடற்செந்தில் வாயெமக்குப்
பொற்பசலை தந்தார்முன் போய். (௨௩)

### கலித்துறை.

போய்வத ஞாரம்ப மாடார் திருச்செந்தில் புக்குறையார்
சேய்மலர்த் தாளிணை சிந்தைசெய் யார்திரு மான்மருகன்
காய்சின வேலு மயிலுமென் ஞர்கடல் சூழுலகிற்
பேயறி வாளரெவ் வாறறுப் பார்தம் பிறப்பிணையே. (௨௪)

### தலைவிநெஞ்சொடுகிளத்தல்—ஆசிரியத்தாழிசை.

பிறர்வாய் வசையடங்கப் பிஞ்ஞகன்சேய் திண்டோ
ணறவார் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
சிறைவான் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே
குயில்வா யொலியடங்கக் கூத்தன்சேய் திண்டோ
ணயமாந் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
செயிர்தீர் புனற்செந்திற் சேருதுமா னெஞ்சே
முந்நீ ரொலியடங்க முக்கணன்சேய் திண்டோ
ணன்னீர்த் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
செந்நீள் புனற்செந்திற் சேருதுமா னெஞ்சே. (௨௫)

### கைக்கிளை—மருட்பா.

நெஞ்சே நுதல்வியர்க்கு நீடுகுகன் செந்திலன்னாட்
கஞ்சேல் விழிக ளவையிமைக்கும்—பஞ்சே
யடிநிலந் தோயு மதனாற்
கமழுங் குழலிவள் கடவுடத் தணங்கே. (௨௬)

### பாங்கிவேண்டல்—வெண்பா.

அணங்கா மிவளுக் கவிர்மதிய மொன்றே
வணங்கா வருந்தென்ற லொன்று—வணங்கூ
ரிளமுருகா செந்தினக ரெந்தாய்வந் தாளா
யுளமுருகா வேயிசையு மொன்று. (௨௭)

### தலைவியையவியத்தல்—கலித்துறை.

ஒன்றுடை யான்புலித் தோலுடை யான்மைந்த னேங்குபரங்
குன்றுடை யான்றிருச் செந்திலன் ஞர்குல வாழையிள
மென்றுடை யானடை யாலிடை யால்விழி வேற்கடையா
னின்றுடை யானிற்ப ராலெவ ரோனு நிலைகுலைந்தே. (௨௮)

## திருச்செந்திற்கலம்பகம்.

### மதங்கியார்-கலித்தாழிசை.

குலைகுலுங்கு வாழையின் கோழிலைப் பசுங்கொடைக்
குளிர்நிழற்கண் ணிரவிதேர்க் குரகதங்க ளருவிபா
யலைகுலுங்கு நறவமுண் டயர்வுயிர்த்த காவுசூ
ழுங்கணெந்தை செந்தில்பாடி யாடுமா மதங்கியார்
முலைகுலுங்கு மாகின்மாரன் முடிகுலுங்கு மமுதவாய்
மொழிகுலுங்கு மாகிலாவி பழிகுலுங்கு மல்குலங்
கலைகுலுங்கு மாகினுடு நிலைகுலுங்கு மாமுகக்
கஞ்சமுங் குலுங்குமாகி னெஞ்சமுங் குலுங்குமே. (உக)

### இரங்கல். இன்னிசைவெண்பா.

குலுங்கு முலைமேற் குளிர்பசலை கண்ணீ
ரலங்கு மருநாளு மாய்வளையு நீங்கு
மிலங்கிலைவே லோனை யெறிகடற்செந் தூர்வாய்
வலங்கொளமுன் போமடவார் மாட்டு. (கூ0)

### சித்து. ஆசிரியவிருத்தம்.

மாட்டே மல்லேஞ் சித்தவித்தை மகனே செந்திற் குகன்பாணுங்
கேட்டே யறிந்த தனக்குரைப்பக் கேளா யிதுபொ யல்லமெய்யே
வேட்டேம் பசியா லுண்ணவின்று விளங்குங் கஞ்சந் தனிலேபொன்
காட்டே மாகி னீபடைத்த கறியுஞ் சோறும் வேண்டாவே. (கூக)

### இரங்கல். கலித்துறை.

வேண்டின ராணு லனகு வேலர் வியன்செந்தி
லாண்டைகை யானூர் மானனை யானை யகல்வாரோ
கூண்டடல் வில்லிட் டம்பு சொரிந்தே கொலைவேடம்
பூண்டு நெருங்கிக் கொண்டூன் முழங்கிப் பொழிநாளே. (கூஉ)

### பனிக்காலம்-வஞ்சித்தாழிசை.

நாள்வனச முகங்கூம்ப, நீள்குளிர்செய் பனிக்காலம்,
வேண்மருவு செந்திலினெங், கேள்வர்தமை நினையாவே.
மகன்றிலலறிடும் பெடைசேவல், புகன்றணையும் பனிக்காலங்,
குகன்றனது செந்திலினெம், மகன்றவரை நினையாவே.
தொலையவர்மெய் குனியமதன், சிலைகுனியும் பனிக்கால,
மலைமகள்சேய் செந்திலினெந், தலைவர்தமை நினையாவே. (கூகூ)

[illegible]

நினைவு மொன்றே யுரையு மொன்றே
பணவன் செந்தில் பணியா தொன்றே
விணையில் விழ்ந்தவர் பால் (௧௫

கலிப்பா.

பால்வெள்ளை நீற்றானும் பல்லுயிரும் படைத்தானுஞ்
சூல்வெள்ளை மணிப்பணிலஞ் சுமந்திருக் காத்தானுஞ்
சால்வெள்ள மில்லாத தனிநெடுவேற் படையானுஞ்
சேல்வெள்ளம் பாயலவுந் திருச்செந்தி லிடத்தானே. (௧௬)

கலித்துறை.

இடத்தான மாறெழுத் தெண்ணக்கண் ணார்நின் னிணையடிக்கும்
பிடத்தான மாறும் பிரியா திருக்கப் பெருங்கருணைக்
கடற்றா னெனக்கருள் வாய்செந்தில் வாய்த்தென் கலைமுழுது
குடத்தான மாதவற் கோதிய ஞானக் குருபரனே. (௧௭)

மடக்குநூசிரியவிருத்தம்.

பரவுவாரிவளையீரே பூரவுவாரிவளையீரே
படருநாகவரும்பீரே படருநாகவரும்பீரே
யரவப்புணரிமகரமே யரவப்புணரிமகரமே
யலலங்கழியநந்தனமே யலலங்கழியநந்தனமே
பிரமாத்தண்டலைப்புடைத்தான் பிரமாத்தண்டலைப்புடைத்தான
பிறவானுமைசெந்திநகரனே, பிறவானுமைசெந்திநகரனே
யுரவாராலேநாவாயே, யுரவாராலேநாவாயே
யோதக்கடனீர்க்குருகீரே யோதக்கடனீர்க்குருகீரே. (௧௮)

தலைவியையவியந்தல். கலிப்பா.

சிரமவை யோரிரண்டு நிளவிதனக் கிணையாகு
மாரமவை யோரிரண்டு மலர்முலையே வணியாமாற்
றூரமவை யோரிரண்டுந் தாமுடையான் செந்திலன்ன
கூரமவை யோரிரண்டுங் கொண்டமதர் விழியார்க்கே. (௧௯)

வாசல்.

ஆர்க்குமதா காமட மாலை யாட வணிகலையு மேகலையு மிடையு மாட,வார்
குவிபொன் சூழையுமணி வட்டும் மாட மதிருக்கமு தாதல்வெயர்வு கையு மா
[illegible] தார்க்கமல வடிச்சிறைப்பு புலம்பி மாட [illegible] சூழ்நுழையு [illegible] யுந் தழு
[illegible] [illegible] சூதன்செந்தில் [illegible] [illegible] [illegible] திருவ
(௨௦)

## திருச்செந்திற்கலம்பகம்.

### ஆசிரியவிருத்தம்.

ஊசலாட்டெனப் போய்வரு பிறப்பெனு மூடற்பொறைச் சிறவீட்டித்
தேசிலாதபுல் லறிவுடை வாழ்க்கையின் றிந்திறந் தொழிவேனோ
வாசிலாநெடுங் கடலலை வாய்த்தடஞ் சரைவரி வளையீன்ற
மாசிலாமணி யேய்செந்தின் மேவிய வானவர் பெருமானே. (௩௮)

### கலி. தாழிசை.

பெருமை மானிலம் வலம தாய்வரு பீலி மாமயி லூர்தியார்
பிள்ளை யார்வளர் செந்தி லம்பதி யுள்ள மேதகு களியரேம்
பரைம டந்தைன் மூனி புவனி நாரணி பால லோசனி சூலிசாம்
பவானி காசனி கௌரி பூசனை பண்ணு முண்மகிழ் வெளியதோ
மருவு கேழனு மீனு மாமையு மாய னுக்கு விருப்பமா
மானிலைக்கை விட்டானு ருத்திரன் மதியு நாடொறு முயலுனு
மரிய வேள்வியி லந்த ணாளர்கள் சுரபி கண்டிடின் முந்துவா
ரைய னேசுர ராயி னோர்சுவை யருந்த வானவ ரியாருமே.

### வேற்றெலிவெஃகுறை.

யாருமிணை யடிவணங்கு மெம்பெருமான் றும்பிமுகற் கிளையோன் செந்திற்
சூருடைய சுடர்வடிவேற் றுணர்க்கடம்பத் தொடைக்குமரற் றொழுகி லாதார்
விரிநீர் புடைசூழ் வியன்மே தினிமேற்
புரிவா லுறுநோய் பசியா லொசியா
வழைசி ரயரா வருநாள் கழியா
வுரியா ரிகழா வுணர்வோ டுயிர்போ
யெரிவாய் நிரையத் திலுமூழ் குவரே. (௪௰

### கலித்துறை.

மூழ்கா நிலைப்புது நீர்வேட்டு மீனமுன் னீந்துபழந்
தாழ்கானயாறு துறந்திறந் தாங்குநின் றன்னையன்றி
வீழ்கா தலிற்றெய்வம் வேறெண்ணி யான்மெலி யாதுசெந்தில்
யாழ்நா முறுமொழி வள்ளிபங் காவுள் ளிரங்குவையே. (௪௧)

### இரங்கல். இதுவுமது.

இரங்கி மெய்கரிந் திருஞ்சிறை யடைக்கிட ரிடைமூழ்கி
வருங்க ணீரொடு நாவுடை மறுகிய வரிவண்டர்
கருங்கண் வார்முலைக் கௌரிசேய் செந்திலிற் கார்கால
மொருங்கு நம்மையு மொழிநதன் றோவெம்மை யொழிந்தாரே. (௪௨)

# திருச்செந்திற்கலம்பகம்.

## சிந்தியல் வெண்பா.

ஒழிந்தன துன்ப முவந்தன வுள்ள
மிழிந்தன நம்வினை யெல்லாஞ்—செழும்புனற்
சேந்தன் றிருச்செந்தில் சேர்ந்து. (௪௫)

## இரங்கல். ஆசிரியவிருத்தம்.

சேர்ந்த போது குளிர்ந்து மன்பினர் தீர்ந்த போது கனன்றும்வா
னூர்ந்து கந்த னுகந்த செந்தி லொதுங்கு வெண்பனி லங்கள்போ
லீர்ந்து பொங்கிரு ணுங்கி யெங்கணு மெங்க ளங்க நடுங்குமா
றூர்ந்த வெம்பனி சிந்தி முந்துற வந்தி வந்தெழு மிந்துவே. (௪௬)

## இதுவுமது.

இந்துவு மிரவியு நின்றென வுலவிய விம்பரி னெழுவகையா
வந்துறு பிறவியி னுைந்துழ லுடலெரு று மங்குத லொழிவேனோ
செந்திலு மெனதிரு கண்களு மடியவர் சிந்தையு மருமறைநூ
லந்தமு மகிழ்வொடு சநதத முலவிய வம்பிகை திருமகனே. (௪௭)

## கலித்துறை.

மகவா னரசு மழிவற்ற யாக்கையு மன்பதையுஞ்
செகவாழ்வு மற்றவை யாவுமபொய் யேதமிழ்ச செந்தில்புகுந்
தகவா ரிசமலர்ந் தங்கைகள் கூப்பிநின் றாறுதிரு
முகவா னவனைப் பணிவதொன் றேமெய் முயல்பவர்க்கே. (௪௮)

## கலித்தாழிசை.

முயல்பவர் முயற்சியின் முன்னம் யாவையு
நயனுணர் செந்திலா னல்குமே
நயனுணர் செந்திலா னல்கா னாயி
னயலொரு வானவர்க ளாக்குதற்கு வல்லவரு மல்ல ரன்றே. (௪௯)

## துறட்டாழிசை.

அன்றல வின்று மனுமெய் தவர்வேண்
மன்றலஞ் செந்தூர் வாழ்த்தா தாரே. (௫௦)

## இரங்கல். அடிமறிமண்டிலவாசிரியப்பா.

தாரார் கொல்லோ தங்குளிர் தாரே
வாரா ராயின் மாணனை யீரே
பாரா ராலோ பணிபவு நானே
சீரார் செவ்வேள் செந்தூ ரவரே. (௫௧)

### பாங்கிகூற்று. வஞ்சிவிருத்தம்.

அவரு மங்குள ரன்பினு
லிவரு நெஞ்ச மிரங்கினர்
சிவன்ம கன்பயில் செந்தில்வா
யெவரு மென்செய்வ ரின்பமே. (௫௨)

### ஆசிரியவண்ண விருத்தம்.

இன்பமுந் துன்பமுஞ் சங்கடங் கொண்டயர்ந் தங்குமிங் குஞ்சுழன் றிடுமாயத், துன்பவெங் கும்பியங் கந்தவிர்ந் தின்பெருந் தொண்டனென் றுய்ந்துளங் கழிவேனோ, புன்குருந் துந்திநன் சந்தனஞ் சிந்திமுன் பொங்கி வெண் சங்கெறிந் தலைவீசித், தண்பொருந தம்பசும் பொன்சொரிந் தெங்க ணுந் தநதென் செந்திலெம் பெருமானே. (௫௩)

### கார்கண்டுபாகனொடுகழறல். இதுவுமது.

பெருமான் மதிபொதி சடையா னூடனுறை பிணைமா னுதவிய செந்தூரன், கருமா மயிலென வுறைவாய சிதறிய கணமா மழைமுகில் கண்டாலே, யொருமான் விழிவழி புனலோ வுடல்வழி யுயிரோ விடுகுவ ளந்தோயான், வருமா றறிகில னினிநீ விரைவுடன் வலவா கடவுதி வன் றேரோ. (௫௪)

### சிந்தடிவஞ்சிப்பா.

தேராதவன் வழிமறுகிய திரள்சோலை
வாரார்மல ரிடையொழுகிய மதுமாரி
நீரார்வயற் செந்தூரனை நினையாதார், யாரோனு
மெழுவகைப் பிறப்பினு மியங்கி
யழிகுவர் கறங்கென வலமானனி மயங்கே. (௫௫)

### வண்டு. கலித்துறை.

உழவாத மம்மரு முன்னுத நெஞ்சு முருப்பசப்பு
மிழவாத நாணுமெங் குண்டுவெண் டீரியல் சேர்குறிஞ்சிக்
கிழவா னவனை யிளையோ னெனுந்தன்மை கேட்கிலராய்த்
தொழவா த்ரத்தொடு செந்தில்சென் றேகண்ட தோகையர்க்கே. ()

### வெண்பா.

தோகைபுற மாக்குந் துணைத்தா ளருவினையே
னோகை யகமாக்க வொண்ணுதோ — பூகமலி
தேங்கடம்பாய் செந்திற் றிருநகரில் வீற்றிருக்கும்
பூங்கடம்பா நீதான் புகல். (௫௭)

## இடைச்சொற் களவியல்

புகலும் வாய்மொழிப் பால்விழை கூறுவார் பேரானி லாநகை பூத்த செவ் வாய்மலர்க், தகலும் வாண்மதி கல்லா மறுத்தென் றுவின் பாதல் விலை யாக்கு மிடைச்செயர், தகலு மாருங் குடமூலை பரல்வியி தினைய வாற்றிவன் சந்தி செநதில்வா, மிகலும் வாளெணங் கண்ணொடு நெஞ்சையு மிவர்விற் றாலினி யார்விலை கொளவரோ. (௨அ)

### தலைவி கூற்று - ஆசிரியவிருத்தம்.

கொன்னீர ன்றே செலிப்புலத்தெங் குலைத்தார் வலித்த கொடுங் கடிப்பின், வள்வார் முரசங தநகோதை மணம்வேட் டயரு மனைமுன்றிற், கன்னகர் கடப்பந் தொடைசெந்திற் கந்தன் வேல்போற் கயற்கணையாய, புள்வார் பொருவெங களத்தோதை கேட்டே யகன்ற போரோதே. (௩க)

### ஆசிரியவிருத்தம்.

ஏறுரும் பசலைக் கலைமான் மதசசே றெழுதிய வழிமதக் கலுழி [ப்பூ
விரைத்தெறி காடத் திரடிணி புழைக்கை யிகற்கரி மருப்புறழ் முலை
யூறிருங கூந்த லேந்திழை யவாபா னலநதனக கலநதுழன் றவமே
நாள்கழித் தவலப் படுகுழி கிடக்கு நான்கதி காணுமா றுளதோ
ஆறெழுத் துளங்கொண் டைம்புல னடக்கி யவாவறுத் தொருநெறி தருவி
யகங்குழைந் துருகிப் பருகுமின் பினருக் காணாத ஞானவா ரிதியே
பாறெழுந் திரைச்சூழ் திரைப்பசுங் குருதிப் பருதியஞ் சுடரிலைச் செவ்வேற்
பண்ணவா விரைப்பூந தண்ணறு வயல்பாய பைநதமிழ்ச் செந்திலவா
[னவனே. (கூ0)

### இதுவுமது.

வானமும புவியு மாய மாநிலம் பூத மோது
வூனுடம் பாத ஞயே னூழ்வினைப் பகுதி யன்றே
கூனிளம் பிறைதோய நெற்றிக் கொடிமணி மதில்சூழ் செநதிற்
றேனினந தொகுதார் மல்கு செஞ்சடா வேலி னானே. (கூக)

### கார்கண்டு போகனறுகேழுறல். இணைக்குறளாசிரியப்பா.

வேலிற் கிளரொளி மின்னொடு துவன்றிச, சூலிற் கடலென முழங்கி மாலிற் கருகிக், காலிற் கடுவிரைத தெறிநது, மேலிற்பாந்து, பாலிற்பஃ றுளிசிதறிக், கோலிற்பொழிநது, குனிசிலைவளைத் தனவாலோ, வாலிற்சிறந தன்மைந்தன், சேலிற் றிகழ்வயற் செநதிலிற் றோன்றும், ஆயன்றுதேரினு மக்குமாலோ, சால்பிற்கேள்விப்பாக, தகவினிமென் மையாலோ, நாலிற் றண்ணிடை யனகவே. (கூஉ)

### இரங்கல்-ஆசிரியவிருத்தம்.

தனக்கோ ருவமை யில்லாத தந்திக் கிளையான் செந்திலுமென்
மனக்கோ யிலுங்கொண் டவனிணைத்தாள் வணங்கா தவரி னிணங்காரா
வெனக்கோ ருந்தி யிம்பாம லிதண்கா ளேனல் காக்கிளிகாள்
புனக்கோ கிலங்கா ளெங்கொளித்துப் போனா ரிருந்த மானாரே. (சுங)

### தழை-கலித்துறை.

மானார் விழிமான் மகள்கா தலனார் வாழ்செந்தூ
ரானார் வடிவே லுரவோ யினிவே றுரையுண்டோ
வானார் விழையுந் தழையோ தந்தா யம்மாநங்
கானார் குழலா ளுயிர்தந் தனைநீ கண்டாயே. (சுச)

### மறம்-ஆசிரியவிருத்தம்.

கண்டாலு மனம்பதைக்குங் கடுங்கூற்று நடுங்கியெமைக் கடல்சூழ்
செந்தில், வண்டாலுந் தொடைக்கடம்பன் மலர்ச்சரண மறவாத மறவரேயாம்
பெண்டாலின் றுளமயங்கி யுயிரைவிடத் தூதுவிடும் பெருமான் றன்பாற்,
றெண்டாலெங் களுக்குரைக்க வருந்தூத வவற்கியம தூத னீயே. (சுரு)

### தலைவனைவேண்டல். வெண்பா.

தூதுசொல வேண்டிச் சுரும்பினையு மானினையு
மாதுசெல விட்டாலு மாட்டாவா—லோதுசெந்திற்
காங்கையா வாறிரண்டு கைத்தலத்தாய் நின்றன்னை
வேங்கையா மென்றே வெறுத்து. (சுசு)

### இரங்கல்-கலித்துறை.

வெறுப்பா ரவரென்னை மின்னனை யாரெனில் வெம்பிழையும்
பொறுப்பார் மறந்தும் புறங்கணி யார்புணர்ந் தாவிதந்துண்
ணிறுப்பார் புலவியி னீடல்செய்யார்நினை வார்வினைக
ளறுப்பார் திருச்செந்தில் வாயில ரார்வந் தலைப்பவரோ. (சுஎ)

### எழுதரிதென்னவேந்தலை விலக்கல்-கலித்தாழிசை.

அலைவாய்வள நந்தூர்ள நிலவாய்விரி செந்தூ
ரடலுற்றிய கதிர்வேலவர் குடநாட்டன மனையாண்
முலைதாமெழு துவையேலவை குழையாமுழு மதிபோன்
முகநேரெழு துவையேனகை புரியாதிரு புருவஞ்
சிலைபோலெழு துவையேலவை குனியாவடி தளிர்போற்
றீட்டாயெழு துவையேலவை நடவாகிளி துவர்வா
யுலவாவெழு துவையேலது கலவாதிறை யழுத
மழக்கேயெழு துவைக்கிழி செங்கேழயி லவனே. (சுஅ)

### தலைவியை யாற்றுதல். வெண்பா.

அயில்வேற்க ணல்லா யளர்கூர்ந் தலமந்
துயிர்வேட்கை வாட்ட மொழிவாய்—பயிலுமதன
பூங்கைக் கடம்புண்டு போனாற் றாச்செந்தில்
வேங்கைக் கடம்புண்டு மேல். (௬௯)

### விலக்கல். ஆசிரியத்துறை.

மேல்வா னகிர்தஞ் சென்றயறத் துயர்ந்த விளங்கிலை நெடுவேற் றுளங்கெ ழிற் குமரன் வியன்செந்திற், சூல்வாய்ப் பணிலங் கறங்கு மலைவாய்த் துறைவா வினிவெம் பிறைவா ளுதலின் றுணர்த்தா ரகலம் புணர்ப்பேபா டேனின், பால்வாய்க் குழவி மறிமான் மறுகும் பகுவாய்ப் புலியின் ஞெரைவால் புடைப்பப் பணைக்கோட்டு, நால்வா யினாயாய் வேட்டைபா யரவ நவிலும் பாலைத் தெனலாற் கவலை ளிர்நீர்ப் பொருநைத் தெளிநீள் பழன நன்னாட் டகமன் [றே. (௭௰)

### வெண்பா.

அகமன் றலங்கமலத தரள்விளையே னன்பாற்
புகமன் றகமகிழ்ச்சி பூத்தானு—றகவென்றா
மூந்தினக ரம்போ லொளிகொண்ட வேற்படையோன்
செந்தினக ரம்போற் சிறந்து. (௭௧)

### பிரியேனென்றல்-கலித்துறை.

சிறந்தார் பரவுந் திருச்செந்தி லார்சிவன் றீறுதற்கட
பிறந்தா ரிணையடி பேணலர் போலப் பிணியவிழ்தார்
புறந்தாழ் குழலி புலம்பே' தீவினையெம் பொறிகலங்கி
யிறந்தாலி யான்படி னும்பிரி யேன்பிறப் பேழினுமே. (௭௨)

### ஆசிரியவிருத்தம்.

ஏழுயர் கடாயானை மேல்வெண் குடைக்கீழ் பிணைக்கவரி யெறிய விருபா
லின்னிய முழங்கமட வன்னங் குழீஇயனைய வேழையர்' மருங்கு சூழக்
காழி னறுங்குற டுரிஞ்சுபூந் தேய்வைகடி கமழ்தடவும் வலையகிமிர்தோட்
கண்ணிக் கடம்பசைய வேல்கொண்டு நீவாக் கண்கொண் டுளங்குளிர்வனோ
வாழிமுரி திரைமுகடு கிழியவெழு மெழுபுரவி யருணமிலை கொடிநெடுந்தே
[illegible] [illegible]ரிரவி பாயிரும் பகலுமிரு ளடையமிடை சினைவிடுதடங்
[illegible] [illegible]ம்புன்னை துன்னுதுன் டாதுபடு குவிமுகை மருட்டு முடவுக்
[illegible] மணித்தொருதி கில்வுகாய் செந்தில்வரு குலமகர் தம்பி ரானே.

# திருச்செந்திற்கலம்பகம்.

## ஆசிரியத்தாழிசை.

தம்பிரான் செந்திலிற் சரவணத் துதித்தோ
னம்பொனார் கழலிணை யன்புறப் பணிந்தோ
ரும்பராய் மன்னுவ ருயர்நிலை யடைந்தே. (௭௪)

## மாலையிரத்தல்.கலித்துறை.

அடைக்கலந் தானிவ ளானலு மார்பத் தணிகடப்பந்
தொடைக்கலந் தாருயிர் சோர்தனன் றேறெதால் லவுணர்வெம்போ
ரிடைக்கலந் தாவிப் பலியூ னுடனுண் டெழுங்கதிர்வேற்
படைக்கலந் தாங்கிய கையாய்தென் செந்திற் பதிக்கந்தனே. (௭௫)

## இரங்கல்.வெண்பா.

கந்தமல ராலக் கமழ்கூந்த லேந்திழைமார்
தந்தமல ராலத் தளருமோ—வந்தவினை
போக்குமரன் சேயொலிக்கும் பூம்புனற்செந் தூரமர்ந்த
கோக்குமரன் பூந்தார் குறித்து. (௭௬)

## இதுவுமது.ஆசிரியத்துறை.

குறுமுனிவற் கறமுரைத்த குமரன்மா செந்திலெனங் கொலைவில் வேடர்
சிறுமியைம ணம்புணர்ந்து தீர்ந்திடினு மன்பகத்திற் றீரா னன்றே
சிறுமியைம ணம்புணர்ந் தன்பிற்றீர்ந் தாராயிற்
கறிவளர் வரைநாடற் கென்னு மென்னு முணர்ந்த கல்வி யாறே. (௭௭)

## வெண்பா.

ஆறுமுக மேன்கண்க ளாறிரண்டு மேனடியேற்
கேறுவினை யொழிப்ப தெல்லாமோ—நீறணிவான்
கன்றே திருச்செந்திற் கற்பகமே நின்னருட்கண்
ணொன்றே யமையாதோ வோர்து. (௭௮)

## இரங்கல். ஆசிரியவிருத்தம்.

ஓது வார்கொலோ வுயிருடற் பொறைமறித் துதவுமா றுயர்ந்தோங்கி
மோது வாரிள முகிழ்முலை வனிதையர் முடிந்திறந் திடுங்காலைக்
காது வார்மணிக் கனங்குழை யுழைமகள் காதலர் திருச்செந்திற்
போது வார்குழ லாய்கல்வி வேட்டெமைப் புல்லுவிட் டகன்றுளே. (௭௯)

## இதுவுமது.கலிவிருத்தம்.

அகலுறூர் கனவெலா நனவெ லாந்தொடப்
புகலுறு ருளங்குடி புகுந்த காதல
னிகலுறு வேள்செந்தி லிணங்க லர்நின்யா
னுகத்துறு நாவின் னூச லாடலே. (௮௦)

கலையாடல்கூறித்தோழிநகுதல். இதுவுமது.

ஆடு பூஞ்சுனை சந்தணிந் தாய்மலர்
சூடி வாய்விளர்ப் புந்தரிற் றோகையாய்
சேடன் வேற்படைச் சேவகன் செந்திலி
னூடி யானுஞ்சென் றூடுவ னனமே. (அக)

தலைவன்கூற்று; இரங்கல். இதுவுமது.

நானிலமு மெண்டிசையு நன்கிசையு நாளார்
தேனகு கடம்பருயர் செந்திநகர் போல்வார்
மானகு கருங்கணிணை வஞ்சமிட மானல்
யானுமுயி ரும்புவியு மென்கொலுயு மாறே. (அஉ)

தோழிகூற்று இரங்கல். ஆசிரியவிருத்தம்.

மாறு படுஞ்சூ ரோட முனிந்தார் வானுயர் செந்தூர்வா
யூறு படும்பே ராசையி னம்பா லூர ரிரங்காரே
வீறு படும்பூ ணாரமு மொன்றோ நேரிழை கண்சோர்நீ
ராறு படுங்கால் யாவ ரறிந்தா ராவி படும்பாடே. (அங)

கலித்துறை.

பாடாத நாவும் பணியாத சென்னியும் பாவித்தன்பாய்
நாடாத வுள்ளமு நான்படைத் தானர கேழுஞ்சென்று
கூடா துயர்கதி கூடுவ னோகுன் றெறிந்தவைவேற்
சேடார் மதிற்செந்தி லாயென்கொ லோநின் றிருவருளே (அச)

தலைவிகூற்று. வெண்பா.

அருட்கடல்வாழ் செந்திநக ராய்வளைக்கை நல்லாய்
பொருட்கடல்வேன் மன்னரேன் போனார்—மருட்குவளைக்
கண்பொழிய முத்தங் கனக முலைபொழிய
கண்பொழிய நாபெலியு நாள். (அரு)

பாங்கிகூற்று. கலிப்பா.

நாணளினந் தளையவிழ்ந்த நறுமலர்ப்பொற் பொகுட்டகட்டேக்
கோணளினந் துறங்குவயற் குமரன்மா செந்திலின்வாய்ப்
புரணளினந் தலராக பாரமுகில் சேரமணிப்
பூணளினந் தனித்தாவி புல்லாது நில்லாதே. (அசு)

### வெண்பா.

நில்லாத நீயு நிலைநின்ற வென்றனக்குப்
பொல்லா தனவாம் புலனடக்கிப்—பல்பகலுங்
கார்த்திகையான் செந்திற் கடிநகரைக் கண்ணாரப்
பார்த்திகையா னெஞ்சே பணி. (அஎ)

### கலித்துறை.

பணிப்பகை மயிலுஞ் சேவற் பதாகையு மன்னி ரண்டு
மணிக்குழை களுமோ ராறு வதனமும் வாகை வேலுந்
தணிப்பசுங் கடப்ப தாருந் தண்டையந் தாளு நாளுங்
கணிப்பருஞ் செந்தி லாயென் கருத்தைவிட் டகன்றி டாவே. (அஅ)

### இரங்கல். இதுவுமது.

அகன்றா லகலும் புணர்ந்தாற் புணருமென் னாவியம்மா
குகன்றா தவிழ்பொழிற் செந்திலின் வாய்க்குளிர் மாமதிபோன்
முகன்றாழ் கனங்குழை முத்தணி மூரன் முகிழ்முலைமான்
மகன்றா னெழுதிய வோவியம் போலு மயிலினையே. (அக)

### தலைவியைவியத்தல். ஆசிரியவண்ணவிருத்தம்.

மயில்கடவி யண்டகோள முகடதிர வம்பொன்மேரு வரைபிதிர வங்கைநீடு, ரயிற்சுழல வும்பர்வாழ வுலகைவலம் வந்தசோதி யருள்குமரர் செந்தில்போலியார், குயின்மொழிக ளிந்தபாகு மடமயில்வி ளங்குசாயல் கொடியிடைது வண்டுவாடு நூ,லியலுநுத லிந்த்ரசாப மீனைவிழிக ளிந்த்ரநீல மிலவிதழு மிந்த்ரகோபமே. (கo)

### கார்கண்டிரங்கல். ஆசிரியவிருத்தம்.

கோப மெழுந்தன மேக முழங்கின கோட னிரம்பினநீள்
சாபம் வளைந்தது தோகை பரந்தன தாரவர் வந்திலரா
னீப மணங்கமழ் மார்பினர் செந்திலி னேரிழை நெஞ்சிடையே
சோப மலிந்தது வாவி தளர்ந்தது சோர்வன கண்டுளியே. (கக)

### கலித்துறை.

துளியாது தீண்புனல் சோராது மெய்துதி யாதுசொன்னாக்
களியாது நெஞ்சகங் கைகுவி யாதொருக் காலுமறை
தெளியாத வானவர் சேனா பதியைத்தென் செந்திலின்வாய்
வெளியா யெதிர்ந்து தொழார்நர கேழினும் வீழ்பவர்க்கே. (கஉ)

பாங்கியாற்றுதல். குறள்வெண்பா.

வீழ்வா ரெழார்பொருட்கு விட்டெமை வெற்பயிலாத்
போழ்வார்செந் தாரடையார் போல்.

(கச)

பிச்சியார். ஆசிரியவிருத்தம்.

பொலிதனக் கென்றுமிலாப் புண்ணியன்கண் ணுதற்கடவுள் புதல்வன்
கோலப், பீலிமயி லியற்செந்தி லுலவேற்கைக் கொலைவேற்கட் பிச்சி யாரே
ஆலிடையக் குறைத்திருமணிப் பணைமுலையைப் பெருக்கியென்று நோயே
செய்தீர்,நிலமுகி லோதிகுறைத் துயிர்குறைப்ப தோவுமக்கு நீதி தானே.()

தலைவிபாங்கிக்குரைத்தல். கலிவெண்பா.

தானக் குனிகோட்டுத் தந்தியினை யும்விலக்கிக்
கானக் குடிலைக் கலுழியினிற் காத்தளித்துத்
தேனக்க செச்சையந்தார்ச் செந்திலார்க் கன்பரினென்
னூனெக் குருக வுயிரிற் கலந்தார்க்கு
நானக் கமழ்கூந்த னன்னுதலே வீரலையென்
றியானுற் றுரைப்பசெல்வா றின்று.

(கரு)

கலிவெண்பா.

இன்றலகி னல்குரவா லீடுபடுந் தன்மையிரு
ளன்று மருவினையே யொன்றவறஞ் செய்யகிலே
னென்றும் பிறப்பினுமிப் பெற்றியே முற்றுமெனக்
கன்று மனத்தாற் கவலுழந்து நில்லாது
குன்றெறிந்த செந்திற் குழகானின் பூங்கழற்கால்
சென்றுதொழு மாறன்பு செய்.

(கசு)

தாய்கூற்று. கலித்துறை.

செய்யவ னேயெனுஞ் செந்திலெந் தாயெனுஞ் செவ்வடிவேற்
கையவ னேயெனுங் கங்கைமைந் தாவெனுங் கண்டுளிநீர்
பெய்யவ நேகந் தரமெழும் போய்விழும் பிள்ளைமதி
வெய்யவ னேயெனும் வேறறி யாளென் விளங்கிழையே.

(கஎ)

தலைவிகூற்று. ஆசிரியவிருத்தம்.

இழைக்குங் கூடலு மென்னிரு கண்களி னிமைகளு மிரவெல்லா
முழைக்குங் கூடல மந்தறெதன் செந்திலா னொருகணங் கூடாவான்
[illegible] வமயினை மலர்க்கரங் கோட்டியே வார்முலை பிரோட
[illegible] தாடிய மணிச்சிலம் பலம்புசே வடியானே

(கஅ)

### கலிப்பா.

அடியாரி லுளமுருகன் பறியாத வென்புன்சொன்
முடியாத நக்கீரர் முருகாற்றுப் படையாமோ
தொடியார்பன் னிரண்டுதடந் தோளார்க்குத் திருச்செந்தில்
வடிவாய்வள் ளுகிர்ச்சேவல் வலனுயர்த்த கொடியார்க்கே. (கக)

### வெண்பா.

ஆர்க்குங் களிவண் டறையும் பொழிற்றிருச்செந்
தூர்க்கன் புடனீசென் றுள்ளமே—கூர்க்கு
மெழுகமயினு நீபிறப்பி லெய்தாமற் சேயைத்
தொழுமயிலும் வேலுமெனச் சொல். (ங)

## திருச்செந்திற்கலம்பகம்

## முற்றிற்று.

பலரும் பாராயணம் செய்யும்

## திருச்செந்தில்

# முருகக்கடவுள் தோத்திரப்பா

## முப்பதின் முதற் குறிப்பு.


| | | | |
|---|---|---|---|
| எனதேகுகனிசெ | ௨. | பகவானராசமழி | ௪௮. |
| கொள்ளார்பவ | ௩. | முயல்பவர்முய | ௪௯. |
| கற்றூறு நீடுழிக | ௪. | இன்பமுந்துன்பமு | ௫௩. |
| மலர்தலைஞால | ௭. | தோகைபுறமாக்கு | ௫௭. |
| புயமாறிரண்டு | ௮. | வதிரும்பசிலைக்க | ௬௰. |
| படைக்கணார்மை | ௯. | வானமும்புவியுமா | ௬௧. |
| நெறிக்குஞ்சித்த | ௰௧. | வழுயர்கடாயானை | ௬௩. |
| அளியாதுஞ்சோ | ௰௪. | தம்பிரான்செந்தி | ௭௨. |
| வரங்கொண்டவு | ௨௰. | ஆறுமுகமேன்க | ௭௮. |
| பிழையாததொண் | ௨௨. | பாடாதநாவுர்ப | ௮௪. |
| பால்வெள்ளைநீற்ற | ௩௫. | தில்லாதகிபுநிலை | ௮௭. |
| இடத்தானையாறெழு. | ௩௬. | பணிப்பகைமயிலு | ௮௮. |
| [illegible]கலாட்டெனப் | ௪௰. | இன்றுலகினல்கு | ௯௩. |
| மூழ்க[illegible]ப்புதநீ | ௪௩. | அடியாரிலுளமு | ௯௯. |
| [illegible]மிரவிபு | ௪௭. | ஆர்க்குங்களி | ௱. |

ஸ்ரீ:

# அநுமான விளக்கம்

## முகவுரை

இது பஞ்ச காவியங்களில் ஒன்றாகிய மணிமேகலை யின்(உகூ ஆம் பாட்டு) "தவத்திறம்பூண்டு தருமங்கேட்டகாதை" யிலுள்ள கருத்தளவை விஷயங்களை யுட்கொண்டு எழுதப் பெறுவது.

இப்பாட்டினுள், மெய்யுணர்விற்குச் சிறந்த பிரத்தியக்ஷம், அநுமானம், ஆகமம் என்னும் மூவகைப்பிரமாணங்களில் ஆகமம் எல்லார்க்கும் பொதுமையினன்றி அவரவர் மதம் பற்றி வெவ்வேறாய் மாறுபட்டு நிற்றலின் அதனைச் 'சிரத்தேயம்' எனவிலக்கி, எஞ்சிய பிரத்தியக்ஷாநுமானங்களையே பிரமாணமாகக்கொண்டு, பிரத்தியக்ஷம் யாவராலும் எளிதினுணரக்கிடத்தலின் அதனைத் தொகுத்தும், அநுமானம் நூலுணர்ச்சியாலன்றி எளிதினுணர்தல் கூடாமையால் அதனை வகுத்தும் விரித்தும் நூலாசிரியர் கூறியிருக்கின்றனர்.

இப்பாட்டுப், பிரத்தியக்ஷத்தால் நிர்விசேடம், சவிசேடம் என்னும் இருவகை மெய்யுணர்வுமுண்டாகுமென்றும், காரியாநுமானம், காரணாநுமானம், சாமானியாநுமானம் என்று அளவைவாதியாற் பகுக்கப்பட்ட அநுமானங்கள் பிழைபடுமென்றும், காரியார்நுவய வெதிரேகங்கள் சிறந்தனவாயினும் அவற்றை மாத்திரங்கொண்டு துணிதல் தவறுறுமென்றும், தவறாது துணிதற்கு நல்லுறுப்புக்களே வேண்டுமென்றும், பிறர்கூறும் ஐவகையுறுப்புக்களிலுள்ள உபநயமும் நிகமனமும் திட்டாந்தத்துள் அடங்குதலாற் பக்கம், ஏது, திட்டாந்தம் என்னும் மூவகையுறுப்புக்களே [illegible]லமென்றும், அவை குற்றமுடையனவாயிற் போலியுறுப்புக்களாகி அநுமானத்தை ஆபாசப்படுத்துமென்றும் கூறி, அப்போலியுறுப்புக்களையுமாறு அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் பகுப[illegible]

செய்து குறியீடுதந்தும், இலக்கணங்கூறியும், உதாரணங்காட்டியும உபபாதிக்கப்பெற்று முற்றுப் பெற்றிருக்கின்றது.

இவ்விஷயங்கள் புத்தமதத்தினர் கூற்றினுள்வைத்துக் கூறப்பட்டனவாயினும், பெரும்பாலும் தருக்கமதம் பற்றியும் சிறுபான்மை பிறமதங்கள் பற்றியும் உதாரணங்காட்டப் பெற்றமையால், இவ்வநுமானவளவை எல்லோர்க்கும் ஒப்புமாறு சொல்லப்பட்டதெனத் தோன்றுகின்றது. ஆயினும் தருக்க நூலுக்கு விலக்காயுள்ள அநந்நுவயாநுமானமொன்று இதனுட் கொள்ளப்படுகிறது. இது தருக்கநூலுக்கு மாறுபாடு.

தருக்கத்தில் ஏதுக்குற்றமடைதல்பற்றி ஏதுப்போலியொன்று கொள்வதுபோல, மற்றை உறுப்புக்களும் குற்றமடைதல்பற்றிப் பக்கப்போலி, திட்டாந்தப்போலி என்னும் இருவகைப்போலியுறுப்புக்களுமிதனுட் கொள்ளப்படுகின்றன. தருக்கத்தில் ஏதுப்போலி ஐந்துவகையும் ஒன்பது விரியுமாம். இதில் மூன்றுவகையும் பதினன்கு விரியுமாம். இவ்வாறே இன்னும் சிலவுள. இவையெல்லாம் தருக்கநூலுக்கு மாறுபாடில்லாத வேறுபாடு.

இதனுட் கூறப்படும் மூவகைப்போலிகளும் தருக்கத்துள்ள ஏதுப்போலியுள்ளும் தோல்வித்தானமுதலியவற்றுள்ளும் அடங்குவனவாயினும், கற்போர் எளிதினுணர்தற்பொருட்டுத் 'தானெடுத்துமொழித' லாகி இதனுள் ஒருங்கு கூறப்பட்டுள்ளன.

இதிற் சில போலியுறுப்புக்கள் வேறுசில போலியுறுப்புக்களைப் பற்றியே வருகின்றன. விருத்தவியபிசாரி என்னும் ஏதுப்போலி அநுமானவிருத்தம் என்னும் பககபோலியைப்பற்றியே வருகின்றது. இதுபோல் இன்னுஞ் சிலவுள. இவற்றை வேறுபிரித்துப் பெயரிடுவது தருக்கமுறையன்றாயினும், சான்றோருரைத்தமையான் அதன்காரணம் ஆராயத்தக்கது.

இதன் கண்ணுள்ள குறியீடுகளெல்லாம் வடமொழிப்பெயராய் அமைந்திருக்கின்றன. அவை தமிழிற் சிவஞானபோதத்தின் பாண்டிப்பெருமாளுரை முதலிய சிலவிடங்களில் வழங்கப்பட்டுள்ளன.

இப்பாட்டிலுள்ள குறியீடுகள் வடமொழியாதலாலும், உதாரணங்கள் பெரும்பான்மை நூல் வழக்கும் மதவழக்கும்பற்றியிருத்தலாலும், இது, தமிழுடன் வடமொழியும் தருக்கமும் பிறமதவழக்குக்களும் சிறிதேனும் பயின்றார்க்கல்லது பொருளினிதுவிளங்குதல் அரிது. இதுகருதியே இச்செய்யுள் அறிதற்கரிய விஷயங்களை உலக நடைபோலும் ஆற்றொழுக்கான தெளிவான நடையில் வெளியிடுகின்றது.

இது தன்னைக்கற்பவர்க்கு மனமகிழ்ச்சியுண்டாக அரியவிஷயங்களைவிளக்கி அறிவை வளர்க்கும் ஆற்றலுடையது. ஆதலால் இச்செய்யுள்கற்பவர்க்குப் பொருள் விளங்குமாறு என்சிற்றறிவிற்கெட்டியமட்டில் ஒருரையெழுதவிரும்பி அவ்வுரையும் படிப்பவர்க்கு இனிது விளங்குமாறு இப்பாட்டிலுள்ள விஷயங்களை விளக்கியும், உதாரணங்களை வரையறையிட்டுக் காட்டியும், நூல்வழக்கும் மதவழக்குமாகியுள்ள அவ்வுதாரணங்களை இயன்றவளவு உலகவழக்கில் வைத்துக்காட்டியும் 'அநுமானவிளக்கம்' எனப்பெயர் தந்து இதனைச் 'செந்தமிழ்' வாயிலாக வெளியிடுகின்றேனாதலால், கற்றகேட்டபெரியோர்கள் இதைக்கண்ணுற்றுச் செய்தருளும் திருத்தங்களைப்பெற்று அவற்றைப்பிழைதிருத்தத்திலும் அடுத்தபதிப்பிலும் சேர்த்துக் கொள்வதுடன், அவர்களுக்கு மிக்கநன்றிபாராட்டவுங் கடப்பாடுடையனாகின்றேன்.

இங்ஙனம்,

மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை.

திரு. நாராயணையங்கார்,
தலைமையுபாத்தியாயன்,
சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை.

ஸ்ரீ:

# அநுமான விளக்கம்.

இவ்வநுமானவிளக்கம் கற்கப்புகுவார்க்கு முதலிற்றெரிந்து கொள்ளவேண்டும் பொருள்கள் ஐந்துள: அவை;—துணிபொருள், பக்கம், ஏது, சபக்கம், விபக்கம் என்பனவாம். அவற்றுள், துணிபொருளாவது ஒன்றன்கண் ணுள்ளதாகவேனும், ஒன்றற்குரியதாகவேனும் துணியப்படும் யாதேனும் ஒருபொருளாம். உதாரணம்;— 'மலையில் நெருப்புள்ளது' என்றால் மலையின்கணு உள்ளதாகத் துணியப்படுவது நெருப்பாதலால் நெருப்பு இதில் துணிபொருள். இவ்வாறே குடம் அழிதற்பாலது என்பதில் அழிவும், கொற்றன் அறிவுடையான் 'என்பதில் அறிவும், சாத்தன் சுகமுடையான் என்பதிற் சுகமும் துணிபொருளாம். இத்துணிபொருள் சாத்தியமென்றும், சாத்தியதன்ம மென்றும், தருமமென்றும், விசேடணமென்றும் வழங்கப்படும்.

## பக்கம்.

பக்கப்பொருளாவது துணிபொருளுடைத்தாகக் கருதப்படுவது. உதாரணம்;— 'மலை நெருப்புடைத்து' என்பதில் துணிபொருள் நெருப்பு; அதனையுடைத்தாகக் கருதப்படுவது மலையாதலால் அம்மலையே பக்கமாகும். இவ்வாறே 'குடம் அழிதற்பாலது' என்பதிற் குடமும், 'கொற்றன் 'அறிவுடையான்' என்பதிற் கொற்றனும், 'சாத்தன் சுகமுடையான்' என்பதிற் சாத்தனும் பக்கமாம். இப்பக்கப்பொருள் தன்மியென்றும், விசேடியமென்றும் வழங்கப்படும்.

## ஏது.

ஏதுப் பொருளாவது துணிபொருளோடு ஒருநிலைக்களத்திருக்கும் பொருளாம். (நிலைக்களம் - இடம்) உதாரணம்;— 'மலை நெருப்படைத்து; புகையுடைமையால்' என்பதனுள் துணிபொருள் நெருப்பு; அதனோடு ஒருநிலைக்களத்தில் (பாகசாலை முதலியவற்றில்) இருப்பது புகையாதலால் அப்புகை ஏதுப்பொருளாயிற்று. அப்பு

கையே புகையுடைமை எனவும் படும். இவ்வாறே 'குடம் அழிதற் பாலது; ஆக்கப்படுதலால்' என்பதில் துணிபொருள் அழிவுடைமை; அதனோடு ஒருநிலைக்களத்தில் (அழிந்தபடத்தில்) இருப்பது ஆக்கப் பாடாதலால் அவ்வாக்கப்பாடு ஏதுப்பொருளாயிற்று. இவ்வாறே மற்றுங்காண்க. இவ்வேதுவைச் சாதனமென்றும், பக்கதன்மமென் றும் வழங்குவதுண்டு.

## சபக்கம்.

சபக்கமாவது துணிவானுக்கு அத்துணிபொருள் முன்பு வெளி ப்பட்டுள்ள விடம். உதாரணம்;—'மலை நெருப்புடைத்து' என்ப தற்குச் சபக்கம் பாகசாலை முதலியவாம். எவ்வாறெனில்;—மலை நெருப்புடைத்து என்பதில் துணிபொருள் நெருப்பு; இது துணி வானுக்குப் பாகசாலை முதலியவற்றில் முன்பு வெளிப்பட்டிருத்த லால் அப்பாகசாலை சபக்கமெனப்படும். 'குடம் அழிதற்பாலது' என்பதில் துணிபொருள் அழிவுபாடு; அது துணிபவனுக்கு முன்பு ஆக்கப்பட்டழிந்த படமுதலியவற்றுள்வெளிப்பட்டிருத்தலால் அப் படமுதலிய அழியப்பட்டன சபக்கமாம். இவ்வாறே பிறவற்றிற் குங் கண்டுகொள்க.

## விபக்கம்.

விபக்கமாவது துணிபொருளில்லாத இடம். உதாரணம்;—மலை நெருப்புடைத்து என்பதற்கு ஆறறுவெள்ள முதலியனவாம். எவ் வாறெனில்;—துணிபொருளாகிய நெருப்பில்லாதவிடம் ஆற்றுவெ ள்ளமுதலியவாதலால் அவ்வாற்றுவெள்ள முதலிய நெருப்பில்லாத பொருள்களெல்லாம் விபக்கமாம். 'குடம் அழிதற்பாலது' என்ப தற்குத் துணிபொருளாகிய அழிவுபாடில்லாத ஆகாயம் முதலிய நித்தப் பொருள்களெல்லாம் விபக்கமாம். மற்றும் இவ்வாறே விபக்கப்பொருளறிக.

தருக்கநூலார் கூறும் சுவார்த்தம், பரார்த்தம் என்னும் இருவகை அநுமானங்களுள் பரார்த்தாநுமானமே இங்கு எடுத்து க்கொள்ளப்பட்டது. அது, துணிந்தோன் துணியாதானை [illegible] கூறும் ஐவகை யுறுப்புக்களையுடைய வாக்கியமாம். அவ்வுறுப்புக

கள்—பக்கம், ஏது, திட்டாந்தம், உபநயம், நிகமனம் என்பனவாம். இவற்றின் இலக்கணங்கள் பின்பு விளக்கலாகும். இங்கு உதாரண மாக ஓர் அநுமானத்துள் அவை வருமாறு;

## அநுமான வடிவு.

'இம்மலை நெருப்புடைத்து; புகையுடைமையால்; யாது யாது புகையுடைத்து அது அது நெருப்புடைத்து, பாகசாலைபோல; இதுவும் அங்ஙனம்: (புகையுடையது) ஆதலினிங்ஙனம்' (நெருப்பு டையது) என்பதாம்.

இதனுள், 'இம்மலை நெருப்புடைத்து' என்னும் முதற்கூற்றுப் பக்கமென்னும் உறுப்பாம். (இது முன் சொன்ன பக்கப்பொருள ன்று) இதுவே பிரதிக்ஞை எனவும், மேற்கோள் எனவும் பெயர் பெறும். 'புகையுடைமையால்'' என்னும் இரண்டாங்கூற்று ஏது வென்னும உறுப்பாம். (இது முற்கூறிய ஏதுப்பொருளன்று) இது பக்கதன்மவசனமெனவும் படும். 'யாது யாது புகையுடையது அது அது நெருப்புடையது: பாகசாலை போல' என்னும் மூன்றாங் கூற்று த்திட்டாந்த வுறுப்பாம். இஃது உதாரண மெனவும் பெயர் பெறும். 'இதுவும் அங்ஙனம்' என்னும் நான்காங்கூற்று உபநய மென்னும் உறுப்பாம். 'ஆதலின் இங்ஙனம்' என்னும் ஐந்தாங்கூற்று நிகமனம் என்னும் உறுப்பாம்.

இனி, அநுமானம்— அந்நுவயாநுமானம், அநந்நுவயாநுமா னம் என இருவகைப்படும். அவை ஒவ்வொன்றும்—காரியாநு மானம், அகாரியாநுமானம் என இருவகைப்படும். இவ்வநுமானங் களை ஐவகை யுறுப்புக்களுடன் பின்வரும் அநுமானவரையறை பிற் கண்டுகொள்க.

இவ்வநுமானங்கள் முறையே துணிபொருளின் காரியம் ஏது வாதல்பற்றிக் காரியாநுமானம் எனவும், துணிபொருளின் காரிய மல்லாத உடனிகழ்வதொன்று ஏதுவாதல்பற்றி அகாரியாநுமானம் எனவும்படும். இவையே அந்நுவய வியாத்தியுள்ளன அந்நுவய மெனவும் அந்நுவய வியாத்தியில்லன அநந்நுவயமெனவும்படும்.

அந்நுவய வியாத்தியாவது ஏதுவை யுடைய பொருளெல்

# அநுமான வரையறை.

| அநுமானத்தின் பெயர் | | அந்நுவயாநுமானம் | | | | அநந்நுவயாநுமானம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | காரியாநுமானம் | | அகாரியாநுமானம் | | அகாரியாநுமானம் | |
| உறுப்புக்களின் பெயர். | பக்கம் | மலைநெருப்புடைத்து | | குடம்அழிதற்பாலது | | இவ்வெளியிடத்திற் குடமில்லை | |
| | ஏது | புகையுடைமையால் | | ஆக்கப்படுதலால் | | தோன்றாமையால் | |
| | | சாதன்மியம் | வைதன்மியம் | சாதன்மியம் | வைதன்மியம் | சாதன்மியம் | வைதன்மியம் |
| | திட்டாந்தம் | யாதுயாதுபுகையுடையது அது அது நெருப்புடையது, பாகசாலை போல. | யாதுயாது நெருப்பில்லாதது அது அது புகையுமில்லாதது, ஆற்றுவெள்ளம் போல. | யாதுயாது ஆக்கப்படுவது அது அது அழிதற்பாலது, படம் போல. | யாது யாது அழிதற் பாலதன்று அது அது ஆக்கப்படாதது. | யாது யாது இல்லது அது அது தோன்றாது; முயற்கொம்பு போல. | யாது யாது தோன்றுவதோ அது அது உண்டு, உள்ளங்கையிலுள்ள நெல்லிக்கனி போல. |
| | உபநயம் | இதுவும் அங்ஙனம் (புகையுடையது) | இதுவும் அங்ஙனமன்று (புகையில்லாததன்று) | இதுவும் அங்ஙனம் (ஆக்கப்படுவது) | இதுவும் அங்ஙனமன்று (ஆக்கப்படாததன்று) | இதுவும் அங்ஙனம் (தோன்றாதது) | இதுவும் அங்ஙன மன்று (தோன்றுவதன்று) |
| | நிகமனம் | ஆதலின் இங்ஙனம் (நெருப்புடையது) | ஆதலின் இங்ஙனமன்று (நெருப்பில்லாததன்று) | ஆதலின் இங்ஙனம் (அழிதற்பாலது) | ஆதலின் இங்ஙனமன்று. அழியத்தகாததன்று) | ஆதலின் இங்ஙனம் (இல்லது) | ஆதலின் இங்ஙனமன்று (உள்ளதன்று) |
| குறிப்பு | | துணிபொருளாகிய காரியமான புகை ஏதுவாதலால் இது காரியாநுமானம் எனப்பட்டது. துணிபொருளின் காரியமாகாத உடனிகழ்வது ஏதுவாதலால் அகாரியாநுமானம் எனப்பட்டது. இவ்விரண்டநுமானங்களும் யாதுயாது ஏதுவுடையது அது அது துணிபொருளுமுடையது; என்னும் அந்நுவயவியாத்தியுடைமையால் அந்நுவயாநுமானமெனப்பட்டன. | | | | யாது யாது ஏதுவுடையது அது அது துணி பொருளுடையது என்னும் அந்நுவய மில்லாமையால் இஃது அநந்நுவயாநுமான மெனப்பட்டது. காரியாநுமானம் வந்துழிக்காண்க. | |

லாம் துணிபொருளையும் உடையவாதல். உதாரணம்;— இம் மலை நெருப்புடைத்துப் புகையுடைமையால் என்பதற்கு யாது யாது புகையுடைத்து அது அது நெருப்புடைத்து என ஏதுவாகிய புகையுள்ளவிடமெல்லாம் துணிபொருளாகிய நெருப்பிருத்தலாம். இதனால் இவ்வநுமானம் அந்நுவயாநுமானமெனப்பட்டது. இவ்வா றில்லாதது அநந்நுவயமாம். உதாரணம்:—இவ்வெளி யிடத்திற் குடமில்லை தோன்றாமையால் என்பதற்கு யாது யாது தோன்றாதது அது அது இல்லையெனத் தோன்றாதனவெல்லாம் இல்லையாகாமல், ஆகாயமுதலிய தோன்றாதனவாகியே உள்ள பொருளாதலால் அந்நு வயமில்லை: ஆதலால் இஃது அநந்நுவயாநுமானமெனப்பட்டது.

இவ்வநுமானங்கள் ஐவகையுறுப்பும் பெற்றனவாயினும், ஈற் றிலுள்ள உபநயவுறுப்பும் நிகமனவுறுப்பும் திட்டாந்தவுறுப்புள் அடங்குதலாற் பக்கம், ஏது, திட்டாநதம் என்னும் மூவகையுறுப் புக்களே இந்நூலுட் கொள்ளப்படுகின்றன.

அவற்றுட் பக்கமாவது ;—உபயவாதிகளுக்கும் வெளிப்படைக ளான தன்மியையும், துணிபொருளுடைமையாகிய விசேடணத்தை யும் உடைய வாக்கியமாம. [உபயவாதிகள்-மூவகையுறுப்புக்களைச் சொலபவரும் கேட்பவருமாவர். வெளிப்படைகள்-அறியப்பட் டவை. தன்மி-துணிபொருளுடையதாகக கூறப்படுவது. துணி பொருளுடைமை-துணிபொருளையுடைத்தாதல். விசேடணம்-சிறப் பிப்பது.] இதற்கு உதாரணம்;—'இம்மலை நெருப்புடைத்து' எனக் கூறும் முதலுறுப்பு. இதனுள் துணிபொருள்-நெருப்பு ; அதனை யுடைத்தாகக் கூறப்படுவது மலையாதலால் அம்மலை தன்மியாயிற்று. துணிபொருளுடைமை - நெருப்புடைமை ; அதனால் தன்மியாகிய மலை விசேடிக்கப்பட்டு நெருப்புடைத்து எனக்கூறப்படுதலால், மலை நெருப்புடைத்து என்பது பக்கவுறுப்பாயிற்று. மலை பூமியி லும், நெருப்புடைமை பாகசாலை முதலியவற்றிலும் உபயவாதிக ளுக்கும் அறியக்கிடந்தமையால், அவை வெளிப்படையாயின.

இவற்றுள் எதிரிக்குத் தன்மியாகிய மலை தனித்து வெளிப் பட்டும், விசேடணமாகிய நெருப்புடைமை பாகசாலை முதலியவற் றுள் வெளிப்பட்டும் இருத்தல் வேண்டும். . இவ்வாறன்றி அப்

பொழுது மலையில் நெருப்புடைமை வெளிப்படையாயிருப்பினும், மலையும் நெருப்புடைமையும் இரண்டும் வெளிப்படையில்லையாயி னும், இவற்றுள் யாதேனுமொன்று வெளிப்படையில்லையாயினும் பக்கப்போலியாம். இவ்வாறே மற்றை அநுமானங்களின் பக்கவுறு ப்புக்களிலும் எதிரிக்குத் தன்மி தனியே வெளிப்பட்டும், துணி பொருளுடைமையாகிய விசேடணம் பிறிதொன்றில் வெளிப்பட்டும் இருத்தல் வேண்டும் எனவறிக.

ஏதுவாவது;—முற்கூறிய ஏதுப்பொருளின் பெயரிலாயினும், அதனையுடையதாந் தன்மையின் பெயரிலாயினும் மூன்றனுரு பேனும் ஐந்தனுருபேனும் கொடுத்துப் பக்கவுறுப்பை அடுத்துக் கூறுங் கூற்றும். உதாரணம்;—மலை நெருப்புடைத்து என்பதற்குப் புகையுடைமையால் என்பது. இதில் ஏதுப்பொருள்-புகை; அதனை யுடையதாந் தன்மையின் பெயர் புகையுடைமை. அஃது ஆல் என் னும் மூன்றனுருபுகொடுத்துப் புகையுடைமையால் எனப்பக்கவுறுப் பையடுத்துக் கூறப்படுதலால் அஃது ஏதுவுறுப்பாயிற்று. இவ் வாறு பிற ஏதுவுறுப்புள்ளும் கண்டுகொள்க.

திட்டாந்தமாவது;—ஏதுவுறுப்புக்குப் பின் வியாத்திவசனத் தையடுத்துச் சபக்கவிபக்கப் பொருள்களிலொன்றை உவமவுருபு கொடுத்துக் கூறுவது. இது சாதன்மியம் எனவும், வைதன்மியம் எனவும் இருவகைப்படும்

சாதன்மிய திட்டாந்தமாவது;—சபக்கப்பொருளில் ஒன்றை அவ்வாறு கூறுவது. உதாரணம்:—'மலைநெருப்புடைத்துப் புகை யுடைமையால்' என்பதற்கு 'யாது யாது புகையுடைத்து அது அது நெருப்புடைத்து; பாகசாலை போல' என்பதாம். இதனுள் யாது யாது புகையுடைத்து அது அது நெருப்புடைத்து என்பது வியாத் திவசனம். அதனையடுத்துப் பாகசாலையாகிய சபக்கம், போல என் னும் உவமவுருபுகொடுத்துக் கூறப்பட்டமையால் இது சாதன்மிய திட்டாந்தமாயிற்று. இது சபக்கதிட்டாந்தம் எனவும்படும்.

வைதன்மிய திட்டாந்தமாவது:—விபக்கப் பொருள்களிலொன் றை வியாத்திவசனத்தையடுத்து உவமவுருபுகொடுத்து ஏதுவுறுப்

...க்கூறு பிற்கூறுவதாம். உதாரணம்;—மலை நெருப்புடைத்துப் புகையுடைமையால் என்பதற்கு 'யாது யாது நெருப்பில்லாதது அது அது புகையுமில்லாதது ; ஆற்றுவெள்ளம் போல' எனக்கூறுவது. இதனுள் யாது யாது நெருப்பில்லாதது அது அது புகையுமில்லாதது என்பது வியாத்திவசனம்; அதனையடுத்து விபக்கப்பொருளில் ஒன்றாகிய ஆற்றுவெள்ளம், 'போல' என்னும் உவமவுருபு கொடுத்துக் கூறப்படுதலால், இது வைதன்மிய திட்டாந்தமாயிற்று. இது விபக்கதிட்டாந்தமெனவும்படும். இவ்வாறே பிறஅநுமானங்களுள்ளுந் திட்டாந்தவுறுப்பாமாறு கண்டுகொள்க.

இனி, வியாத்திவாசகமாவது ;—திட்டாந்தவுறுப்பிற் குறுப பாகி ஏதுசாத்தியங்களின் தொடர்பை உடன்பாட்டாலேனும் எதிர்மறையாலேனும் விளக்கிநிற்கும் வாக்கியமாம். இஃது அநுவய சாதன்மியவாசகம், அநுவயவைதன்மியவாசகம், அநந்நுவயசாதன்மியவாசகம், அநநுவயவைதன்மியவாசகம என நான்கு வகைபபடும். இவற்றுள் அநுவயசாதன்மிய வாசகமும், அநுவயவைதன்மிய வாசகமும் அநுவயாநுமானததுககே உறுப்பாகும. அநநுவயசாதன்மிய வாசகமும், அநநுவயவைதன்மிய வாசகமும அநந்நுவயாநுமானத்துக்கே உறுப்பாகும. அவற்றுள்ளும் சாதன்மிய வாசகங்கள் சாதன்மியதிட்டாநதங்களுக்கும், வைதன்மிய வாசகங்கள் வைதன்மியதிட்டாந்தங்களுக்கும உறுப்பாம்.

அவற்றுள் அந்நுவயசாதன்மியவாசகமாவது;—அவ்வவ்வேதுவுள்ளனவெல்லாம் அவ்வத்துணிபொருளுள்ளனவென்பது விளங்க ஏதுக்கூற்றை முற்கூறித் துணிபொருட்கூற்றைப் பிற்கூறுவது. உதாரணம்;—இம்மலை நெருப்புடைத்துப் புகையுடைமையால் என்பதற்கு 'யாதுயாது புகையுடைத்து அது அது நெருப்புடைத்து' என்பதாம். இதனுள் விறகடுக்காலும் சுட்டடுக்காலும் புகையுடைமையெல்லாம் நெருப்புடையனவை என்பது விளங்குதலும், யாது யாது புகையுடைத்து என்னும் ஏதுக்கூற்றுமுன்னும் அது அது நெருப்புடைத்து என்னுந் துணிபொருட்கூற்றுப் பின்னுமாக வருதலால்...

அந்நுவயவைதன்மியவியாத்தி வாசகமாவது;— அவ்வத்துணி பொருளில்லனவெல்லாம் அவ்வவ்வேதுவுமில்லன என்பதுவிளங்கத் துணிபொருளினின்மையின் கூற்றை முற்கூறி ஏதுவினின்மையின் கூற்றைப் பிற்கூறுவதாம். உதாரணம்;—முற்கூறிய அநுமானத்துக்கேயாது யாது நெருப்பில்லாதது அதுஅது புகையுமில்லாதது எனக் கூறுவது. இதன்கண்ணும் முற்கூறியவாறே இலக்கணத்தை அமைத்துக்கொள்க.

அநந்நுவயசாதன்மியவியாத்திவாசகமாவது;— அவ்வத்துணி பொருளுடையவெல்லாம் அவ்வவ்வேதுவுமுடையன என்பது விளங்கத் துணிபொருட்கூற்றை முற்கூறி ஏதுக்கூற்றைப் பிற்கூறுவது உதாரணம்;—'இவ்வெளியான இடத்திற் குடமில்லை; காணப்படாமையால்.' என்பதற்கு, 'யாதுயாது இல்லது அது அது காணப்படாதது' என்பதாம்.

அநந்நுவயவைதன்மியவியாத்திவாசகமாவது;— அவ்வவ்வேதுவையில்லாதனவெல்லாம் அவ்வத்துணிபொருளையுமில்லாதன என்பதுவிளங்க ஏதுவினின்மையின்கூற்றை முற்கூறித் துணிபொருளினின்மையின்கூற்றைப் பிற்கூறுவது. உதாரணம்;—முற்கூறிய அநுமானத்துக்கே 'யாதுயாது காணப்படுவது, அது அது உள்ளது,' எனக்கூறுவது.

இவ்வாறு கூறிமுடித்த இலக்கணங்களையுடைய ஐவுறுப்புகளாலமைந்த அநுமானங்கள் மெய்யுணர்விற்குக் கருவியாகிய பிரமாணமாம். இவற்றாலுண்டாகும் உணர்வும் மெய்யுணர்வாம்.

இம்மூவகை யுறுப்புகளுள் யாதேனுமொன்று குற்றமுடையதாயினும் அது போலியுறுப்பாகி அநுமானத்தை ஆபாசப்படுத்தும் என முன்னமே கூறப்பட்டது. அப்போலியுறுப்புக்களை அறிதலல்லது விலக்குதல் கூடாமையால் அவையுஞ்சிறிது ஆராயத்தக்கன.

அவை பக்கப்போலி, ஏதுப்போலி, திட்டாந்தப்போலி என மூன்றுவகைப்படும். அவற்றுட் பக்கப்போலி ஒன்பதுவகையாம்; அவற்றின் பெயரும் உதாரணங்களும் பின்வரும் பக்கப்போலி வரையறையுட் காண்க.

## பக்கப் போலி வரையறை.

| எண் | பெயர் | உதாரணம் தன்மி (விசேடியம்) | உதாரணம் சாத்தியம் (விசேடணம்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| ௧ | பிரத்தியக்கவிருத்தம் | நெருப்புச் | சூடில்லது. | பொதுக் கூற்று. |
| ௨ | அநுமானவிருத்தம் | குடம் | அழிதற் பாலதன்று. | ௸ |
| ௩ | அவசனவிருத்தம் | தாய் | மலடி. | ௸ |
| ௪ | உலகவிருத்தம் | நெருப்புத் | தீயன்று. | ௸ |
| ௫ | ஆகமவிருத்தம் | வல்லினம் | ஙஞணநமன | இலக்கணம் வல்லான் கூற்று. |
| ௬ | அப்பிரசித்தவிசேடணம் | பால் | வெண்ணிற முடையது. | பிறவிக்குருடனை நோக்கிய கூற்று. |
| ௭ | அப்பிரசித்தவிசேடியம் | நிறம் | அறியத் தகுவது. | இதுவும் அவனை நோக்கிய கூற்று. |
| ௮ | அப்பிரசித்தோபயம் | மதிநிறம் | வெண்மை. | இதுவும் அவனை நோக்கிய கூற்று. |
| ௯ | அப்பிரசித்தாசம்பந்தம் | நீ | ஆண்மகன். | ஒருவனை நோக்கிய கூற்று. |

## பிரத்தியக்க விருத்தம்.

(௧) பிரத்தியக்க விருத்தமாவது •பிரத்தியக்கப் பிரமாணத்துக்கு மாறுகப்பக்கவுறுப்புக்கூறுவது. உதாரணம்;—'நெருப்புச் சூடில்லது' என்பதாம்; இக்கூற்று, நெருப்பில் தீண்டுமளவிற் சூடுள்

ளதாகப் புலப்படத்தெரிந்துள்ள பிரத்தியக்கப் பிரமாணத்துக்கு மாறுபடுதலால் பிரத்தியக்க விருத்தமாயிற்று. இன்னும் இது போலவே, 'உப்பு இனிய சுவையுடையது' 'பால் கருநிறமுடையது' 'சத்தம் கட்புலமாவது' என்றற்றொடக்கத்தனவெல்லாம் இப்பக்கப்போலியாம். [பிரத்தியக்கம்-ஞானேந்திரியம் ஐந்தாலும், மனத்தாலும் புலப்படக்காணுதல். விருத்தம்-மாறுபட்டது.] இதனால் பிரத்தியக்கப்பிரமாணத்துக்கு மாறுபடாத பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று.

## அநுமான விருத்தம்.

(உ) அநுமானவிருத்தமாவது அநுமானப்பிரமாணத்துக்கு மாறாகப் பக்கவுறுப்புக்கூறுவது. உதாரணம்; 'குடம் அழிதற்பாலதன்று' என்பதாம். இக்கூற்று, "குடம் அழிதற்பாலது; ஆக்கப்படுதலால்; யாது யாது ஆக்கப்படுவது அது அது அழிதற்பாலது படம்போல; யாது யாது அழிதற்பாலதன்று அது அது ஆக்கப்படுவதன்று; ஆன்மாப்போல." எனக்குடத்தின் அழிவுபாடுதுணிந்த பிரமாணமாகிய அநுமானத்துக்கு மாறுபடுதலால் அநுமான விருத்தமாயிற்று. இன்னும் இதுபோலவே 'இந்துமுதலிய கோள்கள் இயங்குவனவல்ல' 'உடுக்கள் தீப்பொறியளவுள்ளன' 'இரண்டு குண்டு நூல்வரை நேர்வரை' 'நீர்மட்டத்தின் வரை செவ்வரை' என்றற்றொடக்கத்தனவும் இவ்வநுமானவிருத்தமாம். இதனால் அநுமானப்பிரமாணத்துக்கு மாறுபடாமலும் பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று.

## சுவசன விருத்தம்.

(௩) சுவசனவிருத்தமாவது தன்கூற்றுக்கு மாறாகப் பக்கவுறுப்புக்கூறுவது. உதாரணம்;—'தாய் மலடி' என்பதாம். இக்கூற்றுள், மகப்பெற்றாள் என்னும் பொருளுள்ள தன் கூற்றாகிய 'தாய' என்னும் எழுவாய்க்கு மாறாக, மகப்பெறாற்றாளென்னும் [illegible] ளுள்ள 'மலடி' யென்னும் பயனிலையைக் கூறுதலால் இது சுவசன விருத்தமாயிற்று. இது போலவே 'ஏறு பெண்விலங்கு' 'நிசி பகற்பொழுது' 'பிராணி உயிரில்லது' என்றற்றொடக்கத்தனவெல்லாம்

இப்பக்கப்போலியாம். [சுவசனம்-தன்சொல்] இதனால் தன்சொல்லாகிய எழுவாய்க்கு மாறுபடாத பயனிலையுடையதாகவும் பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று.

## உலக விருத்தம்.

(௪) உலகவிருத்தமாவது உலக வழக்குக்கு மாறாகப் பக்கவுறுப்புகூறுவது. உதாரணம்;—'நெருப்புத் தீயன்று' என்பதாம். இக்கூற்று, 'நெருப்புத்தீ' யென்வழங்கும் உலகவழக்குக்கு மாறுபடுதலால் உலகவிருத்தமாயிற்று. இன்னும் இதுபோலக் கோமாதம் பதினைந்துநாள் கொண்டது' 'வருடம் பத்துமாதம் கொண்டது' 'வெள்ளாடு வெண்மைநிறமுடையது' 'பச்சரிசி பசுமைநிறமுடையது' என்றற்றொடக்கத்தனவெல்லாம் இப்பக்கப்போலியாம். [உலகம்-உலகவழக்காகிய மரபு] இதனால் மரபுவழுவாமலும் பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று. [மரபு-உயர்ந்தோரெல்லோராலும் எப்பொருள் எச்சொல்லால் எவ்வாறு வழங்கப்படும் அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறு வழங்குதல்.]

## ஆகம விருத்தம்.

(௫) ஆகமவிருத்தமாவது தனக்குடம்பாடான நூலுக்கு மாறாகப் பக்கவுறுப்புக் கூறுவது. உதாரணம்;—(இலக்கணம் வல்லானொருவன்) "வல்லினம் ஙஞணநமன" எனக் கூறுவதாம். இக்கூற்று "வல்லினமென்ப கசடதபற" "மெல்லினமென்ப ஙஞணநமன" என்னும் தனக்கு உடம்பாடான இலக்கணநூலுக்கு மாறுபடுதலால் ஆகமவிருத்தமாயிற்று. மூற்றும் (வைதிகன்) "சுவர்க்கபோகம் இல்லை" எனபதும் (புத்தன்) "உலகம் நித்தியம்" என்பதும் (சமணன்) "வேள்வி புண்ணிய கர்மம்" என்பதும் இவை போல்வனவும இப்பக்கப்போலியாம். [ஆகமம்-வேதம்முதலிய நூல்] இதனால் வாதி தனக்குடம்பாடான நூலுக்கு மாறுபடா பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று. பிரத்தியக்ஷ முதலிய இவையைந்தும் ஐயந்திரிவுகளுக்கு இடமாதல் ... விற்குத் தடையாகிப் பக்கப்போலியாயின.

## அப்பிரசித்த விசேடணம்.

(௬) அப்பிரசித்த விசேடணமாவது எதிரிக்குத் தன்மி மாத்திரம் அறியப்பட்டிருக்க அதனை, அவனால் அறியப்படாத துணிபொருளால் விசேடித்துப் பக்கவுறுப்புக் கூறுவதாம்; உதாரணம்;—பிறவிக்குருடனை நோக்கிப் "பால் வெண்மை நிறமுடையது" என்பதாம். இதனுள் தன்மியாகியபால் அவனுக்கு உணவாகிமுன்பு வெளிப்பட்டுள்ளது. அதனை அவனுக்கு வெளிப்படையாகாத வெண்மை நிறமாகிய துணிபொருளால் விசேடித்துக் கூறினமையால் இஃது அப்பிரசித்த விசேடணமாயிற்று. (இதுவே பாலை இருட்டின்கணுண்டுணர்ந்தும் வெண்மை நிறத்தைச் சுண்ணம்பிற் கண்டுணர்ந்துமுள்ள ஒருவனுக்குக் கூறப்படிற் பக்கப்போலி யாகாது.) மற்றும் பேயறியாதானை நோக்கி "இக்கற்றறி பேயுடைத்து" என்பதும், மந்திரமறியாதானை நோக்கி "இங்குள்ளோன் மந்திரவாதி" என்பதும, இவைபோல்வனவும் இப்பக்கப் போலியாம். [அப்பிரசித்தம-அறியப்படாதது.] இதனாற் பக்கவுறுப்பிற் கூறப்படும் விசேடணமாகிய துணிபொருள் எதிரிக்குப் பிறிதோரிடத்து அறியப்பட்டதாயிருத்தல் வேண்டுமென்றதாயிற்று. தன்மியின்கண் அறியப்பட்டுள்ளதாயின் 'அப்பிரசித்தாசம்பந்தம்' என்னும் பக்கப்போலியாம, இது, விசேடண வுணர்ச்சியின்மையால் வாக்கியப்பொருளுணர்வுண்டாகாமைபற்றி அறியாமைக் இடமாகிப் பக்கப்போலியாயிற்று.

## அப்பிரசித்த விசேடியம்.

(௭) அப்பிரசித்த விசேடியமாவது எதிரிக்கு வெளிப்படையாகாதவொன்றைத் தன்மியாக வைத்து, வெளிப்படையான துணிபொருளால் அதனை விசேடித்துப் பக்கவுறுப்புக்கூறுவது. உதாரணம்;—பிறவிக்குருடனை நோக்கி "நிறம் அறியத்தகுவது" என்பதாம். இதனுள் அறியத்தகுவதாகிய விசேடணம் அவனுக்கு உண்முதலியவற்றுள் வெளிப்பட்டிருக்க அதன் விசேடியமாகிய நிறம் ஒருவாற்றானும் வெளிப்படையாகாமையால் இஃது அப்பிரசித்த விசேடியமாயிற்று. வெளிப்படையாயிற் பக்கப்போலியாகாது.

இரும்பு, நெய்விளக்கு, தீப்பொறி முதலிய நெருப்புள்ளனவெல லாம. விபக்கப்பொருள்-ஆற்றுவெள்ளம், பனிக்கட்டி, ஆறின சாம்பல் முதலிய நெருப்பில்லனவெல்லாம். இவற்றுள் ஏதுப்பொரு ளாகிய புகையின்மை சபக்கத்தில் பாகசாலை, சூளை, முதலிய ஏக தேசத்தை யொழித்து, ஒழிந்த ஏகதேசமாகிய சிவக்கக்காய்ச்சிய இரும்பு, நெய்விளக்கு, தீப்பொறி, முதலியவற்றுள் உள்ளதாய், நெருப்பில்லாது விபக்கமாகிய ஆற்றுவெள்ளம், பனிக்கட்டி முத லியவற்றுளெல்லாம் வியாபித்திருத்தலால் இது சபக்கைகதேசவிரு த்தி விபக்கவியாபியாயிற்று.

ஏகதேசம்-சிறுபான்மை. அஃது இங்கு முற்றுப்பொருளின் மறுதலையாகிய குறைப்பொருளுணர்த்திநின்றது. இதனால் ஏகதேச மென்பதற்கு முற்றுப்பொருளாகாத சிறுபான்மை, செமபாதி, பெரு ம்பான்மைகளாகிய குறைப்பொருளெல்லாம் பொருளாகக்கொள்க. விருத்தி-இருப்பது. வியாபி-முற்றுமிருப்பது. மற்றும் இவ்வாறே " குதிரைமிருகம்: கோம்பில்லாமையால்" என்றற்றொடக்கத்தனவும் இவ்வேதுப்போலியாமென வறிக.

## விபக்கைக தேசவிருத்தி சபக்கவியாபி.

ச. விபக்கைக தேசவிருத்தி சபக்கவியாபியாவது, விபக்கத் துள் ஏகதேசத்துள்ளதாகிச் சபக்கங்களில் வியாபித்திருக்கும் பொ ருளை ஏதுவாகக் கூறுவது. உதாரணம:—"மலை புகையுடைத்து; நெருப்புடைமையால்." என்பதாம். இதனுள் நெருப்புடைமை ஏதுப்பொருள். அது புகையில்லாது விபக்கமாகிய பொருள்களில் ஏகதேசமாகியசிவக்கக்காய்ச்சிய இரும்பு தீப்பொறிமுதலியவற்றுள் உள்ளதாய், புகையுடையதாகிச் சபக்கமாகிய பாகசாலை, சூளை முத லியவற்றிலெல்லாம் வியாபித்து நிற்றலால் இது விபக்கைகதேசவிரு த்தி சபக்கவியாபியாயிற்று. மற்றுமிவ்வாறே " இப்பறவை காக் கை; கருநிறமுடைமையால், " " இவன் சமணன்; திருநீறணியாமை யால் என்றற்றொடக்கத்தனவெல்லாம் இவ்வேதுப்போலியாமென

## உபயைகதேசவிருத்தி.

௫. உபயைகதேசவிருத்தியாவது, சபக்கவிபக்கங்களிரண்டிலும் ஏகதேசத்துள்ளதொரு பொருளை ஏதுவாகக் கூறுவது. உதாரணம்.—"காக்கை பறவை, கருநிற முடைமையால்." என்பதாம். இதனுட் கருநிறமுடைமை ஏதுப்பொருள். அது, பறக்குந்தன்மையுடைய சபக்கமாகிய கொக்கு முதலிய பலவகைப் புள்ளினங்களுள் ஏகதேசமாயுள்ள கரிக்குருவி முதலியவற்றுள்ளும், பறக்குந்தன்மையில்லாத விபக்கமாகிய விலங்கு முதலியவற்றுள் ஏகதேசமாகிய யானை முதலியவற்றிலும் இருத்தலால் இஃது உபயைகதேசவிருத்தியாயிற்று. உபயம்-இரண்டு. அஃது இங்குச சபக்கவிபக்கங்களைக் குறிப்பாலுணர்த்திற்று. மற்றும இவ்வாறே "இவன் பார்ப்பான்: திருநீறணிதலால்." "முயல வாலுடைய்து: காலுடையதாதலால்." என்றற்றொடக்கத்தனவெல்லாம் இப்வேதுபபோலியாமெனவறிக.

சபக்கைகதேசவிருத்தி விபககவியாபி முதலிய மூன்றினும் ஏதுப்பொருள் துணிபொருளோடு சபக்கத்தினின்று துணிபொருளுணர்வையும, அதன் மறுதலையோடு விபக்கத்தினின்று மறுதலையுணர்வையும் நிகழச்செய்து, துணிபொருளில ஐயப்பாட்டையுண்டாக்கலால் அவை ஏதுப்போலியாயின.

## விருத்தவியபிசாரி.

சு. விருத்தவியபிசாரியாவது, துணிபொருளின் மறுதலைப்பட்டபொருளைத்துணியும விருத்தவேதுவுக்கும் இடங்கொடுக்கின்ற தன்மியிலுள்ளபொருளை ஏதுவாககூறுவது. உதாரணம்:—"வௌவால் முட்டையுட் பிறபபது: பறவையாதலால்: யாதுயாது பறவை அது அது முட்டையுட் பிறப்பது; கிளிபோல." என்பதாம், இதனுள் பறவையாதல்-ஏதுப்பொருள். அது, தன்றுணிபொருளின் மறுதலைப்பொருளைத் துணியும் விருத்தவேதுவாகிய தோற்செவியுடைமைக்கும இடங்கொடுக்கின்றதன்மியாகிய வௌவாலில் இருத்தலால், இது விருத்தவியபிசாரியாயிற்று.

[illegible] தோற்செவியுடைமை விருத்த வேது[illegible] [illegible] முட்டையுட் பிறப்பதன்று; தோற்செவியுடைமையா[illegible]

அறிவுடையது; பெயருடைமையால்", "ஊன் உண்ணத்தகும்; பொருளாதலால்." என்றற் றொடக்கத்தன வெல்லாம் இவ்வேதுப் போலியாம்.

இதன் ஏதுப்பொருள் சபக்கத்தில் நின்று துணிபொருளுணர்வையும், விபக்கத்தில் நின்று அதன்மறுதலைப்பொருளுணர்வையும் உடனிகழச்செய்து ஐயப்பாட்டை யுண்டாக்கலால் இஃது ஏதுப் போலியாயிற்று.

## அசாதாரணம்.

உ. அசாதாரணமாவது சபக்கவிபக்கங்களில் ஓரிடத்து மின்றிப் பக்கத்தில் மாத்திரமிருக்கும் பொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம்:—"ஆனினம் தாயதோலுடையது; அலைதாடியுடைமையால்" என்பதாம் (இதுவைதிகர் கூற்று) இதனுள் அலைதாடியுடைமை ஏதுப்பொருள்; அது, தாயதோலுடைய மான் முதலிய சபக்கத்திலும், தாயதோலில்லாத கழுதை முதலிய விபக்கத்திலும் இல்லதாகி ஆனினமாகிய பக்கத்தில் மாத்திரம் சிறப்பாயிருத்தலால் இஃது அசாதாரணமாயிற்று. அசாதாரணம்-சிறப்பு. மற்றும் இவ்வாறே "நாக்கு ஓசையறியும்; சுவையறிகருவியாதலால்" என்பதும், "எல்லாப்பொருளும் அறியப்படுவன; பெயருடையனவாதலால்." என்பதும் போல்வன வெல்லாம் இவ்வேதுப்போலியாம்.

இவ்வேதுப்பொருளுக்குச் சபக்கத்தில் வியாத்தியின்மையால் துணிபொருளுண்மை தெளியப்படாமலும், விபக்கத்தில் வியாத்தியின்மையால் துணிபொருளின்மை தெளியப்படாமலும் ஐயத்துக் கேதுவாதலால் இஃது ஏதுப்போலியாயிற்று.

## சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபி.

௩. சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபியாவது சபக்கத்தின் ஏகதேசத்திலுள்ளதாகி விபக்கத்தில் வியாபித்திருக்கும் பொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம்.—"இம்மலை நெருப்புடைத்து; புகையின்மையால்." என்பதாம். இதனுள் ஏதுப்பொருள் - புகையின்மை. சபக்கப்பொருள் - பாகசாலை, சூளை, பழுக்கக்காய்ச்சிய

## அநைகாந்திகவேதுப்போலி வரையறை.

| எண் | பெயர் | உதாரணம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | பக்கம் | ஏது | |
| ௧ | சாதாரணம் | இம்மலை நெருப்புடைத்து | அறியப்படுதலால் | பொதுக்கூற்று |
| ௨ | அசாதாரணம் | ஆனினம் தூயதோலுடையது | அலைதாடியுடைமையால் | வைதிகனை நோக்கிய வைதிகன் கூற்று |
| ௩ | சபக்கைகதேசவிருத்திவிபக்கவியாபி | இம்மலை நெருப்புடைத்து | புகையில்லாமையால் | பொதுக்கூற்று |
| ௪ | விபக்கைகதேசவிருத்திசபக்கவியாபி | இம்மலை புகையுடைத்து | நெருப்புடைமையால் | ஷை |
| ௫ | உபயைகதேசவிருத்தி | காக்கை பறவை | கருநிறமுடைமையால் | ஷை |
| ௬ | விருத்தவியபிசாரி | வௌவால் முட்டையிற் பிறப்பது | பறவையாதலால் | ஷை |

### சாதாரணம.

௧. இவற்றுட் சாதாரணமாவது—சபக்கவிபக்கங்களிரண்டிலும் மயாதுவாய் நிறைந்துள்ள பொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம்:—"இம்மலை நெருப்புடைத்து; அறியப்படுதலால்" என்பதாம். இதனுள் அறியப்படுதல் ஏதுப்பொருள்: அது, நெருப்புடையதாகிச் சபக்கமாயுள்ள பாகசாலை முதலியவற்றுள்ளும், நெருப்பின்றி விபக்கமாகிய ஆற்று வெள்ளமுதலியவற்றுள்ளும் நிறைந்திருத்தலால், இரண்டுபக்கங்களுக்கும் பொதுவாதல்பற்றி இது சாதாரணமாயிற்று.. சாதாரணம்-பொது. மற்றும் இவ்வாறேமாம்

சித்தமாயிற்று. மற்றும் இவ்வாறு வருவனவெல்லாம் இவ்வேதுப் போலி யெனவறிக.

இதனுட் கூறப்படும் ஏதுப்பொருள் சந்தேகவிஷயமாதலால், அதனாற்றுணியுந்துணிபொருளுணர்வும் சந்தேகமாவதுபற்றி இஃது ஏதுப்போலியாயிற்று.

## ஆச்சிரயாசித்தம்.

ஆச்சிரயாசித்தமாவது, தன்மியின்கண் உள்ளதாகக்கொள்ளப்படாத பொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம். "எலி பறக்குமியல்புடையது; இறகுடைமையால்." என்பதாம். இதனுள் தன்மி-எலி; அதன்கணுள்ளதாகக் கொள்ளப்படாதது இறகுடைமை: அதனை ஏதுவாகக் கூறுதலாலிஃது ஆச்சிரயாசித்தமாயிற்று. ஆச்சிரயம் பற்று; அஃது இங்குத்தொடர்புடைமையாகியதன்மையை உணர்த்திநின்றது. மற்றும் இவ்வாறே "குதிரை கவைக்குளம்புடையது; கொம்புடைமையால்; எருது போல." என்றற்றொடக்கத்தனவெல்லாம் இவ்வேதுப்போலியாம்.

இதனுட் கூறப்படும் தன்மி சாத்திய ஏதுப் பொருள்கள் தனித்தனி வெளிப்பட்டுள்ளனவாயினும் தன்மியின்கண் ஏதுப்பொருள் உள்ளதாகக்கொள்ளப்படாமையால், தன்மியில் தன்றொடர்புணர்வுபற்றிவருந் துணிபொருளுணர்வைத் தோற்றுவிக்குமாற்றலின்றி ஏதுப்போலியாயிற்று

இவை கூறியவாற்றால் உபயவாதிகளுக்கும் ஐயப்பாடின்றித் தன்மியின்கண்ணுள்ளதாகத் தெளியப்பட்டிருக்கும் பொருளை ஏதுவாகக்கூறவேண்டுமென்றதாயிற்று.

இனி அநைகாந்திகம ஆறுவகைப்படும். அவற்றின் பெயரும் உதாரணமும் பின்வரும் வரையறையுட் காண்க.

நோக்கி) "நாய் தீண்டற்பாலதன்று; தீட்டுடையதாதலால்." என வைதிகன் கூறுவதாம். இதனுள் ஏதுப்பொருள் தீட்டுடைமை. அது வைதிகனாகிய வாதிக்கு ஸ்மிருதிமுதலிய நூல்களால் சாக்காடு, மகப்பேறு முதலியவற்றுள் உள்ளதாகக்கொள்ளப்பட்டு, அவைதிகனாகிய எதிரிக்கு ஒருவாற்றானும் உள்ளதாகக் கொள்ளப்படாமையால், இஃது அந்நியதராசித்தமாயிற்று. அந்நியதரன் இருவரிலொருவன்; அஃது இங்கு உபயவாதிகளிலொருவனைக் குறிப்பாலுணர்த்திற்று. மற்றும் இவ்வாறே "புகைச்சுருட்டுநெருப்பு கொள்ளற்பாலதன்று; எச்சிலாதலால்" என்பதும், (குருடனை நோக்கி) "இம்மாணிக்கமணி விலையுயர்ந்தது; ஒளி சிறந்ததாதலால்." என்பதும் முதலியனவெல்லாம் இவ்வேதுப்போலியாம். இக்கூற்று, எதிரிக்கு ஏதுப்பொருளுணர்வின்மையால் அவ்வுணர்வின் வாயிலாகவரும் அநுமிதியுணர்வையுண்டாக்காது ஏதுப்போலியாயிற்று.

## சித்தாசித்தம்.

ஈ. சித்தாசித்தமாவது, சந்தேகவிஷயமாயுள்ள பொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம்;—"தனிவழிசசெல்பவன் பொருளிழப்பான்; ஆறலைக்கப்படுதலால்." என்பதாம். இதனுட் கூறப்பட்ட ஏதுப்பொருள் ஆறலைக்கப்படுதல். (வழிப்பறி கொடுத்தல்) அது தனிவழிச்சென்ற சில இடங்களில் உள்ளதாகக்கொள்ளப்பட்டுச் சித்தமாயும், சில இடங்களில் உள்ளதாகக்கொள்ளப்படாமல் அசித்தமாயும் இருத்தலால் இது சித்தாசித்தமாயிற்று. மற்றும் இவ்வாறே "இவன் செல்வமடைவான்; ஆகூழுடைமையால்." என்பதும் சித்தாசித்தம். இதில் ஆகூழுடைமை (புண்ணியமுடைமை) ஏதுப்பொருள். அஃது, ஒருவனுக்குச் செல்வமுண்டாதற்கு முன்னமே அவனுக்கு உண்டென்றாயினும் இல்லையென்றாயினும் [illegible]கொள்ளப்படாமையால் சந்தேகவிஷயமாதலாற் சித்தா

வது. உதாரணம்:—"இது புலிவாழ்காடு; புலிக்கொம்புடைமையால்." என்பதாம். இக்கூற்றினுள் புலிக்கொம்புடைமை ஏதுப்பொருள்;—அது உபயவாதிகளாலும் உள்ளதாகக்கொள்ளப்படுவதாதலால் இஃது உபயாசித்தமாயிற்று.

சித்தம்-உள்ளதாகக் கொள்ளப்பட்டது; அசித்தம்-அதனின் வேறுயது:—உள்ளதாகக்கொள்ளப்படாதது. அது பொருளில்லாமையால் உள்ளதாகக் கொள்ளப்படாததும், பொருளிருந்தும் அறிந்து கொள்ளாமையால் உள்ளதாகக் கொள்ளப்படாததும் என இருவகைப்படும். அவற்றுள் முன்னையதற்கு உதாரணம்:—குதிரைக்கொம்பு, மலடிமைந்தன் முதலியன. பின்னையதற்கு உதாரணம் (நாஸ்திகருக்கு) ஆன்மா, பழவினை முதலியன.

அவற்றுள் இங்குக் காட்டிய உதாரணம் பொருளில்லாமையால் வந்த உபயாசித்தம். பொருளிருந்து அறிந்துகொள்ளாமையால் வந்த உபயாசித்தத்துக்கு உதாரணம் (ஒரு பிறவிக்குருடன் மற்றொரு பிறவிக்குருடனை நோக்கி) "இது இராப்பொழுது; நிலாத் தோன்றுகின்றமையால்." என்பதாம். மற்றும்இவ்வாறே "இக்கன்று வலியுடைத்தாகும்; கடாப்பால் குடிக்கின்றமையால்." என்பதும் (நாஸ்திகரிருவருள் ஒருவரையொருவர் நோக்கி) "நாம் சுகதுக்கங்களையடைவோம்; பழவினையுடையம் ஆதலால்." என்பதும் முதலியனவெல்லாம் இவ்வேதுப்போலியாம்.

இவ்வேதுக்கூற்றுப் பொருளில்லதாதலால் ஏதுப்பொருளுணர்வின் வாயிலாகவரும் அநுமிதியுணர்வையுண்டாக்காது ஏதுப்போலியாயிற்று.

இவ்வேதுப்போலி எதிரியை மருட்டக்கருதிய வாதி கூற்றாகப் பெரும்பாலும் மதவழக்கில் வரும். ஏத்

ரது

## அந்நியதராசித்தம்.

உ. அந்நியதராசித்தமாவது, உபயவாதிகளில் ஒருவனால் உள்ளதாகக்கொள்ளப்பட்டு, மற்றொருவனால் உள்ளதாகக்கொள்ளப்படாத பொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம்:— (அவைதிகனை

இதுகாறுங் கூறியவாற்றால் ஐயந்திரிவாக்காது அறியாமையை நீக்கி மெய்யநுபவத்தையுண்டாக்குமாறு பக்கவுறுப்புக் கூறவேண்டு மென்பது பெறப்பட்டது.

## ஏதுப் போலி.

இனி ஏதுப்போலி அசித்தம், அநைகாந்திகம், விருத்தம் என மூன்றுவகைப்பட்டு அவையொவ்வொன்றும் பலவகையாம். அவற்றுள் அசித்தம் நான்குவகைப்படும். இவற்றின் பெயரும் உதாரணமும் பின்வரும்வரையறையுட் காண்க.

### அசித்த வேதுப் போலி வரையறை.

| எண் | பெயர் | உதாரணம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | பக்கம் | ஏது | |
| க | உபயாசித்தம் | இது புலிவாழ் காடு | புலிநகொம்புடைமையால் | பொதுக்கூற்று |
| உ | அந்நியதராசித்தம் | நாய் தின்டற்பால தன்று | கிட்டுடைய தாதலால் | அவைதிகனை நோக்கிய வைதிகன் கூற்று |
| ங | சித்தாசித்தம் | தனிவழிசசெல்வோன் பொருளிழப்பான் | ஆறலைக்கப் படுதலால் | பொதுக் கூற்று |
| ச | ஆச்சிரயாசித்தம் | எலி பறவை | இறகுடைய தாதலால் | ௸ |

#### உபயாசித்தம்.

க. அசித்தம் நான்கனுள் உபயாசித்தமாவது, உபயவாதிகராலும் உள்ளதாகக் கொள்ளப்படாத பொருளை ஏதுவாகக் கூறு

டிய சம்பந்தவுணர்வு; அஃதின்மை அசம்பந்தமெனப்படும்: அஃது எதிரியிடைப் பிரசித்தமாயிருக்கக் கூறும் வாக்கியம் பிரசித்தாசம்பந்தமெனப்படும்.—இது நற்பக்கம். இவ்வாறில்லாத வாக்கியம் அப்பிரசித்தாசம்பந்தமாம். எதிரியால் உணரப்பட்ட விசேடண விசேடிய சம்பந்தப்பொருளையுடைய வாக்கியமென்றபடி.]

உதாரணம்;—(ஒருவனை நோக்கி) "நீ ஆண்மகன்" எனக்கூறுவதாம். இதனுட்கூறப்பட்ட நீயென்னும் முன்னிலைப்பொருள் விசேடியம்; ஆண்மகனுதல் விசேடணம். இவற்றின் சம்பந்தவுணர்வு எதிரி தான்ஆண்மகனெனவறிந்துள்ள அறிவு; அஃது அவனுக்கு முன்னமே நிகழ்ந்துள்ளதாதலாற் சம்பந்தம்பிரசித்தமாகியதேயன்றி அசம்பந்தம் பிரசித்தமாகவில்லை: ஆதலாலிஃது அப்பிரசித்தா சம்பந்தமாயிற்று. மற்றும் இவ்வாறே (யானைப்பாகனைநோக்கி) "உன் கையகத்துள்ளது தோட்டி." என்பதுபோல எதிரி சம்பந்தம் அறிந்துள்ளவற்றைக் கூறுவதெல்லாம் இப்பக்கப்போலியாம்.

இதனல் எதிரியால் தம்சம்பந்தம் அறியப் பெற்றிலாது தனித்தனி தாம் அறியப்பட்டுள்ள விசேடண விசேடியங்களையுடையதாகப் பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று. இவ்வாறு கூறுவது "இம்மலை நெருப்புடைத்து" என்னும் நற்பக்கம். இதனுள் விசேடியம் மலை, விசேடணம் நெருப்புடைமை; இவை யிரண்டும் முறையே எதிரிக்கு நேரினும் பாகசாலை முதலியவற்றினும் தனித்தனி பிரசித்தம்: இவற்றின் சம்பந்தம் மலை நெருப்புடைத்தாதல். அஃது அவனுக்குப் பிரசித்தமில்லாதிருக்குங்கால், இம்மலை நெருப்புடைத்து என அவற்றின் சம்பந்தம் பிரசித்தமாகுமாறு கூறப்படுதல் காண்க.

இப்பக்கப்போலி விசேடண விசேடிய சம்பந்தவுணர்வாகிய வாக்கியப்பொருளுணர்ச்சியை உண்டாக்குமாயினும் அவ்வுணர்ச்சி நினைவாதலேயன்றி அநுபவமாகாமையால், மெய்யநுபவத்தொன்றாகிய அநுமிதியுணர்விற்குக் காரணமான அநுமானத்துக்கு உறுப்பாகிய பக்கப்போலியாயிற்று.

மற்றும் சாருவாகனை நோக்கி "ஆகூழ் ஆக்கம் தரும்" என்பதும், பேயறியாதானை நோக்கிப் "பேய் அறிவுடையது" என்பதும் இவைபோல்வனவும் இப்பக்கப்போலியாம். இதனால் எதிர்க்கு அறியப்பட்டுள்ளதொன்றைத் தன்மியாகவைத்துப் பக்கவுரைப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று. இது விசேடிய வுணர்ச்சியின்மையால் வாக்கியப் பொருளுணர்வை யுண்டாக்காது அறியாமைக் கிடமாய்ப் பக்கப்போலியாயிற்று.

## அப்பிரசித்தோபயம்.

(அ) அப்பிரசித்தோபயமாவது எதிர்க்கு வெளிப்படையில்லாத பொருள்களை விசேடிய விசேடணங்களாகிய தன்மியும் துணிபொருளுமாக வைத்துப் பக்கவுரைப்புக் கூறுவது. உதாரணம்;—பிறவிக்குருடனை நோக்கி "மதிநிறம் வெண்மை" என்பதாம். இதனுள் மதிநிறம் தன்மியாகிய விசேடியம்; வெண்மை துணிபொருளாகிய விசேடணம்; இவ்விரண்டும் பிறவிக்குருடனுக்கு வெளிப்படையின்மையால் இஃது அவனுக்கு அப்பிரசித்தோபயமாயிற்று. (இவ்விரண்டையு மறிந்தவருக்கு இது பக்கப்போலியன்று.) இன்னும் அவனை நோக்கி "நிறம் கட்புலமாவது" என்பதும், சாருவாகனை நோக்கிப் "புண்ணியம் செய்தான் சுவர்க்கம் புகுவான்" என்பதும் இவைபோல்வனவும் இப்பக்கப்போலியாம். [உபயம் - இரண்டு;—அஃது இங்கு விசேடண விசேடியங்களைக் குறிப்பா லுணர்த்தி நின்றது.] இதனால் எதிர்க்கு வெளிப்படையான பொருள்களையே தன்மியும் துணிபொருளுமாக வைத்துப் பக்கவுரைப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று.

இது, விசேடண விசேடியப் பொருளுணர்ச்சி யின்மையால் வாக்கியப் பொருளுணர்ச்சியை யுண்டாக்காது அறியாமைக்கிடமாகிப் பக்கப்போலி யாயிற்று.

## அப்பிரசித்தா சம்பந்தம்.

(ஆ) அப்பிரசித்தா சம்பந்தமாவது எதிரி விசேடிய விசேடண சம்பந்தமுணர்ந்து உடம்பட்டுள்ளதனையே துணியுமாறு பக்கவுரைப்புக்கூறுவதாம். [இங்குச்சம்பந்தமெனப்படுவது விசேடண விசே

[illegible]து யாது தோற்செவியுடையது அது அது முட்டையுட் பிறப்ப தன்று; எலிபோல." எனவரும். இங்கு எடுத்துக்கொண்ட விருத்த வியபிசாரியின் துணிபொருள் முட்டையுட் பிறத்தல்; அதற்கு மற்றலை முட்டையுட் பிறவாமை; அதனைத் துணியும் ஏதுத் தோற் செவியுடைமையாதலால், அத்தோற்செவியுடைமை விருத்தவேது வாயிற்று. அது பறவையாகிய வௌவாலில் இருத்தல் விருத்த வியபிசாரம்; அதனைப் பறவையாதலால் என்ற ஏதுப்பொருள் தன் றன்மியின் வாயிலாக உணர்த்தாதலால், இது விருத்த வியபிசாரி யெனப்பட்டது.

மற்றும் இவ்வாறே "காற்று அழிவில்லது; அருவத்திரவியமாத லால்; யாது யாது அருவத்திரவியம அது அது அழிவில்லது: ஆன்மாப்போல." என்பதில அருவத திரவியமாதலால் என்னும் ஏது விருத்தவியபிசாரியாம. இதற்கு விருத்தவேது வருமாறு:— "காற்று அழிவுடையது; பரிசமுடைமையால்; யாது யாது பரிச முடையது அது அது அழிவுடையது; குடம்போல." எனவரும். இதனுள் பரிசமுடைமை, அழிவின்மையின் மறுதலையாகிய அழி வுடைமையைத் துணிதலால் விருத்தமாயிற்று. அப்பரிசமுடைமை உருவப்பொருளின் கண்ணிற்றலேயன்றி அருவப்பொருளாகிய வாயு விலும் நிற்றல் வியபிசாரம. அதனை, அருவமாதல் என்னும் ஏதுப் பொருள் தன்றன்மியின் வாயிலாகப பெற்றிருத்தல் கண்டுகொள்க.

இதனுற்றுணிபொருளுணர்வும் விருத்தத்தாற்றுணிபொருளி ன் மறுதலையுணர்வும் நிகழ்தலால் ஐயபபாட்டிற்கு ஏதுவாதல்பற்றி இது ஏதுப்போலியாயிற்று.

இவ்வறுவகையனைகாந்திகங்களும் கூறியவற்றால், விபக்கத்தி லில்லாது விருத்தவேதுப் பகையின்றிப் பக்க சபக்கங்களிரண்டினு முள்ள பொருளை யேதுவாகக் கூறவேண்டு மென்றதாயிற்று.

இனி விருத்தம் நான்கு வகைப்படும் அவற்றின் பெயரும் உதா ரணமும் பின் வரும் வரையறையுட் காண்க.

## விருத்தவேதுப்போலிவரையறை.

| எண். | பெயர். | உதாரணம். | | குறிப்பு. |
|---|---|---|---|---|
| | | பக்கம். | ஏது. | |
| க. | தன்மசசொரூபவிபரீத சாதனம். | இப்பறவை காக்கை. | வெண்ணிறமுடைமையால். | ஒரு வெண்புறுவைச் சுட்டி பக்கப்பொருளாகச் சுட்டிக் கூறிய கூற்று. |
| உ. | தன்மவிசேடவிபரீத சாதனம். | காற்றுப பூதப்பொருள். | பரிசமுடைமையால். | வெளிப்படை. |
| ங. | தன்மிச்சொரூபவிபரீத சாதனம். | அஃறிணை ஒன்றன்பாலன்று. | பலவின்பாலின் வேறுதலால். | ௸ |
| ச. | தன்மிவிசேடவிபரீத சாதனம். | மக்கள்பிராமணரல்லர். | பிராமணரின் வேறுதலால். | ௸ |

## தன்மச்சொரூபவிபரீத சாதனம்.

க தன்மச்சொரூபவிபரீத சாதனமாவது, எடுத்துக்கொண்ட துணிபொருளை விபரீதமாகத் துணிதற்குரியபொருளை ஏதுவாகக் கூறுவது.

உதாரணம்:—(ஒரு வெண்புறுவைச் சுட்டி) "இப்பறவை காக்கை: வெண்ணிறமுடைமையால்." என்பதாம்.

இதனுட் கூறப்படும ஏதுப்பொருள் வெண்ணிறமுடைமை; அஃது, இங்கு எடுத்துக்கொண்ட துணிபொருளின் எதிர்மறைப்பொருளாகிய காக்கையின்மையைத்துணியத்தருவதாதலால் இது தன்மச்சொரூபவிபரீத சாதனமாயிற்று.

இவ்வேது அவ்வெதிர்மறைப் பொருளைத்துணியுமாறு:—"இப்பறவை காக்கையன்று; வெண்ணிறமுடைமையால்; யாதுயாது வெண்ணிறமுடையது அது அது காக்கையன்று; கொக்குப்

[illegible] என அந்நுவயவியாத்தியும், "யாது யாது காகமோ அது அது வெண்ணிறமுடையதன்று; சகுனக்காக்கை போல." என வெதிரேகவியாத்தியும் உடையதாகி வரும்.

தன்மச்சொரூபம் - துணிபொருளின் வடிவு. விபரீதம் - மாறுபாடு. ஆகவே துணிபொருள் வடிவின் மாறுபாடு தன்மச்சொரூபவிபரீதமென்றவாறாயிற்று. துணிபொருள்வடிவின் மாறுபாடாவது அத்துணிபொருளிலதாதலேனும், அத்துணிபொருளின்றன்மை கெடுதலேனுமாம்.

ஆகவே, துணிபொருளிலதாதலேயேனும், துணிபொருளின்றன்மை கெடுதலேயேனும் துணிதற்குரிய ஏது தன்மச்சொரூப விபரீதசாதனமெனப்படும் எனவறிக.

எடுத்துக்கொண்ட உதாரணத்துள் தன்மச்சொரூபம்-காக்கையாதல்; அதன் விபரீதம்-காக்கையிலதாதல். அதனைத் துணிதற்குரிய ஏது வெண்ணிறமுடைமையாதலால் இது தன்மச்சொரூப விபரீதசாதனமெனப்பட்டதெனவறிக.

மற்றும் இவ்வாறே (புகையைச்சுட்டி) "இது ஆகாயம்; நிறமுடைமையால்." என்பதும், (பனிக்கட்டியைச் சுட்டி) "இது நெருப்பு; தட்பமுடைமையால்." என்பதும், இவைபோல்வனவும் இவ் வேதுப்போலியாம்.

இது சபக்கத்திலில்லாது, பக்கத்திலும் விபக்கத்திலும் நின்று எடுத்துக்கொண்ட துணிபொருளின் மாறுபாட்டைத் துணிந்து துணிபொருளுணர்வை யொழித்தலால் ஏதுப்போலியாயிற்று.

## தன்மவிசேடவிபரீதசாதனம்.

உ. தன்மவிசேடவிபரீத சாதனமாவது, எடுத்துக்கொண்ட துணிபொருட் பொதுமையைப் பக்கத்திற்றுணிதற்குரியதாயினும், அத்துணிபொருள் விசேடத்தின் எதிர்மறைப்பொருளையும் அப்பக்கத்திற்றுணிதற்குரிய பொருளை ஏதுவாகக்கூறுவது.

உதாரணம் "காற்றுப் பூதப்பொருள்; பரிசமுடைமையால்." [illegible]

இதனுட் கூறப்படும் ஏதுப்பொருள் பரிசமுடைமை; அது, "யாது யாது பரிசமுடையது அது அது பூதப்பொருள்; பிருதிவி முதலியனபோல." என அந்நவயவியாத்தியுடையதாகியும், "யாது யாது பூதப்பொருளன்று" அது அது பரிசமுடையதன்று; கல்ல முதலியனபோல என வெதிரேகவியாத்தியுடையதாகியும் எடுத்துக் கொண்ட துணிபொருட்பொதுமையாகிய பூதப் பொருளாதலைத் தன்மியாகிய வாயுவின்கட் டுணிதற்குரியதாயினும் அதன் தன்ம விசேடமாயுள்ள உருவமில் பூதமாதலைக்கெடுத்து அவ்வாயுவை உருவமுடைய பூதமாகத் துணிதற்கும் உரியதாதலால் இது தன்ம விசேட விபரீதசாதனமாயிற்று.

அங்ஙனம் தன்மவிசேடவிபரீதம துணியுமாறு "பூதவிசேடமாகிய வாயு உருவமில்பூதமன்று: (உருவமுடைய பூதம்) பரிசமுடைமையால்; யாது யாது பரிசமுடையது அது அது உருவமில்பூதமன்று; (உருவமுடைய பூதம) பிருதிவிபோல". என அந்நுவயவியாத்தியும், "யாதுயாது உருவமிலபூதம் அது அது பரிசமுடையதன்று: ஆகாயம்போல." என வெதிரேகவியாத்தியும உடையதாகிவரும்.

இவ்வாறு இது தன்மவிசேடமாகிய உருவமில்பூதத்தை உருவமுடையபூதமாகத் துணிந்து விபரீதப்படுத்தலால் தன்மவிசேட விபரீதசாதனமெனப்பட்டது.

மற்றும் இவ்வாறே "ஆனினம மிருகம், கொம்புடைமையால்" என்பதும் இவ்வேதுப்போலியாம். இதனுள் ஏதுப்பொருள்-கொம்புடைமை: அது, ஆனினத்தை மிருகமாகத் துணிதற்குரியதாயினும் தன்ம (மிருக) விசேடமாகிய அலைதாடியுடைய மிருகத்தை அலைதாடியில்லதெனச் சாதித்து விபரீதப்படுத்தலாலெனவறிக.

அங்ஙனமாமாறு;—"ஆனினம மிருகம்; கொம்புடைமையால்; யாது யாது கொம்புடையது அது அது மிருகம்." எருமைபோல; என அந்நுவயமும், "யாது யாது மிருகமன்று அது அது கொம்புடையதன்று: பறவைபோல" என வெதிரேகமும் உடையதாகித் துணிபொருளைச் சாதித்துத் தன்மவிசேடமாகிய அலைதாடியுடைய மிருகத்தை, "ஆனினம் அலைதாடியுடையதன்று: கொம்புடைமை

பால; யாது யாது கொம்புடையது அது அது அலைதாடியுடையத ன்று;எருமைபோல. "எனவிபரீதப்படுத்தல்காண்க. இன்னும்இவை போலுள்ளனவெல்லாம் நுண்ணிதின் ஆராய்ந்து அறிந்துகொள்க.

இவ்வேதுப்போலி தன்மவிசேடம் மாறுபாடடையப் பொய்க் கரியானமையால் தன்மச்சொரூபத் துணிபொருட்பேற்றினும் பிர மாணமாகாது ஏதுப்போலியாயிற்று.

இதனால் தன்றுணிபொருள் விசேடத்தையுள்ளவாறன்றி மாறு பாடாகத் துணிதற்குரிய பொருளை ஏதுவாகக்கொண்டு அத்துணி பொருளின் பொதுமையினையும் துணிதல் கூடாதென்[redacted]பெறப் பட்டது.

## தன்மிச்சொரூபவிபரீதசாதனம்.

௩. தன்மிச்சொரூபவிபரீத சாதனமாவது, எடுத்துக்கொண்ட தன்மிவிபரீதமடையத் துணிதற்குரிய பொருளை ஏதுவாகக்கூறுவது.

உதாரணம்:--அஃறிணை ஒன்றன்பாலன்று: பலவின்பாலின்வே றுதலால் என்பதாம். இதனுள் அஃறிணை என்பது தன்மி அதனது சொரூபம் ஒன்றன்பாலும பலவின்பாலுமாகியிருத்தல் (அஃறிணை யாதல்) அதனை 'ஒன்றன்பாலன்று' என்னும் பக்கவிசேடணத்து டன்கூடியுள்ள 'பலவின்பாலின் வேறுதல்' என்னும் ஏதுப்பொருள் பலர்பாலில் நின்று உயர்திணையாக்கி விபரீதப்படுத்தலால் இது தன் மிச்சொரூப விபரீதசாதனமாயிற்று.

இது தன்றன்மியை உயர்திணையாக்கி விபரீதப்படுத்துமாறு:— "எடுத்துக்கொண்ட இத்தன்மி அஃறிணையன்று; (உயர்திணை.) ஒன் றன்பாலுமின்றிப் பலவின்பாலினும் வேறுதலால்; யாது யாது ஒன் றன்பாலுமின்றிப் பலவின்பாலினும் வேறு அது அது அஃறிணைய ன்று." (உயர்திணை.) என அந்வயவியாத்தியுடையதாகியும், "யாது யாது உயர்திணையன்று (அஃறிணை) அது அது ஒன்றன்பாலுமின் றிப்பலவின்பாலினும்வேறுதல் இன்று; (ஒன்றன்பாலேனும் பல வின்பாலேனு மாம்.) வான்பிறையும், உடுக்களும்போல" எனவெதி ரேகவியாத்தியுடையதாகியும் வரும்.

மற்றும் இவ்வாறே "மக்கள் ஆணல்லர், பெண்ணின் வேறாகலால், அலிபோல" என்றற்றொடக்கத்தன வெல்லாம் இவ்வேதுப் போலியெனவறிக.

இது துணிபொருளுக்கிடனாய தன்மியை இல்லதாக்கி நிற்றலால், துணிபொருளுக்கு இடமில்லாமையால், துணிபொருளுணர்வையுண்டாக்காத ஏதுப்போலியாயிற்று.

இதனால் ஒருதன்மியை பாகுபாடாக்குதற்குரிய பொருளை ஏதுவாகக்கொண்டு அத்தன்மியிற் பிறிதொரு பொருளையும் துணிதல் கூடாதென்பது பெறப்பட்டது.

## தன்மிவிசேடவிபரீதசாதனம்.

௪. தன்மிவிசேடவிபரீதசாதனமாவது எடுத்துக்கொண்ட துணிபொருளைத் துணிதற்குரியதாயினும், தன் துணிபொருளின் பற்றுக்கோடாகிய தன்மியின் விசேடத்தை மாறுபாடாகத் துணிதற்குரியபொருளை ஏதுவாகக்கூறுவது.

உதாரணம்:—"மக்கட்டொகுதி பிராமணரன்று; பிராமணத்தன்மையின்மையால்" என்பதாம்.

இதனுட் கூறப்படும் ஏதுப்பொருளாகிய பிராமணத்தன்மையின்மையானது பக்கசபக்கங்களில் நின்று விபக்கத்தின்றி மக்களைப் பிராமணரல்லரெனத் துணியப்படுத்து மக்கள்விசேடமாகிய பிராமணர் முதலானோரையும் அவ்வவ்வருணத்தாரல்லரெனச் சாதித்தலால் இது தன்மிவிசேடவிபரீதசாதனமாயிற்று.

அங்ஙனம் துணியுமாறு:—மக்கள் தொகுதி பிராமணரன்று: பிராமணத்தன்மையின்மையால்: யாது யாது பிராமணத்தன்மையில்லது அது அது பிராமணரன்று "விலங்குபோல." என அந்நுவயவியாத்தியும், யார் யார் பிராமணர் அவரவர் பிராமணத்தன்மையுடையர்: கௌசிகர் போல.," என வெதிரேகவியாத்தியுமுடையதாகி மக்களைப் பிராமணரல்லரெனத் துணியும். இவ்வாறு துணியவே மக்கள் விசேடமாகிய பிராமணரும் பிராமணரல்லரென்பது பெறப்படு

[illegible]ன்றி வைசியர் முதலாயினோரையும் தனித்தனி அவ்வவரு[illegible]த்தரல்லரெனத் துணிதற்குரியதாகின்றது.

அஃதாமாறு:—"நான்காம் வருணத்தர் சூத்திரரல்லர் பிராமணத்தன்மையின்மையால்; யார் யார் பிராமணத்தன்மையல்லாதவர் அவர் அவர் சூத்திரரல்லர்." க்ஷத்திரியர்போல எனவரும்.

மற்றும் இவ்வாறே "பூதப்பொருள் பிருதிவியன்று; பிருதிவித்தன்மையின்மையால்; யாது யாது பிருதிவித்தன்மையில்லது அது அது பிருதிவியன்று; அப்புப்போல." எனவும், "மிருகம் குதிரையன்று: குதிரைத்தன்மையின்மையால்: யாது யாது குதிரைத்தன்மையில்லது அது அது குதிரையன்று: ஆடுபோல." எனவும், இன்னும் இவைபோல வருவனவும் இவ்வேதுப்போலியென வறிக.

சிறப்புப்பொருளில் பொதுத்தன்மையுண்டு; பொதுப்பொருளிற் சிறப்புத்தன்மையில்லை யென்பது தருக்கநூல்வழக்கு. இதனால் மக்களிடத்துப் பிராமணத்தன்மை யில்லை, பிராமணரிடத்து மக்கட்டன்மை உண்டு என்பது கருத்து. மக்களெல்லாம் பிராமணரல்லர், பிராமணரெல்லாம் மக்களே என்னும் உலகவழக்கும் நோக்குக.

இவ்வேதுத் தனிவிசேடம் மாறுபாட்டையப் பொய்க்கரியாமையால், தன்மரொருபத்துணிபொருட் டேற்றினும் பிரமாணமாகாது ஏதுப்போலியாயிற்று.

இதனால் ஒரு தன்மிவிசேடத்தையுள்ளவாறன்றி மாறுபடத் துணிதற்குரிய பொருளை ஏதுவாகக்கொண்டு அத்தன்மிப் பொது[illegible]ற் பிறிதொரு பொருளும் துணிதல் கூடாதென்பது. பெறப

இங்ஙனங் கூறிமுடித்த மூவகை ஏதுப்போலிகளுள் அசித்த வகையால், ஏதுப்பொருளும், அதற்குப் பக்கப்பொருள் பற்றுக் கோடாதலும் நல்லநுமானத்தில் உபயவாதிகளுக்கும் வெளிப்பட்டிருக்கவேண்டுமென்பது பெறப்பட்டது.

அநைகாந்திகத்தால் ஏதுப்பொருள் சபக்கத்திலுள்ளதாகியும் விபக்கங்களொன்றிலும் இல்லதாகியும் தன் துணிபொருளின் இன்மையைத் துணிதற்குரிய பிறிதோர் பொருளின் நிச்சயமொன்றிலு மில்லதாகியும் இருத்தல் வேண்டுமென்பது பெறப்பட்டது.

விருத்தத்தால், ஏதுப்பொருள் தன் துணிபொருளின் பொதுச்சிறப்புக்களிலொன்றையாயினும், தன்பக்கப்பொருட்சிறப்புக்களிலொன்றையாயினும் விபரீதமாகத் துணிதற்குரியதல்லதாய் இருத்தல் வேண்டுமென்பது பெறப்பட்டது.

இதனால் இம்மூவகையிலக்கணமுமுடைய பொருளை மூன்றனுருபுகொடுத்து நற்பக்கக்கூற்றையடுத்துக் கூறுவதே நல்லேதுவுறுப்பாமென வறிக.

இவ்விலக்கணநெறி பிறழ்ந்து கூறப்பட்ட அசித்த முதலிய ஏதுப்போலிகளெல்லாம் தருக்கநூலார் கூறும் பலவகை ஏதுப்போலிகளுள் அடங்குகின்றன.

அவ்வவ்வகையேதுப்போலிகளுட் பெரும்பான்மை முற்கூறிய அசித்தம் முதலிய மூவகையேதுப்போலிவகையுள்ளும் சிறுபான்மை பக்கப்போலி திட்டாந்தப்போலி வகையுள்ளும் அடங்குகின்றன.

அங்ஙனம் அடங்குமாறு இனி அவற்றிற்குத் தனித்தனி எடுத்துக்காட்டும் உதாரணங்களைக்கொண்டு கண்டுகொள்க.

அவ்வவ்வகை ஏதுப்போலிகளின் பெயரும் வகையும் உதாரணமும் பின்வரும் வரையறையுட் காண்க.

# ஐவகை ஏதுப்போலி வரையறை.

| எண் | | | பெயர் | பிரதிக்கினை | ஏது |
|---|---|---|---|---|---|
| க | சவ்வியபிசாரம் | | சாதாரணம் | இம்மலை நெருப்புடைத்து | அறியப்படுதலால் |
| | | | அசாதாரணம் | சத்தம் அழிவில்லது | சத்தத்துன்மையுடைமையால் |
| | | | அநுபசங்காரி | எல்லாப்பொருளும் அழியத்தகுவது | அறியப்படுதலால் |
| உ | விருத்தம் | | | சத்தம் அழிவில்லாதது | காரியமாகையால் |
| ௩ | சற்பிரதிபக்ஷம் | | | சத்தம் அழிவில்லது | செவிப்புலனாதலால் |
| ௪ | அசித்தம் | | ஆச்சிரயாசித்தம் | ஆகாயத்தாமரை மணமுடையது | தாமரைத்தன்மையுடைமையால் |
| | | | சொரூபாசித்தம் | சத்தம் குணம் | கட்புலனாதலால் |
| | | சோபாதிகம் | துணிபொருளில் வியாபித்துஏதுவில்வியாபியாதது | இம்மலைபுகையுடைத்து | நெருப்புடைமையால் |
| | | | பக்கத்தன்மையால் வரைந்துகொள்ளப்பட்ட துணிபொருளில் வியாபித்து ஏதுவில் வியாபியாதது | வாயுக்கரட்சிப் பொருள் | காட்சிப்பரிசமுடைமையால் |
| | | | ஏதுவால்வரைந்துகொள்ளப்பட்டஷை | அழிவுபாட்டபாவம் நாசமுடையது | உண்டாகற்பாலதாதலால் |
| | | | யாதாயினும் ஒருதன்மையால் வரைந்துகொள்ளப்பட்டஷை | ஆடு மிருகம் | கொம்புடைமையால் |
| ௫ | பாதிதம் | | | நெருப்புசூடில்லது | திரவியமாதலால் |

இவற்றுட் சாதாரணமும் அசாதாரணமும் முன்னம் அனைகாந்திகவேதுப்போலியுட் கூறப்பட்டனவேயாம்.

## அநுபசங்காரி.

அநுபசங்காரியாவது அந்நுவயதிட்டாந்தமும் வெதிரேகதிட்டாந்தமும் இல்லாதது. உதாரணம்- 'எல்லாப்பொருளும் அநித்தம் அறியத்தகுவதாதலால்' என்பதாம். இதன்கண் உலகிலுள்ள பொருள்களெல்லாம், ஐயுற்றுத்துணியும்பொருணிற்கிடமாகிய பக்கமாய் விட்டமையால், எல்லாப்பொருளினும் வேறான துணிந்தபொருணுக்கிடமாகிய திட்டாந்தப்பொருள் கூறிமுடித்தற் கிடமின்றி, இஃது அநுபசங்காரியாயிற்று.

உபசங்காரம்-முடிவுபேறு. அநுபசங்காரம் - முடிவுபெறாமை அதனையுடையது அநுபசங்காரியெனப்பட்டது.

இவ்வேதுப்போலி பின்புகூறப்படும் அசன்றௌஞ்சவுபயதன்ம விகலம், இன்மையினுபயாவியாவிருத்தியென்னும் திட்டாந்தப் போலிகளுள் அடங்கும்.

## விருத்தம்.

விருத்தமாவது துணிபொருளுள்ள விடங்களொன்றினுமில்லதாகித் துணிபொருளில்லாவிடங்களெல்லா மிருப்பது. உதாரணம். 'சத்தம்அழிவில்லாதது, காரியமாகையால்' என்பதாம். இதனுட்கூறப்படும் ஏதுப்பொருளாகிய காரியப்பாடு அழிவில் பொருளொன்றினுமின்றி அழிவுடைட்பொருள்களில் வியாபித்திருத்தல் கண்டுகொள்க.

இது முன்புகூறப்பட்ட விருத்தவேதுப்போலியுள் தன்மச்சொரூப விபரீதசாதனமென்ப் பெயர்பெற்றுள்ளது.

## சற்பிரதிபக்ஷம்.

சற்பிரதிபக்ஷமாவது துணிபொருட்கு மறுதலையாகிய துணிந்தபொருளைச் சாதிக்கும் பிறிதோ ரேதுவையுடைய ஏதுவாம். உதாரணம். 'சத்தம் நித்தியம், செவிக்குப்புலனாகலின்: யாது யாது செவிக்குப்புலனாவது அது அது நித்தியம், சத்தத்தன்மைபோல' என்பதாம்;

இதனுள் துணிபொருள்-சத்தம்நித்தியமாதல். அதற்கு மறுதலையாகிய துணிந்தபொருள்-சத்தம்அநித்தியமாதல். அதனைச்சாதிக்கும் வேறோரேது-சத்தம் காரியமாதல். அதனைச் சத்தத்தின்கண்ணுடைத்தாயிருத்தலால் இது சற்பிரதிபட்சமாயிற்று.

காரியமாதல்சத்தத்தின்கண் அநித்தியஞ்சாதிக்குமாறு. 'சத்தம் அநித்தியம்; காரியமாதலான், யாதுயாது காரியம் அதுஅது அநித்தியம், குடம்போல' என அநுவயமும், 'யாதுயாது அநித்தியமன்று (நித்தியம்) அது அது காரியமன்று, ஆன்மாப்போல'என வெதிரேகமும் உடையதாகிவரும்.

இவ்வேதுப்போலி முன்புகூறப்பட்ட அநைகாந்திகவகையுள் விருத்தவியபிசாரி எனப் பெயர்பெற்றிருக்கிறது.

## ஆச்சிரயாசித்தம்.

இது முன்புகாட்டப்பட்ட அசித்தவேதுப்போலிவகையுட் கூறப்பட்டதேயாம்.

## சொரூபாசித்தம்.

இது முற்கூறப்பட்ட அசித்தவேதுப்போலிவகையுள் உபயாசித்தம், அந்நியதராசித்தம், சிதாசித்தம் என மூன்றுவகையாகப் பிரித்துரைக்கப்பட்டிருக்கிறது.

## சோபாதிகம்.

சோபாதிகமாவது உபாதியுடன் கூடிய ஏது. (க) உபாதிதுணிபொருளுள்ளவிடங்களிற் றபபாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருத்தலும், (உ) பக்கத்தன்மையால் வரைந்து கொள்ளப்பட்ட விடங்களில் தப்பாதிருப்பதொன்றைப் பிரிந்து மிருத்தலும், (ங) ஏதுவால் வரைந்துகொள்ளப்பட்ட துணிபொருளுள்ள விடங்களில் தப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருத்தலும், (ச) யாதாயினுமொரு தன்மையால் வரைந்துகொள்ளப்பட்ட துணிபொருளுள்ள விடங்களிற்றப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருத்தலும என நான்கு வகைப்படும்.

இந்நால்வகையுபாதிகளையுமுடைய சோபாதிக ஏதுப்போலிகளுக்கு முறையே உதாரணம் வருமாறு.

முதலாவதற்கு உதாரணம். 'இம்மலை புகையுடைத்து, நெருப்புடைமையால்' என்பதாம். இதனுட் கூறப்படும் துணிபொருள் புகையுடைமை, அஃதுள்ள விடங்களிற் றப்பாதிருப்பதொன்று, நெருப்புக்குண்டாகிய ஈரவிறகின் கூட்டம் : அதனை. ஏதுப்பொருளாகிய நெருப்புடைமை சிவக்கக்காய்ச்சிய இரும்பிற் பிரிந்தும் இருத்தலால் இது துணிபொருளுள்ளவிடத்துத் தப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருப்பதென்னும் சோபாதிகமாயிற்று. இது முன் கூறப்பட்ட அநைகாந்திகவகையிற் சபக்ஷைகதேசவிருத்திவிபக்கவியாபியாகக் காணப்படுகிறது.

உ-ஆவதற்கு உதாரணம். 'வாயு காட்சிப்பொருள்; காட்சிப்பரிசமுடைமையால்' என்பதாம். இதனுட் பக்கப்பொருள்வாயு; அதன்றன்மை புறப்பொருளாதல்; அதனால் வரைந்துகொள்ளப்படும் துணிபொருள் - புறக்காட்சிப்பொருள் (பிருதிவி, அப்பு, தேயுக்கள்) அவற்றுள் தப்பாதிருப்பது உற்பூதவுருவம்; அதனைக்காட்சிப் பரிசமாகிய ஏதுப்பொருள் வாயுவின்கட் பிரிந்துமிருத்தலால் இது பக்கத்தன்மையால் வரைந்து கொள்ளப்படும் துணிபொருளுள்ள விடங்களிற் றப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருப்பதாகிய சோபாதிகமாயிற்று.

இது முற்கூறப்பட்ட தன்மவிசேடவிபரீதசாதனமாகக் காணப்படுகிறது.

மூன்றாவதற்கு உதாரணம்:— 'அழிவுபாட்டபாவம் நாசமுடையது, உண்டாகற்பாலதாதலான்' என்பதாம். இதனுள் ஏதுப்பொருள் உண்டாகற்பாலதாதல். அதனால் வரைந்து கொள்ளப்படும் துணிபொருள் உண்டாகற்பாலதாகி நாசமடைதல். அஃதுள்ள விடங்களில் (உண்டாகி நாசமடைவனவற்றுள்) தப்பாதிருப்பதொன்று பாவப்பொருளாதல். அதனைப்பிரிந்தும் இவ்வேதுப்பொருள் அழிவுபாட்டபாவத்திலிருத்தலால் இஃது ஏதுவால்வரைந்துகொள்ளப்பட்டதுணி

பொருளுள்ள விடங்களிற் றப்பா திருப்பதொன்றைப் பிரிந்துமிருப்ப தென்னும் சோபாதிகமாயிற்று.

இது முற்கூறப்பட்ட தன்மிச்சொரூபவிபரீத சாதனமெனக்காணப்படுகிறது.

## பாதிதம்.

ஒரேதன்மியில் தன்றுணி பொருளின் மறுதலைப் பொருளைப் பிறிதோரளவை யாற்றுணிதற்கு மிடங்கொடுத்திருப்பது.

உதாரணம்:— 'நெருப்புசூடில்லது திரவியமாதலால்' என்பதாம்.

இதனுள், தான் - திரவியமாதல் என்னும் ஏது. இதன் றுணிபொருள் சூடின்மை. அதன் எதிர்மறைப் பொருள் சூடு. அதனை ஒருதன்மியாகிய நெருப்பில் நெருப்புசூடுள்ள தெனத்துவக்கிந்திரியக் காட்சியளவையாற்றுணிதற் கிடங்கொடுத்து நிற்றலால் இது பாதிதமாயிற்று.

இவ்வேதுப்போலி முன்கூறப்பட்டபிரத்தியக்கவிருத்தம், ஆகமவிருத்தம் என்னும பக்கபோலிகளுள் ளடங்குகின்றது.

## திட்டாந்தபோலி.

இனித் திட்டாந்தப் போலி சாதன்மிய திட்டாந்தப் போலியும், வைதன்மிய திட்டாந்தப் போலியுமெனவிருவகைப்படும். அவற்றுள் சாதன்மிய திட்டாந்தப்போலி சாதன தன்மவிகலம் முதலிய ஐவகையாம். அவற்றின்பெயரும் உதாரணங்களும்பின்வருமி வரையறையுட் காண்க.

# சாதன்மியதிட்டாந்தப் போலிவரையறை.

| எண். | பெயர். | பக்கம். | ஏது. | திட்டாந்தம். | குறிப்பு. |
|---|---|---|---|---|---|
| ௧. | சாதனதன்மவிகலம். | காற்றுப் பரிமாண முடையது. | திரவியமாதலால். | யாது யாது திரவியம் அது அது பரிமாணமுடையது நெருப்புப் போல. | ஆங்கிலரசாயன நூலுடையாரை நோக்கிய கூற்று. |
| ௨. | சர்த்தியதன்ம விகலம். | புகைதிரவியம். | இயக்கமுடைமை யால். | யாது யாது இயக்கமுடையது அது அது திரவியம் நெருப்புப் போல. | ஷை |
| ௩. | உபயதன்ம விகலம். சன்னு. | புகைதிட்ப முடையது. | உருவமுடைமை யால். | யாது யாது உருவமுடையது அது அது திட்பமுடையது காற்றுப்போல. | நையாயிகரை நோக்கிய கூற்று. |
| | உபயதன்ம விகலம். அசன்னு. | காலம் திரவியம். | பரிமாணமுடைமை யால். | யாது யாது பரிமாணமுடையது அது அது திரவியம் ஆகாயம் போல. | ஆங்கில ரசாயன நூலுடையாரை நோக்கிய கூற்று |
| ௪. | அனன்னுவயம். | இம்மலைநெருப் புடைத்து. | புகையுடைமையால். | பாகசாலைபோல. | பொதுக் கூற்று. |
| ௫. | விபரீதான்னுவயம். | இம்மலைநெருப் புடைத்து. | புகையுடைமையால். | யாது யாது நெருப்புடைத்து அது அது புகையுடைத்துப் பாகசாலைபோல. | ஷை |

## சாதனதன்மவிகலம்.

சாதனதன்மவிகலமாவது—சாதனதன்மம் தன்கண்ணுள்ளதாக வெளிப்படையில்லாத பொருளைத் திட்டாந்தமாகக் கூறுவது. உதாரணம். (ஆங்கில ரசாயன நூலுடையாரை நோக்கி) 'காற்றுப் பரிமாணமுடையது; திரவியமாதலால்; யாது யாது திரவியம் அது அது பரிமாணமுடையது: நெருப்புப் போல' என்பதாம. இதனுள் சாதனதன்மம் திரவியமாதல் (முதற்பொருளாதல்) அஃது ஆங்கில ரசாயன நூலுடையார்க்கு நெருப்பின்கண் வெளிப்படையின்மையால் (அவர் நெருப்பைத் திரவியமென்று கொள்ளாமையால்) அவரை நோக்கி நெருப்பைத் திரவியமெனக் கொண்டு திட்டாந்தமாகக் கூறுமிடத்து அது சாதனதன்மவிகலமாகும் எனவறிக.

மற்றும் இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியாம். சாதனம்—ஏதுப்பொருள்; அது பக்கப்பொருளைப்பற்றித் தன்மமாய் நிற்றலால், அவ்வேதுப்பொருளே இங்குச் சாதனதன்மமென வழங்கப்பட்டது. சாதனமாகிய தன்மம் எனவிரியும். தன்மம் - தன்மை. இமமலை நெருப்புடைத்துப் புகையுடைமையால் என்பதிலும் புகையுடைமையாகிய ஏதுப்பொருள் புகையுடையதெனப் படும்மலையாகிய பக்கபொருளின்றன்மையாயமைதல்கண்டுகொள்க.

இவ்வாறே பின்வரும் சாத்திய தன்மமென்பதற்கும் பொருளுரைத்துக்கொள்க. விகலம் - உறுப்பற்றது. (குறைவுடையது என்றபடி) சாதனதன்மத்தாற் குறைவுடையது சாதனதன்மவிகலமெனப் பெயர்பெற்றது. பின்வரும். சாத்தியதன்மவிகலம் என்பதற்கும், உபயதன்மவிகலம் என்பதற்கும் இவ்வாறே பொருளுரைத்துக் கொள்க.

சாத்தியசாதனங்களிரண்டும் திட்டாந்தப்பொருளுக்கு உறுப பாகியமைதலால் அவ்வவ்வுறுப்பில்லாத திட்டாந்தப் பொருள்கள் அவ்வவ்வுறுப்பாற் குறைவுடையவாகிச் சாதனதன்மவிகலம், சாத்திய தன்மவிகலம், உபயதன்ம விகலம் எனப் பெயர்பெற்றனவாதலின், அவ்வப்பொருளை வழங்கும் கூற்றுகிய திட்டாந்தவுறுப்பும் சொற்பொருளொற்றுமைபற்றி அவ்வப்பெயரால் வழங்கப்படுமெனவறிக

## சாத்தியதன்மவிகலம்.

சாத்தியதன்மவிகலமாவது சாத்தியதன்மம் தன்கணுள்ளதாகக்கொள்ளப்படாதபொருளை அன்வயதிட்டாந்தமாகக்கூறுவதாம்.

உதாரணம்:—(ஆங்கில நூல் வல்லாரைநோக்கி) 'புகைதிரவியம்; இயக்கமுடைமையால்; யாதுயாது இயக்கமுடையது அது அது திரவியம்; நெருப்புப்போல' என்பதாம். இதனுள் சாத்தியதன்மம் திரவியமாதல். அஃது ஆங்கில நூல் வல்லாரால் நெருப்பின்கணுள்ளதாகக் கொள்ளப்படாமையால் இக்கூற்று அவருக்குச் சாத்திய தன்மவிகலமாம். இவ்வாறு சாத்தியப்பொருள் குறையக்கூறுவன வெல்லாம் இத்திட்டாந்தப் போலியெனவறிக.

சாத்தியம்துணிபொருள். அது பக்கப்பொருளுக்குத்தன்மமாய் நிற்றலாற் சாத்தியதன்ம மெனப்பட்டது. சாத்தியமாகிய தன்ம மெனவிரியும். தன்மம் விசேடணம். எடுத்துக்காட்டிய 'புகைதிரவியம்'என்னும்பக்கவுறுப்பில் பக்கப்பொருள்-புகை. துணிபொருள்-திரவியமாதல். அதனை விசேடணமாகவுடையது (புகைதிரவியமாதலையுடையது) என்பதற்கேற்பப் புகைதிரவியமெனப்பக்கவுறுப்புக் கூறப்பட்டமை காண்க. இவ்வாறே மலைநெருப்புடைத்து என்பதனுள், பக்கப்பொருள்-மலை. துணிபொருள்- நெருப்பு அன்று நெருப்புடைமை. அதுவும், முன்போலப்பக்கப்பொருளை விசேடித்து நிற்றல் கண்டுகொள்க.

புகையும் புகையுடைமையும் ஒன்றாதல் போல நெருப்பும் நெருப்புடைமையும் ஒன்று மெனவறிக.

## உபயதன்மவிகலம்.

உபயதன்மவிகலமாவது சாதன சாத்தியங்கள் இரண்டுமுள்ளதாகக் கொள்ளப்படாத் பொருளை அன்னுவயதிட்டாந்தமாகக் கூறுவது. அது, சன்னு அசன்னு என இருவகைப்படும்.

### சன்னு.

அவற்றுள் சன்னுவுள்ள உபயதன்மவிகலமாவது தான் உள்ளதாகத் தன்கண் சாதன சாத்தியங்கள் இல்லனவாகத் திட்டாந்தப்

பொருள கூறுவது. உதாரணம்.--(நையாயிகரைநோக்கி) 'புகைதிட்ப முடையது; உருவமுடைமையால்; யாது யாது உருவமுடையது அது அது திட்பமுடையது; காற்றுப்போல்' என்பதாம். இத னுட் கூறப்பட்ட திட்டாந்தப்பொருள் காற்று. அது நையாயிக ரால் உள்ளதாகக்கொள்ளப்படுவது. எடுத்துக்கொண்ட சாதன சாத்தியங்களாகிய உருவமுடைமையும் திட்பமுடைமையும் அவ ரால் அக்காற்றின்கணுள்ளனவாகக்கொள்ளப்படாமையால் அவர் க்கு அக்காற்றின் கண் அவையில்லனவாதலின் இஃது அவர்க்குச் சன்றுவுள்ளவுபயதன்மவிகலமாயிற்று.

காற்றின்கணுள்ளதாக ஆங்கிலநூல் வல்லாரால் கொள்ளப் பட்ட திட்பமுடைமையை, நையாயிகர் படைப்புக்காலத்திற் காற் றின்கண் கடவுளால் சஞ்சீகரணத்தாற் கூட்டப்பட்டதும் அணு வாகிக்கலப்புற்றதுமாகிய பிரதிவி யப்புக்களின் கூறதாகக் கொள் ளுவதன்றி காற்றின்கட் டிட்பமுடைமையுள்ளதாகக்கொள்ளார்.

## அசன்று.

அசன்றுவுள்ளவுபயதன்மவிகலமாவது உள்ளதாகக்கொள்ளப் படாதபொருளைத் திட்டாந்தமாகக்கூறுவது. உதாரணம்:—('ஆங்கில நூல் வல்லாரைநோக்கி,)'காலம் திரவியம்; பரிமாணமுடைமையால்; யாது யாது பரிமாணமுடையது அது அது திரவியம்; ஆகாயம் போல.' என்பதாம். இதனுட் கூறப்பட்ட திட்டாந்தப்பொருள் ஆகாயம். அஃது அவரால் ஒருபொருளெனக் கொள்ளப்படாமை யால் அஃது அவருக்கு இல்லதாயிற்று. ஆகவே அதன்கணுள்ள தாகக்கூறப்பட்ட சாதன சாத்தியங்களாகிய பரிமாணமுடைமையுந் திரவியமாதலும் அவர்க்குப் பிறிதோரிடத்து வெளிப்பட்டுள்ளன வாயினும், எடுத்துக்கொண்டதிட்டாந்தப்பொருளில் வெளிப்படா மையால் இஃது அவருக்கு அசன்றுவுள்ளவுபயதன்மவிகலமாயிற்று. சன்று-உள்ளது. அசன்று-இல்லது. மற்றும் இவ்வாறு வருவன வெல்லாம் இத்திட்டாந்தப்போலியென அறிக. சாதனதன்மமுத லிய நான்கும் வியாத்தியுணர்வையுண்டாக்கும் வலியின்றி அனுமிதி யுணர்வைப்பயவாது திட்டாந்தப்போலியாயின.

## அநன்னுவயம்.

அநன்னுவயமாவது ஏது சாத்தியங்களின் றொடர்பையுணர்த்தும் அன்னுவயவியாத்திவசனமின்றித் திட்டாந்தவுறுப்புக் கூறுவது. உதாரணம்—‘ இம்மலைநெருப்புடைத்து ; புகையுடைமையால்; பாகசாலைபோல’ என்பதாம். இதனுள் யாது யாது புகையுடைத்து அது அது நெருப்புடைத்து என்னும் அன்னுவயவியாத்தி வசனம் கூறப்படாமையால் இஃது அநன்னுவயமாயிற்று. மற்றும் இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப் போலியென வறிக. ஏதுப்பொருளுடையனவெல்லாம் துணிபொருளுமுடையன வென்னும் வியாத்தியுணர்வு எளிதிற்றோன்றாமையால் அநுமிதியுணர்வுக்குத் தடையாய் இது திட்டாந்தப்போலியாயிற்று.

## விபரீதான்னுவயம்.

விபரீதான்னுவயமாவது திட்டாந்தவுறுப்பாகிய அந்நுவயவாக்கியத்தை முறைபிறழக் கூறுவது. உதாரணம்:—‘இம்மலை நெருப்புடைத்து; புகையுடைமையால்; யாது யாது நெருப்புடைத்து அது அது புகையுடைத்து; பாகசாலைபோல’ எனபதாம். இதனுள் யாது யாது புகையுடைத்து அது அது நெருப்புடைத்து எனக்கூறக்கடவதாயுள்ள அன்னுவய வாக்கியத்தை, யாது யாது நெருப்புடைத்து அது அது புகையுடைத்து என விபரீதமாகக் கூறுதலால் இது விபரீதான்னுவயமாயிற்று. மற்றும் இவ்வாறு கூறுவன வெல்லாம் இத்திட்டாந்தப்போலியெனவறிக. விபரீதம்-மாறுபாடு. இங்ஙனம் விபரீதமாகக்கூறுதலால் ஏதுவின்வியாபகம் துணிபொருள் என்னும் வியாத்தியுணர்வு தோன்றாது அநுமிதிக்குத்தடையாதலால் இது திட்டாந்தப்போலியாயிற்று.

## வைதன்மிய திட்டாந்தப் போலி.

இனி வைதன்மிய திட்டாந்தப்போலியும் ஐவகையாம். அவற்றின் பெயரும் உதாரணமும் பின்வரும் வரையறையுட் காண்க.

# வைதன்மியதிட்டாந்தப் போலிவரையறை.

| எண் | பெயர். | | பக்கம். | ஏது. | திட்டாந்தம். | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|
| க | சாத்தியாவியா விருத்தி. | | காற்று திரவியம். | பரிசமுடைமையால். | யாது யாது திரவியமன்று அது அது பரிசமுடைய தன்று; காலம்போல. | நையாயிகரை நோக்கிய கூற்று. |
| உ | சாதனவியா விருத்தி. | | தண்ணீர் ஒளியில்லது. | நிறமின்மையால். | யாது யாது ஒளியுள்ளது அது அது நிறமுள்ளது; நெருப்புப் போல. | ஆங்கிலநூல்வல்லாரை நோக்கிய கூற்று. |
| ங | உபயாவியாவிருத்தி. | உண்மையின் | நெருப்பு உருவமில்லது. | சுவையில்லாமையால் | யாது யாது உருவமுள்ளது அது அது சுவையுள்ளது; தண்ணீர் போல. | ஷை |
| | | இன்மையின் | காற்று உருவமில்லது. | வடிவமில்லதாதலால். | யாது யாது உருவமுள்ளது அது அது வடிவமுள்ளது; இருள்போல. | நையாயிகரை நோக்கிய கூற்று. |
| ச | அவ்வெதிரேகம். | | இம்மலை நெருப்புடைத்து. | புகையுடைமையால் | ஆற்று வெள்ளம் போல. | பொதுக் கூற்று. |
| ரு | விபரீதவெதிரேகம். | | இம்மலை நெருப்புடைத்து. | புகையுடைமையால். | யாதுயாதுபுகையில்லாதது அதுஅதுநெருப் பில்லாதது;ஆற்றுவெள்ளம் போல. | ஷை |

## சாத்தியாவியாவிருத்தி.

சாத்தியாவியாவிருத்தியாவது சாத்தியாபாவத்துக்கு நிலைக்களமாகப் பிரசித்தமில்லாததொன்றை (சாத்தியப்பொருளுக்கு நிலைக்களமாக வெளிப்பட்டிருப்பதை) வெதிரேகதிட்டாந்தமாகக் கூறுவது. உதாரணம்-(நையாயிகரைநோக்கி) 'காற்று திரவியம்; பரிசமுடைமையால்; யாது யாது திரவியமன்று அது அது பரிசமுடையதன்று; காலம்போல.' என்பதாம். இங்கு குறித்துக்கொண்ட சாத்தியப்பொருள்-திரவியமாதல்; அதனது அபாவம்-திரவியமின்மை; அதற்கிடமாகப் பிரசித்த மில்லாதது (திரவியமாகப்பிரசித்தமாவது) நையாயிகருக்குக் காலப்பொருளாதலால் அவருக்கு இது சாத்தியாவியாவிருத்தியாயிற்று. மற்றும் இவ்வாறு வருவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலி யெனவறிக. வியாவிருத்தி-வேறுபாடு. அவ்வியாவிருத்தி-வேறுபாடின்மை (ஒற்றுமையுடைமை.) திட்டாந்தப்பொருள் சாத்தியத்தால் ஒற்றுமையுடைத்தாயிருத்தலால் இது சாத்தியாவியாவிருத்தி யெனப்பட்டது.

## சாதனவியாவிருத்தி.

சாதனவியாவிருத்தியாவது சாதனாபாவத்துக்கு நிலைக்களமாகப் பிரசித்தமில்லாத தொன்றை, (சாதனப்பொருளுக்கு நிலைக்களமாகி யிருப்பதை) வெதிரேக திட்டாந்தமாகக்கூறுவது. உதாரணம்—(ஆங்கில நூல்வல்லாரை நோக்கி) 'தண்ணீர் ஒளியில்லது; நிறமின்மையால்; யாது யாது ஒளியுள்ளது அது அது நிறமுள்ளது; நெருப்புப்போல' என்பதாம். இதனுட் கூறப்பட்ட சாதனப்பொருள்-நிறமின்மை; அதன் அபாவம்-நிறமுடைமை; அதற்கிடமாக அவர்க்குப் பிரசித்தமில்லாதது (நிறமுடையதாகக் கொள்ளப்படாதது)-நெருப்பு; அதனை அவர்க்கு வெதிரேக திட்டாந்தமாகக் கூறுதலால் இது சாதன வியாவிருத்தியாயிற்று. மற்றும் இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப் போலியெனவறிக.

## உபயாவியாவிருத்தி.

உபயாவியாவிருத்தியாவது சாத்தியசாதனங்களின் அபாவத்துக்கு நிலைக்களமாகாத தொன்றை, (சாத்திய சாதனங்களினிலைக்

ளமாயிருப்பதை) வெதிரேக திட்டாந்தமாகக்கூறுவது. அஃதுண்மையினுபயாவியாவிருத்தி, இன்மையினுபயாவியாவிருத்தி யென இருவகைப்படும்.

## உண்மையினுபயாவியாவிருத்தி.

உண்மையினுபயாவியாவிருத்தியாவது சாத்திய சாதனங்களுக்கு நிலைக்களமாக வெளிப்பட்டிருப்பதொன்றை வெதிரேகதிட்டாந்தமாகக் கூறுவது. உதாரணம்—(ஆங்கிலநூல் வல்லாரை நோக்கி) 'நெருப்பு உருவமில்லது; சுவையின்மையால்; யாது யாது உருவமுள்ளது அது அது சுவையுள்ளது; தண்ணீர்போல' என்பதாம். இங்கு எடுத்துக்கொண்ட சாத்தியசாதனங்கள்-முறையே உருவமின்மையும், சுவையின்மையும்; இவ்விரண்டும், ஆங்கிலநூல் வல்லாருக்குப் பிரசித்தமாயுள்ள தண்ணீரின்கண் ணின்மையால் இஃதவருக்கு உண்மையினுபயாவியாவிருத்தி யாயிற்று. மற்றும் இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலி யென வறிக.

## இன்மையினுபயாவியாவிருத்தி.

இன்மையினுபயாவியாவிருத்தியாவது—உள்ளதாகக் கொள்ளப்படாதபொருளைத்திட்டாந்தமாகக் கூறுவது. உதாரணம்—(நையாயிகரைநோக்கி) 'காற்று உருவமில்லது; வடிவமின்மையால்; யாது யாது உருவமுள்ளது அது அது வடிவமுள்ளது; இருள் போல' என்பதாம். இதனுட் கூறப்பட்ட திட்டாந்தப்பொருள்-இருள். அதனை நையாயிகர்கள் பொருளெனக்கொள்ளாமையால், சாத்திய சாதனபாவங்களாகிய உருவ வடிவங்களுக்கு நிலைக்களமாகி வியாவிருத்தி தோன்றுதாகையால் இஃதவர்க்கின்மையினுபயாவியாவிருத்தியாயிற்று. மற்றும் இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியாமென வறிக. சாத்தியாவியாவிருத்தி முதல் நான்கும் வியாத்தியுணர்விற்குக் கருவியாகாமையால் திட்டாந்தப்போலியாயின.

## அவ்வெதிரேகம்.

அவ்வெதிரேகமாவது தனது உறுப்பாகிய வெதிரேகவாக்கியமின்றிக்கூறுவது. உதாரணம்:—' இம்மலை நெருப்புடைத்து; புகை

புடைமையால்; ஆற்றுவெள்ளம் போல' என்பதாம். இதனுள் 'யாது யாது நெருப்பில்லாதது அது அது புகையுமில்லாதது' என்னும் வெதிரேகவாக்கியங் கூறப்படாமையால் இஃது அவ்வெதிரேகமாயிற்று. மற்றும் இவ்வாறு வருவனவெல்லாம் இத்திட்டாந்தப் போலி யெனவறிக. வெதிரேகவாக்கியமின்மையால் வெதிரேகவியாத்தி யெளிதினுணரப்படாது அநுமிதியுணர்விற்குத் தடையாகி இதுதிட்டாந்தப்போலி யாயிற்று.

## விபரீத வெதிரேகம்.

விபரீத வெதிரேகமாவது தன்னுறுப்பாகிய வெதிரேகவாக்கியத்தை மாறுபடக்கூறுவது. உதாரணம்—'இம்மலை நெருப்புடைத்து; புகையுடைமையால்; யாது யாது புகையில்லாதது அது அது நெருப்புமில்லாதது; ஆற்றுவெள்ளம் போல' என்பதாம். இதனுள் 'யாது யாது நெருப்பில்லாதது அது அது புகையுமில்லாதது' எனத் துணிபொருளின்மையை முற்கூறி ஏதுவினின்மையைப் பிற்கூறக் கடவதாகிய வெதிரேகவாக்கியத்தை, 'யாதுயாது புகையில்லது அது அது நெருப்புமில்லது' என ஏதுவினதின்மை முன்னும் துணிபொருளின் இன்மை பின்னுமாகவைத்து முறைபிறழக் கூறுதலால் இது விபரீத வெதிரேகமாயிற்று. மற்றும் இவ்வாறு வருவனவெலாம் இத்திட்டாந்தப் போலி யெனவறிக.

வெதிரேகம் மாறுபடக்கூறுதலால், ஏதுவின் இன்மையுள்ளவிடத்தும் துணிபொருளுளதாயிருத்தல்பற்றி வியாத்தி புணரின்றும். அதனால் அநுமிதியுணர்வும் உண்டாகாமையால் இதுதிட்டாந்தப் போலியாயிற்று.

இங்ஙனங்கூறிமுடித்த பக்கப்போலி, ஏதுப்போலி, திட்டாந்தப் போலி என்னும் மூவகைப்போலி யுறுப்புக்களுள் ஒன்றுமில்லாத நல்லுறுப்புக்களாலமைந்த வாக்கியங்களே சதநுமானப் பிரமாணமாகுமென இதனுலறியத்தக்கதாயிற்று.

**அநுமானவிளக்கம் முற்றும்.**

உ

கடவுள் துணை.

# தொட்டிக்கலைக்

# ஸ்ரீகேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை

## முகவுரை

இந்நூல், தொட்டிக்கலை ஸ்ரீ: சுப்பிரமணிய முனிவரால் இயற்றப்பெற்றது. இம்முனிவர், இற்றைக்கு ககரு வருஷங்கட்கு முன்பு விளங்கியவரென்பதும், திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ: சிவஞான யோகிகளுடைய அருமை மாணாக்கர் பன்னிருவருள் ஒருவரென்பதும், அமிர்தவாக்கி என்பதும் பலரும் நன்கறிந்தவை. இம்முனிவர் வரலாறு, மஹாமஹோபாத்யாயர்: பிரஹ்மஸ்ரீ; வே. சாமிநாதையரவர்களால், திருவாவடுதுறைக் கோவைப்பதிப்பில், பிரபல ஆராய்ச்சியோடும் விளக்கப்பட்டுள்ளது. இது நிற்க. இம்முனிவர் இயற்றிய பிரபந்தத்திரட்டு என்னும் அரியபிரதியொன்று, நம் தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையில் உள்ளது. இச்சங்கத்து அக்கிராசனாதிபதியும் தமிழருமையறிந்தவள்ளலுமாகிய ஸ்ரீமான்-பாண்டித்துரைத்தேவரவர்களால் பெரிதும் அருமை பாராட்டி அளிக்கப்பெற்ற ஏடுகளில் இஃதொன்று. இப்பிரபந்தத்திரட்டில், பல சிறிய நூல்கள் காணப்படுகின்றன. அவற்றுள், தொட்டிக்கலையிற் திருக்கோயில் கொண்டுள்ள கேசவப்பெருமாள் விஷயமாக, இரட்டைமணிமாலை, வண்ணங்கள், ஆசிரிய விருத்தம், விருத்தம், உலா, தாய்மகள் வினாதல், கலிவிருத்த அந்தாதி, கொச்சகக்கலிப்பா என்பவைகளும், ஷையூர் பெருந்தேவித்தாயார் விஷயமாக ஆசிரிய விருத்தம், ஊசல் என்பவைகளும், இம்முனிவரியற்றியனவாக உள்ளன. இதனால், சைவசமயப்பெரியாரில் ஒருவராகிய இம்முனிவர் திருமால்பத்தியும் மிக்கவுடையர் என்பது நன்குவெளியாம். உண்மைப் பெரியோரெல்லாம் இங்ஙனம் இருத்தல் இயல்பன்றோ! ஷை பிரபந்தங்களை

# முகவுரை.

இரட்டைமணிமாலையைத் தமிழுலகமறிந்து ஆனந்திக்குமாறு, இப்போது, "செந்தமிழ்" வாயிலாக வெளியிடத்துணிந்தேன். இதன் சொற்பொருணயங்களின் சிறப்பு அறிஞர்க்குப் பெருமகிழ்வளிக்குமென்பது திண்ணம். ஆயினும், ஏனையரும் அவற்றை அறியவேண்டி, அவ்வப்பாடலின் அரும்பதம் விசேடமுதலியவற்றை, என்னறிவிற்கேற்ப, கீழ்க்குறிப்பில் வைத்து விளக்க முயன்றிருக்கிறேன். இம்முனிவர் இயற்றிய பிரபந்தங்களில் வெளிவராதனவற்றை, இவ்வாறே, உரியகாலத்தில் வெளியிட்டுவரவும் எண்ணமுடையேன்,

இங்ஙனம்,

மு. இராகவையங்கார்,

"செந்தமிழ்"ப் பத்திராசிரியர்.

௬

கடவுள் துணை.

# திருத்தொட்டிக்கலைக் கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை.

———:(o).———

## காப்பு.

*மான்மேவுந் தண்டலைசூழ் மன்னுந் திருக்கலைசை*
*மான்மே லிரட்டைமணி மாலைசொல —மான்மருகன்*
*கந்தனுக்கு முன்னுதித்த கந்தனுக்குஞ் செங்கழுநீர்க்*
*கந்தமதத் தந்திபதம் காப்பு.*

## வெண்பா.

*நீர்பூத்த கந்தரத்தி னீர்வடிவர்*
*சீர்பூத்த தென்கலைசைச் சீதரனார் — தார்பூத்த*
*பின்னமாகப் பின்னைதன்பூப் பிசைந்தா ளீர் றுண்பதுபோ*
*லென்னை மணந்தார்வந் திலரே* (௧)

## கலித்துறை

*இருங்கேச வாதிருத் தொட்டிக் கலைசதி யேமுகிலைப்*
*பொருங்கேச வாசுகம் போலுங்கண் ணாளொரு பூவைபுன்றன்*
*மருங்கேச வாதணி யார்பெந் தியகுல்லை மாலைக்கின்று*
*ரொருங்கேச வாசைபற் றுளருளாசை யுடையவனே.* (௨)

காப்பு:

மால் - மேகம். தண்டலை - சோலை. உதித்த, அனுக்கும் என்னும் பெயரெச்சங்கள் தந்தி என்னும் பெயர்கொண்டன. பின்னதாகிய கந்தனுக்கும் என்பதைக் கந்து + அனுக்கும் எனப்பிரித்து, கட்டுத்தறியை முறிக்கும் எனப்பொருள் கொள்க.

நூல்.

௧. கந்தரம்-மேகம். ஸ்ரீதரனார், பின்னிய கூந்தலையுடைய நப்பின்னையின் மணற் சிறுசோற்றை உண்டு திளைத்தமைபோல, இரவில் என்னைத் திளைத்தார்; என்றது பிராட்டி சிற்றிலிழைத்து சமைத்த சிறுசோற்றைக் கண்ணன் பொய்யே உண்டு விளையாடியது போல, என்னைக் கனவிற் பொய்யே கலந்தார் எனத் தலைவி இரங்கியபடி. நப்பின்னை, திருமகள் இருவர் சுகத்தையும் திளைத்தல் போல என்னை மணந்தார் என்பதுமாம்.

௨. கேசத்தை யுடைய பூவை (பெண்.) ஆசுகம்-அம்பு. குல்லை-திருத்துழாய். ஆசையுடையவன் - பீதாம்பரன். ஆசையுடையவன் ஆசையுற்றவட்கு அருளல் முறையென வேறுமொரு குறிப்புத் தொனித்தல் காண்க.

# கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை.

[வெண்பா.]

உடையாச் செறுந ருயிர்குடிக்கு மாழிப்
படையாண்ட செங்கைப் பரனைப்—புடையார்ந்த
கற்புரிசைத் தென்கலைசைக் கண்மாலைக் கண்டிவளு
மெற்புருக மாலானா ளின்று. (௩)

[கலித்துறை]

இன்னற் பிறப்பறுத் தின்னலங் காட்டு மெழிலரியைக்
கன்னற் கழனிக் கலைசைப் பிரான்றனைக் கைதொழுதோர்
மின்னற் புதமுறுங் கண்ணீர் சொரியும் விதிர்விதிர்க்கு
மென்னற் பொழுதுங் கனவிற்கண் டேனென்னு நெட்டுயிர்த்தே (௪)

[வெண்பா]

நெட்டிலஞ்சிக் கெண்டைகடாய் நீள்கரைமே லோங்கிநின்ற
மட்டிலஞ்சிப் போதுதிர்க்கு மாவளங்கூர்ந்—திட்டமுறும்
பூங்கலைசைக் கேசவமால் பொன்னடியைச் சென்னிமிசைத்
தாங்கினரே செய்தார் தவம். (௫)

[கலித்துறை]

தவளை குதிக்கத்தண் டேன்பாய் வயற்கலை சைக்குளிருந்
தவளக் கரதல னேமுல்லை யாய்ச்சியர் தாங்குறிவைத்
தவளை யெடுத்துண்ட செவ்வாய னேயிந்தத் தையனலத்
தவளை கவருதற் கோபருந் தூர்ந்தித் தலைவந்ததே. (௬)

[வெண்பா]

தேங்காவி யீதே சிறைவண் டுறங்கியநீர்
தேங்காவி சூழ்கலைசைச் சீதரனோ—தேங்காவி
யாற்றியபா வத்தைதினை யாய்தமல் லால்வேறு
மாற்றுதற்குக் காணேன் மருந்து. (௭)

---

௩. உடையாச் செறுநர்-எனையரால் அழியாத பகைவர். உடைத்து எனக் கொள்ளினுமாம். புரிசை - மதில். மாலைக்கண்டு இவளும் மாலானாள் என ஒரு குறிப்புத்தொனித்தல் காண்க.

௪. கன்னல் - கரும்பு. ஓர்மீன்—எழுவாய்.

௫. இலஞ்சி - பொய்கை. மட்டு+இலஞ்சி = மதுவையுடைய மகிழமரம்.

எதுகைகளை, முறையே, இருவளை (பாஞ்சசந்நியம்) எனவும், குறிவைத்த+அவளை (வெண்ணெய்) எனவும், நலத்த+வளை(மகளிர்கையணி) எனவும் சேர்த்துப்பிரித்துப் பொருள் கொள்க. ஈற்றடியில், பருந் தூர்ந்து வந்தது, தவளை கவர்தற்குப் போலும் என வேறொரு குறிப்புத் தொனித்தல் காண்க.

எ. இரண்டாமடியை, நீர்+தேங்கு+ஆவி (பொய்கை) எனவும், நொந்து+ஏங்கு+ஆவி (உயிர்) எனவும் பிரித்துப்பொருள் கூறுக. ஐம்+ஐயாயுதம்; அவை:—சங்கு, சக்கரம், வாள், தண்டு, சிலை.

[கலித்துறை]

மருந்தே விமானத்தி லேறுஞ் சுரரை வளர்கலைசை
யிருந்தேவி யாளு மிறையவ னேயென் னிடர்தவிர்ப்பாய்
முருந்தே யிராவிருள் வெண்மூர லம்பக மொய்குழலாம்
பெருந்தேவி மாதை மணந்துல குண்ட பெருந்தகையே. (அ)

[வெண்பா]

கைவரையைக் காத்துக் கராவைக் கடிந்துகுடங்
கைவரைக்கு ளேழிசையுங் கண்டானே—யைவருக்குத்
தூதாதொட் டிக்கலைசைச் சுந்தரவிப் பைந்தொடிக்குத்
தாதாதொட் டித்துளவத் தார். (கூ)

[கலித்துறை]

தாவா தவரும் பொருளேவை குந்தத்திற் றங்குமுகுந்
தாவா தவரு மதியுஞ்செறிபொழிற் றண்கலைசைத்
தாவா தவரும் பருதியுஞ் சங்குந் தரித்தகைப்போ
தாவா தவரு மறியாப் பதத்தைத் தரவ்வணக்கே. (கo)

[வெண்பா]

கேசவா திக்குநிறை கீர்த்தித் திருக்கலைசை
வாசவா திக்குமனை மார்வசையே—பேசவா
காயமதி யோடுமதன் கைக்கருப்பு விற்கணையுங்
காயமதி சோருமின்னைக் கா. (கக)

அ. (உ, ந-ம்) அடியெதுகைகளை (சுரரை) இருந்து+எவி+ஆளும் எனவும், முருந்து (மயிலிறகடி) + எ (அம்பு) + இராவிருள் எனவும் பிரித்து, பிற்கூறிய முருந்து முதல் மூன்றற்கும்-வெண்மூரல் (பல்), அம்பகம் (கண்), மொய்குழல்களை நிரனிறையாகக்கொண்டு பொருள் கூறுக. பெருந்தேவி—பிராட்டி திருநாமம்.

கூ. கைவரை—கஜேந்திரன். கரா-முதலை. குடங்கைவரை - உள்ளங்கையிற் கொண்ட வேய்ங்குழல். தா+தாது+ஒட்டு + இத்துளவத்தார் எனப்பிரிக்க. தார்தாஎன இயையும்.

கo. எதுகைகளை, முறையே, தாவாத (கெடாத)+அரும்: எனவும், முகுந்தா+ஆதவரும் (சூரியனும்) எனவும், தாவா (இடத்திலுள்ளவனே) + தவரும் (வில்லும்) எனவும், கைப்போதா+வா+தவ்ரும்(தவசிகளும்) எனவும் கூட்டிப்பிரித்துப் பொருள் படுத்துக. மூன்றுமடியில் தாவு உறைவிடம். எனக்குத் தர வாஎன இயையும்.

கக. (கலைசை) வாச+வாதிக்கும் (துன்புறுத்தும்) +அனைமார் எனப் பிரிக்க. வசைபேசலாலும், மதியும் கணையும் காய்தலாலும் மதிசோரும் மின் (பெண்) என்க. மதிசேர்தல் - அறிவழிதல். தோழி இரங்கிக்கூறியது.

[கலித்துறை]

காயா மலரை நிகர்வண்ண னேதென் கலைசையில்வாழ்
மாயா மலரை யுடுக்கும்பொன் னம்பர மன்னவுன்னை
யோயா மலரை யிரவிலுஞ் சிந்தித் தொருத்திசொல்லுந்
தீயா மலரையுற் றூடன மேற்றனந் தேடிக்கொண்டே. (கஉ)

[வெண்பா]

கொண்டலே யொக்குங் குளிர்வடிவாற் றன்னகலங்
கண்டவெழின் மின்னாற் கவுத்துவத்தின் — விண்டகதி
ரண்டுதுழா யிந்திரவில் லாலதுபெய் தேன்மழையான்
மண்டுபுகழ்த் தென்கலைசை மால். (கங)

[கலித்துறை]

மாலைவிட் டோம்வன மாலையைப் பெற்றபின் வன்பிறவி
வேலைவிட் டோமுன்றன் வேலையைச் செய்தபின் வெய்யவிழிக்
காலைவிட் டோமுன்பொற் காலைத் தொழுதபின் காதிலிட்ட
ஓலைமட் டோமிங்கண் ணூர்வாழ்தொட் டிக்கலை யுத்தமனே. (கச)

[வெண்பா]

மன்னவா சகங்கடந்த வாரீசன் றாதாய்
மன்னவா சகங்கடந்த வாழ்வே யினியடியேன்
காந்தளறு சேராமற் காத்தருள்வாய் தென்கலைசைப்
பாந்தளணை யானே பரிந்து. (கரு)

கஉ. இரண்டாமடியில், மல்+அவை=வளப்பமுற்ற இடை எனக்கொள்க; அதிலுடுக்கும் பீதாம்பரத்தை யுடைய அரசனே. அரையிரவு—நடுச்சாமம். தீயாம்+அலர்=கெட்டப் பழிச்சொல். ஒருத்தி உற்றனள இயையும். பின்வரும் தனம்-பொன்: பசலை என்றபடி.

கங. தென்கலைசைத்திருமால்— வடிவாலும், மின்னாலும், இந்திரவில்லாலும், மழையாலும், கொண்டலே போல்வர். அகலம்-திருமார்பு. ஒரு பொருளில், எழில்மின்—இலக்குமி; இந்திரவில்-உயர்ந்த ஒளி எனக. கௌஸ்துபமணியின் விரிந்தபலகிரணங்கள் படுதலால், திருத்துழாய் இந்திரவில் போன்றதென்பது கருத்து. மால் ஒக்கும் எனமுடியும். மால் என்பது மேகத்துக்கும் பெயராதலின், அம்மால் (மேகம்) வடிவு, மின் முதலியவற்றால் மேகம்போன்றது என வேறொரு நயம்பெறப்படுதலுங்காண்க.

கச. மால்-மயக்கம். வனமாலை-துளவமாலை. முதல்வேலை-கடல். பின்வேலை-கைங்கரியம். வெய்யவிழிக்காலை-தறுகண்மையுடைய யமனை; ஓலை-மகளிர்காதணி. மட்டு-எல்லை: உம்மை தொக்கது.

கரு. முதலடியை—ம(ன்)னவா+சகங்கள்+தந்த+வாரீசன் (பிரமன்) எனப்பிரிக்க. வாரீசம்-தாமரை. காந்து+அளறு-எரிவாய் நிரயம். பாந்தள்-ஆதிசேடன்.

[கலித்துறை]

துரங்கத்தி னார்ப்புறுந் தொட்டிக் கலைமது சூதனனே
தரங்கக் கடற்கு ளிலங்கா புரியினிற் றங்குமரக்
கரங்கத்தைப் பேயுங் கழுகுந் தினக்கொன்று கான்மரத்து
மரங்கத் தினும்பள்ளி கொள்ளும் பிரானுன் னடைக்கலமே. (௧௬)

[வெண்பா]

அடுபடைவா ணன்சிரமீ ரைஞ்ஞூறு நேமிப்
படைதொட் டறுத்தருள்கோ பாலா - கொடிதெனைச்செ
யிச்சுதனைப் பெற்ற திசையலவே தென்கலைசை
யச்சுதனே பூமணவா ளா (௧௭)

[கலித்துறை]

மணங்கொண்ட சோலைக் கலைசா புரியின் மணிவண்ணனே
பணங்கொண்ட பன்னகப் பாயலைப் போற்பகு வாயரக்கர்
நிணங்கொண்ட வாழிப் படையுடை யாயிந்த நேரிழைதன்
குணங்கொண்ட கொங்கைக் குவட்டிலு நீபள்ளி கொண்டருளே. (௧௮)

[வெண்பா]

அருந்தமிழ்த்தேர் தென்கலைசை யாண்டகையே யும்பர்க்
கருந்தமிழ்தே ராயளித்த வையா - வரைந்தெவரு
நாட்டினகை யாதெனையா ணல்வரைந்து மதைதாக
நாட்டினகை யாமுகில்வண் ணா (௧௯)

[கலித்துறை]

நானங் கமழுங் குழலணங் கேநலி யாதிருமோ
வானவில் லோடு முருமோடு மேகம் வருமுன்னமே
யானவில் லேந்திவெண் சங்கத் தொலிசெய் தருட்கலைசை
நீனிறத் தங்க முகில்வருங் காணன்பு நீருண்ணவே. (௨௦)

முற்றும்.

௧௬. துரங்கத்தினார்ப்பு - குதிரைகளினொலி. தரங்கம் - அலை. அரக்கர் + அங்கத்தை. கானமரம் - ஆலமரம். அரங்கம் ஆற்றிடைக் குறையான ஸ்ரீரங்கம் என்னுந் திருப்பதி.

௧௭. என்னைக் கொடுமை செய்கின்ற நிலமகன்: என்றது, திருமால் புத்திரனான மன்மதனைக் குறித்தபடி.

௧௮. பணம் - பீடம். பன்னகம் - ஆதிசேடன். நிணம் - கொழுப்பு. குணங்கொண்ட—குடத்தின் றன்மை கொண்ட.

௧௯. அருந்து + அமிழ்து + ஏராய ளித்த எனவும், நாட்டில் + நகையாது எனவும், நாட்டின + கையா எனவும் எதுகைகளைப் பிரித்துப் பொருள் கொள்க. வரைந்து - தள்ளி.

௨௦. நானம் - கஸ்தூரி. மோ முன்னிலையசை. உருமு - இடி. 'கார்ப்பருவம் வருவதற்கு முன்பே திருமால் நின்னையணையவருவன்; வருந்தற்க' எனத் தோழி தலைவியைத் தேற்றியவாறு.

கணபதி துணை.

# முகவுரை

இற்றைக்கு ௧௧௫-வருஷங்களுக்கு முன்பிருந்தவரும் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ சிவஞானயோகிகளுடைய அருமைமாணாக்கர்கள் பன்னிருவருள் ஒருவரும் மதுரகவியென்று சிறப்புப் பெயர்பெற்றவரும் இயற்றமிழ்இசைத்தமிழ்நூல்களில் மிக்கபயிற்சியுடையவரும் திருவாவடுதுறைக்கோவைமுதலிய நூல்கள் இயற்றியவரும் முருகக்கடவுளுடைய திருவடிக்கண் மெய்யன்புபூண்டு ஒழுகியவரும் ஷை ஆதீனவித்துவானுமாகிய தொட்டிக்கலை ஸ்ரீசுப்பிரமணியமுனிவரால் இந்நூல் இயற்றப்பெற்றது. மிக்க நோயால்வருந்தித் தம்மைச் சரணடைந்த ஒருவருடைய வேண்டுகோளின்படி, திருத்தணிகை முருகக்கடவுளைத்தியானித்து நாள்தோறும் அவர் பாராயணஞ்செய்து வரும்பொருட்டு இவரால் இயற்றப்பெற்றதென்பதும் அங்ஙனமே நியமத்துடன் பாராயணஞ் செய்து வந்தமையின், நோய் நீங்கப்பெற்று அவர் இன்புற்று வாழ்ந்திருந்தனரென்பதும் கர்ணபரம்பரைச்செய்திகள். அவர் முதலில் நோயால் வருந்தினமை இந்நூல் ௪-ம் திருவிருத்தம் முதலியவற்றால் நன்குவிளங்கும். முருகக்கடவுளுடைய மெய்யன்பர்களால் இன்றும் அவ்வாறே பாராயணஞ்செய்யப் பெற்று வருகின்றமையாலும் 'செந்தமிழ்' வாயிலாக வெளிப்படுத்தவேண்டுமென்று சில நண்பர்கள் தூண்டினமையாலும் செந்தமிழ்ப்பரமாசாரியராக விளங்கும் ஸ்ரீ முருகக்கடவுளுடைய அருமைத்துதியாகிய இந்நூல் இப்போது வெளிப்படுத்தலாயிற்று.

இந்நூலாசிரியருடைய சரித்திரம் திருவாவடுதுறைக்கோவை அச்சுப்புத்தகத்தால் விளங்கும்.

இங்ஙனம்.

வே. சாமிநாதையன்

திருச்சிற்றம்பலம்.

# திருத்தணிகைத் திருவிருத்தம்

ஓங்கார வுருவசின் மயவிமல வொளியாகி
யுலகமுழு வதுநிறைந்த
வுண்மைப் பராபர நிராமய நிராலம்ப
வம்பாகள் சிகாரத்னமே
யாங்கார நீங்காத தீங்கான வத்தின்வரு
மலகிலாப் பிறவிதோறு
மடியேன்செய் கொடுவினை யளக்கருவ மம்பினை
யளந்திடினு மளவுபடுமோ
வாங்காம லவ்வினை வருத்தலா லுன்றிருமுன்
வந்தபய மபயமென்றேன்
மயிலேறி வந்துதிரு மந்திர சடாக்கர
மருந்தரு டிருந்துமடியார்
தாங்கான முன்னின்ற சண்முகத் தெய்வமே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விநம் புபதேச
சதலமண் டிதாசனே. (க)

பண்ணரிய வுன்னற்பு தத்திருப் புகழைப்
பாடிந்துகொண் டுன்றிருபலைப்
படியேறு மன்பர்வினை பொடியாகு மென்றுநிறை
மொழியாளர் பகருவதுகேட்

டென்னுடைய பொல்லாத சஞ்சிதப் பிணியொழித்
தெனையும்வாழ் வித்தருளுகென்
றிரவுபக லுன்னருட் சந்நிதியில் வந்துமுறை
யிடுவேற்கி ரங்கியருள்வாய்
பொன்னிறக் காந்தளொடு செங்குவளை மலர்களும்
பொற்பமர் கடப்பமலரும்
பூத்தலர் குறிஞ்சியுஞ் *சேத்தகூ தளமும்
புனைந்ததிரு மார்பழகனே
தன்னமுழு மனத்துய ரிலாதமர ரைக்காத்த
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (௨)

திருவருள் கொழிக்குமுன் சரவணப் பொய்கைத்
† திருத்தந் திளைத்தாடியே
தீராத பழவினை யழுக்கைக் கழீஇவருந்
திருவாள ரைத்தரிசியா
வுரிமையுட னடியேனு மச்சர வணப்பொய்கை
யுற்றுவந் தாடியுட்கொண்
டுன்னடிக ளேசரண மென்றேல மிந்தெனக்
குறுகுறை தவிர்த்தருளுவாய்
பருவளரு மலரோன் றருகிலைக் கண்டுமா
மலர்கொண்டு தாக்கியவனை
வன்சிறை யிருத்தியுல கேழும் படைத்தநின்
வல்லாண்மை சொல்லவசமோ
தருவளரு மமரா வதிக்கரசை வாழ்வித்த
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (௩)

* சேத்த - சிவந்த.
† திருத்தம் - தீர்த்தம்.

கண்டவர் களிக்குமுரு கேசவுன் பெருமையைக்
கடவுட் சுனைக்குள் வளர்செங்
‡ கல்லார முப்போது மலர்தந்து கமழ்தருங்
கந்தமே தூதாயுலா
யெண்டிசையு ளார்க்குந் தெரித்தலாற் கொண்டாடி
யெல்லாரும் வந்துதொழுதுன்
னின்னருளை மொண்டுண்ண விந்நோயின் யாவெனொருவ
னிடருற் றிளைப்பதழகோ,
வண்டர்க ணடுக்கமுற வாயிரத் தெட்டண்ட
மாண்டிடு குரூரசூர
னுண்மைதனை நீறாக்கி யவனையிரு கூறாக்கி
யாட்கொண்ட சயசிங்கமே
தண்டையொடு கிண்கிணிகள் கொஞ்சுசெஞ் சரணனே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (௪)

அத்தான வச்சிங்கன் வெருவச் சிரங்களை
யரிந்தவச் சிரமிருக்க
வக்கிரம மிகக்கிர வுஞ்சமலை பொடியாக்கு
மயில்வேல் வலத்திருக்கச்
சிந்தான வுன்னுடைய வாறக் கரங்களாந்
தெய்வமந் திரமிருக்கத்
தீண்டினும் பூசினும் பாபப் பசாசறத்
தீர்க்குமவெண் ணீறிருக்க

‡ கல்லாரம் - கருங்குவளை மலர்; இது, திருத்தணிகைமலையிலுள்ள திருச்சுனையில் காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று காலங்களிலும் மலர்ந்து வந்தமை, "காலைப் போதினி லொருமலர் கதிர்முதி ருச்சி, வேலைப் போதினி லொருமலர் விண்ணெலா மிருள்சூழ், மாலைப் போதினி லொருமல ராகிவ் வரைமே, னீலப் போதுமூன் றொழிவின்றி நிற்றலும் மலரும்" என்னும் கந்தபுராணத்திருவிருத்தத்தால் விளங்கும்; வள்ளியம்மை திருமணப் படலம், ௨௨௨.

## திருத்தணிகைத்திருவிருத்தம்.

வித்தார ணிக்குளொன் றறியாக் குழந்தைபோ
லென்னளவு நீயிருந்தா
லென்னுகுலத்தைத் துரத்தியெனை யுய்விக்க
வின்னமொரு தெய்வமுண்டோ
சத்தாகி முத்திக்கு வித்தாகி நின்றசிவ
சரவணோற் பவகுமரனே
தணிகையுங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (௫)

வெங்கன லுறைப்பவரு பானுகோ பப்பதகன்
விட்டமா யைப்பகழிதான்
மிக்கமயல் பூட்டிக் கருங்கடற் கொண்டுபோய்
வீழ்த்திட வழுந்திநின்ற
துங்கவொளி மணிமகுட பாரநவ வீரரொடு
சோர்வரிய பூதர்களையுஞ்
சுடர்விடுங் குடுமியுடை யடலுடம் பிடிகொண்டு
தூக்கிய பராக்கிரமனே
பங்கமுறு கொடியனைச் சடலிலே நெடுநாட்
படிந்துசடு மாறுமெனையும்
பயப்படே லென்றுநின் பன்னிரு விழிக்கருணை
பாலித் தெடுத்தருளுவாய்
சங்கடம் விலக்குமொரு தந்திமுக வற்கிளைய
சரவணோற் பவகுமரனே
தணிகையுங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (௬)

எண்ணிலுயிர் கட்கெலா மன்றுதொட் டகலாம
லென்றுமொரு தஞ்சமாயே
யிருத்தலாற் கந்தனென வொருநாம முற்றனை
யிருண்டமல மோகத்தினாற்
கண்ணிலா ருக்குமெய்க் கோல்கொடுத் தீர்ப்பதுன்
கருணைப் பெருக்கமன்றோ

காங்கேய வுனையன்றி மற்றொருதெய் வத்தைநான்
கனவிலு நினைத்தல்செய்யேன்
மண்ணிலடி யாரிரு வினைக்காடு வேரோடு
மடியவடி வேல்பிடித்து
மாறாத பேரின்ப வாழ்வைக் கொடுத்தருள
வாய்மையாங் கொடிகட்டியே
தண்ணருளின் வரமாரி பொழிகின்ற தெய்வமே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (எ)

அத்தகு சிறப்புடைய க்ருத்திகைத் தையலா
ராறுவர் முலை யமுதவாரி
யருமறை பழுத்தொழுகும் வாயார மொண்டுகொண்
டானந்த மழைபொழிதரும்
வித்தகக் கருணைமா முகிலென்று நம்பியென்
விடாய்தீர வந்தடுத்தேன்
வேறுபுக லில்லையு னடைக்கல மடைக்கலம்
வெட்சிசூ டியவிசாகா
சித்திரக் கலபமர கதநிற மயூரனே
தேவகுஞ் சரிமணாளா
சிங்கார வள்ளியிரு சிற்றடிகள் வருடிச்
சிவந்தபன் னிருகரதலா
சத்துருக் கசமுகத் தசுரசங் காரனே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (அ)

வாலைதிரி புரையான சிவகாம சுந்தரிதன்
மைந்தனே நின்றுவசமா
மதுகையுறு காலாயு தத்தினுக் கேனுநீ
வாகனங் கொடுநடாத்தும்

[illegible] டைவிழுந் திடும்பொழுதும் வருமோரு
[illegible] ஆளு நாள் [illegible] மை
[illegible] டைகொடுத் தென்றனுடைய போரா வினைக்குன்றை
வேரோ டழித்தருளுவாய்
கோலமலி தென்பரங் குன்று வினன்குடி
குளிர்ந்தசெந் தூரேரகங்
கொடியாடு சோலைமலை குன்றுதோ றாடலுங்
கொண்டருளி நின்றகுகனே
நாலமுழு துண்டபைங் கொண்டன்மே னியன்மருக
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (௬)

நலமருவு மதுரைத் தமிழ்ச்சங்க மேற்புலவர்
நடுவிற் றிருந்தமுதல்வா
நக்கீரர் சொன்னமுரு காற்றுப படைத்தமிழு
நல்லருண கிரிநாதர்சொற்
புலமையுறு சித்திரச் சந்தப்ரவாகமும்
புனிதச் செவிக்குளாத்த
புகழாள குறுமுனிக் காரணத் துட்பொருள்
புலப்படுத் தியகுரவனே
கொலைகளவு முதல்பாதக மெனக்குவெகு
கோடிக ளிருந்திடினுமுன்
கர்மத் திரப்படையி னால்விட்டி யெனதுளங்
நடிகொண் டிருந்திருளுவாய்
சனைமறு சருவபரி பூரண தயாநிதே
சரவணோற் பவகுமரனே
[illegible] கையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே

திருச்சிற்றம்பலம்.

# அட்டாங்க யோகக்குறள்

## பாயிரம்.

வெண்கோட்டன் செய்யன் கரிமுகனுள் வீற்றிருந்தென்
*னெண்கோட்டந் தீர்த்தளிப்பா னின்பு. (க)

உலகம் படைப்பித் தளிப்பித் தொழிப்பித்
திலகுமுயி ருள்ளெம் மிறை. (உ)

†ஐந்தொழிற்கு ‡மைந்துவித முற்றமல னோடமரும்
பைந்தொடிபொற் பாதநினைப் பாம். (௩)

இவர்புதல்வர் தாள்கணத்துக் கீசர் முனிவ
ரவர்பதமுஞ் சென்னியில்வைப் பாம். (௪)

செந்தமிழ்வே தாகம மாதி தெருட்டினர்தாள்
வந்தனை செய்வா மகிழ்ந்து. (௫)

ஆய்ந்தா கமத்தறைவா மட்டாங்க யோகமதை
யாய்ந்தார்தீர்ப் பாரிந்நூற் காசு. (௬)

## நூல்.

இமய நியமமிணங் காதனமா §யாம
மயர்வில் பிரத்தியாகா ரம். (க)

தாரணை யோடு தியானஞ் சமாதியுமென்
றோரிருநான் கங்கமும்யோ குள். (உ)

---

*எண் கோட்டம்—மனக்கோட்டம்.

†ஐந்தொழில்—பஞ்சகிருத்தியம்.

‡ஐந்துவிதம்—ஐந்துவித சத்தி.

§ஆயாமம்—பிராணாயாமம்.

## க. இயமம்.

*அயிங்கிதைமெய் யாதி யியம மவற்றை
யியம்புவங் கேளா யினி. (௩)

பிழையுறா று செய்தார்க்கும் †பீழையினைச் செய்யா
வழகே யயிங்கிதை யாம். (௪)

பொருளறச் ‡சொல்லுஞ்சொற் பொய்யாச்சொல் லாதே
பொருளுறச் சொல்க \$புரிந்து. (௫)

தேசிகர்க்குந் தேவர்க்கு மாக்கமுறச் செப்பும்பொய்
வாசகமு மெய்யெனுமெய் வாக்கு. (௬)

தனக்கு மிடியுறினுந் தக்காரல் லார்கைத்
தனத்தினைத் தாங்காமை சால்பு. (௭)

உண்பானு முண்ணு துடல்வெறுப்பா னுமிகழ்சோ
றுண்பா னலனே னுவந்து. (௮)

பெண்ணாசை மண்ணாசை யற்றும் பெரியனல
னெண்ணுதுண் பானிழிந்தா ரில். (௯)

தனக்கருக மில்லா வனைத்துந் தணப்பான்
வனத்துமுனி யேமனைவாழ்ந் தும். (௧௦)

ஏந்திழையார் தன்சயன மெய்தித்தன் மெய்தொடினுங்
காய்ந் §துவர்த்த லேவிரத்தி காண். (௧௧)

இல்வாழ்வா னுந்துறவி தன்னேந் திழைதன்னை
யல்லார்பா ¶லாதரவற் றுல். (௧௨)

*அயிங்கிதை—பிறவுயிர்க்கு இமிசை செய்யாமை.

†பீழை—துன்பம்.

‡சொல்லுஞ்சொல்—பொருளறப்பொய்யாச்சொல்லாது எனக்கூட்டுக.

\$புரிதல்—விரும்புதல்.

§உவர்த்தல்—வெறுத்தல்.

¶ஆதரவு—விருப்பம்.

தணந்திடுக தன்மனைவி தோளினையுந் தான்று
னிணங்கவொண்ணு நாள்களெண்ணி யே. (௧௩)

மனத்தூய்மை யென்றார் வயிர மறுகை
தனைப்பிழைத்தார் தம்பாலுந் தான். (௧௪)

இயமமிவை யெல்லா மினிப்பொறை யாதி
நியமமுஞ்சொல் வாங்கேளாய் நீ. (௧௫)

## ௨. நியமம்.

அறுத்திடுக கோப மறிவிலர்பாற் றம்மை
யொறுத்திடுவார் தம்பாலி னும். (௧௬)

மண்ணுனு நீரானு மாற்றியுடன் மாசதன்பின்
றெண்ணீராற் றர்ப்பணமுஞ் செய். (௧௭)

தேசிகர்க்கு மாதவர்க்கு மேவலினைச் செய்கசிவ
பூசனையுஞ் செய்க புரிந்து. (௧௮)

†ஆக்கத்தி னுற்ற வகமகிழ்ச்சி செய்திடுக
வாக்க மழியினுநோ வற்று. (௧௯)

ஈர்ந்திடினுந் தன்னை யெதிர்மகிழ்ந்தே யெம்பாவந்
தீர்ந்ததெனக் காண்க தெளிந்து. *(௨௦)

நியமமிவை யெல்லா மினிநிகழ்த்து வாங்கே
ளயர்வுளறுத் தேயா தனம். (௨௧)

## ௩. ஆதனம்.

அச்சமிலா வெல்லை யகந்தானு மாதனத்துக்
‡கெச்சமிலா நல்லிடமென் றெண். (௨௨)

---

*இணங்க வொண்ணு நாள்கள்:—"பூத்துநீ ராடியநாண் முதலாகப் பன்னிருநாள் பூவை மார்க்கு, வாய்த்தகரு வுறுங்கால மாதலினு லந்நாளுண் மகமே மூலம், பாத்த்சீர் விரததினந் தனக்காகா நாள்பஞ்ச பருவமெல்லா, நீத்துநூல் விதித்ததினம் புணரானேற் கருவொன்று நீக்கி'னுல்" எனத் திருவானைக்காப் புராணத்தினும், "பூவையே யனையார் தம்மிற் பூத்தநாண் முதனு ளன்கு, மேவிடார் புணர்ச்சி பின்னை விரும்புநாள் பன்னிரண்டி, லேவுறு கருப்ப மூண்டா மிங்கிதி லிரட்டி நாளாண், பாவின தொற்றை நாளேற் பெண்ணெனப் பகரு நீயே" என உள்ளமுடையானிலுங் கூறினமை காண்க.

†ஆக்கம்—செல்வம்.

‡எச்சம்—குறை.

ஆதனந்தா னேபதும மாதியவற் றுட்பதும
வாதனஞ்சொல் வாமேகே ளாய். (உ௩)

வலக்காற் புறமிடக்கா லுள்ளுறக் *கவான்வை
வலக்கைப் புறமிடத்து வை. (உ௪)

பதுமா தனமதுதான் †மற்றையவும் பாட்டுள்
விதியறிந்து செய்க விழைந்து. (உ௫)

அன்றித்தன் னாகத் ‡திணுக்கிசைந்த வாதனத்து
ளொன்றிப் புரியலுமா கும். (உ௬)

வரிப்புலித்தோ $லிற்கரிய மானி னதளி
னிருக்கையது வாமென்றே யெண். (உ௭)

இயற்றுய் வடதிசையை நோக்கி யிருந்தே
யியற்றலுமாம் §பூருவதிக் கின் (உ௮)

உரைத்தாமெய் யாதனந் தன்னை யினியா
முரைப்பாமா யாமாதியும். (உ௯)

## ௪. பிராணயாமம். (பிராணவாயுவொடுக்கம்)

¶புகவுள் ளுயிரிடையிற் பூரித்துக் கும்பித்
துகவலத்தி னாலே யொழி. (௩௦)

---

*கவான்—தொடை.

†மற்றைய—பத்திராசனம், சிங்காதனமுதலியன.

‡ஆகம்—தேகம்.

$அதள்—தோல்.

§பூர்வதிக்கு—கீழ்த்திசை.

¶இக்குறளின் பதவுரை—உயிர்-பிராணவாயுவை, இடையில்-இடைகலையாகிய இடமூக்கினிற்கும் நாம்பின்வழியால், உள்புக-உந்தியினுள்ளேசெல்ல பூரித்து-பூரகஞ்செய்து, (பூரகஞ்செய்தல் பிராணவாயுவை யுள்ளேவாங்குதல்) கும்பித்து - சுழுமுனைநாடியாகிய நடுநாடியிற் செலுத்தியடக்கி, வலத்தினால் - பிங்கலையாகிய வலமூக்கினிற்கு நாடியால், உக ஒழி - நீங்கவிடுவாயாக என்றவாறு. "பிராணவாயுவின் குணமாவது இடைகலை பிங்கலை சுழுமுனையென்னுமூன்று நாடிகளில் நடுநின்ற சுழுமுனையொழிய இரண்டின் வழியே மூலாதாரத்தினின்று மேனோக்கியேறி இரண்டுமூக்காலும் ஓரோர் பாரிசத்

புடைவலத்தாற் பூரித்துக் கும்பித்துப் போக்கா
யிடையாலிவ் வாறியற்றென் றும். (௩௧)

†எண்ணிரண்டு பூரிக்க வெட்டெட்டுக் கும்பிக்க
வெண்ணான் கிரேசிக்க வே. (௩௨)

‡எழுத்துக் கியம்பிய மாத்திரைகொ ளீது
மொழித்தியம்பு மாத்திரையு முண்டு. (௩௩)

சகற்ப மகற்பமெனத் தானிரண்டா யாமஞ்
சகற்ப மதிகபலந் தான். (௩௪)

சகற்பந் தியானசெபந் தன்னோ டியற்ற
லகற்பமிவை யன்றியியற் றல். (௩௫)

ஐந்தெழுத்துஞ் சூத்திரரல் லார்மூவ ¶ரோங்கார
மந்திரத்துச் செய்க வழக்கு. (௩௬)

§இயற்றலுமாங் கும்பகமும் ரேசகமு மின்றி
யியற்றுதீங் கெல்லா மிறும். (௩௭)

---

துக்கு ஐந்துநாழிகையாகக்கொண்டு ஒருமாத்திரையில் ௧௨௫ சுவாசமாய் ஒருசுவாசத்திலே ௧௨ அங்குலி வாயுப்புறப்பட்டு நாலங்குலி தேய்ந்து எண் விரல் உள்ளே அடங்குகின்றது'' எனவும், ''ஒருமாத்திரையாவது இரண்டரை நாழிகையை எட்டுக்கூறிட்டு ஒருகூறென்றறிக'' எனவும், ''மூலாதாரமாவது சரீரத்தளவு தன்கையாற் றொண்ணூற்றாறங்குலம்; இதன்மேலே நாற்பத்தேழரையங்குலமுங் கீழேநாற்பத்தேழரையங்குலமும் விட்டு நடுநின்ற ஓரங்குலம்'' எனவும் சிலப்பதிகாரவுரையிற் கூறப்பட்டது.

* இக்குறளால் முன்னர்க்கூறியதனைமாற்றிப் பிங்கலையாற்பூரகமும் சுழுமுனையாற் கும்பகமும் இடைகலையால் ரேசகமும் செய்யவேண்டுமென்றுகொள்க.

†இக்குறளிற் சொல்லப்பட்ட எண்கள் மாத்திரையைக்குறிக்கின்றன.

‡எழுத்துக்கியம்பிய மாத்திரையாவது கண்ணிமைப்பொழுதுங் கைந்நொடிப்பொழுதுமாம்.

¶ஓங்காரத்தோடு என உருபு விரித்துரைக்க.

§'கும்பகமும் ரேசகமும் இன்றி' என்றதனால் இயற்றலுமாம் என்பதறகுப் பூரகமாத்திரஞ்செய்தலுமாகும் எனப்பொருள்கொள்க.

¶திரண்டபால் கைப்புத்தித் திப்புப் புளிப்பு
முருண்ட||சுரை யாதியுநீத் துண். (௩௮)

அருந்திய வன்னத் தளவுறும் பாவ
மருந்துவித்தான் பாவ மறும். (௩௯)

ஆதலினு லற்ப மருந்திடுக வாவியுறச்
சாதிக்க யோகர் தனை. (௪௦)

உதரபந்தம விக்கிடையி லுண்டவன முண்ட
†வுதகஞ் சிறுகூ டுற. (௪௧)

## ரு. பிரத்தியாகாரம்.

பிரத்தியா காரமினிக் கேள்பிரித்தோ ‡ரைந்தும்
விருப்பத்தின் ‖மீட்க விரைந்து. (௪௨)

## சு. தாரணை.

§மனந்தன்னை யிந்திரியந் தன்னை மடக்கி
யனந்தனடி வைதா ரணை. (௪௩)

## எ. தியானம்.

வற்றதியா னஞ்சிதமப ரேச னடிநினைவு
¶மாற்றவே நிற்கும் ||வரம். (௪௪)

ஒண்டொடியைக் காமுகன்று னுன்னுதல்போ லுள்ளத்துக்
கண்டிருகங் காளன் கழல். (௪௫)

---

¶திரண்டபால் - வற்றக்காய்ச்சித் திரட்டிய பாலென்க.

||சுரை - சுரைக்காய்.

*வஸ்திரமுதலானவற்றால் வயிற்றைச்சுற்றியிறுக்குங்கட்டு.

†உதகம் - நீர்.

‡ஐந்து - பஞ்சேந்திரியம்.

‖மீட்க எனவே உண்ணேக்குக என்பது கருத்தாயிற்று.

§மனந்தன்னை அனந்தனடிவை எனக்கூட்டுக; அனந்தன் -சிவபிரான்.

¶வினையவற்றிலே நினைவு மாற்ற எனவருவித்துரைக்க; நினைவு- மத்தி மதீபம்.

||வரம் - மேன்மை.

அரிது சமாதி யடைகை யதனு
லெளிது தியான மியற்று. (சஙு)

எளிதுதியா னப்பலமென் றெண்ணித் தியானம்
*வெளிற விருப்பர் விரைந்து. (சஎ)

பரிய வுடைகளவர் பட்டாடை பெற்றார்
புரியவுடை †யில்லார்க்குப் பட்டு. (சஅ)

ஆதார மென்னநிரா தாரமென்ன ‡யோகம்ரண
டாதாரஞ் சொன்னதியா னம். (சகூ)

பரமசிவன் றுளுயிருட் பார்க்கைநிரா தார
மிரவுபக லற்றவிடத் தின். (ருo)

## அ. சமாதி.

இந்தநிலை தானே சமாதியித னைப்பெற்றார்க
§கைந்தொடுநான் கும்மடங்கு மாங்கு. (ருக)

அட்டாங்க யோக சமாதி யடைந்தாருக்
கட்டமா சித்திகளுண் டால். (ருஉ)

ஆதலினுற் செக்க ரருக்கரொரு கோடியென
நாதனை நீ நெற்றிநடு நாடு. (ருங)

நெஞ்சந் தனினு நினைநினக்கு வேண்டுமுரு
§வஞ்சஞ் செனுஞ்சகளத் தாய்ந்து. (ருச)

அருச்சனைசெ யன்பா லிதைய வலரிற்
றரித்துச் சதாசிவனைத் தான். (ருரு)

*வெளிற - இலேசாக என்பது கருத்து.

†இல்லார் - தரித்திரர் இல்லார்க்குப் பரியவுடையேபட்டு என்பது கருத்து.

‡யோகம் - தியானம்.

§ஐந்து - பஞ்சேந்திரியம்; நான்கு - அந்தக்கரணம் நான்கு.

§அஞ்சஞ்செனுஞ் சகளம் - சிவபிரான்கொண்ட சகளவடிவமென்னு மிருபத்தைந்து மூர்த்தம்.

௨

கடவுள் துணை.

## இராமநாதபுரம் ஸம்ஸ்தானம்

மாட்சிபொருந்திய ஸ்ரீமத்:

# பாஸ்கர சேதுபதிமகாராஜா அவர்கள்

சிவபதமடைந்தமைக்காற்றாது பாடிய

# சரமகவிகள்

பால்வநத்தம் ஜமீந்தாரவர்களும்,

மதுரைத் தமிழ்ச்சங்கத் தக்கிராசனாதிபதியுமான

## பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்

பாடியவை.

1. சேதுபதி மன்னர்குலக் கடற்றோன்றி யருணனையே சேர்ந்தோ ராழி மேதினியெங் கணுஞ்செலுத்தி யிரவொழித்துப் புகழொளியை விரித்துத் தேன்போ, லோதுபிர சங்கமழை யுவந்துதவு பாற்கரநீ யொடுங் குங் கால, மீதுகொலோ விண்ணமுநீ யெய்துவையோ யிரங்கியெமக் கிசைத்தி டாயே.

2. என்னுவி யுளங்குளிர அண்ணவென் றன்பொடினி யெனையார் சொல் வார், மன்னுமன் னுமன்னு வெனயாரை யானினிமேல் மதித்துச் சொல்வேன், பொன்னுடுநே தொழுஞ்சேது நன்னாடு புரந்தளிக்கப் போந்த நீவே, றென்னாடு சென்றனையோ வெங்கள்குல மணிவிளக்கே யிசைத்தி டாயே.

3. அவியுணவோன் றேயருந்து மமரருண வவியாவுன் னமுத வாக்காஞ் செவியுணவுங் கொடுப்பதற்கோ நிதிமணியைந்தருகாமதேனுவென [illegible] மவையுணரும் படியிரப்போர் குறிப்பறிந்து கொடுக்குநல முடை[illegible] கோவிப், புவியிலெலமை வருந்தவிட்டு வானடைந்தாய் பாற்கர[illegible] [illegible]த்தி டாயே.

4. நீணிலமீ தரனடியார் பெருமையுமன் னவன்சமய நெறியு மல்கா
மாணவெடுத் தெடுத்துரைத்துந் திருந்துகிலார் மடமதியின் வலிமை
காணா, வீணிதென வானடைந்தாய் பாற்கரசே துபதியவண் மெய்
யில் போகம், பேணுநரை யுளந்தெருட்டி யுய்விப்பான் விழைந்தனையோ
பெரும நீயே,

5. பண்புலவு தமிழ்ச்சங்க நிறுவல்கரு தியஞான்று பரிவு கூர்ந்து
நண்புலவு திருவாக்காற் றளர்வொழிகென் றெனக்கிசைத்த நலம்பொ
யயாதே, மண்புலவ ரொருநெறிபொன் வழங்கியமை யாதெனவே மதி
த்து வான்போய், விண்புலவ ரோடுதம னியங்கொண்ட நினைந்தனை
யோ வேந்த ரேறே.

6. சோபகிரு தாண்டொன்பான் றாயமதி யிராறுவளர்
மாபிறையெண் ணெளிபரிவி வாரமின்—நீபமலை
மாதுபதி தாக்கு மலரடியைப் பாற்கரனாஞ்
சேதுபதி சேர்ந்த தினம்.

இராமநாதபுர ஸமஸ்தான வித்வானும்
'செந்தமிழ்' பத்திராசிரியருமாகிய
ரா. இராகவையங்கார் அவர்கள்
பாடியவை.

—

வெண்பா.

1. என்னி னெனக்கினிய னின்பாற் கரசேது
மன்ன னிறந்த வகையானே—யின்னே
யொளியின் மணியானே னூழில்செய லானேன்
களிறில் வெளிலானேன் காண்.

2. செவிக்கினிய கேளேன்சிந் திக்கினிய தேறேன்
கவிக்கினிய பாடிக் களியேன்—புவிக்கினிய
வள்ளியோன் பாற்கரப்பேர் மன்னன் சொலல்வல்ல
தெள்ளியோன் சென்றபொழு தே.

வெளில்-யானைகட்டுந்தறி.

3. இரவாமை யீயு மெழிற்றகையு முள்ள
கரவாமை நல்குந களிப்பு—மிரவாள
ரின்முகங் காணு மியல்பு மினிக்காணே
னன்முகப் பாற்கரனே நான்.

4. சேது பதிக டிலகமே பாற்கரனே
கோது பதியாக் குணக்குன்றே—மூதுலகி
னீயிறந்தா யல்லையா னீள்புகழா லுள்ளனையெம்
வாயிறந்து போயு மதி.

5. வாயிலா மூங்கை மதியிலா னெஞ்சகநற்
றுயிலாச் சேயிலையே தானனையே—னீயிலா
தென்செய்வே னின்றமிழை யாவர்க் கெடுத்துரைப்பேன்
கொன்செய்வேற் பாற்கரவேள் கூறு.

6. பாட்டு முறையும் பயிலாப் பதடிகட
மோட்டைச் செவியி லுகுப்பேனோ—நீட்டுகொடைச
செங்கையாய் பாற்கரனே செந்தமிழ்ப்பா வின்சுவையை
யெங்கையா சொல்வே னினி.

7. அருமை யறியா ரவர்செவ்வி நோக்கிப்
பெருமை யழிப்பவைத்த பெட்பென்—னொருமை
யுயிர்த்துணை நீயென் னுரைத்த மொழியை
யயர்த்தனையே பாற்கரமன் னே.

8. மண்புலவர் சொல்லமுதே மாந்திச் சுவைதெரிநீ
விண்புலவர் புல்லமுது மேவினண—வெண்ணியது
பாலே நுகர்வான் பயனில் புளிவேட்டல்
போலேயாம் பாற்கரவேள் போற்று.

9. ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து
வாழ்வாரே வன்க ணவரென்னு—நாவாய்மை
மன்னிய சொல்லை மதியாமல் வானெய்த
வுன்னியதென் பாற்கரவே ளோது.

10. பாருலகு நங்கொடைக்குப் பற்றா தெனவுள்ளிச்
சீருலகீ பொன்னினென்று சென்றனையப்—பேருலகிற்
கொள்வா ரிலாமை குறித்திலையே பாற்கரப்பேர்
வள்ளா லிதனை மதி.

11. கார்புக்க தோகற்ப கம்புக்க தோவறியேன்
சீர்புக்க பாற்கர சேதுபதீ—பேர்நிற்க
வீத்து மலர்ந்திவ் விருநீர் வரைப்பெல்லாங்
காத்து வளர்ந்தநின் கை.

12. கேளாருங் கேட்கக் கிளக்கும்வா யெங்கேயோ
வேளாரும் வேட்ப மிகுநிதியங்—தாளாரு
மன்னர்க்கும் யார்க்கும் வழங்குகர மெங்கேயோ
கன்னற்கு நேர்பாற் கர.

13. சோப கிருதாண்டிற் றூய தநுமாதத்
தீபமிகு பக்கத் திதியெட்டிற்—பூபாவு
வார முதலாம் வளர்பாற் கரன்வேந்தர்
தீரன் சிவமாந் தினம்.

சேற்றூர்ச்சமஸ்தான வித்வானும்

மதுரைத்தமிழ்ச்சங்கப்புலவருளொருவருமாகிய

## மு. ரா. அருணாசலககவிராயர் அவர்கள்

பாடியவை.

### கலித்துறை.

1. விண்பாற்கரனென்றுபெற்றதுபோலிந்தமதினியா
மண்பாற்கரனென்றுபெற்றேமெவரும்வறுமையிருள்
கண்பார்க்ககூடுதலில்லர்திருக்கக்களித்ததந்தோ
எண்பாற்கரநிகர்புண்படவேயின்றிழந்ததுவே.

2. எல்லாவுலகிற்கும்பாற்கரனென்றென்ற
பொல்லாவுலகந்தனக்கெனவேமுன்றுபோதப்பெற்ற
தில்லாததொன்றுநிகழ்வததிசயமென்றுமது
நில்லாதெனவின்றிழந்தேதுயருற்றுநின்றதுவே.

3. அப்பாற்கரனோர்கவியேதன்முன்வரவன்றுவந்தா
னெப்பார்க்குஞ்சொல்லமுடியாக்கவிகள்பல்லோருமென்
மிப்பாற்கரன்றன்முன்னேவந்துசூழ்ந்திடவின்றுவந்தா
னெப்பார்க்குளேசென்றொளித்தானிவனிங்கிருந்திலனே

4. அரங்கண்டுமாறுவரவழைத்தேவந்தவர்கடரா
தரங்கண்டுபோலினிக்குங்கவியாற்பிரசங்கத்திறற்
பரங்கண்டுபொன்றரும்பாற்கரசேதுபதிவள்ளலெங்
கரங்கண்டுயர்படமோதும்படிக்குக்கரந்தனனே.

5. பாற்கரசேதுபதிவானவர்தம்பதிபுகுந்தா
ஞற்கவிராசரென்செய்வாரந்தோவிந்நாட்டிலினி
யேற்கவென்றுலெங்குச்செல்வாரிப்பிணிலெய்துமிழி
பாற்கவலைப்படவேண்டாரிந்நன்றென்றுண்டாயதுவே

6. ஆதாரமாகிப்புலவோர்கவிமுற்றகற்றினரிப்
போதார்நம்பாற்கரசேதுபதியன்றிப்பூதலத்தின்
மாதாரமார்புயப்போசன்முன்னைவரையுரைத்தல்
காதாரக்கேட்டகதையாமொருவருங்கண்டிலமே.

7. நிலையாதியாக்கைபுகழேயுலகினிலைத்ததென்று
கலையாய்புலவர்க்குவேண்டும்பொருள்கள்கனிந்தளித்து
மலையாமல்வாழ்வித்ததற்கழகோவின்றுவான்சென்றுகம்
பலையாரவைப்பதுபாற்கரசேதுபதிவள்ளலே.

8. வண்டமிழ்ச்சங்கம்வளர்பொருளீயுநின்வள்ளன்மையைக்
கண்டவரேயன்றிக்கேட்டவர்நெஞ்சுங்கசிந்துருக
விண்டலமேவினையாங்குளர்நெஞ்சுமெலிவிப்பையோ
பண்டறியேமிதுபாற்கரசேதுபதியரசே.

9. மகாராசபாற்கரசேதுபதுதனகைவணமையவன்
மகாராசன்மார்க்கமன்றென்றுவிடுப்பர்மடநெஞ்சுசெப்
புகாராசரியவர்க்கீதறிந்தாரவன்போந்துயருட்
புகா * ராசனம்புலவோர்பாடலுக்கப்புரவலரே.

10. முகவையமர்ந்தும்பரம்பொருள்போலெங்குமுந்துவியா
பகவையமன்புசெய்பாற்கரசேதுபதியரசே
மகவையீகன்றவர்போலேயிவண்விட்டுவானகநீ
புகவையகோவென்றலருரெவரிப்புவிதனிலே.

* ஆசனம்-இருப்பிடம்.

## சரமகவிகள்.

திருவாவடுதுறை ஆதின வித்துவானும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகரும் ஆகிய
சேற்றூர்ச் சுப்பிரமணியக்கவிராயர்
பாடியவை.

---

1. சந்தமுறும் பிறகாமன னவனடாரா சன்பதத்தைச் சார்ந்த தைக்கண்
டிந்திரனங் கற்பமுமங் கற்பமா மெனவுரைத்தா னெண்கண் ணனு
மந்தமரைப் பதமுமரைப் பதமாமென் றேயுரைத்தா னச்சுதன்று
னந்தமணிப் பணத்தணையோர் காலுநே ராமெதன்று னுவல்லீரே.

2. மண்ணுலகந் தன்னினும்வா னுலகுமே லானதென மதித்தவ் வான
நண்ணினையென் றலென்று மிரவலர்கள் புரவலரா நயக்கத் தானம்
பண்ணியத னற்புகழே கொள்ளும்பாற் கரசேது பதியே யங்க
ணெண்ணிவிர வலருண்டோ பொன்னுலகென் பதையுமறந் தேன்சென்
றாயே.

வேறு.

3. அலகில்புண் ணியத்தன் பாற்கர மன்ன னுயுளோங் கிடாமலிங் ககன்று
விலகுதற் கென்ன காரண மென்னில் விளங்குபே ரரசுஞ்சிற் றரசு
நிலவவிங் கிரண்டு புதல்வரைத் தந்தாய் நீயவ்வா னரசுநின் றுதைக்
கிலகுசிற் றரசா யிருவென விறைவ னேவச்சென் றனனென்பேம் யாமே.

4. இரவலர் குழுத மன்றியே தன்னுட் டிரவல ரிலையென யாரும்
பரவிய செல்வ ராச்செய்தா யவர்கிற் பார்த்திடாக் கண்பழங் கண்ணு
விரவவான் சென்று யாங்குநின்கொடைகீகு மிளிரஞ்சு தருவஞ்சு தருவாந்
தாமுறு மெங்கள் பாற்கர மன்னீ தணந்ததா லெவர்க்கென்ன சுகமே.

வேறு.

வாணவர் போற்ற வுறைகின்ற பாற்கர மன்னவன்றன்
றென்மதுக் கொண்ட லெனவே பிரசங்கஞ் செய்திருவா
யானதுக் நீயுண்ட தந்தோபொன் மேகம தானதுநேர்
[illegible] பொன்மழை பெய்திருக் கையுந் தழலுண்டதே.

## சரமகவிகள்.

தஞ்சாவூர் 'பிரைமரிஸ்கூல் சூபர்வைசரும்'
மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவான்களுளொருவருமாகிய
ஐ. சாமிநாத முதலியார் அவர்கள்
பாடியவை.

---

1. சீரார் முகவைவந்த பாரார சேதுபதி
நீரார் வியனுலகை நீத்தகன்று விண்ணுலகுக்
காரா விருந்தா யமரவமரந் தாயதற்கிங்
காரா ரிரங்காதா ரையாவே ஐயாவே.

2. பாரிரங்கும் கற்பகம்போம் பாங்கினைத யூட்டினையால்
நீரிரங்கும் தண்மையிற்றன னோரா யிருந்தனையால்
காரிரங்கு மீகையினை காழ்த்த கொடுத்தனையால்
ஆரிரங்கார் யாதிங்கு னைகபாவே ஐயாவே.

3. கல்லிரங்கும் மற்புயங்கள் காட்டிவலி மாயந்ததற்கே
புல்லிரங்கும் தற்சேயாப் பூம்பதங்கள் சாய்ந்ததற்கே
எல்லிரங்கும் தன்மே பிரபுசவீரப் போயந்ததற்கே
அல்லிரங்கும் தன்னி னவிராமதினைய வீந்ததற்கே.

4. நூலிரங்கும் கோணைசெய்ய நூறிருவை தன்னினென்றே
பாலிரங்கும் தன்னினின்சொல் பாரவிர சுத்தமென்றே
வேலிரங்கும் நீயினையாய் வேலுடைய சேயினென்றே
ஆலிரங்கும் தன்னின்மிகுச் சாதரிகக வல்லையென்றே.

5. செந்தமிழை யோரார் செருக்கடக்க வந்நாளில்
எந்தை மதுரேச னென்றுநின்ற னிந்நாளில்
வந்தை முகவேசா வென்று மகிழ்ந்ததுவ
இந்தமகிழ் வின்னுமஃ தென்சிலநா ளேய்ந்திலதே.

6. ஆருயிரின் றுயே யறதிதின் பிறந்தகமே
பேரருளின் கண்ணே பிறந்த குலப்பேறே
யாரிற் றமிழ்ப்பதுமப் போதலர்த்தும் பாற்கரனே
ஊருன் முகவையைவிட் டேற்றதுவென் வானகமே.

[illegible]
[illegible] குரிசிலைக் கண்ட புறமசெம்
பூவை [illegible]கர்முகவைப் பொற்பதியிற் றெய்விகப்பூங்
காவை புடையபதி சிரியதாய்க் கண்ணினையோ.

காவலரைப் பாவலரைக் காக்கவல்ல வாற்றலுள்ளாய்
காவலர்காப் புன்னரிய காதலினஞ் சேய்க்களித்துப்
பாவலரை மட்டும் பரிந்தளித்து வந்தைசின்னாள்
பாவலரைக் காப்புமிந்நாள் பாரமாய் மேவியதோ.

மண்ணிற் புலவர்தமை வாய்ந்துகா வாதகன்று
விண்ணிற் புகுந்தகருத் துய்த்தறியோ மேலவனே
விண்ணிற் புலவ ரிலையோ விணிற்புலவர்
மண்ணிற் புலவரினு மாற்றி லுயர்ந்தவரோ.

பூவுலகைக் காவல் புரியப் புகுந்தமைந்தன்
காவலர்போற் பாவலரைக் காக்கவல்லா னென்றேயோ
தேவுலக வாட்சி சிறந்ததென்றோ யாதெனினும்
பூவைமைந்த னீடாள் புரியவருள் ஐயாவே.

திருச்சிற்றம்பலம்.

# வருத்தமறவுய்யும்வழி.

செம்பவள வாயன் சிவன்றந்த ஐங்கரன்ற
ணைப்பவள பாதமே பற்று. (௧)

கருத்தினிற்கண் மாலை கட்டினைப்பாம் பத்தர்
வருத்தமற வுய்யும் வழி. (௨)

விருந்தர் பிணிபாவர் மெல்லியலார் பாலர்
கருத்தினருந் திக்கவே கண்டு. (௩)

உதையத் திரவி யொளியனைய லிங்க
மிதையத் தவர்க்கிருக்க. (௪)

ஆட்டுகவான் பாலாதி பட்டணிந்தா ரக்குறும்புஞ்
சூட்டுகவில் வாதிக் கொடை. (௫)

நிகழுமன்பாற் [1]போனக பாத் தேவேதி
கமழ்தூப தீபாதி காட்டு. (௬)

அஞ்செழுத்தாற் சொன்ன [2]வினைத்தினையுஞ் செய்யவடைவே
யஞ்செழுத்தே மந்திரமென் றார். (௭)

[3]நெஞ்சத் தருச்சித் தினையுநவி லாருதிசெ
யஞ்செழுத்தா [4]லோமமுமாற் று. (௮)

பாவனையிற் பட்ட கருத்துறைப் பரம்பொருளும்
பாவனையெய் செய்யும் பலர். (௯)

உள்ளேவல் செய்வானைக் [5]காந்தன் மிகவுவப்ப
னுள்ளேசெய் பூசை யுவந்து. (௰)

1 போனகம் - அன்னம்.

2 வினைத்தினையும் - ஆன்பாலாதியனைத்தையும்.

3 நெஞ்சத்தைப் பூசைத்தானமென்றும், 4நாபியையோமத்தானமெ
ன்றுஞ் சிவஞான சித்தியாருரையிற் கூறியவாறு காண்க.

5 காந்தன் - நாயகன்.

அலைவாக்கைக் கில்லை யருவருப்பு மில்லை
கொலையுமிலை [1]புட்பூசை கூட்டு. (௰க)

புறத்துஞ் சிவபூசை பூவாற் புரியா
[2]யறத்தின் மலையிலக்கே யாம். (௰உ)

முட்டாதே தொட்டான் முடிக்க சிவபூசை
விட்டா னரகின் விழும். (௰௩)

நெஞ்சத்துன் னிச்சிவன்று ணிண்ட [3]வடங் கைபூண்டே
யஞ்செழுத்தை நாவினுஞ்சொ லாய்ந்து. (௰௪)

வாக்கினொலி மந்தவொலி மானதமென் றிம்மூன்று
மாக்குங்காற் [4]றர்ச்சனிமுன் றாம். (௰௫)

வாக்கொலியின் மந்தம் [5]விசிட்ட மதன்விசிட்ட
மாக்கு மொலிமனத்தி னால். (௰௬)

மேலியற்றாய் போகம் வெறுத்தால் விரும்பினால்
மாலையைக் கீழே மறி. (௰௭)

கண்டி விசிட்டங் [6]கநிட்டங் [7]குசைக்கிரந்தி
[8]புண்டரிக முன்மணியும் பூண். (௰௮)

சிவஞ்சத்தி யான்மாத் [9]திரோதமல [10]மைம்நுஞ்
[11]சிவமுதலைந் திற்சிந்தை செய். (௰௯)

1 உட்பூசை - அந்தரியாகபூசை.
2 அறத்தின்மலை - என்றது சிவபிரானையென்க.
3 வடம் என்றது உருத்திராக்கமாலையை.
4 தர்ச்சனி - சுட்டுவிரல்.
5 விசிட்டம் - மேன்மை.
6 கனிட்டம் சிறுமை.
7 குசைக்கிரந்தி - தருப்பைமுடிச்சு.
8 புண்டரிகமணி - தாமரைக்கொட்டையாகியமணி.
9 திரோதம் - திரோதானசத்தி.
10 மலம் என்றது ஈண்டு ஆணவ மலமென்க.
11 சிவ - என்றது சிகரவகரங்களை.

முத்தி [1]வல நாடி மொழி [2]சுழுனை முற்றிரண்டிற்
[3]புத்திக் [4]கிடையிற் புகல். (௨௰)

[5]நெற்றிநடு மன்று ணிருமலன்றா ளுடன்பாற்
பற்றறுப்பா னுன்பாலன் பால். (௨௧)

அருக்கன் சிவனென் றலரினா லர்ச்சி
யிருப்பாய் சிவபுரத்து ளின்பு. (௨௨)

தூவியினைக் கோபுரத்தை யீசனெனக் கண்டுதொழு
பாவமறும் வாயாதுன் பம். (௨௩)

[6]நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை
யென்றுஞ் சிவன்றா ளிணை. (௨௪)

வருத்தமற வுய்யும் வழிமொழிக பத்தர்க்
கிரக்கத்தா லாசா ரியன். (௨௫)

வருத்தமறவுய்யும்வழி முற்றிற்று.

இந்நூல், திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற் கிடைத்தது. இந்நூலாசிரியர் பெயரிடங்கால முதலியன விளங்கவில்லை. அட்டாங்கயோகக் குறளிற் கூறிய 'நின்றுமிருந்து' மென்னு முதற்குறிப்புடைய குறளை யீண்டுங் கூறியிருத்தலால் அந்நூலாசிரியரே இந்நூலாசிரியரென்றும் அவர் மாணாக்கரே இந்நூலாசிரியரென்றுங் கூறுவர். இதில், அந்தரியாக பூசை, ஓமம், தியான முதலியவற்றைக் கூறியிருத்தலாற் சைவசித்தாந்திகட்குப் பெரும்பிரயோசனமாயுள்ளதென்று வெளிப்படுவித்தேன்.

இங்ஙனம்
சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயர்.

1 வலநாடி - பிங்கலைநாடி.
2 சுழுனை - நடுநாடியாகிய சுழுமுனைநாடி.
3 புத்தி - போகம்,
4 இடை - இடைகலைநாடி.
5 நெற்றியைத்தியானத் தானமெனச் சிவஞான சித்தியாருரையிற் கூறியவாறு காண்க.
6 இவ்விருபத்து நான்காவது குறளை அட்டாங்க யோகக் குறளினுங் கூறியவாறு காண்க.

கடவுள் துணை.

## மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்

# விற்கப்பெறும் புத்தகங்கள்

### 1. ஞானாமிர்தம் மூலமும் உரையும்.

இது ஸ்ரீ கைலாயபரம்பரை நிறைந்த நாயனார் சந்தானத்துப் பரமானந்த முனிவர் அருள்பெற்ற வாகீசமுனிவர் இயற்றியருளியது. மூன்றடிச்சிறுமையும் ஐம்பத்தாறடிப் பெருமையுமுள்ள அகவற்பா எழுபத்தைந்துடையது. வீடுகாதலிக்கும் நல்லறிஞர்க்குச், சிவாகமங்களுட் கூறப்படுவனவாய சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்குபாதங்களுள்ளே ஞானபாதத்துக்குரிய பதிபசுபாசங்களி னியல்பை நியாயவாயிலான் உணர்த்தி வீடெய்தும் உபாயங்கூறுவது. சொல்வளம் பொருள்வளங்களாற் கற்போர்நெஞ்சங் காமுறச்செய்வது. ஸ்ரீ கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து மாதவச்சிவஞானயோகிகளாற் சிவஞான போதவுரை முதலியவற்றில் மேற்கோள்காட்டப்பெற்றது. இத்தகைச் சிறப்புவாய்ந்த இந்நூல் இதன் பழைய உரையுடன், திருவாவடுதுறையாதீன வித்துவானும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரவர்களாற் பலபிரதிகளைக் கொண்டு பரிசோதித்து விசேடக் குறிப்புக்களுடன் அச்சிடப்பெற்று, இப்போது முடிந்துள்ளது. இது சங்கப்பிரசுரங்களுள் முதலாவதாகும். இதன் விலை ரூ 1.

### 2. சைவமஞ்சரி.

இது மதுரைத்தமிழ்ச்சங்க ஸ்தாபகரும், அக்கிராசனாதிபதியுமான ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களாற் றொகுக்கப்பெற்றது. முன்னர் யாவர்க்கு முபயோகமாகத் தேவரவர்களால் வெளியிடப்பெற்ற 'பன்னூற்றிரட்டு' போல, சைவசமயிகட்குப் பெரிதும் பயன்படுமாறு, கடவுள்வாழ்த்து, பதி, பசு, பாச முதலிய அதிகாரவடைவுடன் இப்போது பிரசுரிக்கப்பெற்றது. அறுபத்

தேழு வசிய நூல்களினின்று (அஃதாவது 108399 - செய்யுள்களினின்றும்) ஆராய்ந்தெடுக்கப்பெற்ற 1316-செய்யுண்மணிகளுடையது. சமயஞானமுறவிரும்புவோர்க்கும், பிரசங்கிகட்கும், தவறாது கையிலிருந்து கமழத்தக்கது. நூற்குமுன்னும் பின்னும் பல விசேடக்குறிப்புக்கள் அமைந்தது. இத்தமிழ்ச்சங்கத்தின் இரண்டாம் பிரசுரமாவது. இதன் விலை ரூ $1\frac{1}{2}$.

## 3. ஐந்திணையைம்பது.

இது சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. சங்கத்துச் சான்றோராகிய மாறன்பொறையனார் அருளிச்செய்தது. அறம்பொருளின்பமெ்மென உடனெண்ணப்பட்டமூன்றனுள் இன்பப்பகுதிக்குரிய இருத்தல், புணர்தல், ஊடல், பிரிதல், இரங்கல் என்னும் ஐவகையொழுக்கங்களையும் நன்கெடுத்து மொழிவது. மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் 'செந்தமிழ்' ப்பிரசுரங்களுள் முதலாவது இது. இதன்விலை அணா 3.

## 4. இனியது நாற்பது (உரை), களநூல்.

இனியது நாற்பது பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்றாகும். பண்டைச் சான்றோராகிய பூதஞ் சேந்தனார் அருளிச்செய்தது. களநூல் என்பது ஆசிரியர் அடியார்க்கு நல்லாரது சிலப்பதிகாரவுரையில் எடுத்துக் காட்டப்பெற்ற பிரமாணநூல்களுள் ஒன்று. களப்பயனைத் தெளிவாக வெடுத்துரைக்கும் 30-கட்டளைக் கலித்துறைகளுடையது. ஒன்றாகக்கட்டப்பட்ட இவ்விருபுஸ்தகங்களின் விலை அணா 3.

## 5. புலவராற்றுப்படை.

மாறனலங்காரவுரையாசிரியர் திருமேனி-இரத்தின கவிராயர் வழித்தோன்றிய திருக்குருகூர்ச்சிறிய இரத்தின கவிராயர் இயற்றியது. 200-வருடங்கட்குமுன்பு விளங்கிய இரசைவடமலையப்ப வள்ளலை விஷயமாகக்கொண்டது. சொற்சுவை பொருட்சுவை பெரிதுடைத்தாய்ப் படிப்போர்க்குப் பேரானந்தம் பயப்பது. விலை அணா 3.

## 6. நேமிநாதமூலமும் உரையும்.

குணவீரபண்டிதரால் மிகவழகான வெண்பாயாப்பிலியற்றப்பட்டதோர் இலக்கணநூல். எழுத்ததிகாரம், சொல்லதிகாரமென்னும் இருபிரிவுகளுடையது. இந்நூல், பழையவுரையுடன் பல பிரதிகளைக்கொண்டு ஆராய்ந்து வெளியிடப்பெற்றது. இலக்கணப்பயிற்சி விரும்புவோர்க்குப் பெரிதும் உபயோகமாவது. கையிருப்பிற் சொற்பப்பிரதிகளே உள்ளன. விலை அணா 10.

## 7. திருநூற்றந்தாதி (உரையுடன்).

அவிரோதிநாதரென்னும் ஜைநமுனிவராலியற்றப்பட்ட இந்நூல் உரையோடும் பல பிரதிகளைக்கொண்டு வெளியிடப்பெற்றது. மிக அழகான கட்டளைக் கலித்துறைகளால் ஜைநசமயத்தின் உள்வீடுகளை நன்குவிளக்குவது. ஜைநர்களாற் பெரிதும் போற்றப்படுவது. விலை அணா 4.

## 8. பன்னிருபாட்டியல்.

இது சங்கத்துச் சான்றோர்பலர் இயற்றியபாட்டியல்களினின்றும் முற்காலத்தே தொகுக்கப்பெற்ற சிறந்தநூல். எழுத்தியல், சொல்லியல், இனவியல் என்று மூன்று பகுப்புடையது. இனிய சூத்திரங்களால், ஏனைய பாட்டியல்களினும் தெளிவாகவும் அழகாகவும் விஷயங்களை எடுத்துரைப்பது. இதன் விலை அணா-4.

## 9. அநுமானவிளக்கம்.

மணிமேகலையிலுள்ள "தவத்திறம்பூண்டு தருமங்கேட்டகாதை" யிலுள்ள அரியபெரிய தருக்கநுண்பொருள்களைப்பலருமறிந்து மகிழ்தற்கநுகூலமாகப் பலவரையறைக்குறிப்புக்களுடன் புயன்றெழுதப்பட்டது. நந்தமிழ்நாட்டிற் சீத்தலைச்சாத்தனார் காலத்து வழங்கிவந்த தருக்கமுறை இத்தன்மைத்தென்பது இதுகொண்டு யாவருநன்கறியலாகும். இஃது இச்சங்கத்துக் கலாசாலைத்தலைமைத் தமிழ் உபாத்தியாயர் ப்ரும்மஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்கள் இயற்றியது. விலை அணா- 4.

## 10. அட்டாங்க யோகக்குறள்

இஃது அட்டாங்க யோகங்களினியல்பை விளங்கவெடுத்துரைக்கும் 60 குறள்களுடையது. இதனுடன் குறள்வெண்பாவானமைந்த 'வருத்தமறவுய்யும்வழி' என்னுஞ் சிறு நூலுஞ்சேர்ந்துள்ளது. விலை அணா 1.

## 11. மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் புலவராற்றுப்படை

நாகூர் 'தர்கா' வித்துவான வா. குலாம்காதிறு நாவலரவர்கள் உரையுடன் இயற்றியது. மதுரைத்தமிழ்ச்சங்கத்தை விஷயமாகக் கொண்டது. சொற்பொருணயங்கள் நன்கு வாய்ந்தது. இச்சங்கத்தின் இரண்டாம்வருஷோற்சவகாலத்து வித்துவக்கழகத்தின் முன்பு அரங்கேற்றப்பெற்றது. விலை அணா 4.

இப்பெயர்கொண்ட பத்திரிகை, மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்றும், மாதந்தோறும் வெளிவருகின்றது. இது, பெரும்பான்மையும் தமிழிலக்கிய, இலக்கணவிஷயங்களும், இதுகாறும் அச்சிடப்படாத செந்தமிழ் நூல்களும், தமிழ்நாட்டுப்புராதன சரிதங்களும் சாஸனங்களும், வடமொழியினும் ஆங்கிலத்தினுந் தமிழிற்குவேண்டுவனவாகக் கருதப்படும் நூன் மொழி பெயர்ப்புக்களும, ஒன்றையொன்றிகழாச் சமயக்கொள்கைகளும், தமிழின் அருமை பெருமையடங்கிய விஷயங்களும், தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன பிறவும் கொண்டு நடைபெறுகின்றது. இப்பத்திரிகை மூலம் வெளிவரும் செந்தமிழ் நூல்கள், தனித்தனி புத்தகங்களாதற்குரிய நிலையில் அச்சிடலாகும். பெரும்பான்மை இச்சங்கத்து வித்துவான்களும் மற்றும்வித்துவான்களும் இதற்கு விஷயதானம்புரிவோராவர். இச் 'செந்தமிழ்' ப்பத்திரிகை அதிகப் பொருட்செலவிற் பிரசுரிக்கப்படினும் செந்தமிழ் அபிவிர்த்தி ஒன்றே கருதி எளியவிலைக்கு அமைக்கப்பெற்றுள்ளது. இப்பத்திரிகையின் வருடச்சந்தாத் தொகை ரூ

மேலேகாட்டிய புத்தகங்கட்கு தபால் சார்ஜ் பிரத்தியேகம். ஷை புத்தகங்களும், பத்திரிகையும் மதுரைத்தமிழ்ச் சங்கம மானேஜர் அவர்கட்கெழுதி வி. பி. பி. மூலம் பெற்றுக் கொள்ளலாம்.